
# நீலன் திருச்செல்வம்

## தேர்ந்த நாடாளுமன்ற உரைகள்



# நீலன் திருச்செல்வம்

## தேர்ந்த நாடாளுமன்ற உரைகள்

தமிழில்:

**கோலன்**

**மாதவன்**

**இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம்**

கொழும்பு

பதிப்பு : 2000

**International Centre for Ethnic Studies,**
**Colombo - 8.**

Typeset by: **NAM PROCESS** Ph: 4331808

Printed by :
MONARK GRAPHIKS
Chennai - 600 014. Ph : 858 88 15, 481 51 86

# முன்னுரை

நீலன் திருச் செல்வம் அவர்களின் நாடாளுமன்ற உரைகள் அவரின் நாடாளுமன்ற வாதத் திறமைகளையும் சிறப்புக்களை யும் எடுத்துரைக்கும். அவ்வுரைகளின் தேர்ந்தெடுத்த பகுதிகளே இத்தொகுப்பு.

பல்வேறு நிகழ்வுகளையும் சிக்கல்களையும் அவர் விவா தித்துள்ளார்; எடுத்துக் கூறியுள்ளார். வவுனியாவில் துன்புறும் அகதிகளின் சோகக் கதைகள் முதல் பர்மாவில் தடுப்புக் காவ லில் இருந்த ஆங்சான் சூ கியூ வரை அவர் எடுத்துக் கூறாத விஷயங்கள் இல்லை.

அவர் கூற்றில் நிதானம் இருக்கும். ஆழ்ந்த ஈடுபாடு இருக்கும். தெளிவு இருக்கும். தகவல்கள் பொதிந்திருக்கும். புலமை நிறைந்திருக்கும்.

வெவ்வேறான விஷயங்களை அவர் நாடாளுமன்றத்தில் எடுத்தாண்டார். அனைத்திலும் அவர் பொதுவான சில தத்துவங் களை வலியுறுத்துவார். சகிப்புத் தன்மை, பலவின நோக்கம், மனித உரிமை, அமைதி என்பன அவர் உரைகளில் இழையோ டும் அடிப்படைகள். இலங்கை வரலாற்றில் இருண்ட தசாப்தங் களில் அவர் இவ்வுரைகளை நிகழ்த்தினார். இவ்விருளின் மத்தி யிலும் மக்களின் நல்ல இயல்புகளில் உள்ள ஒளிக்கீற்றை அவர் கண்டார். அந்த ஒளியே இருளைப் போக்கி, இலங்கைக்கு ஒளிமயமான எதிர்காலத்தைத் தரும் என உறுதியாக நம்பினார்.

*1983ல் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திருநாவுக்கரசர் இறந்த பின் அவரிடத்துக்கு நீலன் திருச்செல்வம் மார்ச்சு 1983ல் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதியாக நியமித்தது; பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய பட்டியலில் நாடாளு மன்ற உறுப்பினராக 1994ல் நியமித்தது. 1999 ஜூலை 29, அன்று கொலை செய்யப்படும் வரை நாடாளுமன்ற அங்கத்தவராகச் சேவை புரிந்தார்.*

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| அவசரகால நிலைமை விவாதம் - 9.9.94 | 1 |
| நிர்வாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளர் (குறைகேள் அதிகாரி) மசோதா - 6.12.94 | 4 |
| விஞ்ஞான, தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி அமைச்சு வாக்குப் பணம் - 14.3.95 | 10 |
| ஊடகம், சுற்றுலா, வான்பயண அமைச்சு வாக்குப்பணம் - 17.3.95 | 14 |
| நிதி, திட்டமிடல் இனத்துக்குரிய அலுவல்கள், தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் வாக்குப்பணம் - 22.3.95 | 19 |
| வேலை வாய்ப்புப் பயிற்சி அதிகாரி மசோதா விவாதம் - 1.6.95 | 22 |
| டாக்டர் எம்.சி.எம். கலீல் இரங்கல் தீர்மானம் - 7.6.95 | 26 |
| மியன்மார் பற்றிய தீர்மானம் - 6.7.95 | 29 |
| குற்றவியல் சட்டத் திருத்த விவாதம் - 19.9.95 | 32 |
| வங்கியியல் திருத்த மசோதா விவாதம் - 19.10.95 | 37 |
| தனியார் மயப்படுத்தல் மசோதா - 12.12.95 | 41 |

மனித உரிமைகள் ஆணையாளர் மசோதா - 22.2.96 46

திருமதி பண்டாரநாயக்கா சிவில் உரிமை - 8.4.96 50

கட்டடக்கலைஞர் நிறுவனம் (திருத்த) மசோதா - 23.5.96 56

தேர்தல் ஆணையர் சம்பளம் - விவாதம் - 24.5.96 59

மயன்மாரின் அண்மைய சம்பவங்கள் - ஒத்தி வைப்புத் தீர்மானம் - 21.6.96 63

தொழிற்சாலைப் பிணக்குகள் (திருத்த) மசோதா - 23.7.90 67

ஊனமுற்றவர் பாதுகாப்பு மசோதா - 17.9.96 71

பொது வணிக நிறுவனங்கள் புனருத்தாரண மசோதா - 11.10.96 73

வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்கள் சார்பாக ஒத்திவைப்பு அறிக்கை - 14.11.96 77

ஜே.ஆர். ஜெயவர்த்தனா இரங்கல் தீர்மானம் - 19.11.96 83

வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் வாக்குப் பணம் - 20.11.96 88

ஊடகம், சுற்றுலா, விமானப் பயண அமைச்சு வாக்குப்பணம் - 2.12.96 91

நீதி அரசியல் யாப்பு அலுவல்கள் அமைச்சு வாக்குப்பணம் - 12.12.96 94

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 6.3.97 98

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 5.6.97 102

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 7.8.97 106

நாடாளுமன்ற ஆதிக்கமும் சிறப்புரிமைகளும் (திருத்த மசோதா) - 11.9.97 109

பயங்கரவாத சட்டம் - ஒத்திவைப்பு - 3.12.97 112

நீதி அமைச்சின் வாக்குப்பணம் - 4.12.97 113

பாதுகாப்பு அமைச்சு வாக்குப்பணம் - 5.12.97 116

அரசு நிர்வாக வாக்குப்பணம் - 15.12.97 118

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 6.1.98 121

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 7.4.98 124

அனுதாபப் பிரேரணை - பீட்டர் கெனமன் - 21.5.98 127

சட்டமுறையற்ற மரண தண்டனை - 12.6.98 131

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 8.7.98 135

யாழ்ப்பாண செம்மணிப் புதைகுழி ஒத்திவைப்புப் பிரேரணை - 22.7.98 139

வன்னியில் நிலவும் உணவு நிலை பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை - 20.8.98 144

வரவு செலவுத் திட்ட விவாதம் - 16.11.98 146

இன அலுவல்கள் தேசீய ஒருமைப்பாடு அமைச்சு வாக்குப்பணம் - 27.11.98 157

வை.பி.டி. சில்வா நினைவாக - 12.2.99 159

கொள்கை கற்பிக்கும் நிறுவனம் (திருத்த மசோதா) - 10.2.99 161

மத நல்லிணக்கக் குழுவின் சமாதான பிரதிநிதிகள் ஒத்திவைப்பு விவாதம் - 24.2.99 163

பயங்கரவாத குண்டுவெடிப்பு தடுப்புச்சட்ட மசோதா - 11.3.99 167

அவசரகால நிலை பற்றிய விவாதம் - 6.5.99 171

## அவசரகால நிலைமை விவாதம்

### செப்டம்பர் 9, 1994.

ஒரு நாட்டின் சுதந்திரம் பெற்ற காலத்தின் பின்னர் பெரும் பகுதிக்காலம் அவசரகால நிலை ஆட்சியில் இலங்கை இருந்தது அண்மைய வரலாறு; ஒரு கவலை தரும் குறிப்பாகும். தற்போதைய அவசரகால நிலை 20.6.1989ல் அறிவிக்கப்பட்டது. தேர்தலின் போது நீக்கப்பட்டு பின்னர் மாதந்தோறும் புதுப்பிக்கப்படுகிறது. அவசர கால நிலை அறிவிக்கப்படுவது பழமையாகி விட்டது; விதிவிலக்காக ஜனநாயக ஆட்சி, சட்ட நிர்வாகம், மனித உரிமைகளுக்கு அவசரகால நிலை அறிவித்தல் பலத்த சிக்கல்களை ஏற்படுத்துகிறது. வழக்கமான சட்ட முறைகள், சாதாரண மசோதாக்களை பொதுமக்கள் ஆராய்வது போன்றவற்றை அவசரகால நிலை ஒதுக்கிவிடுகிறது. இவ்விதிகள் மனித உரிமைகளைப் பாதிக்கிறது. கண்டபடி கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பது கட்டுப்பாடில்லாத தேடுதல் வேட்டைக்கும் வழி வகுக்கிறது. அது தவிர அவசர கால நிலை வதை செய்தல், சட்ட முறையற்ற கொலை, காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல்களுக்கும் இடம் தருகிறது. பொது மக்கள் பாதுகாப்பு தேவை என வழக்கமான சட்ட முறைகளை மீறுவதற்கு இலங்கை அவசர கால சட்டங்கள் அனுமதிக்கின்றன. அவசர கால நிலைக்கும் வழக்கமான சட்டங்களுக்கு மிடையில் முரண்பாடு ஏற்படுகிறது. பள்ளிக் கூட அபிவிருத்திச் சபை, மகாண கல்விச்சபை, வாகனம் ஓட்டும் லைசென்சு வழங்கல் ஆகியவற்றிற்கும் அவசரகால நிலை பயன்படுத்தப்படுகிறது. அவசர கால விதிகளை வழி நடத்த முடியாது; விரைவாக, அறிவித்தல் இன்றியே விதிகள் திருத்தப்படுகிறது. அவை வெளியிடப்படு முன்னரே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அவசரகால விதிகள் தொடர்ந்து நிலைக்கின்றன. 1993 மார்ச்சு மாதம் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் கூட்டத்

தில் இலங்கை அரசு நடைமுறையிலுள்ள அனைத்து அவசர கால விதிகளையும் தொகுத்து வெளியிடுவதாக ஒப்புக் கொண்டது. பொது மக்களிடை விழிப்பு நிலை ஏற்படுத்தக் கூடிய இந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

1993 பிப்ரவரியிலும் ஜுன் மாதத்திலும் அவசரகால சட்டத்தில் (பலவின விதிகளும் ஆதிக்கமும்) மாற்றங்கள் செய்யப்பட்டன; சர்வதேச மனித உரிமைகள் குழுவின் கண்டனத்திற்காக சாட்டாக சில சலுகைகள் அரை மனதுடன் வழங்கப்பட்டன. அநேக முக்கிய எதிர் கருத்துகள் இந்த விதிகள் பற்றி எழுந்தன. முதலாவதாக, தடுத்து வைக்கப்படும் இடத்தை தெரிவிக்க வேண்டும் என்பது; ஏனெனில் இரகசிய மறைவிடங்களில் தடுத்து வைத்து விடலாம்; உறுதியற்றதான கவலை தரும் செய்தி இது. 18வது சரத்துப்படி மனித உரிமைகள் சிறப்புப் படைக்கு கைது பற்றி உடனே அறிவிக்க வேண்டும் என்ற கடமை இருந்த போதும் இந்தத் தேவை சில வேளைகளில் மீறப்படுகிறது. ஆயினும் சரத்து 17ன் கீழ் தடுத்து வைக்கும்போது இந்தத் தேவை ஏற்படாது. சட்டப்படி தடுப்பின் போது உறவினரிடம் பற்றுச் சீட்டு வழங்கப்பட வேண்டும் என இருந்த போதும் வழங்கப்படுவதில்லை. விதிகளின் படி விசாரணைக்கும் சோதினைக்கும் 60 நாட்கள் தரப்படுவது அதிக காலமே. இவை கவனிக்கப்பட வேண்டிய தோடு கமிட்டி ஒன்று இந்த விதிகளை மீளாய்வு செய்ய நியமிக்க வேண்டும்; கடுமையானவை, போதிய பாதுகாப்பற்றவை, சூழ்நிலை மாற்றங்களால் காலங் கழிந்தவை நீக்கப்பட வேண்டும்.

அவசரகால விதிகளின் இரகசிய முகமூடி நீக்கப்படுவதோடு தக்க பிரச்சாரம் செய்தல் வேண்டும். இவை தொகுக்கப்பட்டு சுட்டும் வெளியிடப்படல் வேண்டும்.

மனித உரிமைகள் பாதுகாத்தல் சார்பாக அவசரகால நிலை அறிவித்தல் பல கேள்விகளை எழுப்புகிறது. தேசிய மனித உரிமைகள் ஆணையாளரை நியமிப்பதை நாம் வரவேற்கிறோம். இச்சட்டம் ஆக்கப்பட்டு விட்டதாக அறிகிறோம். அரசியல் யாப்பிலும் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அண்மைய மனித உரிமைகள் பாதுகாப்புப் படையின்

அறிக்கை வதை, காணாமல் போதல், கால வரையற்ற தடுப்பு ஆகியவற்றை உயர்த்திக் காட்டியது. எம்பிலிப்பிட்டிய, கிழக்கு பல்கலைக்கழகம், வண்ணாத்தி ஆறு நிகழ்ச்சி, மெய்லந்தனை, சூரியகண்டி இடங்களில் காணாமல் போனவர் பற்றி குறியிட்டுக் காட்டியது. நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு குற்றமற்றவர் விடுதலை பற்றி முன்னரே கூறப்பட்டது. காவல் படை தன் அறிக்கையில் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் போயஸ் டவுன் இராணுவ முகாமிலிருந்து 160 கிராமத்தவர்கள் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர். இவர்களில் 66 பிள்ளைகளில் 36 பேர் பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்டவர். சிறப்புப் படை பின்வருமாறு கூறியது: ''குற்றமற்ற அப்பாவிகள் குரூரமாகக் கொல்லப்பட்டனர். தக்க விசாரணையின்றி இந்தச் செயலை விட்டு விட்டு நாம் எவ்வாறு நாகரிக சமூகத்தவர் என்று கூற முடியும்'' இது நீதிப் பயிற்சி பெற்றவரின் கடும் சொற்கள்; நிகழ்ச்சி பற்றி ஒழுக்க நெறியான வார்த்தைகள்; ஆனால் இந்தக் குற்றத்திற்குக் காரணமானவர் கண்டுபிடிக்கப்படவில்லை. அரசாங்கமும் சர்வதேச, சிவில் அரசியல் காவலுக்கு கையெழுத்திட்டவராவர். சமரசமான பரந்த நோக்கில் அவசரகால நிலையை பாதிவரை தளர்த்து வதை நாம் கவனிக்க வேண்டும். அவசரகால நிலை வடக்கிலோ - கிழக்கிலோ மட்டுமல்ல நாட்டின் எந்தப் பகுதியிலும் அறிவிப்பதை நாம் ஏற்க முடியாது. அவசரகால நிலையை நீக்கி ஒடுக்குமுறை சட்டங்களை ஒழிக்க வேண்டும். மன்றத்தில் சமரசத்திற்கு வேண்டிய ஆதரவு இருக்கிறது. வரலாற்றில் இந்த நேரத்தை நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் மனிதத்துயர், இரத்தப் பலிக்கு முடிவு கட்டலாம். நம்பிக்கையின்மை, கசப்பை நாம் வெற்றி கொள்ளலாம். அழிவை நீக்கி நல்ல எதிர் காலத்தை ஏற்படுத்தலாம். பல பின்னடைவுகளுடன் பயணம் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் உறுதியாக இருப்பின், நாம் நம்பிக்கையுடன் ''மனிதனின் ஆத்மா, மனித இயற்கைத் தவறுகளிலிருந்து மேலெழலாம்.''

# நிர்வாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளர் (குறைகேள் அதிகாரி) மசோதா

டிசம்பர் 6, 1994

*இலங்கையிலே, பல தசாப்தங்களாக, நிருவாக ரீதியான குறைபாடுகளால் மக்களுக்கு ஏற்படும் மனக்குறைகளைத் தீர்க்கும் நிறுவனமொன்றை அமைத்தல் நீண்டகால இலக்காக இருந்து வந்துள்ளது. 50களின் நடுப் பகுதியிலிருந்து பொதுச் சட்டம் பயிலும் இலங்கை மாணவர்கள் பலர் குறைகேள் அதிகாரியின் பதவி பற்றிப் பெரும் ஆர்வத்துடன் கற்று வந்தனர். 1809 ஆம் ஆண்டில் சுவீடனில் இத்தகையதோர் நிறுவனம், நிருவாகச் செயல்முறைகளால் அநீதியிழைக்கப் பட்ட குடிமக்களின் குறைபாடுகளைப் பெறுதலும் அவைபற்றி விசாரணை செய்தலுமான நோக்கங்களுடன் தோற்றம் பெற் றது. இதனைத் தொடர்ந்து 1909 இல் பின்லாந்திலும் பின்னர் டென்மார்க், நோர்வே, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் பரவியது. ஐக்கிய இராச்சியத்திற் கூட பல வருடங்கள் தடை செய்யப்பட்டிருந்தாலும் 1967 இல் இத்தகைய நிறுவன ரீதியான புத்தாக்கம் நிருவாகத்துக்கான நாடாளுமன்ற ஆணை யாளரை உருவாக்கியது. அத்துடன் நிருவாகச் சீர்கேடுகளால் நிகழ்ந்த அநீதிகளுக்குப் பரிகாரமாக 1974 இல் உள்ளூர் நிருவாக ஆணையாளரையும் நியமித்தது. ஆயினும் ஸ்கன்டி நேவியாவின் நடைமுறையிலிருந்த குறைகேள் அதிகாரி நிறுவ னத்துக்கும் பிரித்தானிய நிறுவனத்துக்குமிடையே முக்கியமான எண்ணக்கரு சார்ந்த வேறுபாடுகள் காணப்பட்டன. ஸ்கன்டி நேவிய அமைப்பிலே குறைகேள் அதிகாரி பதவியானது ஒரு நிறுவனம் போல எண்ணக் கருவாக்கஞ் செய்யப்பட்டிருந்தது டன் அரசியல் மற்றும் நிருவாக ரீதியாகச் சுதந்திரமானதொரு நிறுவனமாகவும் இருந்தது. ஆனால் பிரித்தானிய அமைப்பில் குறைகேள் அதிகாரி நாடாளுமன்றத்தின் உதவியாளராகவே*

கருதப்பட்டார். இந்த நிறுவனம் சார்ந்த இலங்கையின் பரிசோதனைகள் இவ்விரு அமைப்புகளின் மாதிரிகளுக்குமிடையேயிருந்து தடுமாறுகிறது.

குறைகேள் அதிகாரிப் பதவி பற்றி முதலாவது முக்கியத்துவம் வாய்ந்த பகிரங்கக் கலந்துரையாடல் 1959 இல் கண்டியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் கருத்தரங்கில் இடம் பெற்றது. டென்மார்க்கின் குறைகேள் அதிகாரி தனது பதவி பற்றிய ஒரு கட்டுரையைச் சமர்ப்பித்தார். இவ்வெண்ணக் கரு நியூசிலாந்தின் ஆர்வத்தைத் தூண்டியது. டட்லி சேனநாயக்காவின் அரசாங்க அமைச்சரவையிலே அமைக்கப்பட்ட ஓர் உபகுழுவிலே திரு. சி.பி.டி. சில்வா, திரு.ஜெ.ஆர். ஜெயவர்த்தன, திரு.எம். திருச்செல்வம், திரு.ஏ.எவ். விஜேமானே ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழு கவனமான முறையில் அணுகுமுறைகளை மேற்கொண்டு, 1965 திசம்பர் 22 இல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் குறைகேள் அதிகாரி, முறைப்பாடுகளைப் பெறுவார் என்றும் அவற்றுள் சில, பொதுமக்கள் மனுக் குழுவினரால் தெரிவு செய்யப்படும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. 1978 இல் பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கோன் தலைமையிலான சட்ட ஆணைக்குழு, அரசியல் யாப்பின் 156 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு நிருவாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளர் பதவியை உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்த நேரத்தில் நான் சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்தேன். இந்த வேண்டுகோளுக்குத் தீவிர முக்கியத்துவம் கொடுத்து குறைகேள் அதிகாரிப் பதவியைத் தோற்றுவிக்கும் பொருட்டு ஓர் அறிக்கையும் ஒரு நகல் மசோதாவையும் அவ்வாணைக் குழு தயாரித்தது.

இந்த அறிக்கை மீள்பதிப்புச் செய்யப்பட வேண்டிய உத்தேச மசோதாவின் தேவைகள் பற்றிய உள்நிலைமைகளைப் பரவலாக வழங்கியிருந்ததுடன் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டது. சட்ட ஆணைக்குழுவின் ஆலோசனைகள் ஸ்கண்டிநேவிய மாதிரியைப் பின்பற்றியதுடன் பாதிக்கப்பட்ட ஆட்களிட

மிருந்து முறைப்பாடுகள் பெறவும் அல்லது அவருடைய சொந்த மனுவின் மீது விசாரணைகள் நடத்தவுமுள்ள நேரடி அதிகாரம் குறைகேள் அதிகாரிக்கு வழங்கப்பட்டது. அவ் வாறே ஒருவர் அல்லது அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஓர் எழுத்து முறைப்பாட்டின் மூலமாகக் குறைகேள் அதிகாரியின் விசா ரணை நியாயாதிக்க அதிகாரத்தை (Jurisdiction) பெற்றுக் கொள்ள லாம். ஆயினும் இத்தகைய விதந்துரையை அப்போதைய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. 1960 களின் நடுப்பகுதி யில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் துணைக் குழுவொன்று சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் சனாதிபதி ஜயவர்த் தன இத்தகைய அதிகாரி ஒருவரை, நாடாளுமன்றத்துடன் இணைத்து பொதுவாகவும் பொதுமனுக்குள் குழுவைப் பொறுத்தவரையில் குறிப்பாகவும் செயலாற்றும் வகையில் நியமித்தார்.

ஆகவே இம் மசோதா சட்ட ஆணைக்குழுவின் பரிந்து ரையை மீளமைக்க முற்படுவதுடன் குறைகேள் அதிகாரியின் அலுவலகம் முறையாகச் செயற்படுவதைத் தடை செய்யும் நடைமுறைக் காரணிகளை அகற்றவும் முற்படுகிறது. நாடாளு மன்ற ஆணையாளரான திரு. சாம் விஜேயசிங்க நாடாளுமன் றத்திடம் சமர்ப்பித்த தமது ஆண்டறிக்கைகளில் சட்டவரைய றைகளின் சில நடைமுறைத் தடைகளையும் நியாயாதிக்க வரையறைகளையும் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். அத்துடன் அரசாங்கக் கொள்கை தொடர்பான முறைப்பாடுகளைப் பரிசீ லித்தல் அல்லது தன் விருப்பான நிர்வாக நடைமுறைகளை விசாரிப்பதில் தடையாக அமைந்துள்ள சில சட்ட ஏற்பாடுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். குறைகேள் அதிகாரியின் நியாயா திக்கத்தைப் பொறுத்தவரையிலான ஒரு முக்கிய தத்துவம் அவர் ''முறையற்ற நிருவாகம்'' தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவார் என்பதும் சில நியாயங்களின் அடிப்ப டையில் தீர்மானங்களை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் அவருக்கு இல்லையென்பதுமாகும். ஆயினும் இந்த அறிக்கை கள் அடிப்படை நியாயாதிக்கக் கட்டுப்பாடுகளைக் குறிக்கவில்

லையென்பதால், குறைகேள் அதிகாரி அமைச்சர்களின் பரிந்துரைகளையும் தீர்மானங்களையும் விசாரணை செய்ய முடிவதில்லை.

*1981* ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிருவாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளர் பதவி கடந்த 13 ஆண்டுகளாகப் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளைச் சுதந்திரமாக முறையில் நிறைவு செய்யும் பொருட்டும், பக்கச் சார்பற்ற முறையிலும் முறையற்ற நிருவாகத்துக்கு எதிராகவும் ஆரம்பிக்கப்படவில்லையென்பதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

*(1)* குறைகேள் அதிகாரியின் அலுவலகம் தனிப்பட்ட ஒரு நிறுவனமாக விளங்கும்போது அதனுடைய பலம் அவருடைய ஆளுமை, அவருடைய நோக்கு, ஈடுபாடு, தீர்மானங்களின் பெறுமானம், நடுவுநிலைமை ஆகியவற்றைப் பொறுத்தே அமைய முடியும். நிருவாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையாளர் தெரிவில், இந்த அலுவலகத்துக்கு அரசாங்கம் போதியளவு முக்கியத்துவம் கொடுக்குமென நான் எண்ணவில்லை. அத்துடன் நிதி மற்றும் மனிதவளம் பற்றிய விடயத்திலும் அவ்வாறில்லை.

*(2)* குறைகேள் அதிகாரியின் நிறுவனம் மீது பொதுமக்கள் புரிந்துணர்வும் நம்பிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் இதனைப் பற்றியறியும் பொருட்டுக் கருத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இதனைப் பற்றி அறிந்தவர்கள் கூட அதன் பயன்பாடு பற்றி எதிர்மறையான கருத்தையே கொண்டிருக்கின்றனர். குறைகேள் அதிகாரி பல வருடங்களாக அடிப்படை உரிமையைத் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளைப் பெறவில்லையென்பது இங்கே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

*(3)* குறைகேள் அதிகாரி ஜனாதிபதியாட்சி நாடாளுமன்ற முறையில் பக்கச் சார்புள்ள தொடர்பையே கொண்டிருந்தார். அவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதுடன் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியும் இருந்தது. தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பொதுமனுக் குழுவுக்கும்

இடையே நெருக்கமான தொடர்பைப் பேணும் வகையில் முக்கியமான சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இத்தொடர்பு உண்மை நிலையிலும் பார்க்க முறை சார்ந்ததாகவேயுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்தில் குறைகேள் அதிகாரிக்கான தெரிவுக்குழுவுக்கும் வழங்கப்பட்டது போல பொதுமனுக் குழுவுக்கு சட்டவாக்க மேற்பார்வை வழங்கப்படவில்லை. சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நாடாளுமன்ற அதிகாரசபை குறைகேள் அதிகாரிக்கு முகங்கொடுக்க முடியவில்லை. நாடாளுமன்ற ஆணையாளரின் அறிக்கைகளிலும் விதப்புரைகளிலும் சட்டரீதியான அக்கறை காணப்படவில்லை. சட்டத்தின் வேண்டுகோளுக்கு இணங்கமட்டுமன்றி, குறைகேள் அதிகாரி தான் ஆற்றிய பணிபற்றி ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் ஆகக் குறைந்தது ஓர் அறிக்கையையேனும் ஆண்டுக்கு ஒரு முறை அனுப்பி வைக்க வேண்டும்.

*(4)* குறைகேள் அதிகாரியின் அதிகாரம் மற்றும் நியாயாதிக்கம் பற்றிய இன்னொரு முக்கிய அம்சம், நிருவாக நடைமுறையோடு தொடர்புடையது, அது நியாயமற்றது, வேறுபாடு காட்டும் தன்மையது, அடக்கு முறையுடன் கூடியது. அவ்வாறான நடவடிக்கை பற்றிய கருத்து குறைகேள் அதிகாரியின் பதவி பற்றிய கருத்துள்ள விளைவுகளைத் தரவில்லை. சுவீடனில் தண்டனை முறைமை (Penal System) குறைகேள் அதிகாரியின் பணிகளின் விளைவாக மாற்றத்துக்குட்பட்டிருக்கின்றன. நியூசிலாந்தில், குறைகேள் அதிகாரியின் விதந்துரைகள் நிருவாக அமைப்புச் சீர்த்திருத்தங்களில் பல முக்கிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

ஆகவே பொதுமனுக் குழு, குறைகேள் அதிகாரியின் பணிபற்றி சட்டரீதியான மேற்பார்வை செய்வதற்கு அதன் தேவைகள் மீள் எண்ணக் கருவாக்கம் செய்யப்பட வேண்டும். இக்குழு *(1)* குறைகேள் அதிகாரியின் அறிக்கைகளை மீளாய்வு செய்யலாம். *(2)* மீளாய்வுக்கு உட்பட வேண்டிய நிருவாக நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யலாம். *(3) 17 (3)* ஆம் பிரிவின் கீழ் பாதிக்கப்பட்ட ஒருவர் பற்றிக் குறைகேள் அதிகாரி அறிக்கை சமர்ப்பிக்கும் வேளையில், அவரது சிபாரிசுகளைத் தொடர்ந்து பயனுள்ள திணைக்கள ரீதியான நடவடிக்

கைகள் எடுக்கப்படாதவிடத்து ஆலோசனை கூறலாம். (4) பொது மனுக்குழுவின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள் குறித்து நிகழும் அநீதிகள் சம்பந்தமான மனுக்களைப் பெறலாம். தற்பொழுது மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் பொது மனுக்குழுவுக்கும் நாடாளுமன்றத்துக்கும் முன் வைக்கப்பட்டுள்ளன. இவை இக்குழுவின் விசாரணை செய்யும் ஆற்றல் பற்றி விவாதிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளன.

சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில், 1981 ஆம் ஆண்டு நாடாளுமன்ற ஆணையாளர் சட்டத்துக்குக் கொண்டு வரப் பட்ட திருத்தம் வரவேற்கப்படுகிறது. இது குறைகேள் அதிகாரி நிறுவனத்துக்குச் சிறப்புகளைத் தேடிக் கொடுக்கும் முயற்சி எனலாம். இவை முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் முறைகள் தொடர்பாகவும், அவருடைய துணிபு, மற்றும் தொடர்புடைய நிறுவனத் தலைவருக்குச் சிபார்சுகளைச் செய் யும் இயல்பு பற்றினவாயும் உள்ளன. இது தொடர்பாகப் பிரதான சட்டத்தின் 10 ஆம் பிரிவு, ஒரு முறைப்பாட்டினைப் பாதிக்கப்பட்ட தனியாள் அல்லது பொதுசன நலனில் அக்கறை யுள்ள ஆட்கள் குழு மேற்கொள்ளலாம் என்ற விடயத்தில் தெளிவாக இருத்தல் வேண்டும். ஒரு குறைகேள் அதிகாரியை நியமனம் செய்தவன் மூலம் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் நிருவாக ரீதியான நிதி ஆகிய விடயங்களில் அரசாங்கம் அக்கறை காட்டவேண்டுமென நாம் விரும்புகிறோம். குறை கேள் அதிகாரி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். மற்றும் அவருக்குச் சட்டத்தின் மூலம் வகுத்துக் கொடுக்கப் பட்ட பிரதிக் குறைகேள் அதிகாரியின் நியமனம் உட்படப் போதிய வளங்களைக் கொடுப்பதன் மூலம் வலுவூட்ட வேண்டும்.

# விஞ்ஞான, தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி அமைச்சு வாக்குப்பணம்

## மார்ச்சு 14, 1995

ஒரு அரசாங்கத்தின் அறிவியல் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தி அமைச்சு மிகவும் முக்கியமான அமைச்சு. அனுபவம் வாய்ந்த, ஆழ்ந்து சிந்திக்கும் பொது நிதி நிர்வாகத்தில் நிபுணரான ஒருவர் இதற்கு அமைச்சராக இருக்கும் பேற்றை நாம் பெற்றிருக்கிறோம். இலங்கையில் அறிவியல் ஆராய்ச்சியின் முன்னேற்றம் குறித்து சுவீடன் நாட்டைச் சேர்ந்த கார்ல் தோன்ஸ்ராம் ஒரு ஆய்வு நடத்தினார். ஆராய்ச்சி மையங்கள், மனித சக்தி போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர் ஆராய்ந்தார். அதைத் தொடர்ந்து எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த ஆய்வின் முடிவுகள் உண்மையிலேயே கவலையை ஏற்படுத்துபவை. முன்னேறும் நாடான இலங்கையில் அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அடிப்படை அமைப்புகள் மிகவும் பலவீனமாக உள்ளன. முழுநேர ஆராய்ச்சி விஞ்ஞானிகள் 1000 பேர் உள்ளனர். நாட்டின் மொத்த வருமானத்தில் 0.14 சதவீதம் மட்டுமே ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் ஒதுக்கப்படுகிறது. வளரும் நாட்டைப் பொறுத்தவரை இது மிகவும் குறைவான தொகை. ஆராய்ச்சிக்கான 30 சதவீதம் நிதியானது வெளிநாட்டவரால் நன்கொடையாக வழங்கப்படுகிறது. போதுமான நிதியின்மை, தொடர்ச்சியற்ற முயற்சிகள், ஒருங்கிணைப்பு இல்லாதது, அறிவியல் தொழில்நுட்ப நிபுணர்கள் தொடர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று விடுவது ஆகியவை குறித்தும் தன்னுடைய அறிக்கையில் தோன்ஸ்ரோம் கூறியுள்ளார். 1980-களின் பிற்பகுதியில் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், சட்டம் ஆகியவை பயின்ற பட்டதாரிகள் 50 சதவீதம் பேர் வெளிநாடு சென்று விட்டனர். கடந்த பத்தாண்டுகளில் இந்த நிலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. தற்போதுள்ள

நிலைமை நம்பிக்கையளிப்பதாக இல்லை. அறிவியல் தொழில்நுட்ப அமைச்சு, தொழில்துறை அமைச்சு, விவசாயம் மற்றும் தோட்டத்தொழிலாளர் நல அமைச்சு ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைப்புக்கு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இந்த நோக்கத்துக்காக அமைச்சுகளுக்கிடையேயான கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தொழில்நுட்பம் மற்றும் அறிவியலுக்கான அடிப்படைகள் பலவீனமாக உள்ள நிலையில் அறிவியல் தொழில்நுட்ப சவால்களை அக்கறையுடனும் விரைவாகவும் சந்திக்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அறிவியல் மற்றும் பொறியியல் பாடங்களைப் பயிற்றுவிக்க போதுமான ஆசிரியர்கள் இல்லாமை, தேவையான ஆராய்ச்சிக் கூடங்கள் இல்லாமை, சிங்களத்திலும் தமிழிலும் புத்தகங்கள் இல்லாமை ஆகியவற்றால் பல்கலைக்கழகங்கள் சந்திக்கும் கஷ்டங்கள் ஏற்கெனவே உள்ள பிரச்சினைகளைத் தீவிரமாக்கியுள்ளன. அறிவியல் ஆராய்ச்சிக்கு, குறிப்பாக, அடிப்படை ஆராய்ச்சி ஆகியவற்றிக்கு வெளிநாட்டில் இருந்து வரும் நிதி உதவி குறைந்து வருவது மேலும் சிக்கல்களை உருவாக்கியுள்ளது. அடிப்படைக் கல்வி மையம் 30 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாகப் பற்றாக்குறையைச் சந்தித்து வருவதாக சமீபத்தில் வெளியான அறிக்கையைப் பார்த்து வருத்தம் அடைந்தேன். இச்சூழலில் உருப்படியாக ஏதாவது செய்யமுடியுமா என்ற கேள்வி எழுகிறது. உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மரபியல் துறையில் மிகப்பெரிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ள காலகட்டத்தில் உலகம் இருக்கிறது. உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மரபியல் ஆய்வு குறித்த கட்டுரை மார்ச் மாத எகானமிஸ்ட் இதழில் வெளியாகியுள்ளது. இதை படிக்குமாறு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். ஜீன் தெரபி மற்றும் இதர செயல்முறை நடவடிக்கைகள் குறித்து இன்னும் சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த முன்னேற்றங்களை நம்மால் எட்டிப்பிடிக்க முடியுமா அல்லது 21-ம் நூற்றாண்டில் நுழைவது நிறைவேறாத கனவாக முடியுமா என்பதுதான் கேள்வி.

அறிவியல் தொழில்நுட்பம் குறித்து அரசு கொண்டுள்ள ஒட்டுமொத்த கருத்துக்களையும் விமர்சன நோக்குடன் பார்க்க வேண்டியுள்ளது. முன்னால் நரேசா (NARESA) அத்தகைய முக்கிய பங்கினை ஆற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யதார்த்தம் அதற்கு மாறாகவே இருக்கிறது. அமைச்சரின் சக்தி, தொலைநோக்குப்பார்வை மற்றும் உறுதிப்பாடு ஆகியவை இந்த கொள்கைத் திட்டத்தை வழிநடத்த வேண்டும்.

இரண்டாவதாக, தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான நிபுணத்துவம் பெற்றவர்களின் பற்றாக்குறையைச் சமாளிக்க உடனடி திட்டங்கள் தேவை. வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை விஞ்ஞானிகளையும் ஆய்வாளர்களையும் குறுகிய கால வேலைகளுக்காக தாய்நாட்டுக்கு திருப்பி அழைப்பது பற்றியும் நமது ஆய்வு நிறுவனங்களுடன் அவர்களுக்கு தொடர்புகளை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளில் வேலை செய்யும் வெளிநாட்டு இலங்கை நிபுணர்களின் தகவல் அடங்கிய புத்தகத்தை நாம் உருவாக்க வேண்டும். அத்தகைய நிபுணர்களுடன் தொடர்பை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, நிதி ஆதாரங்கள் மற்றும் நிதி உதவி ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகள் குறித்து நாம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். வெளிநாடுகளில் உள்ள நிதி உதவும் நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு விஞ்ஞான மற்று சமூக விஞ்ஞான ஆய்வுக்கு நிதி உதவி பெற முயற்சிக்கலாம். இலங்கையைப் பொறுத்தவரை விஞ்ஞான ஆய்வுக்காக நிதி உதவி செய்ய தனியார் தொழில் நிறுவனங்கள் முன்வருவதில்லை. ஆனாலும் பல்வேறு முக்கிய தொழில் அதிபர்கள் அத்தகைய திட்டங்களில் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நூறு கோடி ரூபா சேர்த்து ஒரு தேசிய நிறுவனத்தை உருவாக்க சமீபத்தில் இந்தியாவில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதே போன்று கலைகளுக்கான இந்திய நிறுவனம் கலைத்துறையில் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கிறது. அதே போன்று முயற்சிகள் இலங்கையில் மேற்கொள்ளப்படுமானால் பல்வேறு நிதி

உதவி நிறுவனங்களை நாமும் உருவாக்க இயலும். நான்காவ தாக, தகவல் தொழில்நுட்பத்துறையில் குறிப்பிடத்தக்க அள வில் முன்னேற நமக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. கம்பியூட் டர் மென்பொருள் வளர்ச்சியில் முதலீடுகளை ஈர்க்க முயற்சி கள் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக அமைச்சர் பெங்களூருக்கு பயணம் செய்து அதற்கான ஒரு திட்டத்தையும் தீட்டலாம். ஐந்தாவதாக, நமது பல்கலைக் கழகங்களிலும் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனங்களிலும் நூலகங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. புகழ்மிக்க ஆய்வு இதழ்களையும் அவ்வப்போது வெளியிடப்ப டும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் படித்து அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாவிட்டால் எவ்வாறு நமது ஆய்வாளர்கள் தங்களுடைய துறைகளில் முன்னேற்றம் காணமுடியும்.

ஆறாவதாக, ஆயுர்வேதம், மூலிகை மருந்துகள், நாட்டுப் புற கலைகள், இசை ஆகிய துறைகளில் நம்முடைய பாரம்ப ரிய சிறப்பினை பாதுகாக்கவும் வளர்த்து எடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தலைமுறை தலைமுறையாக கற்றுக்கொடுக்கப்பட்ட இந்த பாரம்பரியம் அழிந்துவிடும் பேராபத்தில் இருக்கிறது. மேற்கத்திய நாடுகள் மாற்று விஞ்ஞா னம், மாற்று மருத்துவம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் போது, நாம் நமது பாரம்பரிய கண்டுபிடிப்புகள் மற்றும் வழிமுறைகளை உதாசீனப்படுத்துவது மிகவும் வருத்தத்திற்குரி யது.

இறுதியாக, விஞ்ஞான மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியவை பற்றி சிந்திப்பது மற்றும் விவாதிப்பது என்பது விஞ்ஞானிகள் மற்றும் அறிவு ஜீவிகள் தனிச்சொத்தாக மாறிவி டாமல் பொதுமக்களைச் சென்றடைய அமைச்சுகளும் அரசு சாரா நிறுவனங்களும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் பொதுமக்களைச் சென்றடைவதற்கான திட்டங்களைத் தீட்டி அமல்படுத்த வேண்டும். மக்கள் விஞ்ஞான இயக்கம் கேரள கிராமப்பகுதிக ளில் மிகச்சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த அனுபவத்தில் இருந்து நாம் நிறைய கற்றுக் கொள்ளலாம்.

# ஊடகம், சுற்றுலா, வான்பயண அமைச்சு வாக்குப்பணம்

## மார்ச்சு 17, 1995.

ஊடகம், சுற்றுலா, வான் பயண அமைச்சு மூன்று முக்கிய விஷயங்களை இணைப்பது; திறமைமிக்க தர்மசிறீ சென நாயக்கா விடம் இப்பொறுப்புகளை ஒப்படைத்திருப் பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். தற்போதைய அரசியல் விவாதத்திற்கு ஊடகம் முக்கியத்துவம் பெறுகிறது. நான் ஊடகச் சுதந்திரம் பற்றி மட்டுமே இடையிட்டுப் பேச உள்ளேன். சிவில், அரசியல் உரிமைகளின் 19வது சரத்து சர்வதேச ஒப்பந்தத்தில் ஒருமுக்கிய விதியை உள்ளடக்குகிறது. அது தேடுதல், பெறுதல், செய்திகளை வெளியே கூறல் உட்பட பல ரக வெளியீட்டுச் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் சரத்து 19 லண்டனிலுள்ள சர்வதேச அரசு சாரா அமைப்பையும் இணைக்கிறது. அது 1994ல் வெளியிடப்பட்டு அண்மையில் 1995ல் இலங்கையில் எவ்வாறு சிறப்பாகச் செயற்படலாம் என்பது பற்றி இரு முக்கிய அறிக்கைகளும் கூறும். 1993 மனித உரிமைகள் அறிக்கையின் தரம் பற்றியும் இதே போன்ற கவலை தெரிவிக்கப்பட்டது. இவை வெளியீட் டுச் சுதந்திரம், ஊடகம் அரசியல் அமைப்பின் செய்திகளை எவ்வாறு திறமையாக உறுதிப்படுத்த முடியும் என்பதையும் கூறும்; அத்தோடு பகுத்தறிவாகவும் சுதந்திரமாகவும் மட்டுப்ப டுத்தும் உரிமையையும் சொல்லும். இவை அமைப்பின் தேர்வுக் கமிட்டியால் கவனிக்கப்பட்ட விஷயங்களாகும். பேச்சுச் சுதந்திரத்தை பரவலாகக் கட்டுப்படுத்தும் சட்டங்களும் உள்ளன. அவை நாடாளுமன்ற (அதிகாரமும் சிறப்புரிமைக ளும்) 1953ன் 21வது சட்டமும் பத்திரிகைக் கவுன்சில் சட்டமு மாகும். பொதுப் பாதுகாப்பு மசோதா, அதன்கீழ் அமைக்கப்

பட்ட அவசரகால சட்டங்கள், பயங்கரவாதச் சட்டம் ஆகி யவை சுதந்திர வெளிப்பாடுகளை நீதியற்றுக் கட்டுப்படுத்து கின்றன.

ஏரிக்கரை பத்திரிகைகளை சுதந்திரமாக்குவது பற்றி விசா ரணை செய்யவும் சட்டமும் ஊடகமும் பற்றிக் கவனிக்கும் அமைச்சர் கமிட்டி ஒன்று அமைத்துள்ளனர். மின்னியல் ஊடகத்தைக் கட்டுப்படுத்துவது பற்றியும் இதே போன்ற கவலை தெரிவிக்கப்பட்டது. இந்தக் கமிட்டிகளுக்கு கால எல்லை தரப்பட வேண்டும். அத்தோடு அவற்றின் பரிந்துரை கள் அமைச்சரால் வெளியிடப்பட்ட ஊடகக் கொள்கை அறிக்கை அமைப்புகள் அடங்க வேண்டும். இது பாராட்டத் தக்க ஆவணம். மன்றத்தின் அங்கத்தவர் எவராவது இதை அறிக்கையின் நோக்கங்கள், கருத்துகளுக்கு எதிர்ப்புக் கூற மாட்டார்கள் என எண்ணுகிறேன்.

ஆனால், ஊடகம் சார்ந்த பிரச்சனைகள் அத்துடன் முடிய வில்லை. ஒருநிலையான செய்தி கூறல் இக்கட்டான விஷய மாக இன்றும் உள்ளது. இவை இலங்கைக்கு மட்டும் உள்ள விஷயங்களல்ல. பில்லுக்கும் கிளாரிக்கும் இடையிலான விஷயத்தை விளம்பரப்படுத்திய முறை, கருத்தியலாக வலது சாரிகள் வெளியிட்ட புத்தகங்கள் ஊடகத்தின் ஆதிக்கத்தையும் கணக்கிடுவதையும் காட்டும். 1994 டிசம்பர் 12ல் வெளிவந்த நியூயோக்கர் இதழில் அடம் கோப் நிக் என்பவர், இவ்விஷயம் பற்றி அண்மையில் வெளிவந்த 9 நூல்களுக்கு, விமர்சனம் எழுதியுள்ளார். இரு விரிவான பகுதிகள் பற்றி கவனிக்க வேண்டும். முதலாவது, அரசியல் நோக்குக் ஒருவரின் நன்ம திப்பை வேண்டுமென்றே கறைபடுத்துவது அல்லது கருத்திய லாக உண்மையை திரித்துக் கூறுவது; இரண்டாவதாக ஊடகம் அளவு மீறிய ஆதிக்கமுடையதாக தனிப்பட்டவர் வாழ்க்கை யின் சொந்த விஷயங்களை ஆராய்வது; பழைய கதைகளைக் கூறி சரியாக நீதி வழங்குவதாகக் காட்டி பொதுப் பதவியி லுள்ள ஒவ்வொருவரையும் இழுப்பது.

இந்த விஷயம் சிக்கலானது, இது பத்திரிகைகளின் பத்திரிகைத் தொழிலாக அவமானப்படுத்துவதோடு பரபரப் பூட்டும் பண்பாடாகவும் பத்திரிகைத் தொழிலின் சக்திகள் ஆகி விடுகின்றன என ஆசிரியர் கூறுகிறார். அமெரிக்கப் பத்திரிகை கள் ஒரு ஆக்கிரமிப்புப் பண்பாட்டுக்கு மாறிச் சென்றுள்ளது, என ஆசிரியர் நம்புகிறார். பத்திரிகையாளரின் வெற்றி 'அனை வரும் பார்க்கும் நாடக மேடை, ஆக்கிரமிப்பை வெளியிடும் சடங்குகள்' என்றவற்றிற்கு உடன்படுவதாக ஆகிறது. மேலும், 'ஊடகம் தற்போது ஆக்கிரமிப்பை விரும்புகிறது - தன் ஒழுக்க வரம்பை மீறுவதாக எண்ணிய போதும் - அந்த ஆக்கிரமிப்பு சிரத்தையான அரசியல் நியாயத்துடன் சம்பந்தப்பட்ட போதும் ஒழுக்கம், நல்நடத்தைக்கு மேலாக எழுகிறது. ஆக்கிரமிப்பு கருத்தற்ற வடிவமாக, கருத்துகளால் நடைமுறைப்படுத்தப்படு கிறது அல்லது சாதாரண இரக்க சுபாவமாகிறது' எனக் கூறுகிறார்.

இதேபோன்ற பண்பாட்டு அவதூறுகள்; பரபரப்பூட்டும் சமூக ஒற்றுப் பார்வைகளில் நமது வார இறுதிப் பத்திரிகைகள் சில பகுதிகளில் போந்துள்ளது கவலை தருகிறது. பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள எமது ஒழுக்கம் தவிர்க்க முடியா ஓரளவு பத்திரிகையாளரின் நுண்ணாய்வுக்குட்பட நேரும் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய ஆய்வுக்கு சீரான ஒழுக்கத்தின் வரைவு என்ன? ஆண்களுக்கு சமனான நிலைக்கு பெண்கள் மறுக்கப்படும்போது, பெண் அரசியலாளரை சிறு விஷயங்களுக்கெல்லாம் அற்பமாகப் பத்திரிகைப் பந்திகளில் எழுதுவது கவலைப்படக் கூடியது. அத்தகைய அற்ப எழுத்து கள் அவர்களின் உடை, உணவு வழங்கங்கள், சமூக வாழ்க்கை பற்றியதாகவும் ஆசிரியர் தலையங்கத்தில் நியோபர் டி மெல் அவர்கள், இத்தகைய செயல்களுக்கு ஆண்கள் தாக்கி எழுதப்ப டுவதில்லை என்றார். டிமெல் அம்மையார் கூட்டுமொத்தமாகக் கூறினார். இது ஆணாதிக்கம் பெண்களை குறிப்பிட்ட தோற்றத் தில், 'மேல் நாட்டு நிலையற்று' ஆகவே 'தேசிய' தோற்றத்தில் பார்க்க விரும்புகிறது. ஆண்கள் இதற்கு விதிவிலக்கானவர்.

இதனால் பெண் மட்டுமே பழக்கத்திலும் உடையிலும் கவனம் எடுக்க வேண்டும். இவ்வாறு நேரடி ஜாக்கெட்டும் 'மாதிரி'யாக வும் அல்லது உருவமாக அல்லாது தனிநபராக பெண் தானே தேரக்கூடிய சுதந்திரமற்று இருக்க வேண்டும்.'' மற்றொரு கவலைக்குரிய விஷயம்; இப்பந்திகளில் திறமையின்றியும் சில வேளைகளில் வேண்டுமென்றே தனிப்பட்டவர் மேல் பழி தூற்றலாகவும் அமைவது 'வம்பளக்கும் பத்திகளில் சிலவே ளைகளில் முழுப் பொய் கதைகளை கண்டபடி எழுதி மன நோவையும் காயத்தையும் ஏற்படுத்துகின்றனர். பத்திரிகைத் தொழில் தரத்தை நேர்மையின்றி கீழ்த்தர மாக்கும்போது பத்திரிகைத் தொழிலை சீராக உயர்ந்த ஒழுக்க நெறிக்கு இட்டுச் செல்வது சிரமமாகும்.

மேலே கூறப்பட்ட தராதரத்தை மீறுவதனால் பத்திரிகை யாளர் எவ்வித தொல்லைக்கும் உட்பட வேண்டுமென்று அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. 1993 இலங்கை மனித உரிமைகள் அறிக்கையில் சண்டே ரைம்ஸ், யுக்திய, ராவய, அத்த, ஸக்டிவ, லங்காதீப பத்திரிகையாளர் தொல்லைகளுக் குட்பட்ட பல சம்பவங்கள் கூறப்பட்டுள்ளன. 1993ல் முன்னாள் டி.ஐ.ஜி.உடுகம்பல, மாநகர சபை, தண்ணீர் சபை, மின்சார சபை வருமானவரி திணைக்களம் பட்சபாதமாக நடந்ததான உறுதிமொழியை முழுமையாக வெளியிட்டதற்காக அப்பத்திரி கைகள் மேல் குற்றவியல் வழக்குகள் பதியப்பட்டன. பத்திரி கைப் பந்தி எழுத்தாளர் மோசமாக எழுதிய போதும் சட்டத்தின் முழுப் பாதுகாப்புக்கும் உரியவராகவர். ஆயினும் 'எமது சட்டத்தின் இடையீடு பத்திரிகைகளின் அறிக்கைகள் பொய் யாக, திரிபாக, ஒழுங்கற்று காயம் அல்லது அவதூறு என முறைப்பாடு செய்யின் தக்க தீர்வு உண்டு. இலங்கை பத்திரி கைக் கவுன்சில் விதி 9ன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் அல்லது மான நஷ்ட சிவில் நடவடிக்கையில் இறங்கலாம். முறைப்பாடு செய்பவர்களுக்கோ ஊடகங்களுக்கோ இலங் கைப் பத்திரிகைக் கவுன்சிலில் நம்பிக்கை கிடையாது; நீதி மன்ற வழக்காயின் பணச் செலவாவதுடன் வழக்கு இறுதியில்

முடிய பல வருடங்கள் ஆகும். ஆகவே முறைப்பாடு செய்பவர்கள், ஊடகங்களுக்கு நம்பிக்கை ஏற்படக் கூடிய சட்ட அமைப்பின் தேவை உள்ளது.

முரண்பாடான பிரேரணைகளில் ஊடகத்தின் பங்கு முக்கியமானது என இறுதியாகக் கூறவேண்டியுள்ளது. தேசிய பகையும் பயமும் தூண்டிவிடுவதில் சேர்பியா, குரோசீயா, பொஸ்னியா, ஹேஸ்கோவினா ஊடகங்கள் மிக முக்கிய பங்கு வகித்தன என அண்மைய பல ஆய்வுக் கற்கைகள் கூறுகின்றன. 'யுத்தம் ஏற்படுத்துவது' என்ற நூல் தணிக்கைக்கு எதிரான சர்வதேச மையம் விதி *19*ன் கீழ் *1994*ல் வெளியிட்ட மார்க் தொம்சனின் சிறந்த ஆய்வுக் கற்கையை மன்றத்திற்கு பரிந்துரை செய்வேன். *1912 - 1913*ல் நடந்த பால்க்கன் யுத்தங்கள் பற்றிய சர்வதேசக் கமிசனின் முன்னைய அறிக்கையிலிருந்து சுட்டிக் காட்டுவேன்.

தூக்கிவிடப்பட்டவர்கள், கொலைகள், நீரில் அமிழ்த்திய கொலைகள்; எரித்தல், குரூரக் கொலைகள், கொடுமைகள் யாவுக்கும் எமது அறிக்கையின் படி உண்மையான குற்றவாளி பல்கன் மக்களல்ல. உண்மையான குற்றவாளி மக்கள் அபிப்பிராயத்தை தவறாகத்திருப்பி மக்கள் அறியாமையிடை வதந்திகளைப் பரப்பி ஆபத்து என அலாரம் அடித்து தமது நாட்டை மற்றைய நாடுகளுடன் பகைமை ஏற்படுத்தினர். தமது சுயநலத்திற்காக யுத்தம் தவிர்க்க முடியாது என தொடர்ந்து கூறிவந்த குற்றவாளிகள்... இவர்களே, தமது நாட்டிற்கு அர்த்தமற்ற முரண்பாட்டுக் கொள்கையை வைத்தவர்கள்'' இத்தகைய கடும் வார்த்தைகளுடன், ஊடகங்கள் எங்கள் துயரமான முரண்பாட்டுக் காயங்களை ஆற்றக்கூடிய பயனுள்ள பணிகளில் ஈடுபட்டு இந்தப் பிரச்சனையான தீவில் வாழ்பவரிடை புதிய எதிர்காலத்தை மீளக்கட்டி எழுப்ப வேண்டும்.

# நிதி, திட்டமிடல் இனத்துக்குரிய அலுவல்கள், தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் வாக்குப்பணம்

## மார்ச்சு 22 1995

இனத்துக்குரிய அலுவல்கள், தேசிய ஒருங்கிணைப்புக்கு புதிய அமைச்சு நிறுவியதற்காக ஜனாதிபதியும் அரசும் பாராட்டப்பட வேண்டியவராவார். அமைச்சு செயற்பட சில காலம் எடுக்க நேரினும், இதை முக்கிய நிறுவனமாக மேம்படுத்த முடியும்; கொள்கைகளையும் ஒன்றிணைக்கும் திட்டங்களையும் அமைத்து இலங்கைச் சமூகத்தின் பன்முக குணாம்சத்தைப் பலப்படுத்த முடியும். ஆரம்பத்தில் அமைச்சு வடக்கில் மீளமைக்கும் திட்டங்களில் கவனமெடுப்பதோடு பொருளாதாரத் தடைகளை தொடர்ந்து விரிவாக்க முடியும். போதிய அத்தியாவசிய பண்டங்கள், மருந்துகள் மற்றும் தடைப் பட்டியலில் இல்லாதவை யாவையும் மனிதாபிமான அமைப்புகள் பல குறிப்பிட்டபடி போதியவை செல்வதற்கு உறுதிப்படுத்தலாம். இவை உடனடியாகக் கவனிக்க வேண்டிய அவசர விஷயமாகும்.'' இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாவிடின் நம்பிக்கையின்மை தவறான எண்ணங்களுக்கு வழிவகுக்கும். வடகிழக்கு அபிவிருத்தி அதிகாரியை அமைச்சு அமைப்பதோடு அரசும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் இவற்றில் பங்கு பற்ற வேண்டும். அர்த்தமுள்ள மீளமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது வெறும் ஆலோசனை மட்டுமல்ல; பாதிக்கப்பட்ட மக்களின் நேரடிப் பங்குபற்றலுடன் மீளமைப்புப்பற்றி தீர்மானிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் ஈடுபடல் வேண்டும்.

வட-கிழக்கில் மனிதாபிமான நிவாரணங்கள் சார்பாக உடனடி நடவடிக்கையை அமைச்சு எடுப்பதோடு நீண்டகாலத்

திட்டமாக பன்முக - இன சமூகத்தை கட்டி எழுப்பும் பிரச்சனைகளையும் கவனிக்க வேண்டும். பன்முக சமூகம் சமத்துவம், சம வாய்ப்பு என்ற ஒன்றிணைப்பு உறுதியாக நாட்டப் படவேண்டும். தமிழர், பெருந்தோட்டத்தமிழர், முஸ்லிம்களை வேலைகமர்த்துவது பல வருடங்களாக குறைந் துள்ளது. இந்தச் சமூகங்களின் இன்றைய அரசுப் பணிகள் பிரதிபலிப்பு தேசிய இன அடிப்படைக்கு மிகக் கீழே குறைந்துள்ளது. இலங்கைத் தமிழர் 12.7% சதவீதமாக குடித் தொகையில் இருந்தபோதும் 5.9% மானவரே அரச சேவையில் உள்ளனர். 7.1% மாகாண சேவையிலும் 8.2% அரை - அரசு சேவையிலும் உள்ளனர். மலையகத் தமிழர் 5.5% குடித்தொகை யில் இருந்தபோதும் 0.1% அரச சேவையிலும் 0.2% மாகாண சேவையிலும் 0.5% அரை - அரசுச் சேவையிலும் உள்ளனர். முஸ்லிம்களில் 7% குடித்தொகையிற் ஆனால் அரசு சேவையில் 2% மாகாண சேவையில் 4.6% அரை - அரசு சேவையில் 1.0% ஆகும். இப்புள்ளி விபரங்கள் 1990 சார்ந்தது. 1992 குடித்தொகை, புள்ளி விபர திணைக்களகத்தால் வெளியிடப்பட் டுள்ளது. பொது நிர்வாக அமைச்சு பொது சேவை நியமனங்கள் இன பங்கீட்டு அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என சுற்றறிக்கை அனுப்பியது, அதன் நடைமுறை மதிப்பீட்டை கவனமாக மீளாய்வு செய்தல் வேண்டும். இன முரண்பாட்டால் ஒன்றிணைப்புக் குழுக்களின் சமத்துவம், அரசுப்பணி, கடன், பிற நிலவளங்கள் பெறுவது பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விஷ யங்களில் நீதியான, சீரான கொள்கையை வகுப்பது அத்தனை எளிதல்ல. அரசுப் பகுதி நியமனங்களில் நிலவிய சமனற்ற நிலையை இன குடித்தொகைப் பங்கீட்டுக் கொள்கைப்படி தீர்க்க முடிவு செய்தோம். ஒன்றிணைந்த பன்முக பண்பாட்டு அடிப்படையில் இன அமைதியை மேம்படுத்த புதிய, உள்ளு ணர்வான கொள்கைகளை வகுப்பதற்கு அமைச்சு, முன் வர வேண்டும். கல்வித் துறையில் மொழி, சமயம், கல்வியின் உள்ளடக்கம் ஆகியன அடிப்படை மாற்றத்துடன் அமைக்கப்ப டுதல் வேண்டும். பாட நூல்களை மீளாய்வு செய்து திருத்தல் வேண்டும் என்ற தேவையை பல கல்வி ஆய்வுகள் குறிப்பிட்

டுள்ளன. மொழி, இன, தேசிய சிறுபான்மையைப் பற்றி ஒரே முகமாக ஐ.நா. சபை இயற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் அமைச்சு மீளாய்வு செய்ய வேண்டும் என வேண்டுகிறேன். இத்தீர்மானம் சிறுபான்மையினரை இனங்காண்பதிலும் பாதுகாப்பதிலும் உள்ள பல கொள்கைகள், கருத்துகள் உள்ளன. அவை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

வரலாறு, மரபு வழி, பண்பாடு, இனக் குழுக்களின் மொழி பற்றிய கல்வி அறிவு வளர அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. சமத்துவ மதிப்பும் தகுதியும் அனைத்து சமூகங்களின் பண்பாட்டுக்கும் ஊடகங்கள் முக்கியத்துவம் தர வேண்டும். சகிப்புத் தன்மைக்கு மதிப்புத் தந்து மேம்படுத்த வேண்டும்.

பெருந்தோட்டத் தமிழர் பிரச்சனைகளை நோக்கும் தனி அலகு அமைச்சில் ஏற்படுத்த வேண்டும். பெருந்தோட்டத் தமிழரது வாழ்க்கை நிலை சார்பான பல திட்டங்களை ஒன்றிணைப்பது பற்றி கவனம் எடுக்கப்படவில்லை. இவை, பெருந்தோட்டம், வீடு, சமூக நலன் டிரஸ்டுகளது திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்; பெருந்தோட்ட கல்வி அபிவிருத்தித் திட்டம், அட்டன் சிறிபாத கல்வி, தொழில் பயிற்சி மையம். இவை வெளிநாட்டு நிதித்திட்டங்கள் பல காரணங்களால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமைச்சு இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு தமது முன்னேற்றம் பற்றி மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். தவறின் அவநம்பிக்கையும் அந்நியப்படுத்தலையும் மேலும் மோசமாக்கும். இந்நிலையே பெருந்தோட்ட இளைஞர்களை இன்று வேகமாக மேலோங்கிப் பீடிக்கிறது.

# வேலைவாய்ப்புப் பயிற்சி அதிகாரி மசோதா விவாதம்

## ஜூன் 1, 1995

தொழில் நுட்ப மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிக் கல்விப் பாடங்கள் மோசமான நிலையில் உள்ளன. அரசு ஆதரவுடன் *3000* பயிற்சித் திட்டங்கள் *20* அமைச்சுகளால் நடத்தப்பட்டு வருகின்றன. *21*-ம் நூற்றாண்டின் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்வதற்காக பயிற்சியாளர்களைத் தயார் செய்யும் நம்முடைய தொழில்நுட்ப நிறுவனங்கள் காலாவதியாகிப்போன நிறுவன அமைப்பிலும் பயிற்றுவிக்கும் முறையிலும் சிக்கியுள்ளது என்று தொழிலாளர் அமைச்சகம் சுட்டிக் காட்டியுள்ளது.

தொழிலாளர் அமைச்சு *1995*-ம் ஆண்டுக்கான அறிக்கை பின் வரும் பிரச்சினைகளைக் கண்டறிந்துள்ளது:

1. காலாவதியாகிப்போன பாடத்திட்டம்
2. திறமையை மேம்படுத்துவதில் குறைபாடு
3. பாடங்களை ஒருங்கிணைப்பதில் உள்ள பலவீனம்
4. கைவசம் இருக்கும் ஆதாரங்களைப் பயன்படுத்தாமை
5. தேர்வு நடத்துவதில் தாமதம்

பயிற்சிக்காக மாணவர்களை சேர்ப்பதிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. *1982-83*-ல் *21,934* மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்றனர். *1992*-ல் இந்த எண்ணிக்கை *18,068* ஆக குறைந்தது.

*71* மில்லியன் அமெரிக்க டாலர்கள் நம்முடைய தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலீடு செய்த பிறகும் நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் அவை சிறந்த பங்கை அளிக்கத் தவறி விட்டன என்று உடல் ரீதியான மற்றும் மனித வளம்

பயன்படுத்தப்படுவது குறித்து கண்காணித்த கமிட்டி தெரிவித் துள்ளது. அபாயகரமான அளவுக்கு தரம் குறைந்து இருப்பது டன் மாணவர்களின் நலன்களும் மோசமாக நிராகரிக்கப்பட் டுள்ளன என்று கமிட்டி முடிவாகத் தெரிவித்துள்ளது. மேம்ப டுத்தப்பட்ட பயிற்சியின் மூலமாக திறமையை வளர்ப்பதற் கான வசதிகளும் இல்லை.

வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்கள் தேவையின் அடிப் படையில் இருக்க வேண்டும். ஆனால் அளிக்கப்படும் பயிற்சி வேலை வாய்ப்பை உருவாக்கும் என்ற தவறான யூகத்தின் அடிப்படையில் கடந்த காலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட் டன என்று டெரன்ஸ் கெல்லி சமர்ப்பித்த ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஜெர்மனியில் தொழில்துறைக்கான வேலை வாய்ப்பு பயிற்சி பெற்ற வெற்றியைக் குறிப்பிட்ட அவர், வேலைவாய்ப்புப் பயிற்சியானது முன்னேற்றம் என்ற புதிரின் ஒரு பகுதி என்றார்.

தொடக்கத்தில் எல்லா பயிற்சிகளிலும் ஏராளமானவர்கள் சேர்ந்தனர். ஆனால் பயிற்சிக் காலத்தில் பெரும்பாலானோர் விலகி விட்டனர் என்று 1994-ல் வெளியான மனித உரிமை அறிக்கையின் சமூக பொருளாதார உரிமைகள் பிரிவில் நந்தினி குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இளைஞர் நலன், விளையாட்டு, கலாசார அமைச்சகம் நடத்தும் பயிற்சி வகுப்புகளில் சேரும் மாணவர்களில் 30 விழுக்காட்டினர் பாதியிலேயே அதை விட்டு விடுகின்றனர். வெற்றிகரமாக பயிற்சியை முடித்த பாதிப்பேருக்கு ஒன்றி ரண்டு ஆண்டுக்களுக்குள்ளும் வேலை கிடைக்கவில்லை. வேலை வாய்ப்பு நிலவரங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளா தது, பயிற்சி முறைகளில் இருக்கும் ஆண், பெண் வேறுபாடு, பயிற்சித் திட்டத்துக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இணைப்பு இல்லாதது ஆகியவை குறித்தும் நந்தினி குணவர்த் தனா குற்றம் சாட்டியுள்ளார்.

நெருக்கமான ஒருங்கிணைப்புத் தேவை குறித்து கவனம் செலுத்தும் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்தின் மாதிரியை (Model) அமைச்சர் அறிவித்துள்ளார். தனியார் நிறுவனத்துடனான தொடர்பு பலமானதாக இருக்க முடியும் என்றாலும் இந்தத் தொடர்பு குறித்து இவ்வாறு மாதிரி கூறுகிறது. மத்தியப்படுத் தப்பட்ட மாதிரிக்குச் சாதகமாக அமைச்சர் சாய்ந்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த நிர்வாகம் செயல்படும் விதம் குறித்து விசாரணை நடத்தவும் வேலைவாய்ப்புப் பயிற்சி மையங்களை ஒழுங்குபடுத்தவும் பொதுவான மற்றும் குறிப்பிட்ட உத்தரவுகளை பிறப்பிக்க அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் உத்வேகத்தையும் கற்பனையையும் புகுத்தக்கூடிய தனி நபர்கள் மிகவும் அவசியம். நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு மட்டுமின்றி, தொழில்நுட்பப் பயிற்சி மையங்க ளுக்கு தலைமைப் பொறுப்பை ஏற்கவும் இத் தனி நபர்கள் தேவை. பயிற்சி அளிப்பவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கவும் தகுதியற்ற பயிற்சியாளர்களைக் குறைக்க வேண்டி யதும் அவசியம். இது போன்ற தனி நபர்கள் உள்நாட்டில் கிடைப்பது அவ்வளவு எளிதாக இருக்காது என்பதால் வெளி நாட்டில் இருந்து கொண்டு வரலாம். தனி நபர்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமானால் விதிமுறைகளால் அவர்களை கட்டுப்படுத்தக்கூடாது. மோசமான நிலையில் உள்ள பயிற்சி மையங்களை மீண்டும் சீரமைக்கும் வகையில் வளைந்து கொடுக்கும் வகையிலும் தன்னாட்சி மிக்கதாகவும் இருக்க வேண்டும்.

தமிழில் பயிற்சியளிக்கும் மையங்களின் எண்ணிக்கையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் குறித்தும் அமைச்சர் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். எம்.ஜே. பெரைரா தலைமையிலான கமிட்டி இது குறித்து ஆராய்ந்தது. வரக்காபொல, கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை, பண்டாரவெலை, ரத்தினபுரி ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி மையங்களில் தமிழில் பயிற்றுவிக்கப்படவில்லை என்றும்,

வேறு பல வழிகளிலும் தோட்டப் பிரதேசங்களில் உள்ள இளைஞர்கள் பயிற்சி பெற முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ரப்பர் தோட்ட இளைஞர்களுக்காக ஹட்டனில் உள்ள பயிற்சி மையம் நொராட்டின்(NORAD)உதவியுடன் அமைக்கப்படவுள்ளது என்று நாம் மகிழ்ச்சி அடைகிறோம். 1987-ல் இருந்தே அத்திட்டம் நிலுவையில் உள்ளது என்பதால் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சரை வலியுறுத்துகிறேன்.

## டாக்டர் எம்.சி.எம். கலீல் - இரங்கல் தீர்மானம்

### ஜூன் 7, 1995.

டாக்டர். கலீல் சாதாரண அரசியல்வாதி அல்லர். அவர் நேர்மையும் பரிவும் பொது நலனில் மிகுந்த அர்ப்பணிப்பு மனப்பான்மையும் கொண்டவர். இரக்க சுபாவமும் நல்ல குணநலன்களும் கொண்ட அவர் கடுமையான அரசியலில் ஈடுபட்டு வெற்றி கண்டது மிகவும் குறிப்பிடத்தக்கது. மாநில கவுன்சில் உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் ஆகிய பதவிகளை அவர் வகித்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரான அவர் அக்கட்சி யின் தலைவராக இருந்தார்.

அனைத்து இலங்கை முஸ்லிம் லீக்குடன் நெருக்கமான தொடர்புடைய கலீல், இறக்கும் காலம் வரை அதன் தலைவ ராக இருந்தார். இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந் தார். தமிழை ஆட்சி மொழிகளில் ஒன்றாக அங்கீகரித்து, அந்தஸ்திலும் பயன்பாட்டிலும் சம உரிமை அளிக்க வேண்டும் என்று அவர் வாதாடினார்.

டாக்டர் கலீலின் குடும்பத்தினர் அலுத்கமா அருகில் உள்ள கிராமத்தில் இருந்து வந்தவர்கள். மெசஞ்சர் தெருவில் வசித்த அவர்கள் பின்னர் முகத்துவாரத்திற்குச் சென்றார்கள். அவரு டைய தந்தை அவருக்குத் தொடக்கக் கல்வியும் இஸ்லாத்தில் பயிற்சியும் அளித்தார். தென்னிந்தியாவில் உள்ள வேலூரில் உள்ள மதரசாவில் அவர் மௌலவியாகவும் பயிற்சி பெற்றார். முகத்துவாரத்தில் இருந்த புனித தொமஸ் கல்லூரியில் சேர்ந்து, பல தனிச் சிறப்புகளுடன் சீனியர் கேம்பிரிட்ஜ் தேர்வை முடித்தார். எடின்பரோ சென்று மருத்துவக் கல்வி பயிலுமாறு வார்டன் ஸ்டோன் அவரை ஊக்குவித்தார். அங்கு மருத்துவப்

பட்டம் பெற்ற அவர், டப்ளினில் குழந்தைப் பிரசவ மருத்து வத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

இலங்கை திரும்பியதும், மருதானையில் உள்ள முஸ்லிம் களுக்கு சேவை செய்வதற்காக ஒரு மருத்துவமனையை அமைப்பதில் ஆர்வம் காட்டினார். அவர் நிறுவிய கலீல் நர்சிங் ஹோம் எல்லா சமூகத்தினருக்கும் உதவும் வகையில் செயல்ப டுகிறது. திறமையான மருத்துவர் அவர். தன்னுடைய சக மருத்துவர்களால் மிகவும் மதிக்கப்பட்டார். இலங்கையில் பெனிசிலினை அறிமுகப்படுத்தியது அவர்தான் என்று கூறப்ப டுகிறது. தன்னிடம் வரும் நோயாளிகளின் நலனில் அக்கறை கொண்ட அவர், மக்களுக்கு சேவை செய்ய கிடைத்த அழைப்பாகத்தான் மருத்துவத்தை கருதினாரேயொழிய வெறும் தொழிலாக மட்டும் கருதவில்லை.

மாநில கவுன்சிலின் உறுப்பினர் என்ற முறையில் உழைக் கும் மக்களுக்கான பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து அடிக்கடி பேசினார். தொழிலாளர் மற்றும் சமூக சேவைத் துறையின் அமைச்சர் என்ற முறையில், தொழில் உறவின் முகப்பு என்பது மூன்று தூண்களின் மேல் கட்டப்படுகிறது என்று நம்பினார். அவை, ஊதியத்தை நிர்ணயம் செய்யும் ஊதியக் குழு, கூட்டுப் பேரத்துக்கு வகைசெய்யும் தொழில் உறவுச் சட்டம், வேலை நேரம் மற்றும் விடுமுறைகளை ஒழுங்குபடுத்தும் கடை, அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சட்டம். அவர் முற்போக்கான, சுதந்திரமான பார்வை கொண்டவர். இங்கிலாந்தில் இருந்து திரும்பியதும் முஸ்லிம் பெண்களுக்கு கல்வி அளிக்க வேண்டும் என்று அவர் பாடுபட்டார்.

நான்கு தலைமுறைகள் அடங்கிய அவருடைய பெரிய குடும்பத்தில் மருத்துவம், கணக்கு, கலை, கல்வி ஆகிய துறைகளில் புகழ்பெற்றவர்கள் உளர். கலீலின் பல குழந்தை களை எனக்கு தெரியும். மெக்கானிக்கல் பொறியாளரான அஸ்லான் ரோயல் கல்லூரியில் எங்களுடன் இருந்தார். சிறந்த சினிமா இயக்குநரான ஐனுல் பேராதனைப் பல்கலைக்கழகத்தி லும் கேம்பிரிட்ஜிலும் பயின்றார். சமூக விஞ்ஞானியான

ரிஸ்வி சர்வதேச தேசிய இனக் கல்வி மையத்தில் (இன்டர்நே ஷனல் சென்டர் ஃபார் எத்தினிக் ஸ்டடீஸ்) பணியாற்றினார். குடும்பத்தின் நடுநாயகமாகத் திகழ்ந்த திருமதி கலீல், தன்னு டைய அன்பாலும் புத்திசாலித்தனத்தாலும் அதைத் தக்க வைத்துக் கொண்டார்.

டாக்டர் கலீல் அரசியலில் அன்னியப்பட்டு தூரத்தில் நிற்கவில்லை. நாடாளுமன்றத்தில் பல தலைவர்களின் மனதி னைத் தொட்ட ஓர் அரசியல் வாதியே.

## மியன்மார் பற்றிய தீர்மானம்

## ஜூலை 6, 1995.

தனிப்பட்ட உறுப்பினர்களின் பிரேரணை யாவும் தீர்மானங்களாக வேண்டிய அவசியமில்லையெனினும் அவை சனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியாகும்; மற்றும் ஒரு குடியியல் சமுதாயத்தினை வலுப்படுத்தலுடன் செல்வாக்குச் செலுத்தும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பாக அபிப்பிராயங்களை வெளியிட இச்சபைக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. பல வருடங்களுக்கு முன்னர் றொபின் தீவில் சிறையிலடைக்கப்பட்டிருந்த ஒரு கைதியை விடுதலை செய்ய வேண்டும் என்ற பிரேரணை இச்சபையில் முன்மொழியப்பட்டது. இக்கைதிதான் இன்று தென்னாபிரிக்க சனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் திரு. நெல்சன் மண்டேலா. அநீதி எங்காவது நடைபெறின் அது எல்லா இடங்களிலும் நீதிக்கான போராட்டத்தைத் தோற்றுவிக்கிறது என்பதில் இச்சபை எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. மியன்மார் தொடர்பாக இப் பிரேரணையானது இச்சபையின் இருபகுதி உறுப்பினர்களும் மியன்மாரில் நடைபெற்று வரும் அரசியல் அபிவிருத்திகளை அவதானித்து அணுகும் இருகூறான உணர்வுகளுக்கு இன்னுமொரு உதாரணமாகும்.

மியன்மார் தொடர்பான விடயம் இன்று உலகளாவிய ரீதியில் உருவாகி வரும் கருத்தொருமிப்புக்கு வடிவம் கொடுக்கும் ஒரு எளிய முயற்சியாகும். அத்துடன் கடந்த ஏழு வருடங்களாக எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிழக்கின் மண்டேலாவான ஆங் சான் சூ கியூ அவர்கள் மீது நாம் கொண்டுள்ள கரிசனையின் வெளிப்பாடாகவும் அமையும். இலங்கையும் இந்தச் சபையும் மியன்மார் தொடர்பாக அக்கறை கொள்வதற்கு விசேட காரணங்கள் உள்ளன. *11* ஆம், *12* ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே இரு நாடுகளும் உறுதியான வரலாற்று, சமயத் தொடர்புகளைக்

கொண்டுள்ளன. பொலன்னறுவையை ஆண்ட மன்னர்களான முதலாம் பராக்கிரமபாகு, முதலாம் விஜயபாகு ஆகியோர் முன்னர் மயன்மார் எனப்பட்ட பர்மாவுடன் மிகவும் நெருக்கமான அரசியற் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். அத்துடன் இத் தொடர்புகள் இலங்கையும், பர்மாவும் கொண்டுள்ள தேரவாத பௌத்த மரபுகளினால் இன்னும் பலப்படுத்தப்பட்டன. விஜயபாகு சங்கத்தை மீளமைக்கப் பர்மாவின் உதவியை நாடினான். இத்தகைய சமய கலாசாரத் தொடர்புகள் பல்லாண்டுகளாக வளர்ச்சிடைந்துள்ளன. அத்துடன் ஆங்சான் தலைமையிலான பர்மாவின் விடுதலைப் போராட்டத்தின் போது இன்னும் அதிகமாகப் பலப்படுத்தப்பட்டுள்ளன. தமது நீண்ட பிரச்சினைகள் நிறைந்த வரலாற்றில் பர்மிய மக்களின் வீரம், சகிப்புத்தன்மை ஆகியவற்றுக்காக இலங்கை மக்கள் அவர்கள் மீது கொண்டுள்ள அன்புக்கும், மதிப்புக்கும் இப்பிரேரணை ஓர் அடையாளமாகும். இந்த அடிப்படையில்தான் 1992 வெசாக் தினத்தில் மியன்மாரின் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் 1990 ஆடி மாதத்தில் நடைபெற்ற தேர்தல் தீர்ப்புகளை மதித்து நாட்டில் உடனடியாகச் சனநாயக ரீதியான மாற்றத்தைக் கொண்டு வருமாறு இலங்கையிலுள்ள ஒரு மனித உரிமைச் செயற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

இப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதானது உப கண்டத்தில் சங்கிலித் தொடரான நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளது. சித்திரை மாதத்தில் பாகிஸ்தானில் யுனெஸ்கோவும், மனித உரிமை ஆணைக் குழுவும் ஒன்றிணைந்து நடத்திய மாநாட்டின் இறுதிப் பிரேரணையில் இப் பிரேரணை பற்றி குறிப்பிடப்பட்டது. இம் மாநாட்டைத் தொடக்கி வைத்த பிரதமர் பெனாசிர் பூட்டோ, ஆங் சான் சூ கியூ இனை உடனடியாக விடுதலை செய்யுமாறு மிகவும் தைரியமாகக் கோரிக்கை விடுத்தார். சில நாட்களின் பின்னர் சர்வதேச விளக்கத்துக்கான கௌரவமிக்க நேரு ஞாபகார்த்த விருது ஆங் சான் சூ கியூவுக்கு வழங்கப்பட்டது. நான் இதனைக் குறிப்பிடுவதற்கான காரணம் உள்ளது. அதாவது மனித விழுமியங்கள் பற்றிய போராட்டத்தில் மிகச் சிறிய முனைப்பும் கூட சிற்றலைகளை உருவாக்கி நமது நாட்டுக்கு அப்பாலும் செல்லக்கூடிய பேரலைகளை உருவாக்கக் கூடும். மியன்மாரின் வரலாற்றில் தற்போதைய குழப்ப

நிலை 1988 புரட்டாதி 18 ஆம் திகதி பர்மா இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன் தொடங்குகிறது. பர்மிய ஆயுதப் படைகளின் தலைவரன ஜெனரல் சோ மாவுங் இராணுவம் பதவியேற்றதையும் சகல குடியியல் அரசாங்க நிறுவனங்களும் கலைக்கப்பட்டதையும் அறிவித்தது. இராணு வமானது 19 உறுப்பினர்களைக் கொண்ட இராணுவ ஆட்சிக் குழுவை அமைத்தது. இது அரச சட்டம் மற்றும் ஒழுங்குக ளைப் பாதுகாக்கும் கவுன்சில் (State Law & Order Restoration Council) எனப்பட்டது. இக் கவுன்சிலின் ஆணையின் படி பர்மாவில் கிளர்ந்தெழுந்த ஜனநாயக சார்பு இயக்கங்கள் யாவும் இராணுவத்தினரால் ஒடுக்கப்பட்டன. ரங்கூன் உட்பட பல இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் சுட்டு வீழ்த்தப்பட்டனர். மக்களது ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப் பட்டன. இதனை மீறிய மாணவர்கள், அரசியல்வாதிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மக்களது ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்பட்டன. இதனை மீறிய மாணவர்கள், அரசியல்வாதி கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பௌத்த குருமார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 1989 இல் உருவாக்கப்பட்ட இன்னு மொரு நடவடிக்கையின் விளைவாக ஆங்சான் சூ கியூ உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறான அரசியல் அடக்குமுறை இருந்த போதிலும் 1990 மே 27 இல் நடைபெற்ற தேர்தலில் சனநாயக சக்திகள் பெற்ற பாரிய வெற்றி இராணுவ ஆட்சிக்கு எதிரான அரசியல் எதிர்ப்பைப் பறைசாற்றின. தேசிய சபையின் 485 ஆசனங்களில் 392 ஆசனங்களை என்.எல்.டி. கைப்பற்றியது. இராணுவ ஆட்சிக்குச் சரியான என்.யு.பி. க்கு 10 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. இத்தேர்தல் பெறுபேறுகள் கௌரவிக்கப்பட வில்லை. அத்துடன் அதிகாரம் குடியியல் ஆட்சிக்கு மாற்றப்ப டவுமில்லை.

# குற்றவியல் சட்டத் திருத்த விவாதம்

## செப்டம்பர் 19, 1995.

மதிப்பிற்குரிய நீதியமைச்சர் 1865ல் இயற்றப்பட்ட குற்றவியல் சட்டத்திற்கு விரிவான சீரமைவு அறிமுகப்படுத்துவதற்கு பாராட்டிற்குரியவராகிறார். நமது குற்றவியல் சட்டம் 1836ல் சட்டசபை கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட இந்திய குற்றவியல் சட்டத்தின் மாதிரியில் அமைக்கப்பட்டது. இச்சட்டத்தின் ஆசிரியர் தொமஸ் பபிங்டன் மக்காலே; இவரே முதன் முதலாக சட்ட சபை கவுன்சிலில் சட்ட அங்கத்தவராயிருந்தவர். பொதுவாக சட்ட மாற்றம், 'கொள்கையுடன் குறிப்பிட்டவை ஒழுங்குபடுத்தப்பட்டு நிரைப்படுத்தப்படுதல் வேண்டும். காணுமிடங்களில் சீரமைப்பு; தேவைப்படும் வேளை விரிவாக்கம்; ஆனால் அனைத்து வழக்குகளிலும் உறுதிப்பாடு.' வசுத தரம்பார் சுட்டிக்காட்டினார்: ''இந்திய குற்றவியல் சட்டம் வியப்பூட்டத்தக்க வேலை; அது தனிமனிதனால் சட்ட வரைவில் அனுபவமில்லாத இளைஞரால் இரண்டு ஆண்டுகளில் வரையப்பட்டது என அறியும் வேளை வியப்பாகவே உள்ளது.''

குற்றவியல் சட்டத்தொகுப்பு ஆரம்பகால விக்டோரியன் காலத்து ஒழுக்க தராதரத்தையும் சமூக நோக்கங்களையும் கொண்டது. இன்றைய நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சட்டவாக்கத்தில் பாலியல் சமத்துவம் பிரதிபலிக்க வேண்டும். முதலாவது மேம்பாடு, உலக விழிப்பு நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறையுடன் சர்வதேச, உள்நாட்டு செயல்பாடு இத்தகைய வன்முறைக்கு காரணம் காணல் வேண்டும். இவை 1994 வியன்னா அறிக்கை, பீக்கிங் மேடைச் செயல், ஐ.நா. இலங்கை சட்டத்தரணி ராதிகா குமாரசாமி அவர்கள் சிறப்புடன் ஒன்றிணைவாளராக உலக சட்ட உரிமையுடன் நியமிக்கப்பட்டார். இரண்டாவதாக, பெண்களின் குழந்தை நலன் உரிமை பற்றி வளரும் உணர்வு; பெண் தன்

உடல், பாலியல் சார்பான சுதந்திரமும் தனிமனித கட்டுப்பாடும்; பாதுகாப்பற்ற கர்ப்பச் சிதைவால் ஏற்படும் விபத்து; குறிப்பாக ஏழை, இளம் பெண்களைப் பாதிக்கிறது. மூன்றாவது, குழந்தைகள் பாலியலாகச் சுரண்டப்படுவதும் குழந்தைகள் ஆபாசமும் விழிப்பூட்டுகிறது. இறுதியாக, வேறு பாலியல் விருப்புகள் ஒழுக்கம் பற்றியும் சட்ட வாக்கம் செய்தல்.

நமது கருக்கலைப்பு சார்ந்த சட்டம் அவசரமாக மாற்றப்படல் வேண்டும். நமது குற்றவியல் சட்டம் பல்வேறு சமூக வர்க்கங்களில் வேறாக மாறுபடுகிறது. வசதியான சமூக வர்க்கங்கள் அனுபவமுள்ள டாக்டர்களால் தேவையற்ற கர்ப்பத்தை கலைத்து விடுகின்றனர். ஏழைகள், திருமணமாகாத பெண்கள் சட்டரீதியற்ற கருக்கலைப்பிடங்களுக்கும் கண்டவர்களிடமும் செல்வது கண்டிக்கப்பட வேண்டியது. ஒரு பெண் மருத்துவர் ''இத்தகைய திருட்டுக் கலைப்புகளே பெண்கள் இடம் பெயர்வதற்கும் மரணத்திற்கும் காரணம்'' என்றார். மருத்துவமனை படுக்கைகளில் 20 சதமானவை இத்தகைய பாதுகாப்பற்ற கருச்சிதைவால் ஏற்படும் பிரச்சனையால் நிரம்பியுள்ளன என ஒரு மதிப்பீடு கூறுகிறது. ஆகவே கருக்கலைப்பை கட்டுப்படுத்தாது சுதந்திரம் வழங்குவதையே நான் முழுமையாக விரும்புகிறேன்; பிரேரிக்கப்பட்ட திருத்தங்களுக்கு மேலாக நான் கூறுவேன். இவ்விடயத்தில் ஐக்கிய அமெரிக்க உச்சநீதிமன்றம் றோசுக்கும் வாடுவுக்குமான வழக்கில் கர்ப்பம் சார்ந்து கவனிக்கும் மருத்துவர் அரசு சட்டம் சாராது தானே மும்மாதத்தில் (3) கர்ப்பம் கலைப்பது பற்றி தீர்மானிக்கலாம் என்றது. மும்மாதம் (3) கழிந்தபின் பெண்ணின் உடல் நலனை அரசு காப்பாற்றி பாதுகாப்பளிக்கும். கர்ப்பக்கலைப்புச் சட்டத்தை குற்றத்திலிருந்து நீக்கி குற்றவியல் சட்டத்தில் நிலவும் விதிகளை ஒழிப்பதை நான் ஆதரிப்பேன். மனிதாபிமான, யதார்த்த ஒழுங்குமுறையை நாம் உறுதிப்படுத்த வேண்டும். பெண்களின் குழந்தை பெறும் உரிமை, தாயின் உடல் நல விஷயங்களில் நாம் அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

சட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஒருமாற்றம் பாலியல் தொல்லையை புதிய குற்றமாகக் கருதுவதாகும். பெண்கள்

இயக்கங்களில் பாலியல் தொல்லை வேலைத்தலங்களிலும் மற்ற இடங்களிலும் அதிகரித்து வருவது பற்றி முக்கிய கவனம் செலுத்துகின்றனர். பல சட்ட நிபுணர்கள் பாலியல் தொல் லைக்கு இலக்கணம் கூறுவதில் உறுதியற்றுள்ளனர். ராதிகா குமாரசாமி இருமுக்கிய உள்ளடக்கத்தை முக்கியத்துவப்படுத்து கிறார். முதலாவதாக பெறுபவர் வேண்டாத நடத்தை; வேறு வார்த்தையில் வேண்டாத பாலியல் ஈர்ப்பு. இரண்டாவதாக பெறுபவரின் எதிர்ப்பு நடவடிக்கை அல்லது மிரட்டுதல். ஜெர்மன், டென்மார்க் குற்றவியல் சட்டத்தொகுப்பின்படி கீழ்ப்படிவு அல்லது பண ரீதியாக தங்கியிருத்தல் காரணமாக அதிகாரத்தில் உள்ளவர் பாலியல் வாய்ப்புகளை பெற முயலு தல் ஆகியன கூறும். தற்போதைய திருத்தம் மட்டுப்படுத்தப் பட்டது. பெண்கள் பொது இடங்களில் நடந்து செல்லல், பொது போக்குவரத்தில் செல்லும் வேளை அதிகத் தொல்லை தரப்படுவதாகும். பல வெளிநாட்டு ஆய்வாளர்களும் சுற்று லாப் பயணிகளும் இவ்விஷயமாக பத்திரிகைகளுக்கு எழுதி யுள்ளனர். கனடாவில் வேலை கொள்வோர் முறைப்பாடுகளை விசாரணை செய்வது, முறைப்பாடுகளை நெறிப்படுத்துவது வரை பாலியல் தொல்லையை வகுத்துள்ளனர். சட்ட நடவ டிக்கை மூலம் மட்டும் இப்பிரச்சனை தீர்க்கப்படமாட்டாது. சமூகம் பொதுக்கல்வி மூலமும் விழிப்புணர்வு நிலைக்கு கொணர வேண்டும். அவுஸ்திரேலிய மனித உரிமைகள் சமத்துவ வாய்ப்புகள் ஆணையாளரின் ஒரு போஸ்டர், சஞ் சிகை, ரேடியோ விளம்பரத்தின் தலைப்பு SHOUT - பாலியல் தொல்லை வெளியே என்பதாகும். நாமும் இத்தகைய பொது கல்வி திட்டத்தில் ஈடுபட வேண்டும்.

திருத்தச்சட்ட சீரமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்படு வது கற்பழிப்பு. பெண்ணிய எழுத்தாளர் கூற்றில் கற்பழிப்பு, தந்தை வழி சமூகத்தின் கட்டுப்படுத்தும் ஆயுதம். பெண்ணின் அதிகாரம் கற்பழிப்பு எனும் வடுப்படு நிலையில் தங்கியுள்ளது என்பர். குடும்பத்தில் கற்பழிப்பு திருமணத்தில் நடைபெறுகி றது; அல்லது தகாத பாலுறவாக சமூகத்தில், இராணுவ முரண்பாட்டின்போது அல்லது அகதிகள் முகாமில் நடைபெறு கிறது. ''ஆகவே கற்பழிப்பு சார்பான சட்டம் போதிய அளவாக

இல்லை. குற்றவாளிகளை தண்டிப்பது சிரமம்; பாதிக்கப்படுப வர் பற்றிய பொலிசாரின் நடவடிக்கை பொதுவாக விசித்திரமா னது. தற்போதைய திருத்தம் சுருக்கமாக 'பாலுறவுக்கு' விளக் கம் தருகிறது. சூழலைப் பொறுத்து 'இணங்கியது' என்று எண்ணிவிடப்படாது. கூடிய தண்டனையை சூழ்நிலையை பொறுத்து வளரவிடுகிறது. பாதுகாப்பில் வன்முறை கர்ப்பி ணியை கற்பழித்தல், 18 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்ணின் கற்பழிப்பு, ஊனமுள்ள பெண்ணின் கற்பழிப்பு, குழுவாகக் கற்பழிப்பு, இக்குற்றங்களுக்கு ஆகக்கூடிய தண்டனை வழங் கப்படும்போது, வேறு சூழலில் சட்ட ரீதியான தண்டனையை குறைப்பதற்கும் வழியிருக்க வேண்டும். கற்பழிப்புக்கு உட் பட்டவருக்கு நீதிமன்றம் நஷ்ட ஈடு வழங்கவும் இடமளிக்கி றது.

திருமண கற்பழிப்பை ஏற்றுக்கொள்வது தனியார் வேறு பாட்டை குடும்ப வன்முறையில் கொணர்கிறது. ஆயினும் இம்மாற்றம் நீதிமன்ற விவகாரத்தை வளர வைத்திருக்கிறது. ஆயினும் திருமண கற்பழிப்பின் முக்கியத்துவத்தை மட்டுப்ப டுத்தி நீக்க வேண்டுமென வேண்டுகிறேன்; பல கொமன் வெல்த் நாடுகளுடன் இணைவதாகும். 1991ல் ஐக்கிய ராச்சியத் தின் மேல்முறையீட்டு நீதிமன்றம் திருமணப் பாதுகாப்பு காலங்கடந்தது எனவும் சாதாரண சட்டக்கற்பனை எனவும் இன்றைய சமூகப் பெண்ணின் நிலையைப் பிரதிபலிக்க வில்லை எனவும் கூறியது. பலநீதிமன்றத் தீர்ப்புகளின்படி கற்பழிப்பு புதிதாக விளக்கப்பட்டுள்ளது. பாலியல் குணாம்சத் திலும் பார்க்க வன்முறையே முதன்மைப்படுத்தப்படுகிறது. பகுதி 365B யின் இன்றைய திருத்தம் உறுதியான அணுகுமுறை கொண்டது. 'மோசமான பாலியல் தவறு' தற்போதைய கற்பழிப்புப் பற்றிய திருத்தம் இந்திய சட்ட ஆணையாளரின் 1980ன் அறிக்கையை ஒட்டி முற்போக்கானது. இதன்படி குற்றவியல் சட்டம் (திருத்தம்) 1983க்கு வழிவகுத்தது. இந்திய சட்ட ஆணையாளர் தன் அறிக்கையில் ''பகுத்தறிவான, புரட்சிகர மாற்றம் கற்பழிப்பு குற்றம் சார்பாக அணுகப்பட் டது; அடிக்கடி முக்கியமாக 'உயர்த்திப் பிடிக்கப்பட்டது, கிளர்ச்சியான சூழலில் குற்றம் செய்யப்பட்டது.'' ஆணையாள

ரின் அறிக்கை நடைமுறை பற்றி விரிவாகக் கூறும் - கைது செய்வது, தடுத்து வைப்பது, மருத்துவ பரிசீலனை, விசா ரணை, கமரா முன் வழக்கு - சாட்சி விதிகள்:

பல நீதிமன்ற தீர்ப்பில் சட்ட சீரமைப்பு ஏராளமான உணர்வு பூர்வமான பாலியல் ஆதரவைப் பெற்றது. இவை பாதிக்கப்பட்டவர் பெண் டாக்டர்களின் பரிசீலனையை உள்ள டக்கியது. அத்துடன் பொலிஸ் நிலைய பெண் பொலிசாரால் கற்பழிப்பு வழக்குகள் நடத்தப்படுகின்றன. மற்றைய நாடுக ளில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒன்றி ணைப்புச் சேவைகள் வழங்கப்படுகிறது; சட்ட சேவைகள், ஆலோசனைகள், ஆதரவுகள் உட்பட.

வயது வந்தவந்தவரிடை ஒப்புதலுடன் ஓரினப்பால் சேர்க்கை ஒழுங்கற்றது, குற்றவியலானது என சட்டம் பாலியல் விருப்புகளை ஒடுக்கக்கூடாது. பகுதி 365A முறையே திருத்தப்ப டவேண்டும். பகுதி 286A குழந்தைகள் ஆபாசம் பற்றிய பிரச்சனையும் பகுதி 360B குழந்தைகளின் பாலியல் சுரண்டலை யும் கூறும். இங்கு நம்பகமான புள்ளி விபரங்கள் இல்லாத போதும் பிரச்சனை அதிர்ச்சி தரும் அளவிற்கு வளர்ந்துள்ளது. சில உத்தியோக மதிப்பீட்டின்படி 30,000 குழந்தைகள் பாலியல் தொழிலாளராக சுற்றுலா பகுதிகளில் சுரண்டப் படுகின்றனர். PEACE என்ற அரசு சாரா அமைப்பு 8 - 14 வயதினரில் 10,000 குழந்தைகள் பாலியலாக சுரண்டப்படுகின்றனர் என மதிப்பிடு கிறது. குழந்தைகளை தவறான செயலில் ஈடுபடுத்துவது பற்றிய பிரச்சனை முறையாகக் கற்று ஆராயப்படவேண்டும். மிகக்குறுகிய முறைப்பாடுகளே அறிவிக்கப்பட்டு விசாரணை கள் நடைபெறுகின்றன. 1990/91 ல் 421 முறைப்பாடுகளில் 327 வழக்குகள் பதியப்பட்டு 76 வழக்கிலேயே குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## வங்கியியல் திருத்த மசோதா விவாதம்

### அக்டோபர் 19, 1995.

1988-ம் ஆண்டின் வங்கியியல் சட்ட எண் 30-யைத் திருத்தும் மசோதா, நீதித்துறை நெடுநாளாக சீரமைப்பால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. தனியார் நிறுவனங்கள் மேற்கொள் ளும் நீதி முதலீடு வாய்ப்புகளை கட்டுப்படுத்தியதன் காரண மாக இலங்கையில் நீதித்துறை குறையுடையதாகவே இருந்து வந்துள்ளது. குறுகிய கால வர்த்தகக் கடன்களுக்கான அதிக வட்டி விகிதம் 25% முதல் 30% வரை என்பது தனியார் முதலீட்டாளர்களுக்கும் பெரிய தடையாக உள்ளது. வைப்புத் தொகைக்கும் கடனுக்கும் உள்ள வட்டி விகிதங்களின் அதிக இடைவெளியைக் கொண்டுள்ள நீதித்துறையின் செயல்பாட் டின் குறைபாடும் இதற்கு ஒரு காரணம். இலங்கையில் கடனுக்கும் வைப்புத் தொகைக்கும் வட்டி விகித இடைவெளி கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக 6 சதவிகிதத்துக்கு அதிகமாகவே இருந்து வந்துள்ளது. அதே வேளையில், மலேசியாவில் இது 1% ஆகவும் சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற நாடுகளில் 3% ஆகவும் இருந்து வருகிறது. திறன் குறைவைப் போக்கும் திசையிலான நிதித்துறைச் சீர்திருத்தத் துக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுதல் அவசியம். இச் சீர்திருத்தம் பத்திரச் சந்தை மேம்பாடும், கடன் வசூல் சட்டங்களில் உள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்தும் உள்ளடக் கியதாக இருக்க வேண்டும். நிதித்துறையில் புதுமையின்மை யும் போட்டியின்மையும் நமது வங்கித் துறையில் குறை சொல்லப்பட்டு வருவன. இருபதுக்கும் மேற்பட்ட வர்த்தக வங்கிகள் இருந்தபோதிலும், வங்கித் துறையின் நிதிமதிப்பீட் டில் 60%-த்தை அரசுத்துறையின் 2 வர்த்தக வங்கிகளின்

கட்டுப்பாட்டில் உள்ளன. இந்நிறுவனங்கள் அதிகமான நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் அதிகபட்ச வாராக் கடன் ஆகியவற்றின் காரணமாக நெருக்கடியில் உள்ளன.

உலக அளவிலான மாற்றங்களைத் தொடர்ந்து பி.சி.சி.ஐ. வங்கி, பாரிங்க் (Barring) ஆகியன 1995-ன் தொடக்கத்தில் வீழ்ச்சியுற்றதை கவனத்தில் கொள்வதாக வங்கியியல் சட்டச் சீர்திருத்தத்தில் நமது அணுகுமுறை அமைய வேண்டும். நிறுவன ரீதியான தகுதிக் குறைவை கொண்டிருப்பதாக பாரிங்கை குற்றம் சாட்டுகின்றன சிங்கப்பூர் கட்டுப்பாட்டாளர்கள். இங்கிலாந்து வங்கியின் மேற்பார்வையின் தேவை தொடர்பான அடிப்படை கேள்வியும் எழுகின்றது. பி.சி.சி.ஐ. வீழ்ச்சியினால் ஏற்பட்ட உள்நாட்டு பாதிப்பு மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்களின் வீழ்ச்சி ஆகியவற்றால் இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினைகளையும் நமது நிதித்துறை சமாளிக்க வேண்டியிருந்தது. தி ஓவர்ஸீஸ் டிரெஸ்ட் பாங்க்-கும் கூட ஹாங்காங்கில் வீழ்ச்சியுற்றது. ஆனால், அதிர்ஷ்டவசமாக ஹாங்காங் அரசு அந்த வங்கியை ஏற்றுக் கொண்டது. தற்போது தனியார் வங்கியாக மாற்றப்பட்டுள்ளது.

இத்தகைய உலக வளர்ச்சிகள், வங்கித் துறை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான எண்ணங்களை மறுசிந்தனைக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. முதலாவதாக, வங்கிச் சட்ட சீர்திருத்தத்தை கடன் இடர் (Credit risk) ஆகவே பார்க்கும் அணுகுமுறை இனிமேல் சரியாக இருக்காது. சந்தை இடர்பாடுகள், அன்னிய செலாவணி இடர்கள், வட்டிவிகித இடர்கள் என இவற்றுடனும் பிரச்சினைகளைத் தொடர்பு படுத்துதல் வேண்டும். இரண்டாவதாக, சட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர் அல்லது தகவல்கள் இல்லாவிட்டால் புதுமையான விரிவான ஒழுங்காற்றுச் சட்டத்தை வைத்துக் கொண்டிருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆகவே, கட்டுப்பாட்டாளர்களுடன், குறிப்பாக வங்கிகள், நிதி நிறுவனங்கள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்

கொள்வது அவசியம். மூன்றாவதாக, நிதிநிறுவனங்களின் மீது மோசமான விளைவை ஏற்படுத்தும் விஷயங்கள் குறித்து தெரியவந் தால், உடனே அதற்குரிய அதிகாரிகளிடம் முறையாக அறிக்கை தர வேண்டும் என்று கணக்காளர்களுக்கு கூடுதல் கடமைப் பொறுப்பினை வழங்க வேண்டும். இந்த விவகாரத்தில் பி.சி.சி.ஐ. வங்கி விஷயத்தில் கணக்காளர்கள் தவறிழைத்து விட்டனர். நான்கா வதாக, இலங்கையின் வங்கித் தொழில் நிறுவனங்கள் தங்களுக்காக சொந்தமான தன்னார்வ சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண் டும்; வங்கி நடவடிக்கைகளை அதன் துணை விதி, நடத்தை நெறிமுறைகள் மூலம் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய சுய-கட்டுப்பாடுகள் சிங்கப்பூரின் மக்களிடையே வங்கிச் செயல்முறை மீது நம்பிக்கையை குறிப்பிடும் வகையில் அதிகரிக்கச் செய்துள்ளன.

தற்போதைய மசோதாவில் வலியுறுத்தப்பட வேண்டிய மூன்று விஷயங்கள் உள்ளன. முதலாவது, வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளைப் பற்றியது. வெளிநாட்டில் வாழ்வோருடனான கடனுக் கப்பாலான வர்த்தகங்களில் தற்போதுள்ள இடர்பாடுகளை இந்த சட்டத் திருத்தங்கள் நீக்குகின்றன. இலங்கையில் வாழ்பவரின் வர்த்தகம் தொடர்பாக மட்டுமே கண்காணிப்புக் குழுமம் ஒழுங்குப டுத்த முடியும். தவிர, கடல் கடந்த வங்கி வர்த்தகத்தில், வங்கியியல் சட்டத்தின் பகுதிIII, பகுதிV, பகுதி VI ஆகியவற்றை நடைமு றைப்படுத்தும் விருப்புரிமை கண்காணிப்புக் குழுமத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இச் சட்டப் பகுதிகள் மூன்றும் மூதலீட் டுத் தேவை, முற்காப்பு நிதி, பராமரிப்பு மற்றும் அசையும் சொத்துகள் (liguid assets), கணக்குகள், கணக்காய்வு தகவல் மற்றும் சோதனை தொடர்பான வாய்ப்புகள், ஆகியவற்றைக் கொண்டவை. அதேபோன்று, கண்காணிப்புச் சட்டப் பிரிவு III, VI, VII ஆகியவற்றின் அதிகாரங்களை நீடிக்கும் வாய்ப்புக ளும் கண்காணிப்புக் குழுமத்திடம் அளிக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக, உரிமம் பெற்றுள்ள வர்த்தக வங்கிகள்

வங்கியியல் கடமைகளுக்கு முரணான வர்த்தகத்தில் ஈடுபடுவதையும் அசையா சொத்துகளைக் கையகப்படுத்துதல் விதிவிலக்காக சில உரிமைகள் போன்றவற்றை சட்டம் தடை செய்துள்ளது. மூன்றாவதாக, வைப்புநிதி ஏற்கும் மற்றும் முதலீடு செய்கிற, கடன் வழங்குகிற வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல் கட்டுப்படுத்துதல் தொடர்பாக புதிய சட்டத்தின் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சாதாரணமாக நடப்புக் கணக்குகளை வைத்திருப்பதில்லை; தேசிய வளர்ச்சி வங்கி, டி.எப்.சி.சி, அரசு அடமானம் மற்றும் முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றையும் இந்நிறுவனங்கள் உள்ளடக்கவில்லை.

# தனியார் மயப்படுத்தல் மசோதா

## டிசம்பர் 12, 1995

ஐக்கிய நாடுகள் சபையின் தொழில் வளர்ச்சி அமைப்பின் (யூனிடோ) கணக்குப்படி 1992ல் இருந்து 80 நாடுகள் தனியார் மயமாக்கல் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இத் தனியார் மயமாக்கல் தொடர்பான பிரச்சினைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. வளரும் நாடுகளில் தனியார் மயப்ப டுத்தலை மேற்கொள்வதற்காக பொருத்தமாக திட்டத்தை முடிவு செய்வதில் பல காரணிகள் உள்ளன. செய்து முடிக்க வேண்டிய குறிக்கோள், தனியார் மயமாக்கும் முறை, உடை மைகள் மாற்றல் மற்றும் ஒவ்வொரு துறைக்குள்ளும் இருக்கும் வேறுபாடுகள் மேலும் தனியார் மயமாக்க வேண்டிய துறை களை வரிசைப்படுத்தல் ஆகிய பல்வேறு பிரச்சினைகளையும் கணக்கில் கொண்டே ஒவ்வொரு நாடும் பொருத்தமான திட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆசியாவில் அதிக அளவில் அரசு நிறுவனங்களைக் கொண்டிருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. வணிகம், நிதி, வங்கி ஆகிய துறைகளில் அரசு நிறுவனங்கள் உள்ளன. இந்திரா ஜெயசிங்காவின் ஆய்வுப்படி 1980-ல் 100 அரசு நிறுவனங்கள் 38 சதவீதம் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. 1987-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசு கூட்டுத்தாபனங்கள் சட்டத்தை மாற்றி அமைத்ததன் மூலம் தனியார் மயமாக்கலின் முதல் கட்டத்துக்கான சட்ட வடிவம் வழங்கப்பட்டது. இத்திட் டத்தைச் செயல்படும் பணி, நிதி அமைச்சில் உள்ள தனியார் மயமாக்கல் மற்றும் வணிகமயமாக்கல் பிரிவிடம் ஒப்படைக் கப்பட்டது. 1993-94ல் 40 நிறுவனங்கள் பல்வேறு நிலைகளில் தனியார் மயமாக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கூட்டுமுறைகளின் படி தனியார் துறைக்குச் சொத்துக் களை மாற்றுவதே இக்காலக்கட்டத்தில் தனியார் மயமாக்க லின் நோக்கம். போட்டியின் மூலம் தனிப்பட்ட பங்குதார ருக்கோ கார்ப்பரேட் முதலீட்டாளருக்கோ பெரும்பாலான பங்குகளை மாற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வளர்ச்சியில் அந்த முதலீட்டா ளர் அக்கறை செலுத்துவார் என்ற எதிர்பார்ப்பில்தான் இப்படிச் செய்யப்பட்டது. இந்த போட்டி முறைகளில் உள்ள உண்மை, வெளிப்படையான செயல்பாடு போன்றவை குறித்து நியாய மான கவலைகள் வெளிப்பட்டன என்பதில் சந்தேகமில்லை. இதில் நடைபெற்ற பல பரிமாற்றங்கள் பொது விசாரணைக்கு உட்பட்டவை. தொழிலாளர் எதிர்ப்பு பலமாக நிலவும் பலவீனமான முதலீட்டுச் சந்தை, எச்சரிக்கையுடன் செயல்ப டும் முதலீட்டாளர்கள் ஆகிய சூழலில் தனியார் மயமாக்கல் தன்னளவில் மிகவும் சிக்கலான முறை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தனியார் மயமாக்கலைப் பொறுத்தவரை நம்முடைய எதிர்ப்பார்ப்பானது, சந்தை நிலவர யதார்த்தங்களில் இருந்து வேறுபட்டு இருக்கக்கூடாது. முந் தைய காலகட்டத்தில் எடுக்கப்பட்ட தனியார் மயமாக்கல் தொடர்பான முடிவுகளை அலசி ஆராயும் போது,அந்த முடிவுகள் எடுக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்த அரசியல் பொருளாதார நிலைமைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அமைச்சரவை எடுத்த முடிவுக்காக எந்த பொதுச் சட்டத்தின் கீழ் ஒரு அதிகாரியைத் தண்டிக்க முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேண்டு மென்றே அமைச்சரவையை தவறாக வழிநடத்திய அல்லது ஒட்டுமொத்தமாக முடிவெடுக்கும் வகையில் ஆவணங்களை வழங்கத் தவறிய அதிகாரிகள் இதற்கு விதிவிலக்காக இருக்க லாம். நல்லெண்ணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தறவான முடிவு, ஊழல் செய்வதற்காக எடுக்கப்பட்ட முடிவு ஆகிய இரண்டையும் நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். ஊழல் செய்வதற்கான முடிவை மேற்கொண்டவர்களை சட்ட நடவ

டிக்கைகளை சந்தித்தே ஆக வேண்டும். துணிச்சலுடன் தனியார் மயமாக்கலை செயல்படத்த வேண்டுமானால் கடந்த கால முடிவுகளை நேர்மையான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

தனியார் மயமாக்கலுக்கான நிறுவனத் தேவைகள் குறித்து இந்த விவாதத்தில் நாம் கவனத்தில் கொள்கிறோம். மறுசீர மைப்பதற்கு அல்லது தனியார் மயமாக்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ள நிறுவனங்களை மேற்பார்வையிடுவதற்கென அதிகா ரம் கொண்ட தனியான ஒரு நிறுவனத்தை உருவாக்கினால் சிறப்பாக இருக்கும் என்று யூனிடோ வாதிடுகிறது. எந்த முறையில் தனியார்மயமாக்குவது, நிறுவனங்களின் சொத்துக் களை மதிப்பிடுவது, தனியார்மயமாக்கலை செயல்படுத்துவது, ஆகிய நடவடிக்கைகளை இதற்கென உருவாக்கப்பட்ட அரசு ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். சிங்கப்பூரில் பொதுநிறுவன டிஸ்இன்வெஸ்ட்மென்ட் கமிட்டி மூலம் இது செயல்படுத்தப்பட்டது. மலேசியாவில் அரசு நிறுவனங்களுக்கி டையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த தனியார் மயமாக்கல் கமிட்டி உருவாக்கப்பட்டது. இதில் சட்டம், நிதி, மேலாண்மை தொழில்நுட்ப அம்சங்கள் கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். இந்த ஒவ்வொரு அம்சத்திற்கென மிகவும் ஆழ்ந்து உருவாக்கப்பட்ட ஆரம்ப வேலைகளும் ஒவ்வொரு துறையிலும் ஏற்கெனவே காணப்பட்டிருக்கும் நிபுணத்து வத்தை உணர்ந்து செயல்படுதலும் தேவையானதாகும். இலங் கையைப் பொறுத்தவரை பொது நிறுவனங்கள் மறுசீரமைப்புக் குழு வெளி நிபுணர்களின் உதவியை கோருவதில் தவறேதும் இல்லை. அதே நேரத்தில் உள்நாட்டில் இருக்கும் நிறுவனங்க ளின் திறமையை வலுப்படுத்தவும் அதற்கு கடமை இருக்கி றது. வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைக் கோரும் போது உள்நாட்டு நிபுணர்களின் முடிவெடுக்கும் உரிமையினை இழக் கக்கூடாது. பேர்க், சிஜ மற்றும் எரிசக்தி துறை ஆகியவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது வெளிநாட்டு நிபுணர்களும் கலந்து கொள்கிறார்கள்.

அத்தகைய நிபுணர்களைப் பயன்படுத்துவதில் பெர்க் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். அவ்வாறு ஆலோசனை கோரும் போது பெர்க்கின் சட்டரீதியான, நிறுவன ரீதியான உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் எந்தவித ஊனமும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அமெரிக்க உதவி மற்றும் ஜேஐசிஏ போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவிகளை கோரும் போதும் அதிக விழிப்புத் தேவை. இத்தகைய நிறுவனங்கள் நேர்மையான போட்டி, வெளிப்படையான கொள்கைகள், பொறுப்பேற்றல் ஆகியவற்றைக் குறித்து ஆலோசனைகளை அள்ளி வழங்குகின்றன. ஆனால் அந்த நிறுவனங்களின் செயல்பாட்டு முறைகள் அத்தகைய விதிகளை மீறும் வகையில் இருக்கின்றன என்று அவற்றின் நிபுணர்களிடம் இருந்தே விமர்சனங்கள் எழுகின்றன. நம்மை பல்வேறு கட்டுப்பாடுகளுக்குள் மாட்டி விட முயலும் உதவித் திட்டங்களில் சிக்கிக்கொள்ளாமல் பெர்க் போன்ற நிறுவனங்கள் அகில உலக அளவில் மிகச்சிறந்த தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற முயற்சிக்க வேண்டும்.

ஆட்குறைப்பு மற்றும் தனியார் மயமாக்கப்படும் நிறுவனங்களின் சேவைகளுக்கான கட்டணங்கள் உயர்தல் ஆகிய இரண்டு அம்சங்களும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தனியார்மயமாக்கல் திட்டத்தின் கேடுவிளைவிக்கும் அம்சங்களாக இருக்கின்றன. எனவேதான் தனியார் மயமாக்கலை பல ஆசிய நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். தாய்லாந்தில் போர்குணம் மிக்க தொழிற்சங்கங்கள் வன்முறைப் போராட்டங்களில் இறங்கி பல்வேறு தனியார் மயமாக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றன. தனியார்மயமாக்கப்பட்ட பின் குறைந்த பட்சம் ஓராண்டுக்கும் எந்தவித ஆட்குறைப்பு அல்லது வேலை மாற்றம் இருக்காது என்ற வாக்குறுதியை தொழிற்சங்கங்கள் பாகிஸ்தானில் பெற்றிருக்கின்றன. இந்தியாவிலோ பங்குகளைத் தனியாருக்கு அளித்து விடும் பல்வேறு திட்டங்கள் தொழிற்சங்கப் போராட்டங்களின் காரணமாக தடைப்பட்டுள்

என. நம் நாட்டில் கூட பொதுத்துறையில் இருக்கும் இரண்டு வங்கிகளை சீரமைப்பது குறித்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. மேலும் அரசின் தனியார் மயமாக்கல் திட்டங்களைக் குறித்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. மேலும் அரசின் தனியார்மயமாக்கல் திட்டங்களைக் குறித்து முக்கியமான எட்டு தொழிற்சங்கங்கள் என்னிடம் தங்கள் கவலைகளை எடுத்துரைந்துள்ளன. அதே போல பெரும் எஸ்டேட்டுகளை தனியார்மயமாக்குவதன் விளைவாக தொழிலாளர்களுக்கு எழ இருக்கும் நஷ்டங்கள் குறித்து நான்கு அரசியல் கட்சிகள் தங்கள் அச்சத்தைத் தெரிவித்திருக்கின்றன. தனியார்துறை வளர்ச்சிக்கு தொழிலாளர்கள் எதிரிகள் என்ற கருத்து தவறானதாகும். வளர்ச்சிப் பாதையில் அவர்களுக்கு சமபங்கு இருக்க வேண்டும். பொதுத்துறை, தனியார்துறை மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே தனியார்மயமாக்கல் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற பெர்க் முன்முயற்சி எடுக்க வேண்டும். கூட்டு உடன்பாடுகள், திறமைகளை மேம்படுத்தும் திட்டங்கள், உடைமையில் பங்கு ஆகிய அம்சங்கள் மூலம் தொழிலாளர்கள் நலன் காக்கப்படும் என்ற நம்பிக்கையினை அவர்களுக்கு நாம் ஊட்ட வேண்டும்.

எரிசக்தித்துறை, தொலை தொடர்புத்துறை ஆகியவற்றில் குறிப்பிட்ட எந்தவொரு நிறுவனமும் ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்த்தல், நேர்மையான போட்டி இவற்றை மனதில் கொண்டு ஒரு ஒழுங்குமுறைத் திட்டம் உருவாக்குவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. தனியார் மயமான பிறகு எவ்வாறு நேர்மைான போட்டியினையும் திறமையினையும் உறுதிப்படுத்துவது என்பதே அத்தகைய ஒழுங்குமுறை விதிகளின் முக்கிய நோக்காக இருக்க வேண்டும். ஆனால் இந்த அம்சம் அலட்சியப்படுத்தப்படுகிறது. தனியார்மயமான பிறகு அரசின் பங்கு என்ன? தங்கப்பங்குகள் மற்றும் இதர ஏற்பாடுகள் மூலமாக தனியார்மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் முடிவெடுக்கும் விஷயத்தில் அரசுக்கு ஒரு பங்கு ஏற்படுத்த இயலுமா என்பதையும் யோசிக்க வேண்டும்.

# மனித உரிமைகள் ஆணையாளர் மசோதா

## பிப்ரவரி 22, 1996.

இந்த மசோதா நீண்ட காலமாக எதிர்ப்பார்க்கப்பட்டது. *1993, 1994* காலங்களில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் மனித உரிமைகள் ஆணையாளர் நிறுவுவது சார்பாக ஏழு வெவ்வேறு மசோதா நகல்கள் விவாதிக்கப்பட்டன. அந்த நடவடிக்கை பலன் தரவில்லை; ஆனாலும் உறுதியான கொள்கை கொண்ட ஆணையாளரின் விவரமான மாதிரியை (மொடலை) ஆக்க முடிந்தது. தற்போதைய நகல் அனைத்துக் கட்சிகளின் கொள் கைகளை சிறிதளவாயினும் உட்கொள்ளவில்லை. தேசிய மனித உரிமை ஆணைகளை அமைப்பது பற்றி வழிகாட்ட லுக்கு முன் மாதிரியான இரு ஆவணங்கள் உள்ளன. முதலாவ தாக மார்ச் *1992*ல் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தேசிய பிரகடனம் வகுத்த கொள்கைகள், இரண்டாவது தேசிய மனித உரிமை ஆணையாளரின் தராதரங்கள், சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆவணங்கள். இவ்விரண்டு ஆவணங்களும் ஆகக் குறைந்த கொள்கைகளையும் தராதரங்களையும் கூறும். அத்து டன் மனித உரிமை ஆணையாளரின் அமைப்பு, முறைதலை, குறிக்கோளையும் கூறும். அத்துடன் மன்னிப்புச்சபை, சிவில் உரிமை இயக்கம், கொழும்பு பல்கலைக்கழக கல்வியாளர் குழு ஆகியவை குறிப்பிட்ட மசோதா பற்றி சிந்தனைக்குரிய குறிப்புகள் கூறியுள்ளனர்.

இங்கு, சர்வதேச மன்னிப்புச் சபையின் இரு பொதுக் குறிப்புகளைக் கூற வேண்டும். மனித உரிமைகளை மீறுபவர் பற்றிய அரசின் கொள்கையை தீர்மானிப்பது பற்றி முதலாவ தாக நாம் கருத வேண்டும்; மனித உரிமைகளை மீறுபவர்க ளுக்கு விடுதலை தரப்படாது என்பதை உறுதிப்படுத்த வேண் டும். காணாமல் போவோர் பற்றிய விசாரணைக்கு நம்பிக்கை,

நீதியான ஆணையாளர் ஒருவரை அரசு நியமித்தது. மூதூரில் அண்மையில் நடைபெற்ற சட்டரீதியற்ற கொலைச் செயல் பற்றி விசாரிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இத்துறையில் செய லாற்ற வேண்டும். அத்தோடு வெலிக்கடையில் ஏராளமான தடுப்புக் கைதிகள் தாக்கப்பட்ட அறிக்கை கவலை தருகிறது. இரண்டாவது, பரந்த நோக்குடன் தற்போதைய நடைமுறையி லுள்ள பாதுகாப்பு விதிகள் மீளாயப்பட வேண்டும்; அடிப் படை உரிமைகள் முறைப்பாடுகள்; ஆட் கொணர்வு விண்ணப் பங்கள் கவனிக்கப்பட்டு மனித உரிமைப் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

மற்றொரு பொதுக்கவலை மனித உரிமை ஆணையாளர் மனித உரிமை சிறப்புப் படையுடன் ஏற்படும் தொடர்பு; மனித உரிமை பாதுகாத்தல், மீறல்களை கவனிக்கும் ஆணை யாளர், இந்நிறுவனங்கள் நமது ஆரம்ப எதிர்பார்ப்புகளை அறிந்து கொள்வதில்லை. புதிய ஆணையாளர் அனுபவம் மிக்க நபர்களையும் மற்றவர்களையும் பயன்படுத்தலாம். சட்ட நிறுவன சீரமைப்பில் நாம் கற்கக் கூடிய ஒரு பாடம் புதிய நிறுவனத்தை ஆரம்பிப்பதன் மூலம் புதிய பிரச்சனைக்கோ அல்லது புதிய சட்டத்திற்கோ இடம் தருதல் கூடாது. எதிர்கொள்ளும் யதார்த்த நிலை இந் நிறுவனங்களுக்கு தக்க திறமையுள்ளவரை நியமிப்பதும் ஈடுபாடும்; தக்க நிர்வாகத் தின் மூலம் இந் நிறுவனங்களின் தேவைகளை ஆதிக்கமும் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் உதவி அளிக்கப்படும் வேளை அவை பூர்த்தி செய்வதாகும்.

தேசிய மனித உரிமை ஆணையாளர்களின் திண்ணியமான நடைமுறைக்கு வேண்டிய பல விஷயங்களை ஐ.நா.சபை மனித உரிமைகள் மையம் இனங் கண்டுள்ளது. முதல் கவனிக்கப்படுவது சுதந்திரம். இச்சுதந்திரம் சட்டரீதியாக, தன்னியக்க முறையாக, நீதி வாய்ப்புடன் நியமனம் உட்பட வேலையிலிருந்து நீக்கும் முறைகளும் ஆணையாளரின் அமைப்புக்கு இருத்தல் வேண்டும். தக்க ஆணையாளர் நியமிப்பதிலேயே அமைப்புப் பலம் பெற முடியும். உறுப்பி

னர் 'திறமையும் மனித உரிமைகளில் ஊக்கத்திலும் பாதுகாப்பி லும் தகுதி பெற்றவராகவும் நிரூபிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும். இரண்டாவதாக நீதி வழங்கலிலும் போதிய ஆதிக்கத்தை வரையறுக்க வேண்டும். நீதிவழங்கல் சார்பாக மன்னிப்புச்சபை மற்றும் ஆய்வாளர் கவலை தெரிவித்தனர். விதி 13(h) யின் கீழ் ஆணையாளரின் ஆற்றல் மனித உரிமைகள் மீறல் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்தலை அரசு சாரா நபர்கள் செய்வது பயங்கரவாத சட்டத்தின் கீழ் குற்றமா கும். அதனால் கொள்கையும் நடைமுறையும் கவனிக்கப் படல் வேண்டும். முதலாவதாக மனித உரிமைகள் கொள்கையிலி ருந்து குற்றத்தை வேறாகக் காணல் வேண்டும். அது அரசுச் செயலாகும். ஆயுதம் தாங்கிய எதிர் குழுக்களில் மீறல்கள் ஏற்படலாம். இதே குழுக்கள் அரசுடன் சமனாகப் பார்க்கும் வேளைகளில் மற்றைய மனித உரிமைகள் ஆணையாளர்களின் நடைமுறை அனுபவங்கள் உதாரணமாக பிலிப்பைன்ஸ் ஆணையாளர் கருத்தின் படி அரசு சாரா நபர்கள்வரை விரிவுபடுத்தும் போது ஆணையாளரின் பணி திரிபாகி அவரின் திறமையையும் வலிமையையும் மட்டுப்படுத்துகிறது. மனித உரிமை மீறல்களை விசாரித்தல், பொதுவாகக் கேட்டல், உண்மையை அறியும் குழுவுக்கு தொழில்நுட்ப உதவி வழங் கல், ஆண்டுதோறும் இடையிடை அறிக்கை வெளியிடல் ஆகியவற்றுக்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.

மூன்றாவதாக, தொடர்பேற்படுத்தல்: நிறுவனத்தின் விழிப்புணர்வு, நேரடியாக செல்ல வாய்ப்பு, சிவில் சமூகத்திலி ருந்து அனைத்து இணைப்பாளரும் சேர்ந்து ஆணையாளருக்கு முறையிடல் ஆகியன. இவற்றிற்கு பிரதேச உதவி ஆணையா ளர் ஒருவர் நியமிக்கப் பட வேண்டும். அத்துடன் பிரதேச மாவட்ட ஆணையாளர் அலுவலர்களும் நிறுவப்படவேண் டும். பாதிக்கப்படுபவர் அனைத்து ஆவணங்கள், விசாரணை அறிவிப்புகளைப் பார்வையிட அனுமதிக்கப்படல் வேண்டும். ஆங்காங்கு பயணம் சென்று ஆணையாளர் முன்னிலையில் சான்றுகளை சமர்ப்பிக்க வாய்ப்பளிக்க வேண்டும். நாலாவ

தாக, ஐக்கியத்தின் தேவை: ஆணையாளர் அரசு சார்ந்த அமைப்புகளுடன் ஐக்கிய உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் பிற தேசிய மனித உரிமைகள் ஆணையாளர் நிறுவனங்கள், மேலும் அரசு சாரா அமைப்புகளின் நிறுவனங்கள், மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மேம்படுத்தும் அமைப்புகளுடனும் நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

ஐந்தாவதாக, நடைமுறைத்திறமை: இங்கு போதிய நிதியுடன் திறமையுடனுள்ள பாகுபாடு காட்டாத உத்தியோகத்தரை நியமித்தல், நடைமுறைத்திறமைக்கு ஆணையாளர் வேலை முறைகளையும் நடைமுறை விதிகளையும் தக்க திறமையுடன் பணியாற்ற நிறுவுதல் வேண்டும்.

இறுதியாக, வேலைத் திறமையை அளவிடுவது: ஆணையாளர் தன் நோக்கங்கள் எல்லைகளை ஒன்றிணைக்கும், மேம்படும் தேவைகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும். அத்துடன் விதி 29ன் கீழ் ஆண்டறிக்கை தயாரிக்க வேண்டும். பொதுமக்கள் ஆராயத் தக்கதாக ஆணையாளர் தன் வேலைகளைத் தெரிவிக்க வேண்டும்; வெளியேயும் உள்ளேயும் மதிப்பீடு செய்யும் வழிமுறைகளையும் நடைமுறைகளையும் தெரிவித்தல் வேண்டும்.

## திருமதி. பண்டாரநாயக்கா - சிவில் உரிமை.

### ஏப்ரல் 8, 1996.

நாடாளுமன்றத்தில் ஒரு அங்கத்தவரின் சிவில் உரிமைகளைத் தடுத்ததை திருத்தும் பிரேரணை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இது வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, நாடாளுமன்ற அங்கத்துவம் உட்பட பொது அலுவலகம் வைத்திருக்கும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். ஜனவரி 1986 ஆம் ஆண்டு முதல் தேதியிலிருந்து மன்னிப்பு அளிக்கப்படுகிறது. திருமதி. பண்டாரநாயக்கா அக்டோபர் 1980-திலிருந்து நாடாளுமன்ற ஆசனத்தை இழந்திருந்தார். நிர்வாக மன்னிப்பு கிடைக்கும் வரை அவர் 1982-ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் பங்கு பெற முடியவில்லை; ஓர் அரசியல் நபராக இனங்காணுவதற்கு குரூர விதிபோல இன்னல் பட்டது இவர் தவிர வேறு எந்த அரசியல் தலைவருக்கும் ஏற்பட்டதில்லை.

திருமதி. பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் சாதாரண அங்கத்தவர் அல்ல. அவர் இரு தடவை இந்நாட்டின் பிரதமமந்திரியாக 1960-1965, 1970-1977 வரை இருந்தவர். அவர் இலங்கையின் சுதந்திர கட்சியின் தலைவராக இருந்தவர். அணிசேரா இயக்கத்தின் தலைவராக இருந்தவர். எங்கள் காலத்து இளைஞர் ஒருவர், சர்வதேச பார்வையில் இவரைப்போல இனங்காணப்பட்டவர் எவருமில்லை.

இரு கட்சி முறை அமைத்து, அரசியல் ஆதிக்கம் காலப்போக்கில் மாற்றமடைந்து, ஐக்கிய தேசிய கட்சியும் இலங்கை சுதந்திர கட்சியாட்சி தெற்காசிய நாடுகளில் கட்சியுமாக மாறியதில்லை. இந்த இரு கட்சி முறை இலங்கை ஜனநாயகத்தை நேர்மையான மாற்றத்திற்கு வழிகாட்டியது. வாக்காளர்கள் நேர்மையான மாற்றாக இலங்கை ஜனநாயகத்

தில் கருத்தியல்கள், திட்டங்கள், அரசியல் கருத்துக்களில் மோதல்கள் ஏற்பட்டது. இந்த இரு கட்சி முறைக்கு 1977-1988 வரை கரு மேகம் சூழ்ந்தது. இலங்கை சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற பலம் எட்டு ஆசனங்களாக குறைந்தது. என் நோக்கத்தின்படி திருமதி. பண்டாரநாயக்காவின் இந்நாட்டு அரசியல் வரலாற்றின் பங்களிப்புக்கு அவரே, அவர் மட்டுமே, இரு கட்சி முறை நீடிப்பதற்கு உறுதியளித்தார். அரசியல் எதிரிகள் அவரை நேர்மையற்றவராக சிருஷ்டிப்பதற்கு பலவ கையில் முயன்ற போதும் அரசியலில் அவமதிக்கப்பட்ட போதும் அவர் சமரசத்தை உறுதியாக மறுத்தார். கட்சியோடு உறுதியாக இருந்தார். சுதந்திரக்கட்சி வாழ்வதற்கும், மீள்வதற் கும் அவர் ஐக்கியப்பட்டு நின்றார். இதுவே இருகட்சி முறை நிலைப்பதற்கு உதவியது.

திருமதி. பண்டாரநாயக்காவின் அரசியல் சாதனைகள் முழுவதும் குற்றமற்றது என்று கூற மாட்டேன். அவ்வாறு கூறும் போது வரலாற்றை பொய்மைப்படுத்துவதாகாது. இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர் வரலாற்றின் உண்மை, நீதியை நிறுவுபவராக இருப்பர். இன ஒருங்கிணைப்பு வாய்ப்புகள் கை விடப்பட்டவை கவலை தருவதாகும். 1960-களில் மாணவ னாக இருந்த போது என் தாயாருடன் சமத்துவத்திற்காக, ஜனநாயக கோரிக்கைக்காக ஆர்ப்பாட்டம் செய்த திரு.எம். திருச்செல்வம் மற்றைய தமிழரசு கட்சியின் தலைவர்கள் அநீதியாக பனாகொடையில் அடைக்கப்பட்டிருந்தவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். இந்த அரசியல் சிறையிலிடப்பட்ட வர்களின் மேல் எவ்வித குற்றமும் பதியப்படவில்லை. இதே போல 70-களில் சமத்துவம், அடிப்படை உரிமைகள், அதிகாரப் பகிர்வு ஆகிய கோரிக்கைகளுக்கு அரசியல் யாப்பில் இணக்கம் கொண்டுவரப்படவில்லை. இந்நிகழ்ச்சிகளை கசப்பின்றி மனத் துன்பமின்றி எமது குடும்பமும் மற்றவரும் தொடர்ந்து இன்னல் பட்டதை நினைவு கூருகிறேன். ஆயினும் எமது துன்பம் நிறைந்த வரலாற்றில் வலுவான சிறந்த எதிர்காலத்தை எதார்த்தமாக காண்பதற்கு எமக்கு ஒரு தேவை உள்ளது. இந்த

தீர்மானத்தை நான் ஆதரிப்பது ஏனெனில் இது இந்நாட்டின் சிறந்த பிரஜையை பற்றியதாக இருத்தலாகும். அத்தனை தேர்தல் தொகுதியின் ஜனநாயக உரிமையை இந்நாடாளுமன் றம் சிறப்பாகக் கருதுகிறது. திருமதி பண்டாரநாயக்கா இத்தொ குதி வாக்காளரில் மிகப்பெரிய பெரும்பான்மையினரால் தேர்ந் தெடுக்கப்பட்ட எமது பிரதிநிதித்துவ ஜனநாயக முறைப்படி அவர் வாக்காளர்களின் பிரதிநிதியாக முழுக்காலமும் சேவை செய்வார் என சட்ட ரீதியாக எதிர்பார்க்கப்படுகிறார். சட்ட முறையில் முதல் நடவடிக்கை ஜனாதிபதி ஆணையினரின் விசாரணைச்சட்டம் 1978-ல் ஆக்கப்பட்டதாகும். இச்சட்டத்தில் பல அங்கங்கள் மனித உரிமை செயலரதும் வழக்கறிஞர்களதும் கண்டனத்திற்கு உள்ளானது. இச்சட்டம் விசேஷ ஜனாதிபதி ஆணையாளர் விசாரிப்பதற்கு முதல் வாய்ப்பு தருகிறது. 'பழிவாங்கும் செயல்கள், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய் தல், லஞ்ச ஊழல் அல்லது மாற்று செயல் எந்தவொரு பொது அமைப்போ அல்லது மூவர் குழுவோ எந்த நீதிமன்றத்திலும் சார்பாக, அல்லது எந்தச் சட்ட நிர்வாகம் அல்லது நீதி நிர்வாகம் சார்பாகவும்' அதிகார துஷ்பிரயோகம் என்பதற்கு சுருக்கமான சட்ட அர்த்தம் பற்றி கருதப்பட்டது. இரண்டாவதாக இச்சட் டம் கடந்த காலத்தை கருதுவதாகவும் ஆணையாளர் வெறும் உண்மையை காணும் அமைப்பாகவும் இருக்காது. ஆனால் கடுமையான நிலமைக்கு இட்டுச்செல்லக் கூடிய நிலைக்கு சிபாரிசு செய்யலாம். மூன்றாவதாக இச்சட்டம் வழிமுறை களை தரவில்லை. ஆணையாளர் எவ்வித முறைகளையும் சுதந்திரமாக வகுக்க உரிமை உள்ளவர். சட்டத்தின் 4-வது பிரிவு 7(1)ன் படி ஆணையாளர் சாட்சியின் சட்ட விதிகளை விட்டுவிடலாம். இங்கே மேல்முறையீட்டுக்கு வாய்ப்பில்லா தது ஒரு குறையாகும். சாட்சியின் சிபாரிசின் படியே முடிவு எடுக்க வேண்டும். இது சாதாரண முறைப்பாடுகளின் சாட்சிப் பாதுகாப்புக்களை மீறுகிறது.

5-ஆவதாக ஆணையாளரின் நடைமுறையில் இருக்கும் நீதிபதிகள் ஆணையாளர்களாக மாறியிருந்த போதும் நீதிப்பார்

வையில் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. ஆணையாளராக இருக்கும் வேளை பெரும்பாலும் மாறிவிடலாம்.

திருமதி. பண்டாரநாயக்காவுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களை நடுநிலையாக பரிசீலிக்கப்படும் போது டிப்பி ளாக் பிரபு கூறிய வார்த்தைகளை மீளக் கவனிப்போம். ரேக்குக்கும் ஆணைக்கும் இடையில் இன சமத்துவத்துவம் பற்றிய வழக்கு: - ''ஆணையாளர் தன் ஆதிக்கங்களை பொதுமக்கள் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது சட்டமுறைப்படி பகுத்தறிவு முறைப்படி வழக்கமான உரி மைக் கொள்கையின்படியே நடக்க வேண்டும். குற்றவியல் நீதிகள் ஆணையாளரின் முறைப்பாட்டிற்கு சர்வதேச மன்னிப் புச் சபை குறிப்பிட்டது கவனிக்கப்படவில்லை.'' அரசியல் காரணங்களுக்கு சேவை செய்வதற்காக இக்கொள்கைகள் நீதி முறையில் பாதுகாக்கப்படுகிறது. சிவில் உரிமைகள் இயக்கம் குறிப்பிடுவதாவது ''உயர் நீதிமன்ற நீதிபதிகளை நீதிமன்றத் துக்கு நியமிப்பதால் அதன் பணிகள் நடுநிலமையாக, சரியாக அல்லது மக்கள் நம்பிக்கையை கொண்டதாக உள்ளதாக உறுதி கூற முடியாது''.

இந்த விஷயத்தில் வேறு காரணங்க்ளாலும் நடைமுறை யும் நீதிமுறையும் நடுநிலைமையும் பாதிக்கலாம். பிப்ரவரி 10,1978-க்கு முந்திய காலகட்டத்து விஷயங்களை ஆணையாளர் எடுத்துக் கொள்வதை மேல்முறையீட்டு நீதிமன்றம் தடைசெய் தது... நவம்பர் 20, 1978ல் அரசியல் யாப்புக்கும் பின்னோக்கிய திருத்தம் கொண்டு வந்து முறையீட்டு நீதிமன்றத்தின் செயலை மறுத்தது. இவ்விஷயங்கள் சார்பாக உச்சநீதி மன்றத்துக்கு முறைப்பாட்டை எடுத்தது. திருமதி. பண்டாரநாயக்கா நாடாளு மன்றத்திலிருந்து நீக்கப்பட்ட போதும் நாடாளுமன்ற தேர்தல் கள், ஜனாதிபதி தேர்தல்கள் சட்டங்கள் தடை செய்யப்பட்டது. சிவில் உரிமைகள் தேர்தல்களில் பேசுவதற்கோ அல்லது வாக்காளர்களை கவர்வதற்கோ உள்ள சிவில் உரிமைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. சிவில் உரிமைச்சட்டங்கள் இச்சட் டங்களை எதிர்த்தன. அடுத்த நாடாளுமன்ற, ஜனாதிபதி

தேர்தல்களில் எதிர்க்கட்சி பிரச்சாரத்தை கட்டுப்படுத்துவதற் காக எனக் கொள்ளப்படும்.

திருமதி. பண்டாரநாயக்கா சார்பாக எதிர்கட்சித் தலைவர் அமிர்தலிங்கமும், எம். சிவசிதம்பரம் அவர்களும் கூறியஉறுதி யான பேச்சுக்கள் இங்கு குறிப்பிடத்தக்கன. வாக்கெடுக்கப்ப டும் வேளையில் 139 வாக்குகள் சார்பாகவும் 19 எதிராகவும் கூறப்பட்டன. இச்சம்பவத்தில் 3 வருடங்களுக்குள் ஜூலை 83 இனக்கொலையின் போது கொண்டுவரப்பட்ட 6-ஆவது திருத்தத்திலும் 14 அங்கத்தவர்களுக்கும் இதுவே நடந்தது. வடகிழக்கு பகுதியிலுள்ள பாராளுமன்ற பிரதிநிதிகள் புதிய சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட வேண்டுமென ஆறாவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. தமிழ் விடுதலை கூட்டணியி னர் பொது வாக்குக் கணிப்பு எடுத்து நாடாளுமன்ற காலத்தை நீடிப்பதை எதிர்த்தனர். ஆனால் இந்த ஆறாவது திருத்தம் அவர்களது பிரதிநிதித்துவத்தை உடனே பாதித்தது. இந்த ஆறாவது திருத்தம் ஆபத்தான அரசியல் நிகழ்வுக்கு இட்டுச் செல்லுமென பல அரசியல் விஞ்ஞானிகள் எழுதினர். ஆனால் பின்னர் நடைபெற்ற தனிப்பட்ட விபத்துக்களை சுருக்கமாக நான் கூற விரும்புகிறேன். இந்த அங்கத்துவத்தை இழந்த 14 அங்கத்தவர்களில் நால்வர் கொடூரமாக கொல்லப்பட்டனர். மற்றும் இருவர் வெளிநாடு சென்று மரணித்தனர். அரசியலிலி ருந்து ஒதுங்கிய இருவர் அமைதியாக இறந்ததுடன் மற்றொரு வர் வெளிநாட்டில் மாரடைப்பில் மரித்தார். இந்தத் துயர சம்பவங்கள் முன்னைய தவறுகளுக்கு மன்னிப்பு கேட்க வில்லை. இழந்த உயிர்களை மீளப்பெறவோ கழிந்த பொருட் களை மீண்டும் பெறவோ உதவ மாட்டாது. அதே போன்று ஜனவரி 1,1986-லிருந்து மன்னிப்பு வழங்கும் இந்தத் தீர்மானம் திருமதி. பண்டாரநாயக்கா துன்பத்துடன் கழித்த வருடங்களை மீளக் கொண்டு வரப்போவதில்லை. இத்தீர்மானம் திருமதி. பண்டாரநாயக்காவுக்கு எந்தப் பயனும் அளிக்கப் போவ தில்லை. ஆயினும் இந்தப் பிரதிநிதித்துவ சபை முன்னர் செய்த துன்பங்களைக் கருத்தில் கொள்கிறது.

இந்த விவாதத்திற்கு ஏதாவது அர்த்தமுள்ளதெனில் நீதி முறையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதாக எமது அதிகாரத்தைக் காட்ட வேண்டும். விசேச ஜனாதிபதி ஆணைக் குழுவின் சட்ட விதிகளையும் அரசியல் யாப்பில் உரிய பகுதிகளை நீக்கவும் அரசு மசோதா கொண்டுவரின் நாம் அத்தகைய நடவடிக்கைக்கு ஆதரவு தருவோம்.

## கட்டடக் கலைஞர் நிறுவனம் (திருத்த) மசோதா

மே 23, 1996.

இலங்கை கட்டடக்கலை நிறுவன சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரும்படி இந்நிறுவனம் வேண்டியது. இலங்கையில் கட்டடக்கலைத் தொழில் ஆற்றுபவர்களை இந்நிறுவனத்தில் பதிவு செய்யும் நோக்கம் கொண்டது இந்நிறுவனம். மற்றத் தொழில் அமைப்புகளையும் சிறப்பாக பொறியியல் நிறுவனங் களையும் கலந்தாலோசித்திருப்பர் என நான் நம்புகிறேன். கட்டடக்கலை நிபுணர்களும் பொறியியலாளர்களும் தனியார் கம்பெனிகள் அமைக்க அனுமதி அளிக்கும் விதி 10(3) தவிர்த்து, இச்சட்ட விதி பொறியியலாளரின் பிரச்சனைகளை சிறப்பாகக் கூறவில்லை.

இச்சட்டம் இலங்கையில் கட்டடக்கலை நிபுணர்கள் தொழில் ஆற்றுவதற்கும் இலங்கைக்குள்ளே உடனடியாக கட்டடக்கலைப் பணிகளை செயலாற்றுவதற்கும் இடையில் தெளிவாக வேறுபாறுகளைக் கூறவில்லை. ஏராளமான ஹோட் டல்கள், உயர் கட்டிடங்கள் கட்டும் பல திட்டங்கள் உள்ளன. இவற்றில் முதலீடு செய்பவர்கள் வெளிநாட்டு கட்டிட கலை ஞர்கள் அல்லது வெளிநாட்டு கட்டிட நிறுவனங்களுக்கு வரைபடம் அமைப்பதற்கும் கட்டடக்கலை வேலைக்கும் வேண்டுமென்றனர். ஆகவே இந்தச்சட்டம் இவ்வாறான கட்ட டக்கலைஞர்கள் கட்டடக்கலை வேலைகளை இலங்கையிலே செய்வதற்கு எவ்வித தடையும் இருக்கக் கூடாது. பதிவு செய்ய இரு தடவை தவறும் போது சட்டத்தின் 4-ஆவது விதி கூறுவது யாதெனில் எந்த நபரும் பட்டயம் பெற்ற கட்டடக்கலைஞர் அல்லது கட்டடக்கலைஞரிடம் உத்தியோக வரி அறவிடப்படு வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கலாம். இத்தகைய முறைகள் மீளப் பரிசீலிக்கப்பட வேண்டும். குறிப்பாக வெளிநாட்டு

கட்டடக்கலை நிறுவனங்கள் உடனடி வேலைப் பொறுப்புக் களை ஏற்றுக்கொள்ளும் வேலைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

மேலும் இலங்கையிலேயே வெளிநாட்டுப்பட்டம் பெற்று கட்டடக்கலை வேலைகளில் ஈடுபட்டு இருக்கும் பெருந்தொகையினராக கட்டடக்கலை நிபுணர்கள் இருக்கின்ற னர். இத்தகைய கட்டடக்கலைஞர்களை விதி 8(E) படி தற்போது பயிற்சி அனுபவம் வேண்டுவது நியாயமானது அல்ல. அத்தோடு கவுன்சில் நடத்தும் தொழில் பயிற்சி பரீட்சைகளில் சித்தி அடைவதை வேண்டுவதாகும். இலங்கை யிலே கட்டடக்கலையில் தற்போது ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பதிவுத் தேவைகளிலிருந்து பாதுகாப்பளிக்கும் சில விதிகள் சேர்க்கப்படல் வேண்டும். பதிவு செய்வதற்குரிய தகுதிகள் கடுமையாகவும், இறுக்கமாகவும் உள்ளன. முதலாவ தாக வெளிநாட்டு தகுதிகள் பெறுவோர் பகுதி IVல் குறிப்பிடப் பட்ட நிறுவனங்களிலிருந்து இத்தகுதிகளை பெற வேண்டும். இவை உள்ளடக்கியவற்றில் பல இனங்காணப்பட்ட நிறுவ னங்கள், ஐக்கிய ராஜ்ஜியம் (U.K), ஆவுஸ்த்ரேலியா, கனடா, இந்தியா, அமெரிக்காவும் ஆகும். இது ஒரு முழுமையான பட்டியல் அல்ல. இப்பட்டியலுக்கு மேலும் சேர்த்துக் கொள்வ தற்கு வழிவிட வேண்டும் அல்லது ஒப்புமையான தகுதி உள்ள இதே போன்ற நிறுவனங்களையும் இனங்காண வேண்டும். மேலும், விதி 8(F), (16) விதிப்படி இலங்கை பிரஜைகளையே பதிவு செய்வது வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வரைவு உலகப்போக்கில் தொழில் சேவைகளில் விரிவாக்கலுக்கு தடையாய் உள்ளது. உலக வணிக அமைப்புகள் உடனான ஒப்பந்தங்களின் கீழ் சுதந்திர வணிக சேவைகளுக்கு வழிவிடு தல் எமது கடமைகளாகும். கட்டடக்கலை தொழிலில் பட்டம் பெறும் இளைஞர்களுக்கு இதே போன்ற வரையறைவுகளை ஒவ்வொரு நாடும் ஏற்படுத்தின் எந்த இளைஞரும் வெளிநாட் டில் தொழில் செய்யும் உறுதிப் பத்திரத்தைப் பெற முடியாது. மருத்துவப் பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை கற்பித்தல் காலப்போக்கில் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது என்ப

தும் முக்கியமானதாகும். இந்நிறுவனம் மிக விரைவில் மதிப்புப் பெற்ற மையமாக மேம்படும். தெற்காசியப் பகுதியிலிருந்து இத்தகைய நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்கள் கற்க வருவர். இவர்களுக்கு இலங்கையில் முழுத்தொழிற் பதிவு பெறும் வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். இந்தக் குறிப்புகளின் கவனத்துடன் அமைச்சர் இந்த விதிகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென வேண்டுகிறேன்.

## தேர்தல் ஆணையாளர் சம்பளம் - விவாதம்

### மே 24, 1996.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் தேர்தல் ஆணையரின் சம்பளத்தை உயர்த்துவதாகும். இந்தச் சந்தர்ப்பம் நாட்டின் தேர்தல் முறைகளைப் பற்றிய பரந்த விஷயங்கள் பற்றிக் கூறக்கூடிய சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. அரசியல் யாப்பு விதி (E) 93-ஆம் விதியுடன் படிக்கும்போது வாக்களிக்கும் முறை சுதந்திரமானதும் சமத்துவமானதும் எனவும் இரகசிய வாக்கெடுப்பும் மக்களது இறைமை சார்ந்தது எனவும் கூறும். இதுவே எமது ஜனநாயக உரிமையின் முக்கிய அடிகோலாகும். இதன் மேலேயே பிற சிவில், அரசியல் உரிமைகள் தங்கியுள்ளன. சர்வதேச சிவில், அரசியல் காப்புகள் கூறுவது யாதெனில் ஒவ்வொரு குடிமகனும் பொது விஷயத்தில் பங்கு பெறும் வாய்ப்பும், உரிமையும் உடையவன். இது நேரடியாக அல்லது சுதந்திரமாக தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாகவும், வாக்குக்குரிமையைக் காலாந்திரமாக உண்மையான தேர்தல் மூலமாகவும் உலகளாவிய சமத்துவ வாக்களிப்பும், இரகசிய வாக்களிப்பும் மூலமும் நடைபெறும். இதுவே தேர்தலில் மக்களின் தன்னம்பிக்கை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தும். தேர்தல் முறை சுதந்திரமானதும் நேர்மையானதும் என்பதை பரீட்சிப்பது தேர்தல் தொகுதியின் உண்மையான வெளிப்பாடு என்பதாகும். தேர்தல் ஆணையர் தேர்தல்களையும் தேர்தல் விதிகளை நிர்வகிப்பவர் எனவும் கொள்ளப்படுகிறது. ஆனால் அவரே பொது வாக்களிப்பின் ஜனநாயக உரிமையின் பாதுகாவலனாகவும் அரசியல் யாப்பு சம்பந்தமான தேர்தல் முறையில் நேர்மைக்கு பொறுப்பானவரும் ஆவார். அரசியல் யாப்பின் 103-ஆவது விதி 104-ஆவதுடன் படிக்கும் போது தேர்தல் ஆணையரின் நியமனம், ஆதிக்கம், கடமைகள், செயற்பாடுகளைக் கூறும். ஆயினும் இவ்விதிகள்

பலப்படுத்தப்பட வேண்டும். தேர்தல் ஆணையர் இதற்குப் பொறுப்பானவர். தேசிய, உள்நாட்டு அரசுகளின் தேர்தல் முறைகளை மேற்பார்வை செய்வதும், நடத்துவதும் இவர் பொறுப்பாகும். இத்தகைய பரந்த குறிக்கோளினால் இந்திய தேர்தல் ஆணையர் சுதந்திரமான நேர்மையான தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு சில முறைகளை வகுத்தார். தேர்தல் பிரச்சாரத்தின் போது அரசின் வளங்களையும் நேர்மையின்றி காரணமின்றி ஆட்சியில் உள்ள கட்சி சுயநலனுக்குப் பயன்ப டுத்தாது பாதுகாக்கும். இதற்காகவே இந்திய தேர்தல் ஆணை யர் ஜம்மு, காஷ்மீரில் நேர்மையான தேர்தல் நடத்தும் கட்டுப்பாடுகள் இல்லையென, சட்டசபை தேர்தல்களை நடத்துவதில்லையென தீர்மானித்தார். இந்திய தேர்தல் அதி காரி ஒரு சுதந்திரமான நேர்மையான தேர்தல் கலகமுள்ள பகுதிகளில் நடத்துவது சட்டம் சார்ந்தது அல்லாது அரசியல் தீர்மானமாக தீர்மானிக்க முடியாது என்ற எமது தேர்தல் கமிஷனர் இத்தகைய சூழ்நிலையில் ஆதரவற்றவர் ஆனார். ஜனநாயக மதிப்புகளில் சிரத்தையான சமரசத்துடன் தேர்தல் களை நடத்த அனுமதித்ததை குறிப்பாக 1988 வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை தேர்தலை நடத்துவதை குறிப்பிடு கிறேன். மற்றும் கிழக்கு மாகாணத்தில் 1994-ல் நடத்தப்பட்ட உள்நாட்டு தேர்தலையும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1994-ல் நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலையும் சுட்டிக் காட்டு வேன். இத்தேர்தல்களில் முறைகேடான நடைமுறைகள் நடை பெற்றன என்பதை பல சுதந்திர அறிக்கைகளிலிருந்து குறிப்பி டுவேன். இதுதவிர இத்தேர்தல்கள் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணைகள் சார்பாக முடிவுகள் இன்னும் காத்திருக்கின்றன. சுதந்திரமான தேர்தல் முறைகள் முறையான தேர்தல் பதிவேடு களை திருத்தாது எந்தத் தேர்தல் பிரச்சாரமும் நடத்த முடியாது. இங்கு தேர்தல் நிலையங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு ஏராள மான வாக்காளர்கள் வாக்களிக்க முடியாது செய்யப்பட்டன. இறுதியில் 2.32% வாக்காளர் மட்டுமே வாக்களித்தனர். நேர்மை யான தேர்தல் முறைகள் நடைபெற்றன என முழுமையான தேர்தல், ஒரு பகுதியில் நடைபெறாது தவறிய வேளை,

திருப்தியாக நடைபெற்றது என கூற முடியாது. இவ்விஷயம் உடனடிக் கவனத்திற்குரியது. தேர்தல் கட்டுப்பாடுகள் எமது நாடுகளில் முழுமைப்படவில்லை. எமது சட்டங்கள் இந்த எதார்த்த நிலையை கவனிக்கவில்லை. இந்நிலையில் தேர்தல்கள் நடத்துவது முறையல்ல. இது ஜனநாயக மதிப்புகள் சமரசத்துடனான கற்பனை நடவடிக்கையாகிவிடும்.

தேர்தல் ஆணையரின் எமது மதிப்பீடு சமன்படுத்தப்பட வேண்டும். தேர்தல் திணைக்களம் கஷ்டமான சூழலில் தேர்தலை நடத்த வேண்டியுள்ளது. தேர்தலை கட்டுப்பாடான வசதிகளுடன் நடத்த வேண்டியுள்ளது. 1994 - ஆம் வருடத்தில் திணைக்களம் உள்ளூர் தேர்தல்களை ஒரு மாகாணத்தில் நடத்த வேண்டி இருந்தது. மாகாண தேர்தல்களை மற்றொரு மாகாணத்திலும் பின்னர் நாடாளுமன்ற தேர்தல்களையும், ஜனாதிபதி தேர்தலையும் நடத்த நேர்ந்தது. இத்தேவைகள் சார்பாக தேர்தல் ஆணையரின் 1994-ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயாராக இருந்தும் ஜனவரி 1995 - இல் முடிக்கப்பட்டது. இங்கு ஒப்பிட்டு விபரமான அறிக்கையும், இணைப்புகளும் இத்தேர்தல் முடிவுகளும் வெளியிடப்பட்டன. இதே போன்று தேர்தல் ஆணையர் உயர்ந்த தராதரத்தை காப்பாற்றினார். தேர்தல் அறிக்கைகளில் தராதரம், விபரமான செய்திகள் இவ்வறிக்கைகளில் காணப்படுவது அரசியல் மாணவர்க்கும், அரசியல் கட்சிகளுக்கும் பயன்படக் கூடியது. தேர்தல் ஆணையர் தென் ஆசியாவிலுள்ள பிற தேர்தல் ஆணையர்களுடன் இணையவும் கவனமெடுத்தார். தற்போதைய ஆணையாளர் சென்ற ஆண்டு இப்பகுதியிலுள்ள தேர்தல் ஆணையாளரின் முதற் கூட்டத்தை நடத்தினார். அரசியல் யாப்பின் தேர்ந்த குழு தேர்தல் மாற்றங்கள் பற்றிய விபரமான விஷயங்களை ஆராயும். நாங்கள் குறிப்பாக தேர்தல் பதிவுகளை திருத்துவதோடு நடைமுறைகள் சார்பாக மேம்பாடுகள் செய்தல் வேண்டும். ஆணையர் இந்தப் பதிவேடுகள் இருக்க உறுதிப்படுத்த வேண்டும். முன்னர் இத்திணைக்களம் தமிழ்மொழியில் பதிவேடுகள் வைக்கத் தவறியது. தேர்தல் ஆணையாளர் தேர்தல்

பதிவேடுகளில் இருந்து குறிப்பிட்ட பகுதிப்பிரதிகளை, இருப்பிடத்தை உறுதிப்படுத்த அடிக்கடி கேட்கப்படுகிறார். வருடந்தோறும் 25,962 பகுதிப்பிரதிகள் வழங்கப்பட்டதாக ஆணையாளர் கூறுகிறார். இவ்விஷயத்தில் கவனம் எடுக்க வேண்டும். இப்பணியில் திணைக்களத்து வேலையை அதிகரிப்பதாகவும் பிற தவறுகளுக்கு இட்டுச் செல்வதாகவும் கூறுகிறார். அரசியல் கட்சிகள் தமது பிரதிநிதிகள் மூலம் வாக்காளர் பட்டியல்களை ஆங்காங்கே தயாரிப்பதை மேற்பார்வை செய்ய தமது பிரதிநிதிகளை நியமிப்பது இல்லை. இந்நடவடிக்கைகளில் சிறிதும் கவனம் எடுக்கப்படுவதில்லை. அரசியல் கட்சிகளை தேர்வதில் நடைமுறைகள் பெருமளவு எளிதாக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் கட்சிகள் ஒழுங்கான முறையில் கூட்டங்கள் நடத்தி தமது உத்தியோகத்தர்களை தேர்வு செய்கிறார்களா எனவும் அவர்களின் கணக்குகள் பரீசிலிக்கப்படுவதில் சட்ட முறைகள் அனுசரிக்கப்படுகிறதா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாடாளுமன்ற குழு அரசியல் கட்சிகளின் பணங்கள், தொகுதிகளின் செலவினங்களின் எல்லைகள் கவனிக்கப்படல் வேண்டும். மற்றொரு கவனிக்கப்பட வேண்டிய விஷயம் தேர்தல்களின் முடிவுகளை சட்ட முறையாக எதிர்ப்பதாகும். இங்கும் தேர்தல்களை எதிர்க்கும் சட்டங்களின் முறைகளை மேலும் பரிசீலனை செய்ய வேண்டும். இங்கும் சரிசம அளவுத் தேர்தல் முறை திருத்திய முறையில் தொடர்வதனால் ஆகும்.

# மயன்மாரின் அண்மைய சம்பவங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம்

## ஜுன் 21, 1996.

திரு உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நாடாளுமன்றத்தில் மயன்மாரில் நடைபெற்ற தீவிர சம்பவங்கள் சார்பாக குறிப்பிட்ட விஷயங்கள் பற்றிப் பேசுவதற்கு அனுமதி வழங்கியதற்கு நன்றியுடையவனாவேன்.

திரு. உதவி சபாநாயகர் அவர்களே, தேசிய ஜனநாயக லீக் அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் பல சட்ட ரீதியற்ற முறைகளில் தொல்லை தந்தது பற்றிய முறைப் பாட்டை அரசு சட்டம் மற்றும் ஒழுங்குகளைப் பாதுகாக்கும் கவுன்சிலுக்கு (SLORC) முறைப்பாடு செய்தது பற்றி அறிவீர்கள். ஜனநாயகத்திற்கான தேசிய லீக் அங்கத்தவர் 44 பேரை கைது செய்யும் முயற்சியுடன் எதிர்க்கட்சிகள் ஆங்சான் சூ கியூவின் வீட்டில் காங்கிரஸ் கூட்டம் போட தடை செய்ய முயற்சிக்கப் பட்டது.

SLORC பிரதிநிதிகளின் அறிக்கையின்படி ஜனநாயக தேசிய லீக்கை தடை செய்யவும் அதன் அங்கத்தவர், ஆதரவாளரின் ஜனநாயக உரிமைகளை தடுக்கும் முயற்சியும் நடைபெற்றது. பர்மாவிலுள்ள ஜனநாயகத்தை மேம்படுத்தும் அரசியல் தலைவர்களை, சர்வதேச இணைப்புடன் சேர்ந்தவர், ஆங்சான் சூ கியூவை கைது செய்யத் திட்டமிட்டிருப்பதான செய்தி கவலை தருகிறது. ஆங்சான் சூ கியூ 17.4.1996ல் வெளியிட்ட அறிக்கையின்படி நாடு முழுவதும் நடைபெறும் கெடு பிடியும் ஒடுக்குமுறையின் முனைப்பும் ஆகும் என்றார்.

இந்த நாடாளுமன்றம் 1995-ல் தீர்மானம் ஒன்று இயற்றியது. இதன்படி ஆங்சான் சூ கியூ அவர்களை விடுவித்து

ஜனநாயக முறைப்படி தேர்ந்த ஜனநாயக தேசிய லீக்கிடம் அரசியல் ஆதிக்கம் ஒப்புவிக்கப்படுதல் வேண்டும். தீர்மானம் நிறைவேற்றிய சில நாளில் ஆங்சான் சூ கியூ விடுதலை பெற்றார். ஆனால் மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரம் சார்பாக மயன்மாரில் எவ்வித குறிப்பிடத்தக்க மேம்பாடும் நடைபெறவில்லை.

எல்லா அரசியல் கட்சிகளிலிருந்தும் பல நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இந்த மன்றத்தில் நேற்று நிலைமையை மீளாய்வு செய்து மயன்மார் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்தனர். அவர்கள் பல தீர்மானங்கள் எடுத்தது பற்றி மதிப்புடன் கூறுவேன். முதலாவதாக மன்ற அங்கத்தவர் முற்றுமுழுதாக கலந்தாலோசித்து இன்றைய நிலைமை பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பேசுவதாகத் தீர்மானிக்கப்பட் டது.

இரண்டாவதாக, நாடாளுமன்றப் பிரதிநிதிகள் கொழும்பி லுள்ள மயன்மார் தூதுவரை சந்தித்து SLORC ஜனநாயகத்தை மீண்டும் நிறுவுவதற்காக ஆங்சான் சூ கியூவுடன் பயன்பாடான பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது. மூன்றாவதாக, SAARC அங்கத்துவ அரசு சார்ந்த நல்லெண்ண உத்தியோகத்தர் மயன்மாரில் ஜனநாயக நிலைக்கு மாறும்படி ஆலோசனை கூற வேண்டும். இறுதியாக நாடாளு மன்றக் குழு அரசு அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கொழும் பிலுள்ள பிற குழுக்களை அழைத்து இன்றைய மயன்மார் நிலைமைகளை மையப்படுத்தி அனைவரிடமும் சொல்ல வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சட்டமுறையான ஆட்சி பர்மாவில் இன்று நடைபெற வில்லை என ஆங்சான் சூ கியூ குறிப்பிட்டுள்ளார். சட்டமுறை யான ஆட்சி இல்லாவிடின் அமைதியோ நீதியோ நாட்டிலே நிலவாது என்றும் கூறினார். சர்வதேச சமூகம் இரு முக்கிய விஷயமாக உதவலாம் என்றார். முதலாவதாக, சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளை எதிர்ப்பது. இரண்டாவதாக, ஐக்கிய நாடு கள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது. இங்கு

இலங்கையும் மயன்மார் மனித உரிமைகள் பேணலில் ஒரு அங்கத்தவராவார். ஐ.நா.சபை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் மயன்மார் மனித உரிமை சார்பாக இலங்கையும் சார்பான கட்சியாகும். இலங்கை மக்கள் மயன்மாருடன் நீண்ட கால வரலாற்று, பண்பாட்டுத் தொடர்புடையவர்கள். மயன்மாரில் ஜனநாயக ரீதியாக தேர்வு செய்யப்பட்ட தலைவரின் அழைப்பிற்கு மதிப்பளிக்க வேண்டியது ஒழுக்க நெறியான அரசியல் கடமையாகும். ஆகவே இந்த நாடாளுமன்றத்தில் ஆங்சான் சூ கியூவின் அறிக்கையையும் இலங்கை அங்கத்தவரின் அறிக்கையையும் 'கன்சாட்டில்' சேர்க்கும்படி வேண்டுகிறேன். நன்றி, துணை சபாநாயகர் அவர்களே.

**மயன்மாரில் அண்மைய நிலமைகள் பற்றிய அறிக்கை:**

இலங்கை நாடாளுமன்றம் 1995ல் மயன்மார் அரசு ஆங் சாங் சூ கியூவை விடுதலை செய்யும்படி தீர்மானம் நிறைவேற்றியது. ஜனநாயக முறைப்படி தேர்தல் பிரதிநிதிகளிடம் ஆதிக்கத்தை மாற்ற நடவடிக்கை எடுப்பதுடன் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரத்தையும் அரசு முழுமையாக மதிக்க வேண்டும்.

ஆங் சான் சூ கியூ தடுப்பு காவலிலிருந்து விடுபட்டபோதும் ஜனநாயக எதிர்கட்சியினரான பல அங்கத்தவர்கள் இன்றும் தடுப்பிலேயே உள்ளனர்.

மயன்மார் அரசினால் கடந்த மாதம் ஆங் சான் சூ கியூவுக்கு தொல்லைகள் அதிகரித்ததோடு மயன்மார் அரசினால் மற்றைய ஜனநாயக இயக்கம் ஜனநாயக தேசிய லீக்கின் 44 அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். எதிர் காங்கிரசார் ஆங் சான் சூ கியூவின் வீட்டின் எதிரே தடை போட இருந்ததற்காகவே கைது செய்தனர். மயன்மார் அரசின் பல அண்மைய செயல்களும் அறிவித்தல்களும் SLORC யிலிருந்து ஜனநாயகமுறையாக தேர்ந்த பிரதிநிதிகளுக்கும் மாற்றுவதாகக் கூறிய போதும் நடைமுறையில் உறுதியற்றதாக இருப்பது கவலை தருகிறது.

ஐ.நா.சபையின் 30.12.1993ன் 48/150 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வர மயன்மார் அரசு தவறியது. ஜனநாயக மாற்றத்திற்கு தக்க நடடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக்கும் மயன்மாருக்கு மிடையில் உரமான பண்பாட்டு, சமய, வரலாற்றுத் தொடர்புண்டு.

1) மயன்மார் அரசை நாம் வேண்டுவது ஆங் சான் சூ கியூவுக்கு எதிராகவும் ஜனநாயகத்திற்கான தேசிய லீக் அங்கத்தவர்கள் மற்றும் எல்லா ஜனநாயகச் செயல்கள் ஆகியவற்றையும் ஒடுக்கும், ஜனநாயக மற்ற முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

2) எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

3) அடிப்படை சுதந்திரம்: அரசியல் உரிமைகளை மதிக்க வேண்டும். குறிப்பாக வாழ்க்கை உரிமை, மக்களின் தனிமதிப்பு.

4) இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர ஆங் சான் சூ கியூவுடன் உறுதியாக பேச்சு வார்த்தை நடத்தி மியன்மாரில் ஜனநாயகத்தை நிறுவ வேண்டும்.

5) 'சார்க்' நாடுகளின் அரசுகள் யாவினதும், மயன்மாரில் ஜனநாயக மாற்றம் ஏற்பட, நல்லெண்ண உத்தியோகத்தரின் உதவியை நாட வேண்டும்.

## தொழிற்சாலை பிணக்குகள் (திருத்த) மசோதா ஜூலை 23, 1996.

தொழிற்சங்க இயக்கத்திலும் தொழில் உறவு முறையில் முற்போக்கான சட்டங்களை உருவாக்கியதிலும் இலங்கைக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. கொழும்பில் உள்ள நகர்ப்புற உழைக்கும் வர்க்கத்தின் தலைவராக விளங்கிய ஏ.ஈ. குணசிங்கவும் தோட்டப் பகுதிகளில் தொழிற்சங்கத்தை உருவாக்கிய கே. நடேச ஐயரும் தொழிற்சங்க இயக்க முன்னோடிகள் ஆவர். முதல் கூட்டு ஒப்பந்தம் 1928-ல் கையெழுத்தானது. தோட்டப் பகுதிகளுக்கான முதல் கூட்டு ஒப்பந்தம் 1942-ல் முடிவடைந்தது. 1946, 1948, 1958, 1976-ம் ஆண்டுகளில் இதற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. 1989-ல் 14.9 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 1000 தொழிற்சங்கங்கள் இருந்தன. 1992 வாக்கில் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1039 ஆக உயர்ந்தாலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 884,226 ஆக குறைந்தது. 1993-ல் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1151. ஆனால் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்த சரியான தகவல்களை வழங்க தொழிலாளர் துறையால் முடியவில்லை.

இப்படி ஒரு நீண்ட முற்போக்கான வரலாறு இருந்தாலும், கடந்த 20 ஆண்டுகளாக தொழிற்சங்க இயக்கம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொழிற்சங்க உரிமை தொடர்பான முழுமையான தொழிலாளர் விதிகளை உருவாக்கி செயல்படுத்துவதாக 1994, ஆகஸ்டில் தற்போதைய அரசு வாக்குறுதி அளித்தது. சங்கம் அமைக்கும் உரிமை, தொழிலாளர்களை திரட்டும் உரிமையைப் பாதுகாப்பது ஆகியவற்றுக்கான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பேரவை 87-ஐ 1995, ஜூலை மாதம் ஏற்றுக்

கொண்டதன் மூலமாக பெரிய நடவடிக்கையை மேற்கொண்டது. 1995 செப்டம்பரில் புதிய தொழிலாளர்கள் பட்டய விதிகள் அரசால் வெளியிடப்பட்டன. சட்டபூர்வமானதாக இல்லையென்றாலும் தொழிலாளர் கொள்கை குறித்த அரசின் எண்ணத்தை இது வெளிப்படுத்தியது. 1994-ல் பிலாடெல்பியால் பிரகடனங்களை ஏற்றுக்கொண்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நோக்கங்களை தொழிலாளர் பட்டய விதிகளின் முன்னுரையில் வலியுறுத்தப்பட்டது. அத்துடன் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும் சேருவதற்கும் உள்ள உரிமையையும் சேர்த்துக் கொண்டது. குறிப்பிட்ட சில வரைமுறைகளுக்கு உட்பட்டு, தொழிற்சங்கம் அமைக்கும் மற்றும் அதில் சேரும் உரிமைக்கு இலங்கையின் 2-வது குடியரசு அரசமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளிக்கிறது. தொழிற்சங்க செயல்பாட்டின் அடிப்படையில் மட்டுமே ஒரு தொழிலாளியைப் பணி நீக்கம் செய்வது தவறு என்று தொழிலாளர் நீதிமன்றங்கள் கருத்து தெரிவித்துள்ளன. தொழிற்சங்க ஈடுபாட்டை மட்டுமே காரணம் காட்டி தொழிலாளியை பாரபட்சமாக நடத்துவது தவறான தொழிலாளர் நடவடிக்கை என்று தொழிலாளர் பட்டய விதிமுறை தெளிவுபடுத்தியுள்ளது.

தொழிலாளர் விதிகளின் இந்த அம்சத்துக்குச் செயல் வடிவம் கொடுக்கவும் அரசு ஏற்றுக்கொண்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பேரவை எண் 87- ஐ மேம்படுத்தவும் இச்சட்டம் முயற்சி செய்கிறது.

தொழிலாளர்களின் உரிமை தொடர்பான கொள்கைகளிலும் சட்ட வடிவமைப்புகளிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் வருந்தத்தக்க முறையில் தொழில் உறவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1994, டிசம்பர் மாதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் 60 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. தொழிற்சங்கங்கள் இல்லாத தடையற்ற தொழில் பிராந்தியங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தமும் இதில் அடங்கும். டாக்டர்கள், பதிவு செய்த மருத்துவ அதிகாரிகள், தொழில்நுட்பத்தில் டிப்ளமா

பெற்ற பொறியாளர்கள் ஆகியோரைப் பாதிக்கும் தொழில் துறை பிரச்சினைகள் 1995-ம் ஆண்டிலும் 1996-ம் ஆண்டிலும் நடைபெற்றன. அரசின் தனியார் மயமாக்கும் திட்டங்களுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள், இயக்கங்கள் நடைபெற்றன.

சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் வன்முறைக்கும் இந்த தொழில்துறை பிரச்சினை இடமளித்தது என்பதுதான் துரதிருஷ்டமான அம்சம். உயர் நிர்வாக அதிகாரிகளை வலுக் கட்டாயமாக அடைத்து வைத்தல், மிரட்டுதல் ஆகியவையும் இதில் அடங்கும். போகல்லையில் உள்ள தனியார் கிராபைட் சுரங்கத்தில் உயரதிகாரிகளைக் கடத்திய தொழிலாளர்கள், மிகவும் ஆபத்தான சூழலில் 24 மணி நேரம் அவர்களை அடைத்து வைத்திருந்தனர். பல இடங்களில் மேற்பார்வையி டும் பணியாளர்கள் கடத்தப்பட்டனர். தொழிலாளர்கள் செய்த கூட்டு நடிவடிக்கை காரணமாக பல நிறுவனங்களுக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக, பல தொழிற்சாலை கள் மூடப்பட்டன. எண்ணற்ற தொழிலாளர்கள் வேலை இழந்தனர்.

ஆகவே தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வரும் தொழில் உறவுகளில் கவனம் செலுத்துவதும், தொழிலாளர்கள் - முதலாளிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் நம்பிக்கை உடைய திட்டத்தை உருவாக்க வேண்டியதும் மிகவும் தேவை. இரு கொள்கைகளை அடிப்படையாக வைத்து இத்திட்டத்தை உருவாக்க வேண்டும். முதலாவதாக, தொழிலாளர்களின் உரி மைகள், அமைப்புகள், சங்கங்கள் அவற்றை பாதுகாப்பது.

இரண்டாவதாக, நியாயமான தொழிற்சங்க செயல்பாட் டையும் சட்டவிரோத கிரிமினல் நடவடிக்கைகளையும் தெளி வாகக் கண்டறிய வேண்டும். தொழிலாளர்களை அரசு பாது காக்கும் அதே நேரத்தில் கிரிமினல் நடவடிக்கைகளை ஒடுக்க வேண்டும். மூன்றாவதாக, தனியார் மயமாக்கல் மற்றும் தனியார்துறை முன்னேற்றங்கள் குறித்த தேசியக் கொள்கை விஷயத்தில் தனியார்துறை பணிக்கும் பொதுத்துறைக்கும் இடையே அர்த்தமுள்ள விவாதத்தை நடத்த வேண்டும்.

இதனுடைய முக்கியத்துவத்தை, பலமுறை எடுத்துரைத்த போதிலும் பொது நிறுவன சீர்திருத்த ஆணையாளரோ, தேசிய மேம்பாட்டுக் கவுன்சிலோ எந்தப் பயனுள்ள நடவடிக்கையை யும் மேற்கொண்டதாகத் தோன்றவில்லை.

தொழிற் சங்கத்தில் சேர தொழிலாளிக்கு இருக்கும் உரிமையில் தலையிடுவது தவறான நடவடிக்கை என்பதை உறுதி செய்யும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர முன் முயற்சி எடுத்த தொழில் அமைச்சரைப் பாராட்ட வேண்டும். இத்துடன் சிறந்த தொழில் உறவுக்கும் தேசிய பொருளாதார மறுமலர்ச்சிக்கும் இடையேயான சிக்கலான உள்ளார்ந்த உறவி லும் அவர் கவனம் செலுத்த வேண்டும்.

## ஊனமுற்றவர் பாதுகாப்பு மசோதா

### செப்டம்பர் 17, 1996.

ஊனமுற்றோருக்கு சமத்துவ உரிமை மறுக்கப்படுவது தேசிய, உலகின் முக்கியமான விஷயமாகும். ஐ.நா.சபை 1975-ல் ஊனமுற்றோர் உரிமைகளை அறிவித்தது. ஊனமுற்றோரின் உரிமையுடன் மனித மதிப்பும் அடிப்படை உரிமைகளும் மற்றைய பிரஜைகள் போல வழங்கப்படல் வேண்டும் என அறிவித்தது. 1982-ல் ஐ.நா.பொதுச் சபையும் ஊனமுற்றோர் ஐ.நா. தசாப்தத்தை (1983 - 1992 என) அறிவித்தது. ஊனமுற்றோரின் முழுத் திறமையையும் உணரவும் ஊனமுற்றோரின் குறைகளை தவிர்க்கவுமாக உலகெங்கும் ஐ.நா.சபை திட்டத்தை வகுத்தது. ஐ.நா.சபை அனைத்து மனிதர்களுக்கும் சமத்துவ வாய்ப்பை முழுமையாக அறிவித்தது. ஐரோப்பிய சமூகமும் ஐரோப்பிய கவுன்சிலும் அதே போன்ற பரிந்துரையை வழங்கியது. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளும் ஊனமுற்றோர் ஒதுக்கப்படுவதற்கு எதிராக சட்டமியற்றியது.

பல கல்வியாளர்கள் சமத்துவ மனித உரிமைகள் கொள்கைக்கு தரப்படும் முக்கியத்துவத்தில் முரண்பாடான நிலைகளைக் குறிப்பிட்டுள்ளனர்: பெண்களுக்கும் சிறுபான்மை இனமக்களுக்கும் சமத்துவ உரிமை வழங்குவது பற்றி முற்போக்காகச் சிரத்தை எடுக்கும் எமது ஊனமுற்றோருக்கு, சமத்துவக் கொள்கையில் சட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டுக் கவனம் எடுக்கப்படுவதும் விசித்திரமானதே. இலங்கை அரசியல் யாப்பின் விதி 12(2), எந்த நபரும் வகுப்பு, மதம், சாதி, பால், அரசியல் கருத்து, பிறப்பிடம் அல்லது எந்தக் காரணமாகவும் வேறுபாடு காட்டக் கூடாது எனக் கூறும். ஆகவே ஊனமுற்றோர் பற்றி பொது மொழியில் கூறுவதாயின்,

எத்தகைய காரணமாகவும் ஒதுக்கப்படுவதற்கெதிராக நலன் ஈடு தேடலாம். மேலும் விதி 12(4) ஊனமுற்றோரை இனங்கண்டு அம்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படலாம். ஆயினும் பிரிவு 23(1) மக்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் பற்றி ஊனமுற்றோர் மசோதா கூறுவது: ஊனமுற்ற காரணத்தால் எத்தொழிலோ, அலுவலகமோ, கல்வி நிறுவன நுழைவுக்கோ அவர்களைத் தடுத்து விட முடியாது.

# பொதுவணிக நிறுவனங்கள் புனருத்தாரண மசோதா

## அக்டோபர் 11, 1996.

இச்சட்டம் குறிப்பிடத்தக்க முரண்பாடுகளை எழுப்பி யுள்ளது. தனியார் மயப்படுத்தும் முறையை திருப்பிவிடும் முயற்சி கொண்டதென கருதப்படுகிறது. தோல்வியடைந்த வணிக நிறுவனங்களுக்கும் தவறான தனியார் மய நடவடிக்கை களுக்கும் வேறுபாடு காணப்பட வேண்டும். இம் மசோதா வேலை வாய்ப்புகள், வேலை நீக்கம், கூலிகொடாமையுடன் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியாக தர வேண்டியவற்றில் தவறிய வணிக நிறுவனங்களைக் குறிப்பிடுகிறது. ஆயினும் நாங்கள் தவறிய வணிக நிறுவனங்களை அரசு கட்டாயமாக மீள் ஒழுங்குபடுத்த உள்ள நோக்கங்கள் பல மேலும் குழப்பம் தருகிறது. குறிப்பிடப்பட்ட இந்நிறுவனங்களாவன: லங்கா லோக்க காட்வேர் லிமிடெட், கமர்ஷியல் கம்பெனி பெர்டிலை சஸ் லிமிடெட், மத்தகம டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கஹாட் டகஹ சுரங்கம், கந்தளாய் சுகர் பக்டரி மற்றும் வியாங்கொடை டெக்ஸ்டைல் மில்ஸின் ஒரு பகுதி. இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் தனியார் மயப்படுத்தும் முறை தவறப்பட் டது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களின் விலை மதிப்பு குறைக்கப்பட்டது. செல்வாக்குடன் வாங்கப் பட்டது அல்லது ஒரு பகுதியோ முழுவதுமோ அரச நிதி நிறுவனங்களால் நிதி வழங்கப்பட்டது, அல்லது ஒப்பந்தங்கள் முறையாக அமைக்கப்படாது (பங்குகளுக்கு உரிய பணம் முறையாக தரப்படாது) மாற்றப்பட்டது. பல நடவடிக்கைக ளில் உள்ளூர் முதலீட்டாளர் திறமை பெற்றிருக்கவில்லை அல்லது வணிக நிறுவனத்தை முகாமைப்படுத்தும் அனுபவ மின்மை என்பதனால் சொத்துக்களின் விலை குறைக்கப்பட்

டது. இத்தகைய விஷயங்களில் அவசரமான, தவறான தனியார் மயப்படுத்தலில் குறிப்பிடப்பட்ட நடுநிலைத் தீர்மானங்களில் தவறுகள் ஏற்பட்டன. ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் முன்னைய அரசு 43 பொது வணிக நிறுவனங்களை தனியார் மயப்படுத்தியது, இவை 'தவறாக திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு சந்தேகத்திற்குரிய முறையில்' என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கொள் வனவு செய்யும் தீர்மானங்களில் தெளிவாக, நேர்மையாக அல்லாது உடனடி தீர்மானங்களாக கொள்ளப்பட்டதென முதலீட்டை விரிவுபடுத்தும் குழுவால் எடுக்கப்பட்டதென குற்றம் சுமத்தப் பட்டது. குறிப்பாக ஊழல் அல்லது தவறான செயல் என குற்றம் சுமத்தப்பட்டவர் இதே போன்ற தவறுகள் வருங்காலத்தில் செய்யாது தடுக்கப்பட வேண்டும். தவறான தனியார் மய நடவடிக்கைகள் பொது மக்களின் ஆர்வத்தையொட்டி மீளாய்வு செய்யப்பட வேண்டும் என கூறுவதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை.

இச்சட்டத்தின் முக்கிய நோக்கம் ஜனாதிபதி செயலகத்தால் உடனடியாக தவறான முகாமைத்துவத்தை வைத்துள்ள வணிக நிறுவனங்களை புனருத்தாரணம் செய்வதாகும். இதன் காரணமாக குறிப்பிடப்பட்டது. அ) பல ஆயிரம் தொழிலாளர் வேலை இழந்தமை ஆ) ஈபிஎவ், ஈரிஎவ் வாய்ப்புகள் தரப்படாமை இ) தொழிற்சாலைகள் மூடப்பட்டமை ஈ) வணிக நிறுவனங்கள் அரசு நிறுவனங்களுக்கு பெரிய கடன் சுமை கொடுக்க வேண்டிய நிலை. இத்தகைய நிலையில் கட்டாய மீளமைப்பு, முகாமைத்துவ, சொத்துகள் கை மாற்றம் இரண்டு படிகளில் நடைமுறைப்படுத்த சட்டம் வழிவிடுகிறது. தவறான தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் தவறிழைத்த வணிக நிறுவனங்களை கட்டாய மீளமைப்புடன் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். ஒரு வணிக நிறுவனத்திற்கு நிதி நெருக்கடி நிலைமை ஏற்படின் நாம் வங்குரோட்டு சட்ட கொள்கைகளை கடைப்பிடிப்பதுடன் மீளமைப்பு விஷயத்தின் கொள்கையையும் கவனிக்க வேண்டும். கம்பனிகளை மூடும் மதிப்பு, தொடர்ந்து நடத்துவதிலும்

குறைவாக இருப்பின் வங்குரோட்டு கொள்கையை மீளமைப்ப தையே தூண்டும். இதன் எதிர்மறை உண்மையாகும். அதாவது நடைமுறையிலுள்ள நிறுவனத்தின் மதிப்பு மூடிவிடுவதிலும் பார்க்க குறைவானதாயின் இந்தக் கொள்கை நிறுவனத்தை மூடிவிடவே வழிவகுக்கும். இந்த நிலையில் தொழிலாளரின் சட்டரீதியான உரிமைகள் மூடிய கம்பனியின் சொத்துகளிலி ருந்து பெற்ற பணத்தில் முதன்மை பெறும். ஆகவே உரிய நிறுவனத்தில் அரசு சிறுபான்மை பங்குகள் கொண்டிருப்பின் (தொழிலாளர் பங்குகள் பகிரப்படாதவிடத்து) உடனடியாக மதிப்பீட்டு உத்தியோகத்தர் அல்லது தொழில்புரியும் கணக்கா ளர்களைக் கொண்டு நடப்பிலுள்ள வணிக நிறுவனத்தின் மதீப்பீட்டையும், மூடநேரும்போது ஏற்படும் மதிப்பையும் அறிந்து கொள்ள வேண்டும். உற்பத்திச் செலவை குறைப்ப தால் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் அல்ல பிற குறைபாடுகள் காரணமாக பண்டத்தைப் போட்டி போட்டு விற்க முடியாதா யின், குறிப்பாக மண்வெட்டி உற்பத்தியில் ஏற்பட்டது போல ஆயின் நிறுவனத்தை மீளமைப்பதில் பயனில்லை. இத்தகைய நிலையில் நிதி நெருக்கடியிலிருந்து விரைவாக வங்குரோத்து நடவடிக்கை எடுக்க வாய்ப்பளிக்க வேண்டும். ஆகவே சட்டத்தின் நோக்கங்களை வேறு வழிகளில் பெற முடியாதா என்ற வினா எழுகிறது. எஸ்.இராமச்சந்திரன் வங்குரோத்து கட்டுரையில் குறிப்பிட்டதுபோல ஸ்குருவை திருப்ப சுத்திய லைப் பயன்படுத்துகிறோமா? கம்பனிச் சட்டத்தின் விதிகள் நிறுவனத்தை மூடும் முறைகள் அல்லது மாற்றாக நிறுவ னத்தை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுக்க வில்லையா? தொழிற் சட்டங்கள் மீறப்பட்டிருப்பின் பணிப்பா ளர் மேல் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதா? இத்தகைய முறைகள் மீளமைப்புப் போன்ற முக்கிய விஷயங்களில் வடிவமைப்பதற்கு பேச்சு வார்த்தை நடத்த சட்டம் முதன்மை யாக வழிவகுக்க வேண்டும். துரதிர்ஷ்டமாக இவ்விஷயங்க ளில் பல நீதிமன்றத்தில் உள்ளன. அத்துடன் இந்த நீதிமன்றங் கள் இப்பிரச்சனைகளை நிரவல் படுத்த முடியாத இக்கட்டுக ளில் உள்ளன. சட்ட முறையும் தொழிற்சட்ட முறையை நடைமுறைப்படுத்துவதிலுமுள்ள தவறுகளாலேயே நிறுவனங்

களின் பிரச்சனைகள் மேலும் இறுக்கம் பெற்றன. நீதி அமைச்சர் வணிக நீதிமன்றம் ஒன்றை நிறுவி மற்றும் நடிவடிக்கைகள் மூலம் நீதி வழங்கலை திறமையாகவும் பலனளிக்கக் கூடியதாகவும் செயற்படுத்த வேண்டும்.

விசேட குறிப்பாக சட்டத்தின் வாசகத்தில் வேறும் சில குறிப்புகள் உள்ளன. முதலாவதாக, 2(1) பிரிவில் கூறப்பட்ட கட்டுப்பாடுகளை ஒரு வணிக நிறுவனம் செய்யத் தவறிய போது அதாவது எந்த நிலையத்திலும் வேலை குறைக்கப்படும் போதும் தொழிலாளரைக் குறைத்தலும் எல்லா தனியார் மயப்படுத்துவதிலும் - அங்கு மீளமைப்பு தவிர்க்க முடியாதது. இந்தக் கட்டுப்பாடுகள் உறுதியாக வரையறுக்கப்பட வேண்டியது முக்கியமாகும். இரண்டாவதாக, வழமையான நீதி விதிப்படி விதி 2ன்- கீழ் குறிப்பிட்ட நிறுவனத்தின் கருத்துகளைக் கேட்க வாய்ப்பளிக்க வேண்டும். மூன்றாவதாக, விதி 4ன் கீழ் தீர்ப்பு வழங்கப்பட்ட போதும் நிறுவனத்தின் மேல் ஏன் அத்தகைய தீர்ப்பு வழங்கப்படுதல் முடியாது என்பதை விளக்க வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும். நஷ்ட ஈடு குழுவை நியமிக்கும் போது மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு முறையீடு செய்ய உரிமை வழங்கப்படும்போது நஷ்ட ஈட்டுத் தொகைக்கு உச்ச வரம்பைக் கூறுவதேயல்லாது தீர்ப்பின் சட்ட நடிவடிக்கை பற்றி இருக்க மாட்டாது. இது முக்கியமானது ஏனெனில் சட்ட திருத்தத்தின் விளக்கம் குறிப்பிடத்தக்க நிலைமையை சீர் செய்யும் எல்லையை வகுத்துள்ளது.

இறுதியாக தொழிலாளரின் சமூக, பொதுக் கொள்கையின் உரிமை முக்கியமானது. சில வகை நஷ்ட ஈட்டு விதி நிறுவப்பட வேண்டும், தொழிலாளர் வேலை இழக்கும் வேளை மீளத் தொழில் தேடுவதற்கு பயிற்சி அளிப்பதற்குமாக.

# வவுனியாவில் இடம் பெயர்ந்த மக்கள் சார்பாக ஒத்திவைப்பு அறிக்கை

## நொவெம்பர் 14, 1996.

சமீபத்தில் நடைபெற்ற யுத்தத்தினால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் சிக்கித் தவிப்பதால் வவுனியாவில் உருவாகி வரும் மோசமான சூழல் குறித்து அவையின் கவலையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவையில் உள்ள ஐ.தே.க, தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இந்த கருத்தோடு உடன்படுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இப்படி இடம் பெயர்ந்தவர்களை வன்முறைச் சக்கரத்தில் சிக்கி நசுங்கிப் போனவர்கள் என்று மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் வர்ணித்தனர். 22.10.96 அன்று கெடுபிடிகள் தளர்த்தப்பட்டபோது 13,257 மக்கள் வடக்கில் இருந்து வவுனியாவுக்குள் திடீரெனப் புகுந்தனர். இது ஏற்கெனவே இருந்த துயரச் சூழலை மேலும் அதிகரித்தது. அவர்கள் அனைவரும் தற்போது 11 மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முன்னதாக, இவர்களில் பெரும்பான்மையினரால் தாண்டிக்குளத்துக்கு வர முடியவில்லை. தாண்டிக் குளத்துக்கு வரும் மக்களின் கெடுபிடிகளை தளர்த்தியதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் மக்களின் வருகை காரணமாக ஏற்பட்டுள்ள மனிதாபிமானப் பிரச்சினைகளில் பரிவோ, போதுமான அக்கறையோ செலுத்தப்படவில்லை. வவுனியாவில் உள்ள 11 முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இம்மக்கள் கடுமையான கஷ்டங்களுக்கும் அவமானத்துக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். போதுமான வசதிகள் இல்லாமை, மனித நேயத்துடன் இவர்களை வேறு இடங்களுக்கு மாற்றாதது ஆகியவையே

இதற்குக் காரணம். இது குறித்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் 1996 நவம்பர் 6-ம் தேதி அதிபர் சந்திரிகாவுக்கு கடிதம் எழுதினார். நானும் சமீபத்தில் வவுனியாவுக்குச் சென்றேன். இதன் காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து நேரடியாக புரிந்து கொள்ளவும் பரிச்சயப்படுத்திக் கொள்ளவும் முடிந்தது.

திடீரென ஏற்படும் இடம் பெயர்கிற மக்கள் வெள்ளத்தை சமாளிப்பதில் இருக்கும் உடனடி சிக்கல் என்னவென்றால், வவுனியாவில் உள்ள நிரந்தர குடிமக்களின் தேவைகளை பகிர்ந்து கொள்ளச் செய்வதுதான். இப்படி இடம் பெயர்ந்தவர் களுக்கு இருப்பிடம் அளித்ததன் காரணமாக வவுனியாவில் உள்ள 7 பள்ளிகூடங்கள் மூடப்பட்டு முகாம்களாக மாற்றப்பட் டன. இதனால் டிசம்பரில் ஜி.சி.ஈ (ஓஎல்) தேர்வு மற்றும் ஏ.எல். தேர்வு எழுத வேண்டிய 2500 மாணவர்கள் உட்பட 8500 மாணவரின் கல்வி பாதிக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மகா வித்யாலயம் என்ற தேசியப்பள்ளி மூடப்பட்டதன் காரணமாக ஏறக்குறைய 300 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். ஆகவே, மாணவர்கள் குறிப்பாக பொதுத் தேர்வுக்காகப் படிப்பவர்களின் தேவைகளை நாம் உடனடியா கக் கவனிக்க வேண்டியுள்ளது. அத்துடன், வவுனியாவில் அவர்களின் கல்வியைப் பாதிக்காத வகையில் இடம் பெயர்ந்த வர்களுக்கு மாற்று இருப்பிடங்களை அளிப்பதை உறுதி செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 100 இருப்பி டங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் அதற்கான பணி நவம்பர் மாத இறுதியில் முடிவடைந்து விடும் என்றும் நான் அறிந்து கொண்டேன். இப்படி திடீரென மக்கள் வருவதற்கு முன்பாகக் கூட பாதுகாப்பு கெடுபிடிகள், முகாம்களில் சூழல்கள் ஆகிய வற்றின் காரணமாகக் கூட இடம்பெயர்ந்த மக்கள் சங்கடங்க ளையும், ஏமாற்றங்களையும் சந்தித்தார்கள்.

தாண்டிக்குளத்துக்கு வந்தவர்கள் குறுகிய காலத்துக்குள்ளா கவே யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி, சாவகச்சேரியில் இருந்து கிளிநொச்சி, கிளிநொச்சியில் இருந்து ஓமந்தை,

ஓமந்தையில் இருந்து தாண்டிகுளத்துக்கும் இடம் பெயர வேண்டி வந்தது. தாண்டிக்குளத்தை வந்தடைந்த போது, மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் களைப்படைந்திருந்த அவர்கள் அங்கு நிலவிய நிச்சயமற்ற நிலைமைகளால் மேலும் களைப்ப டைந்தார்கள். பல அதிகாரிகள் 18 மணி நேரத்துக்கு மேல் உழைப்பதால் சோர்வடைய நேரிட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் சந்தித்த பிரச்சினைகளை இங்கே விளக்க நான் விரும்புகிறேன். வவுனியாவில் உள்ள ஒருங்கி ணைப்பு அதிகாரி என்.மல்லவராராட்சி பிறப்பித்த உத்தரவின் படி இடம்பெயர்ந்த மக்கள் வகைபடுத்தப்பட்டு குறிப்பிட்ட பொது நல மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்கள் 5 வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள். முதலாவதாக, யாழ்ப்பா ணத்துக்கு செல்ல விரும்புபவர்கள். 13-11-96 வரை 6702 பேர் கப்பல் மூலமாக திருகோணமலை வழியாக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மோசமாகி வரும் சூழலின் காரணமாக அங்கு செல்பவர்களிடையே ஒரு தயக்கம் ஏற்பட்டு வருகிறது. இரண்டாவதாக, மட்டக்களப்பு, திருகோ ணமலை, புத்தளம் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்கள். மூன்றாவதாக, மருத்துவ சிகிச்சை தேவைப்படுபவர்கள் அல் லது விமான பயணத்துக்கான ஏற்பாடுகள் உறுதி செய்யப்பட்ட வர்கள் அல்லது வவுனியாவின் தென்பகுதிக்குச் செல்ல வேண்டிய அரசு ஊழியர்கள். நான்காவதாக, வவுனியாவில் தற்காலிகமாக வர்த்தகம் செய்து விட்டு ஓமந்தை மற்றும் கிளிநொச்சிக்கு திரும்ப வேண்டியவர்கள். ஐந்தாவதாக, தங்க ளுடைய குடும்பத்தினரிடம் இருந்து பிரிக்கப்பட்டு தீவிரமான விசாரணைக்கு உள்ளாக்கப்படும் 14-35 வயது நிரம்பியுள்ளவர்.

இந்த ஒவ்வொரு பிரிவில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக் கும் தனித்தனியான குறிப்பிட்ட பிரச்சினைகள் உண்டு. முதலாவதாக அரசு அதிகாரிகள் தரப்பில் ஏற்பட்ட தாமதங்கள், ஏமாற்றங்கள், மக்களை வகைப்படுத்தியதால் இருந்த ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை தகவல் தொடர்பில் இருந்த சிரமங்கள் மேலும் சிக்கலாக்கின. போதுமான பாதுகாப்புப் பணியாளர்

இப்பணியில் ஈடுபடுத்தப்படவில்லை. இந்தப் பணியாளர் பெரும்பான்மையானவர்களுக்கு, இடம் பெயர்ந்த மக்களின் மொழி புரியவில்லை. தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதற்கும், தகாத வார்த்தைகளால் திட்டுவதற்கும் இது வழி வகுத்தது. இரண்டாவதாக, இருப்பிட வசதிகள் போதுமானதாக இல்லை. தேவையான கழிப்பறைகள் இல்லாதது மற்றும் தண்ணீர் போன்ற அடிப்படைத் தேவைகள் குறைவாக உள்ளதால் தீவிரமான சுகாதாரப் பிரச்சினைகள் எழுகின்றன. சில முகாம்களில் தொலைக்காட்சி, படிப்பதற்கு புத்தகங்கள் இருந்தாலும் பொழுதுபோக்கு அம்சங்கள் மிகவும் குறைவு. அரசின் உதவியின் காரணமாக வவுனியாவில் 48,831 பேரும், 388,580 பேர் வன்னியிலும் பங்கீட்டுப் பொருட்கள் பெறுகிறார்கள். ஆனால் 1996 மார்ச் மாதத்தில் இருந்து வவுனியாவில் 18,433 பேருக்கு வன்னியில் 200,548 பேருக்கும் ரேஷன் மறுக்கப்படுவதால் அவர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். கடும் வறட்சி, பயிரழிவுக்கு சமூக சேவை திணைக்களம், வவுனியாவில் 81,500 பேருக்கும் வன்னியில் 81,103 பேருக்கும் உதவி வழங்கப்படவில்லை...

மூன்றாவதாக, குழந்தைகள் படும் துயரத்தை சொல்லிமாளாது. சோர்ந்து உற்சாகமிழந்த அவர்கள் கண்களில் துயரம் ததும்பி வழிகிறது. இந்த குழந்தைகளுக்கான எந்த சிறப்பு வசதிகளும் செய்யப்படவில்லை. நான்காவதாக, இந்த முகாம்களில் சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லை. சில நடமாடும் மருத்துவ மனைகள் வவுனியாவில் உள்ள மருத்துவ மனைக்கு வரும் பயணிகளுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான வசதிகள் இல்லை. 4 மாவட்டங்களில் உள்ள 900,000 மக்கள் இந்த மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது. தடுப்பு மருந்து முறைகள் போதுமானதாக இல்லை. மனநோய் மருத்துவர், குழந்தை நல மருத்துவர், கண் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை நிபுணர் ஆகியோர் இல்லை. வவுனியாவில் உள்ள அரசு கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு மருந்துகளை வழங்குவதில் அதிக காலதாமதம்

ஏற்படுகிறது என்பதைச் சொல்லியாக வேண்டும். மருந்து, ஏ.ஆர்.வி ஊசிமருந்து, பாம்புக்கடிக்கு மருந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள அரசு ஏஜெண்டுகள் தெரிவித்தனர். வன்னியின் வடபகுதியில் தகுதிவாய்ந்த மருத்துவ அதிகாரிகள் யாரும் இல்லை.

இடம் பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்கு வேண்டிய உடனடி மனிதாபிமான நடிவடிக்கைகளில் கவனம் செலுத்துவது, மற்ற மக்கள் மீது இந்த இடப்பெயர்ச்சி ஏற்படுத்தியுள்ள தாக்கத்தில் சிரத்தை செலுத்துவது ஆகிய வையே இந்த அறிக்கையின் நோக்கம்.

வடக்கில் உள்ள மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அதிகாரிகள், அத்தியாவசிய சேவைக்கான ஆணையாளர் நாய கம், அரசாங்க அதிபர் மறுவாழ்வு அமைச்சகம், ராணுவ அதிகாரிகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச நிவாரண அமைப்புக ளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த அரசுக்கு உள்ளாகவே ஒரு மையத்தை ஏற்படுத்த வேண்டியது உடனடி தேவை. இப்படிப்பட்ட ஏற்பாடு இல்லையெனில், வழக்கமாக வரும் விசாரணைகளுக்கு பதில் சொல்வதில் சிக்கல் ஏற்படும். கடிதங்கள் பதில் அனுப்பப்படாமல் இருக்கும். இதன் காரண மாக நிவாரணப் பணிக்கு பாதிப்பு ஏற்படும். இரண்டாவதாக, இடம் பெயர்ந்த மக்களுக்கு தேவையான பாதுகாப்பிடம், சுகாதாரம், பாதுகாப்பு, சத்துணவு ஆகியவை கிடைப்பதை உறுதி செய்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மூன்றாவதாக, உள்நாட்டு, வெளிநாட்டு அரசு சாரா நிறுவனங் கள், இடம் பெயர்ந்தவர்களை இலகுவாகச் சென்றடைய வழிவகை செய்ய வேண்டும். இந்த நிறுவனங்கள் மூலம் உணவு மற்றும் இதரப் பொருள்கள் அனுப்பப்படுவதை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் மேல் தற்போது மிகுந்த கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. நான்காவதாக, சர்வதேச மனித உரிமைச் சட்டத்திலும், நமது அரசமைப்புச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ள ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு ''நடமாடும் உரிமை'' காக்கப்பட வேண்டும். பெரும்பான்மை

யான நிவாரண மையங்கள் கம்பி வலைகளால் சூழப்பட்டு சிறை போல் காணப்படுகின்றன. பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதி பெற்ற பின்னரும் 200 இளைஞர்கள், புகையிரத சரக்கு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஐந்தாவதாக, இடம் பெயர்ந்தவர்களை ஒழுங்குபடுத்துவதை மேம்படுத்து தல் மிகவும் தேவையான விஷயம்.

தமிழ் தெரிந்த அதிகாரிகள் அதிக அளவில் தாண்டிக்குளத் துக்கு அனுப்பப்பட வேண்டும். கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட் டால் நிவாரண முகாமில் இருப்பவர்களில் 90% பேர் தங்களு டைய உறவினர்களிடம் செல்ல விரும்புவதாக நமக்கு கோரிக் கைகள் வந்துள்ளன. வவுனியாவின் நிரந்தர குடிமக்களாக இல்லாதவர்கள் தங்களுடைய உறவினர்களோடும் நண்பர்க ளோடும் தற்காலிகமாக குடியமர்ந்து கொள்ளக் கூட தற்போ தைய விதிமுறைகள் அனுமதிப்பதில்லை. இறுதியாக, இடம் பெயர்ந்தவர்களுக்கான ஐ.நா.சபை செயலாளர் நாயகம் ப்ரான் சஸ் டெங்க் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்ய அரசு அழைப்பு விடுக்க வேண்டும். அவர் ஏற்கெனவே 1993-ல் இப்பகுதிக ளுக்கு சென்று வந்தார்.

1996, நவம்பர் 13-ம் தேதிவரை, அடிப்படை வசதிகள் இல்லாமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு 170 பேர் ஏற்கெ னவே இப்பகுதியில் இருந்து சென்றுவிட்டனர். வன்னியில் நிலவும் தீவிரமான மனிதாபிமான சிக்கலை உடனடியாக கவனத்தில் கொண்டு, தேவையான நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னுடன் சேர்ந்து பலர் அரசை வலியுறுத்தி னர். இடம் பெயர்ந்த மக்கள் படும் துயரங்களையும், நம்பிக்கையின்மையையும் போக்க நாம் விரைந்து செயல்பட வேண்டும்.

# ஜே.ஆர். ஜெயவர்த்தனா இரங்கல் தீர்மானம்

நொவம்பர் 19, 1996.

"எனக்குச் சற்றும் அறிமுகம் இல்லாத நபரின் வாழ்க்கையை விவரிப்பது போலவோ, தூரத்துக் காட்சியை ஆராய்வது போலவோ நான் பேசிக் கொண்டிருக்கவில்லை. 50 ஆண்டுகளாக எனக்கு நன்கு தெரிந்தவரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்" - திரு.திருச்செல்வம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் ஜெயவர்த்தனா இப்படிப் பேசினார். அதிபர் ஜெயவர்த்தனாவுடனான எனது உறவு மிகவும் அடக்கமானது. 1980-ல் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் பரிந்துரையின் படி அதிகாரப் பகிர்வுக் கமிட்டியில் பணியாற்ற அதிபர் ஜெயவர்த்தனாவால் நியமிக்கப்பட்டேன். அப்போது அவரை நான் அறிந்திருக்கவில்லை. பின்னர் இரு சமூகங்களுக்கும் இடையேயான பிரச்சினைகள் குறித்து அரசுக்கும் எதிர்க்கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் பங்கேற்றேன். முதலில், மாவட்ட கவுன்சில் திட்டத்தை அமுல்செய்வது குறித்து இப்பேச்சு வார்த்தைகள் கவனம் செலுத்தின. 1983 ஜூலையில் நடைபெற்ற கொடுமைக்குப் பிறகு, இணைப்பு 'சி' ஆவணத்துடன் மாகாண அதிகாரப் பகிர்வுக்கு வகை செய்யும் அரசியல் சட்டத்தில் 13-வது திருத்தம் குறித்து கவனம் செலுத்தின.

1977, ஜூலை தேர்தலுக்குப் பின்னர் கொழும்பு நகரின் மத்தியில் உள்ள பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் அதிபர் வில்லியம் கோபலாவ அரசின் கொள்கை குறித்து உரையாற்றினார். சம்பிரதாயப்படி முதல் 3 இருக்கைகளிலும் பிரதமர் ஜூலியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தனா, எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், நிதியமைச்சர் ரோனிடி மெல் ஆகியோர் அமர்ந்திருந்தனர். நாடாளுமன்ற நடவடிக்கை

தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக அமிர்தலிங் கத்தை நோக்கித் திரும்பிய ஜெயவர்த்தனா ''அமீர் முதல் இருக்கையில் இருந்து 3-வது இருக்கைக்கு வர, எனக்கு 30 ஆண்டுகள் ஆனது'' என்றார். நறுக்கென அவர் தெரிவித்த இக்கருத்து, இத்துணைக் கண்டத்தின் புரிந்து கொள்ள முடியாத ஓர் அரசியல்வாதியின் ஏமாற்றங்களையும் பெரிய சாதனைக ளையும், மாறிய சூழல்களையும் படம் பிடித்துக் காட்டியது.

ஜூனியஸ் ஜெயவர்த்தனா வழக்கறிஞர் குடும்பத்தைச் சேர்ந்தவர். பிரபல வழக்கறிஞர்களை அவருடைய தந்தை ஈ.டபிள்யூ ஜெயவர்த்தனா, தாத்தா ஏ.எஸ்டி.வி. ஜெயவர்த்தனா ஆகியோர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக உயர்ந்தனர். அவர் றோயல் கல்லூரியில் கல்வி பயின்றார். படிப்பில் அவர் சிறந்து விளங்கவில்லை. பள்ளியில் உள்ள கிரிக்கெட், ரக்பி, குத்துச் சண்டை அணிகளில் அவர் இடம் பெற்றிருந்தார். ஒருமுறை அரசியலையும், குத்துச் சண்டையையும் ஒப்பிட்டார். அரசிய லில் நெஞ்சைக் குறிவைத்து தலையில் குத்துவீர்கள் என்றார். இலங்கை வழக்கறிஞர் குழாமில் தன்னைப் பதிவு செய்து கொண்டார். குடும்பத் தொடர்புகளும் இயல்பாக உள்ள திறமைகளும் விரைவிலேயே அவருக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்திருக்கும். இருப்பினும் நிலை கொள்ளாமல் செயல்ப டும் ஜெயவர்த்தனா நகராட்சி அரசியல், மாநில கவுன்சில் முதல் நாடாளுமன்றம் ஆகியவற்றின் மூலமாக அரசியலில் நுழைந்தார். 1947-ல் நிதியமைச்சரானார். ஆனால் 1970-ல் எதிர்க்கட்சித் தலைவராகும் வரை கட்சியின் தலைமைப்பதவி அவருக்கு வசப்படவில்லை. இந்தக் காலத்தில் தான் உற்சாகம் இழந்த சோர்ந்து போன கட்சியைச் சீரமைத்து வழி நடத்தி 5-ல் 4 பங்கு பெரும்பான்மையை வென்றார். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் நடைபெற்ற இச்சாதனைக்கு முன்பாக இதுபோல் ஒருபோதும் நடந்ததில்லை.

தன்னுடைய நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் ஒரு சிக்க லான, புரிந்து கொள்ள முடியாத, முரண்பாடான மனிதராகவே ஜெயவர்த்தனா விளங்கினார். விடாப்பிடியாக அதிகாரத்தைப் பிடித்துக் கொண்டிருந்த அவர், தொடங்கிய நடவடிக்கைகள்

அவருடைய முதன்மை அரசியல் எதிரியை வெளியேற்றுவதி லும் அரசியல் நேர்மையற்ற முறையில் நாடாளுமன்றத்தை நீடிப்பதிலும் முடிந்தது. இருப்பினும் தனக்கு அடுத்து வருப வரை கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் கூட்டம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறியதன் மூலம் ஒழுங்கான ஒரு அரசியல் மாற்றத்தை உருவாக்கினார். எவ்வித விழாவும் பரபரப்பும் இல்லாமல் 1988-ல் அரசியலில் இருந்து அமைதியாக வெளியேறினார். திட்டமிட்டு செயலாற்றும் தந்திரவாதியாகவும், இரக்கமற்றவராகவும் அவர் சிலருக்குத் தோன்றலாம். அதே சமத்தில் அவருடன் பணியாற்றியவர்க ளுக்கு அவர் பெருந்தன்மை வாய்ந்தவர், நகைச்சுவை உணர்வு மிக்கவர், தனது மரியாதையில் ஒருபோதும் தவறாதவர் என்பது தெரிந்திருக்கும். காந்திய நெறிமுறைகளைப் போற்றினார்; அசோகனைப் பாராட்டினார். இங்கிலாந்து நாட்டு அரசியல் வரலாற்றையும் நாடாளுமன்ற முறைகளையும் பிரமிக்கத்தக்க வகையில் புரிந்து கொண்டிருந்தார். அரசியலில் எதிரிகளை சகித்துக் கொள்ளாதவர்; தொழிற்சங்கப் போராட்டங்கள், அரசியல் கிளர்ச்சிகள், இனக்குழுக்கள் ஆகியவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டவர் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அடிப்படை உரிமைகளின் முதன் மையை ஏற்றுக் கொள்ளும் அரசமைப்புச் சட்டத்தை இயற்றிய அவர், அவற்றை சட்டபூர்வமாக்கினார். இருப்பினும் அரசிய லில் அதிகாரத்தைக் குவித்தவர்; சில சமயங்களில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தத் தயங்கியவர் என்றும் விமர்சிக்கப்பட் டார்.

''இலங்கையின் பொருளாதார அரசியல் முறையில் அவர் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தார். குறைந்தபட்சம் 21-ம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரையிலாவது அவற்றை மாற்ற முடியாத அளவுக்கு தோற்றத்தை உருவாக்கினார்'' என அவரது வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் கே.எம்.டி.சில்வா, ஹோவேட் ஹிகின்ஸ் ஆகியோர் தெரிவிக்கின்றனர். ''குறிப் பாக பொருளாதார மாற்றங்களைப் பொறுத்தவரை இது மிகவும் சரியானது. எதிர்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும்

செயல்திட்டத்தை அவர் உருவாக்கினார்.'' அவருடைய இந்த அரசியல் அமைப்பை கடுமையாக எதிர்த்தவர்கள் அவருடைய சாதனைகளை விட்டு தோல்விகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பேசினர். இந்த நல்ல நேரத்தில் அந்த விவாதத்தில் நான் நுழைய விரும்பவில்லை. இருப்பினும் ஒரு விஷயத்தில் - தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உறுதியுடன் செயல்பட வேண்டிய விஷயத்தில் - ஏற்பட்ட ஏமாற்றத்தை அவரே உணர்ந்து கொண்டார். சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூவுக்கு 1987-ல் அவர் எழுதிய கடிதத்தை அவருடைய வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ''பன்முகத் தன்மை கொண்ட சமுதாயத்தில் தேசிய அரசியல் வாழ்வுக்காக அரசியலமைப்புச் சட்டத்தின் பரிணாம வளர்ச்சிக்கு உதவிய யதார்த்தமும், நடைமுறை அறிவும் தொடக்கத்திலேயே வராதது உண்மையிலேயே வருத்தத்துக்குரியது'' என்று அவர் எழுதுகிறார்.

மற்றொரு சமயத்தில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் அவரிடம் பேசிய பத்திரிகையாளர்கள் ''அவர் ஏன் வேகமாகச் செயல்படவில்லை'' என்று கேட்டனர். ''என்னிடம் தைரியம் இல்லை. என்னிடம் புத்திசாலித்தனம் இல்லை; என்னிடம் தொலைநோக்குப் பார்வை இல்லை'' என்றார் அவர். தமிழர்களின் மனதில் புதைந்து கிடக்கும் துயரங்களின் வெளிப்பாடும், அவற்றைக் கவனிக்கத் தவறி விட்டமையும் 1977-ல் யுஎன்பி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் காணக் கிடக்கின்றன. எதிர்பாராத அளவுக்கு பெரும்பான்மையை அவர் பெற்றார். ஆனால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நீண்ட காலப் பிரச்சினைக்கு தீர்வு காண ஏன் தவறிவிட்டார் என்பது என்னைப் போன்ற பலருக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது.

மீளவே முடியாது என்ற அளவுக்கு அவருடைய நிர்வாகத்துக்கு தொடக்கத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் உண்டு என்றால், அது தேர்தல் வெற்றிக்குப் பின் 3 வாரங்களுக்குள்ளாக தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைதான். சிறிய பொலிஸ் குழுவுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கும் இடையே தொடங்கிய இப்பிரச்சினை நாடு முழுவதும்

உள்ள தமிழர்களுக்கு எதிரான தாக்குதலை உருவாக்கியது. ஒரு வாரத்துக்குப் பின்னரே இது குறைந்தது. இக்கலகங்களின் தீவிரத்தன்மை, 1956-ல் ஆட்சியை விட்டு அவரைத் துரத்திய அரசியல் சக்திகளை நினைவுபடுத்தியது. இதனால் அவர் மிகவும் பாதிப்படைந்தார். அவருடைய தொடக்ககால நிர்வா கத்தில் ஒரு கறையை இச்சம்பவங்கள் ஏற்படுத்தியதுடன், இனவாத நம்பகமற்றதன்மையை வலுப்படுத்தியது.

தமிழர்களின் ஒட்டுமொத்த குறைகள் குறித்த புரிதலை ஐ.தே.க.யின் தேர்தல் அறிக்கை வெளிப்படுத்தியது. ஆனால் இந்த குறைகளால் வலுவூட்டப்பட்ட தேசிய இனவாதத்தின் தீவிரத்தன்மையையும் நெளிவு சுளிவுகளையும் புரிந்து கொள் ளத் தவறிவிட்டது. தமிழர் ஆட்சியின் தலைமையில் ஏற்பட்ட தலைமுறை மாற்றங்களுடன் இசைந்து பணியாற்றுவதிலும் அவருக்கு கஷ்டம் இருந்தது. அவருக்கு தனிப்பட்ட முறையில் தொடர்பிருந்த 3 முக்கியத் தலைவர்களான ஜி.ஜி.பொன்னம்ப லம், எம்.திருச்செல்வம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகியோர் தேர்தலுக்கு முந்தைய 6 மாதங்களுக்குள் காலமானார்கள். தமிழ் தீவிரவாதத்தின் தோற்றம், தன்மை ஆகியவற்றை புரிந்து கொள்வதிலும் மீண்டும் மீண்டும் அது ஏன் தலையெடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதிலும் சிரமம் இருந்தது.

அதே நேரத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவருக் கும் இடையே உள்ளார்ந்த உறவு நிலவியது.

அவர்களுடைய குடியுரிமை, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், சம்பளக் கோரிக்கைகள், தொழிற்சங்க உரிமைகள் ஆகிய விஷயங்களில் அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. திறமையான நாடாளு மன்ற வாதியாகவும் புத்திசாலியாகவும் சக்திவாய்ந்த, வசீகரிக் கும் குரலைக் கொண்டவராகவும் விளங்கினார். பரந்த அறிவி யல் ஆர்வம் கொண்டவராகவும், கல்விகற்ற அரசியல் தலைவ ராகவும் வாழ்ந்தார். நூல்களிலும் அரசியலார் வாழ்க்கை வரலாறுகளிலும் ஆர்வம் கொண்டவர். கட்சி அமைப்பை நவீனப்படுத்துபவராகவும் ஒரு தோல்வியடைந்த கட்சியை மீளமைப்பதில் திறமை மிக்கவராகவும் விளங்கினார்.

# வரவு செலவுத் திட்டத்தில் கமிட்டி நிலையில் ஜனாதிபதியின் வாக்குப்பணம்

## நொவெம்பர் 20, 1996.

அரசின் நடைமுறையில் உள்ளதும் திணைக்களங்களின் மூலதனச் செலவு, ஏஜென்சி செலவுகளின் மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதுமே வரவு செலவு திட்டத்தின் கமிட்டி நிலையாகும்; நாடாளுமன்றத்தின் நிதிக் கட்டுப்பாடும் சட்ட ரீதியாக நிர்வாகச் செலவுகளை நுண் ஆய்வு செய்வதுமாகும். ஆயினும் இன்று சில நிமிடங்களில் 19 நிறுவனங்களின் மதிப்பீடுகள் பற்றி மீளாய்வு செய்யப் பணிக்கப் பட்டோம் அவற்றுள் சில: ஜனாதிபதி, அமைச்சரவை, நாடாளுமன்றம் ஆகியன அரசாங்கத்தின் மிக முக்கிய நிறுவனங்களாகும். ஜனாதிபதிக்குரிய வாக்குப்பணம் 12 விசாரணை ஆணையாளர் களையும் அடக்கும். இவற்றுள் மனித உரிமை சிறப்புப்படை ஸ்ரீலங்கா பவுண்டேசன், அடிப்படைக் கல்வி நிறுவனம், வடக்கேயுள்ள புனருத்தாரண சிறப்புப்படையும் அடங்கும். இது யதார்த்தமானதோ அர்த்தமுள்ள நடைமுறையோ அல்ல. ஆயினும் நாம் எமது தொகுதியினரைத் திருப்திப்படுத்தும் சில கருத்துகளைக் கூறலாம். ஆனால் மதிப்பீடுகள் எவ்வாறு ஆக்கப்படுகிறது என்பது பற்றியோ நிறுவனங்கள் எவ்வாறு நடக்கின்றன என்பது பற்றியோ நாம் கூற முடியாது. வரவு செலவுத் திட்டத்தின் கமிட்டி நிலையை நாம் சிரத்தையுடன் மீளாய்வு செய்தல் வேண்டும்; மதிப்பீடுகளை நுண் ஆய்வு செய்வதற்கு மாற்று முறைகளைக் கூற வேண்டும். ஐக்கிய இராச்சியத்தில் மதிப்பீட்டுக் கமிட்டி கூடியளவு செல்வாக்கும் பாதிப்பும் ஏற்படுத்தக் கூடியது. நாம் மதிப்பீடுகள் பற்றி முறைசாரா - முறையிலும் ஆலோசனைக் கமிட்டிகளில் விவாதிக்கலாம்; ஒவ்வொரு திணைக்களம், நிறுவனம் பற்றி

யும் அவற்றின் மதிப்பீடுகள் பற்றியும் போதியளவு விவாதிக்க லாம்.

தெற்காசியாவில், ஆட்சிகளில் பாரதூரமான குழப்பங்கள் உள்ளன; அரசியல், அரசு நிறுவனங்களில் பரந்துபட்ட மக்கள் மாயையில் வாழ்கின்றனர். இந்தியாவில் அரசியல் பிரமுகர்கள் நீதிமன்ற விசாரணையில் இருப்பது குழப்பத்தைக் காட்டுகி றது. பங்காள தேசத்தில் எதிர்கட்சியினர் நாடாளுமன்றத்தை நிராகரிப்பதோடு வேலை நிறுத்தங்கள், பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களால் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. அண் மைய தேர்தல்கள் அரசியலை ஸ்திரப்படுத்தும் நம்பிக்கை அளித்த போதும் பிரதான கட்சிகளிடை உள்ள உறவுகள் அச்சத்தைத் தருகிறது. பாகிஸ்தானில் உரிய காலம் முடியுமுன் னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. இக்கலைப்பு சட்ட ரீதியானதா எனக் கோரப்படுகிறது. இதே போன்ற நம்பிக்கையின்மை எமது அனைத்துப் பொது நிறுவனங்கள் மீதும் ஏற்பட்டுள்ளது. அரசு மூன்று முக்கிய பணிகளை ஆற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அனைத்து மக்களதும் தராதரத்தை மேம்படுத்தல் வேண்டும்; சமத்துவ மின்மையை ஒழிக்க வேண்டும். மனித உரிமைகள், ஜனநாயக மதிப்புக ளைப் பேணல் வேண்டும். தெற்காசியாவில் ஜனநாயக மதிப்புகளைப் பேணி எங்கள் பொருளாதாரத்தையும் சமூகத் தையும் மாற்றுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். தென்கிழக்காசியா அதிகாரத்துவ மேம்பாட்டு 'மொடலாக' வளர்கிறது. ஆயினும் தெற்காசியா இம்மாற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாதிருக்கிறது.

சாதாரண மக்களின் உணர்வுகளையும் தேவைகளையும் அரசாங்கம் அறிந்து உரிய கவனம் எடுத்தல் வேண்டும். ஜனாதிபதி செயலகம்; அமைச்சரவை, அமைச்சரவைக் கமிட்டி முறை ஆகிய நிறுவனங்களை மீளாய்வு செய்வதோடு அவை நமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றுகின் றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டும். கமிட்டி முறை, சட்டமாக்கும் முறையில் வரவு செலவுத் திட்டத்தில் மக்கள்

பங்காற்றுவதை மேம்படுத்தல் ஆகியவற்றில் நாடாளுமன் றத்தை சீரமைக்கும் தேவையும் எமக்குள்ளது. மக்களது துன்பங்களைக் களைவதில் பங்காற்ற வேண்டும் என்ற நோக்குடனேயே எம்மில் பலர் பொது வாழ்வில் ஈடுபட் டோம். நாம் மக்கள் துன்பங்களையும் குரூரங்களையும் எதிர்நோக்க நேரிட்டது. தனிமனிதரின் குறை தீர்க்க முடியாநி லையில் உள்ளோம்; மனித உரிமைகள், மனிதாபிமான விஷயங்கள் பற்றியே அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன.

சிவில் நிர்வாகம், பாதுகாப்பு உத்தியோகத்தர், உள்ளூர் உத்தியோகத்தர், உதவி தரும் ஏஜென்சிகள் ஆகியவற்றிடை மனித உரிமைகள், மனிதாபிமான விஷயங்கள் பற்றி ஜனாதி பதி செயலகத்திற்கு அறிவித்து யாவையும் ஒன்றிணைக்க வேண்டிய பணியும் உள்ளது. முன்னர் பிராட்மன் வீரக்கோன் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறு செயலாற்றினார். மனித உரிமைகள் ஆணையாளர் மசோதாக்களின் இரண்டாவது சட்டமன்ற வாசிப்பு பிப்ரவரி 23, 1996லும் மூன்றாவது சட்டமன்ற வாசிப்பு ஜுலை 9, 1997லும் நடைபெற்றது. நான்கு மாதங்கள் கடந்தும் ஆணையாளர் நியமிக்கப்படவில்லை. இது மனித உரிமைகள் நடைமுறைப்படுத்தும் சிறப்புப்படை எதிர்காலத்தில் அமைப்பது உட்பட மனித உரிமை நிறுவனங் கள் ஏற்படுத்துவது பற்றிய உறுதியின்மையையும் காட்டுகிறது. பாகுபாடு காட்டுதலை கவனிக்கும் ஆணையாளர் நீக்கப்பட்ட தால் எராளமான முறைப்பாடுகள் இலங்கை பவுண்டேசனில் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே ஆணையாளர் விரைவில் நியமிக்கப்படவேண்டும். யாழ்ப்பாணத்தில் செயலாற்றச் சிறப் புப்படை அலுவலகம் நிறுவ வேண்டிய பணி உள்ளதோடு சுதந்திரமாக இயங்க அனைத்து வசதிகளும் வழங்கப்படவேண் டும். காணமற் போனவர் பட்டியலில் பல சுற்று நிருபமாக உள்ளது. குறிப்பிட்ட நபர்கள் காவலில் உள்ளனரா என உடனடியாக சரிபார்க்க வேண்டுவதோடு அவர்களைத் தேடுவ திலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஊடகம், சுற்றுலா, விமானப் பயண அமைச்சு - வாக்குப்பணம்

டிசம்பர் 2, 1996.

நமது சமூகம், அரசியல் சூழ்ச்சி, தனிப்பட்ட விரோதம், இனவாத நம்பிக்கையின்மை என்ற அலையில் சிக்கித் தவிக்கிறது. பத்திரிகைகளில் வரும் செய்திகளை வெளிநாட்டவர் மேலோட்டமாகப் பார்த்தால், கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்குக் கருத்து வேறுபாடுகளாலும் அதிருப்தியாலும் நம்முடைய சமூகம் கிழித்தெறியப்பட்டுக் கொண்டிருப்பது போல அவருக்குத் தோன்றும். பொதுவான அரசியல் மற்றும் பொருளாதார லட்சியத்தில் இந்நாடு கவனம் செலுத்தவில்லை என்பது போல் தோன்றுகிறது. முடிவில்லாத முரண்பாடுகளிலும் அற்ப சண்டைகளிலும் விரோத உணர்ச்சிகளிலும் தனிப்பட்ட மற்றும் கூட்டு சக்திகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. ஜனநாயகத்தின் துடிப்பான செயல்பாட்டை பத்திரிகைகள் பிரதிபலிக்க வேண்டியது மிகவும் தேவையானது. ஆக்கப்பூர்வமான தீர்வுகளில் சமுதாயம் கவனம் கொண்டிருக்கும் வகையில் பொது விவாதத்தை உயர்த்த வேண்டிய கடமையும் பத்திரிகைகளுக்கு இருக்கிறது.

வெறும் வணிக நோக்கத்தின் அடிப்படையில் மட்டும் செயல்படும் எலக்ட்ரானிக் மீடியா காரணமாக கலாசார, மத விழுமியங்களில் ஏற்படும் வீழ்ச்சியைத் தடுக்க இலங்கை ஒலிபரப்பு அதிகாரியை உருவாக்குவது குறித்து தனது விருப்பத்தை அமைச்சர் தெரிவித்தார். தகவல்கள் பெறுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த சட்டம் உருவாக்கப்படக் கூடாது. நாம் தொழில்நுட்பப் புரட்சி காலத்தில் இருக்கிறோம். அதில் தகவல் தொடர்புக்கும் தகவல் தொழில்நுட்பத்துக்கும் இருக்கும் வேறுபாடானது பன்முக ஊடகத்திற்கு தீர்வை

அளிக்கும்; புதிய தொழில்நுட்பங்களால் நீக்கப்படும். இந்தப் புதிய தொழில்நுட்ப மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கான உரிமங் கள் வெளிப்படையான நேர்மையான பட்டவர்த்தமான முறை யில் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

சிறுபான்மை மதங்கள், இனங்கள், பெண்கள் ஆகியோ ருக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் பிரசாரம் ஆகிய பிரச்சினைகளில் பத்திரிகைச் சபை அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பல்வேறு இனங்கள், மதங்கள் கொண்ட சமூகத்தில் மீடியாவின் பங்கை வலியுறுத்தும் பல அறிக்கைகள் உள்ளன. இந்த விஷயத்தில் பாராட்டத்தக்க முயற்சிகளை மேற்கொண்ட பல பத்திரிகையாளர்கள் உள்ளனர். மீடியா, தேசியவாதம் மற்றும் உடன்பாடு குறித்து இந்த வார இறுதியில் நடைபெறும் கருத்தரங்கில் டாக்டர் சரத் அமுனுகம சிறப்புரை ஆற்ற உள்ளார். இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள், யுத்தத்தின் பின் விளைவுகள் ஆகியவை குறித்து அதிக அளவில் செய்திகள் வர வேண்டியது அவசியம். உறுப்பினர்களின் இருக்கைகளும் பொதுமக்கள் அமரும் மாடங்களும் காலியாக இருக்கும். ஒரு அவையில் பேசுவது மிகுந்த சோர்வை அளிக்கிறது. ஒரு நிறுவனம் என்ற வகையில் பொது விஷயங்கள் குறித்த அக்கறை நாடாளுமன்றத்தில் விரைவாக குறைந்து வருகிறது. வேடிக்கை என்னவென்றால் இங்கிலாந்து மக்கள் சபை, ஆஸ்திரேலிய நாடாளுமன்றம், அமெரிக்க காங்கிரஸ் ஆகிய வற்றை நாம் தொலைக்காட்சியில் பார்க்க முடிகிறது. ஆனால் நம்முடைய நாடாளுமன்ற நடவடிக்கைகளை கவனிக்க முடிய வில்லை. ஆகவே நாடாளுமன்ற நடவடிக்கைகளை வானொலி, தொலைக்காட்சி ஆகியவை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் விதிமுறைகளை வகுக்க வேண்டும்.

சுற்றுலாவைப் பொறுத்தவரை கல்வி, கோரிக்கை, ஆராய்ச்சி நோக்கங்களுக்காக பல உயிரினங்களைக் கொண்ட கொழும்பு மிருகக்காட்சிச் சாலை உருவாக்கப்பட்டது. இந்த

மிருகக்காட்சி சாலையைப் பராமரிப்பதிலும் மிருகங்களை தூய்மையான சூழ்நிலையில் வைத்திருப்பதிலும் குறிப்பிடத் தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பல்லாண்டுகளாக கொழும்பு நகரின் பெருமைக்குரிய விஷயமாக இருந்த இந்த மிருகக் காட்சி சாலையில் பணியாற்ற கால்நடை மருத்துவர்கள் விரும்பிய போது துரதிருஷ்டவசமாக அவர்கள் ஊக்குவிக்கப்ப டவில்லை. தன்னுடைய சுற்றுலா கவர்ச்சியை வேகமாக இழந்து வரும் கொழும்பு நகரத்தின் தெருக்கள் பாதுகாப்பு தடுப்புச் சுவர்களால் மறைக்கப்பட்டுள்ளது. அந்நகரம் பாது காப்பு நடைமுறைகளில் சிக்கித் தவிக்கிறது. கொழும்பு நகருக்கும் தங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது குறித்து சுற்றுலாப் பயணிகள் குறை கூறுகின்றனர். நவீன வசதிகளுடன் முக்கிய கலாசார மையமாக கொழும்பை மீண்டும் கட்டமைக்க தெளிவான முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். ஆனால் அந்த விஷயத்தில் பெரிய அக்க றையோ திட்டமிடுதலோ நடைபெறவில்லை.

அமைதியும் சுற்றுலாவும் ஒன்றையொன்று பிரிக்க முடி யாத அளவு பின்னிப்பிணைந்தவை. ரூ.200 மில்லியன் செல வில் கவர்ச்சி மிக்க சுற்றுலா மையமாக கொழும்பு நகரை மாற்றுவதற்கான திட்டத்தை சுற்றுலா அமைச்சகம் வகுத்துள் ளது. இப் பணமும், சுற்றுலாத்துறை மீது விதிக்கப்படும் வரி மூலமாக கிடைக்கும் வருவாயும் அமைதிக்கான நடைமுறைக ளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். இந்த முயற்சியின் வெற்றி சுற்றுலாத்துறைக்கு உண்மையிலேயே பலனளிக்கும்.

# நீதி, அரசியல் யாப்பு அலுவல்கள் அமைச்சு வாக்குப்பணம்

டிசம்பர் 12, 1996.

நீதி அமைச்சு மிக்க நேர நெருக்கடி வேளையிலும் இரு முக்கிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. முதலாவதாக சட்ட சீரமைப்பு; முன்னையவர் முயற்சிகள் ஆர்வங்களை மீறிய முயற்சி இது. இலஞ்ச ஊழல் சட்டம், குறை கேள் சட்டம், கணக்காளர் தராதரம் பற்றிய சட்டம், தேசிய மனித உரிமைகள் ஆணையாளர் சட்டம், புதிய சமரசச் சட்டம், வணிக உயர்நீதி மன்றம் நிறுவும் சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்ட சட்டங்கள் ஆக்கப்பட்டன. இரண்டாவதாக கோல்புருக்கமரோன் சீரமைப் புக்குப் பின்னர் சட்ட நடிவடிக்கைகள் பிந்துவது பற்றி நிர்வாகத்திற்கு நெருக்கடி ஏற்பட்டது. பல கமிட்டிகள் அமைக் கப்பட்டன. பல சட்டத்தணிகள், முன்னாள் நீதிபதிகள் இப்ப ணியில் ஈடுபட்டனர். மற்றைய நாடுகள் இப்பணியில் குறிப்பி டத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளன. சிங்கப்பூர் மூன்று தடவையில் நீதிமுறையை சீரமைத்தது. இரு வருடங்களில் உச்ச நீதி மன்றங்களில் விசாரணைக்கு இருந்தவற்றில் 90% மேலாக குறைந்து விட்டது. காத்திருக்கும் வழக்குகளை 5 வருடத்திலிருந்து 4 மாதங்களுக்குக் குறைத்து. ஆவணங்களை கம்பியூட்டர் மயப்படுத்தல், தேங்கியிருக்கும் வழக்குகள் பற்றி இருப்பு எடுத்தல், வழக்குகளை முகாமைப்படுத்துவதில் உயர்த்தல் ஆவன முறையீடுகளுடன் முன்னேற்றமான பயிற்சி யினாலேயே இத்தகைய நிலையை அடைய முடிந்தது. இதே போன்ற மாற்றங்களால் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் மாற் றங்கள் கொண்டுவர முடிந்தது. உயர்நீதிமன்றத்தை உத்தியோக பூர்வமாக நிர்வகிக்க முதன்மையான நிர்வாகியை நியமித்த தோடு கம்பியூட்டர் மயப்படுத்துதல் மூலமும் மாற்றம் ஏற்படுத்தினர். புதிய தொழில்நுட்பத்துடன் புதிய வணிக முகாமைத்துவம் போன்ற முறையையும் அறிமுகப்படுத்தினர்.

நாமும் நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய நல்ல முறைகளையும் தீர்மானித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். முகாமைத்துவ வணிக நீதிமுறையில் விரைவுபடுத்தும் செலவு, நீதிபதிகள் பணியாற்ற வேண்டிய நேரம் நீதிமுறையில் நடுவு நிலை சமத்துவம் ஆகியன இணைய வேண்டும்.

இருவருடங்களின் முன்னர் நான் அமைச்சருக்குக் குறிப் பிட்ட விஷயத்தை மீண்டும் கவனத்தில் கொண்டு வர விரும்புகிறேன். அது விசாரணையின்றி தடுத்து வைத்தல் விஷயமாகும். நெடுங்காலமாக அவசரகால நிலையை நீடித்து வருகிறோம். அதனால் பயங்கரவாத தடுப்பு சட்டம், அவசர கால சட்டம் காட்டும் விசேட ஆதிக்கம் தொடர்ந்து தடுத்து வைக்க உதவுகிறது. அமைச்சர் நீதிபதி அன்ரன் சோஷா தலைமையில் கமிட்டி அமைத்திருந்தார். இக்கமிட்டியின் சிபாரிசில் பல தடுத்து வைக்கப்பட்டவர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் அதன் பின்னர் நிலமை மோசமடையத் தொடங்கியது. தடுப்பில் இருந்தவரிடை விரக்தி ஏற்பட்டது. இவர்கள் நீதி நிர்வாகத்தில் மறக்கப்பட்ட மக்களாயினர். ஐந்து ஆண்டுகள் வரை விசாரணையோ, வழக்கோ பதிவு செய்யப்படவில்லை. இப்போக்கு குரூரமானது, மனிதாபிமான மற்றது. பட்டினிப் போருக்கு வழிவகுத்தது. நீதி விசாரணையற்ற சிறை சர்வதேச மனித உரிமைகளின் தராதரத்திற்கு முரணானது. கழுத்துறை, மகசீன், அண்மையில் மட்டக்களப்பு சிறைகளில் உண்ணாவிர தம் நடைபெற்றது. சட்டமா அதிபர் சரத் சில்வா தன் திணைக்களத்தில் தனி யூனிட் அமைத்து முறைப்படியாக இப்பிரச்சனையை கவனிக்க நடவடிக்கை எடுத்தார். களுத்து றையில் 197 நபர்கள் தடுப்புக் காவலில் உள்ளனர். இந்த முகாமில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. 16 பேர் தவிர மற்றவர்களுக்கு விசாரணை முடிந்தது. மகசீன் சிறையில் 18 பெண்கள் உட்பட ஏராளமானவர் மேல் வழக்குப் பதியப்பட வில்லை. உயர்நீதிமன்றத்தில் 200 வழக்குகள் தேங்கியிருந்தன. இவ்வழக்குகளை நடைமுறைப்படுத்துவதில் அதிக தாமதம் ஏற்பட்டது. இவற்றுக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண் டும். ஒரு வாய்ப்பு தனி நீதிமன்றம் அமைத்து இவ்வழக்கு களை விரைவுபடுத்துவதாகும். மூன்றாவது பிரச்சனை பலர் சட்டத்தரணி நாயகத்தால் விடுதலைக்கு சிபாரிசு செய்யப்பட்ட

வர். பாதுகாப்பு அமைச்சால் அனுமதி பெறத் தாமதிக்கப்படுவ தாகும். இங்கும் நீதி அமைச்சுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையில் கமிட்டி நிறுவி இந்த அதிகார மூடிகளிலிருந்து விடுதலை பெறுவதாகும். நாலாவது பிரச்சனை தடுப்பில் உள்ளவர் குடும்பத்த வரைப் பார்த்தல். வடகிழக்கிலிருந்து நீண்ட தூரம் பயணம் செய்ய நேரிடுவதும் பண வசதியின்மை யும்; தடுப்பிலுள்ளவரின் மற்றைய விரக்தி அடிப்படை வசதிகளான சோப்பு, பற்பசை பெறுவதாகும். இலங்கையின் மனித உரிமை கள்குழுவும் சிவில் உரிமை இயக்கமும் கவனம் செலுத்தி கவலைப்படுவது இரு இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களும், அவர்களின் நிலைமைகள் பற்றியதுமாகும். அவசர கால நிலை விதிகளின்படி உத்தியோக பூர்வமான தடுப்பு முகாம்களாகும். அந்தப் பட்டியல் அரசாங்க கசெட்டில் வெளியிடப்படவேண்டும். ஆயினும் சிவில் உரிமை இயக்கம் அவசர கால விதிகளை கவனிப்பதில்லை என கவலை தெரிவிக்கின்றனர். அவசர கால விதிகள், பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்படுப வர்களுக்கு உரிய ஆகக்குறைந்த கட்டுப்பாடுகளுக்குச் சட்டரீதி யான அறிவித்தல் தேவை என அழுத்திக் கூறப்படுகிறது. மனித உரிமைகள் விசேட படையும் புதிய தேசிய மனித உரிமைகள் விசேட படையும் புதிய தேசிய மனித உரிமைகள் ஆணையாளரும் தடுத்து வைப்போரின் நலன் பற்றி பார்வை யிட உரிமை உள்ளவர். ஆகக் குறைந்த தராதரம் சட்டரீதியாக வெளியிடப்படுவது அவசியம்.

மற்றைய பிரச்சனை காணாமல் போவோர் பற்றியதும் வடக்கே ஆயுதப் படையினரின் தவறான நடவடிக்கை பற்றிய குற்றச் சாட்டுமாகும். மேலும் பல பிரச்சனையான சம்பவங்கள் காரணமாக அமைச்சரே அறிக்கை விட்டிருந்தார். அண்மையில் மனித உரிமை சிறப்புப் படையினர் யாழ்ப்பாணம் சென்றிருந் தனர். 500 பேர் காணாமல் போயினர் என பட்டியல் கொடுத்தனர். அங்குள்ள உத்தியோகத்தரின் உதவியுடனேயே பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்தப் பட்டியலில் கூறப்பட்ட வரில் உண்மையில் 20 பேர் மட்டுமே தேடிக் காணப்பட்டனர். இந்த விஷயம் பற்றி சிரத்தையுடன் அமைச்சர் கவனமெடுக்க வேண்டும் எனவே வேண்டுகிறேன். காணாமல் போவோர்

பற்றிய ஐ.நா.செயலாற்றல் குழுவின் அறிக்கை இலங்கை பற்றி மோசமாகவே கூறுகிறது. 1991ல் ஆவணப்படுத்தப் பட்டபடி 54 நாடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட போது இலங்கையில் அதிக எண்ணிக்கையானவர் காணாமல் போனதாக கூறப்பட் டுள்ளது. இது சிவில் சுதந்திரத்தையும் எல்லா இலங்கை மக்களின் வாழ்வுரிமையையும் பாதிக்கும் விஷயமாகும். காணாமல் போவோர் பற்றி விசாரணை செய்ய அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய நபர்கள் பற்றியும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சட்ட வரைவுத் திணைக்களத்திடம் புதிய மசோதாவிற் கும் துணை மசோதாவிற்கும் ஏராளமான கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்த மசோதா மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டும். சம்பளமும் சேவையின் கட்டுப்பாடு களும் கவர்ச்சியாக இல்லாததால் திணைக்களத் தகுதியும் அனுபவமும் மிக்க சட்ட வரைவினரை இழக்க நேரிடும். இப்போக்கு தடுக்கப்படாவிடின் திணைக்களமே மூட நேரி டும்; நீதிபதிகள் பயிற்சி நிறுவனம் மிகவும் முக்கிய நிறுவன மாகும். அதன் இயக்குநருக்கு போதிய நிதி வாய்ப்புகளும் தொழில் நுட்ப ஆதரவும் அளித்து நீதி உத்தியோகத்தரை பயிற்றும் விரிவான திட்டத்தில் உதவ வேண்டும்.

வவுனியாவில் உயர்நீதிமன்றம் நிறுவப்படுவதோடு தொழிலாளர் நீதிமன்றம் வடக்கே பணியாற்ற ஏற்பாடு செய்தல் வேண்டும். நீதி நிர்வாக அரசாங்க மொழிக் கொள்கை தக்கபடி நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழில் வழக்காடுப வர் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கஷ்டப்படுகின்றனர்.

# அவசரகால நிலை பற்றிய விவாதம்

## மார்ச் 6, 1997.

சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு அவசர கால நிலை பற்றிய விவாதமும் எமது கலவரமான வரலாற்றின் தொடர்ந்த துன்பியல் சக்கரமாக, கவலை மிகுந்த நிலையாக உள்ளது. கடந்த மாதம் இனப் பிரச்சனையால் பல உயிர்களை இழந்த நிலையில் குரூரமாக இருந்தது. இளமையும் முற்போக் கெண்ணமும் கொண்ட நாடாளுமன்றத்தவரான நந்தா எல்ல வலவின் மரணம் எமக்கு அதிர்ச்சியைத் தந்தது. துயர் ஆறாத தாயார், நெருங்கிய உறவினர், இரத்தினபுரி மக்கள் யாவரது துன்பத்தையும் எங்கள் கட்சியும் பகிர்ந்து கொள்கிறது. இரத்தி னபுரி மக்களுடன் நாலந்தாவிற்கு சிறப்பான கடப்பாடுள்ளது. அத்துடன் நேர்மையான தேர்தல்கள் அமைதியாக நடைபெறுவ தையும் அரசியல் வன்முறைச் சம்பவங்கள் கவலை தருகின் றன. அரசியல் கட்சிகள் ஜனநாயக மதிப்புகள், நடைமுறைகள் தொடர்ச்சிகளை உறுதிப்படுத்துவது ஆறுதல் தருகிறது. ஆனால் அழகான வார்த்தைகளில்லாது செயல் நடவடிக்கைக ளில் நம்பிக்கை வைப்பதையே உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும் பிற துன்ப நிகழ்வுகளும் அதே போன்று கவலை தருகின்றன. இரு தோணி அவலங்களும் 200 வரையான உயிர்களைப் பறித்துள்ளன. முதலாவது கிறீசிலிருந்து இத்தா லிக்கு செல்லும் கப்பல் நீரில் தாண்டது. ஏறக்குறைய 80 இலங்கையர் நீரில் அமுங்கினர். கமரோனில் நடைபெற்ற விமான விபத்து 9 பேரைக் கொன்றது. இதே போன்ற துன்பம் மன்னார் கடற்கரையில் நடந்தது. தற்போதைய நெருக்கடியால் இடம் பெயர்ந்தவர் இந்தியாவிற்குச் செல்லும் வேளை தோணிக்காரனின் கவலையீனத்தால் தோணி புரண்டு 70 பேர் வரை மரிக்க நேரிட்டது. இலங்கை மனித உரிமை அறிக்கை

யின்படி 6000 அகதிகள் யுத்த நெருக்கடி இடங்களை விட்டு தென் இந்திய தமிழ் நாட்டிற்கு ஓடியுள்ளனர். இந்நாடாளுமன் றம் வடகிழக்கில் இராணுவ நடவடிக்கையை பலப்படுத்திய தால் அதிர்ஷ்டமற்ற மக்கள் அதிர்ச்சி, ஆத்திரமுற்று குரூர விதியை தரிசிக்க நேர்ந்தது.

இம்மன்றத்தில் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பற்றி 5 மாதங்களின் முன்னர் நான் பேசியிருந்தேன். இவர்கள் அகதி முகாம்களிலும் வவுனியாவி லுள்ள ஆதரவு மையங்களிலும் உள்ளனர். நாங்கள் பல மனிதாபிமான பிரச்சனைகள் சார்பாகவும் முகாம்களின் நிலைமை பற்றியும் கூறியுள்ளோம். அவர்களது இடம்பெ யர்வு, சுதந்திர நடமாட்டத்துக்குள்ள கட்டுப்பாடுகள் பற்றியும் பேசியுள்ளோம். நாடாளுமன்றப் பிரதிநிதிகள் வவுனியாவி லுள்ள இம் முகாம்களுக்குச் சென்று இம்மக்கள் படும் கஷ்டங்கள், விரக்திகள் பற்றிப் பார்வையிட்டோம். மக்கள் படும் துன்பங்களை நீக்க நடைமுறைச் சாத்தியமான நடவ டிக்கை எடுக்கும்படி ஜனாதிபதியின் செயலர் நடத்திய கூட்டத் தில் நாடாளுமன்ற அங்கத்தவரும் உத்தியோகத்தரும் எடுத்துக் கூறினோம். அங்கு 2000 மக்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற் காக திருகோணமலைக்குப் புறப்பட்டு கப்பல் எடுக்க தயாராக உள்ளனர். இம்மக்களை ஏற்றி இறக்க மேலதிக கப்பல்களை ஏற்பாடு செய்வதைத் துரிதப்படுத்துவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் உள்ளார். 17.2.97 வீரகேசரியில் இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய அறிக்கையின்படி 9000 பேர் திருகோணமலையில் ஆதரவற்ற நிலையில் அங்கு உள்ளனர் எனக் கூறுகிறது. இரண்டாவது தரமாக மக்கள் வவுனியாவில் தமக்கு உறவினர் உள்ளதாக முகாமை விட்டு வெளியேற வேண்டுகின்றனர். இவ்வேண்டுகோளை ஏற்கும்படி நாங்கள் பரிந்துரைக்கிறோம். இம் முகாம்களில் இலஞ்ச ஊழல் நடவடிக்கைகள் நடப்பதாக பல முறைப்பாடுகளும் வந்துள் ளன. உத்தியோகத்தர் தமது அதிகாரத்தை, முகாம்களில் ஆட்களைத் தேர்வதில், துர்ப்பிரயோகம் செய்கின்றனர். இச்சட்

டத்தின் பின்னர் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறோம். இரண்டு வாரத்தில் நிலமையைச் சீர் செய்யும்படியான தீர்மானம் எடுக்கின்றோம். ஆனால் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. நாலு அங்கத்தவர் கொண்ட உத்தியோகத்தர் கமிட்டி இத்தேவைகளையும் பிரச்சனைகளையும் கவனிக்க நியமித்திருப்பதாக அறிகிறோம். வவுனியா பற்றி 1996ன் அறிக்கை பின்வரும் கூற்றைக் கொண்டது. பாதுகாப்பு பரிசீலனைக்காக வவுனியாவில் 10,000 பேர் மிக மோசமான சூழலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் ஏராளமானவர் அடிக்கடி காணாமல் போகின்றனர் என்பது பற்றிய கவலையையும் நாம் அடிக்கடி எழுப்பியுள்ளோம். அரசாங்க திணைக்களத்தின் இலங்கை அறிக்கை கூறுவது: ‘பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பிலிருந்து காணாமல் போவோர் தொகை வியப்பளிக்கக் கூடியளவு அதிகரித்துள்ளது. குறிப்பாக பெரும்பாலோர் கிழக்கிலும் வடக்கிலும் சிலர் கொழும்பிலும் விடுதலைப் புலிகள் சார்ந்தவர் என்று சந்தேகிக்கப்பட்டவராவர்: ஆறுமாதத்தில் யாழ்ப்பாணக்குடா நாட்டிலிருந்து 300 நபர்களும் 50க்கு மேலே நாடு முழுவதிலுமிருந்து உள்ளனர் என்றும் கூறப்பட்டது. சரியான எண்ணிக்கையை பாதுகாப்புப் படையினரின் செய்தித் தணிக்கையால் கூற முடியாதுள்ளது. மேலும் வடக்கு, கிழக்குடன் தொடர்பில்லாததும் ஒரு காரணமாகும். மனித உரிமைகள் சிறப்புப் படையின் அறிக்கைகளின்படி 500 பேர் வரை காணாமல் போனதாக முறைப்பாடுகள் வந்துள்ளன. அரசு இவற்றைப் பற்றி எடுக்கும் நடவடிக்கைகள் பயனற்றதாகவும் பலவினமானதாகவும் உள்ளது. நவம்பர் முதல் வாரத்தில் மனித உரிமை சிறப்புப் படையின் தலைவர் யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்று திறப்பதாக அரசு அறிவித்தது. இன்றைவரை அச்சிறப்புப் படைக்கு வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை. இத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இப்படையின் எதிர்க்காலம் உறுதியற்றது. தேசிய மனித உரிமைகள் ஆணையாளர் அமைப்பு

ஏற்படுத்துவதும் தாமதமாகிறது. நவெம்பரில், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு உத்தியோகத்தர், பாதுகாப்பு உத்தியோகத்தர் சேர்ந்த விசாரணைக் குழுவை அமைத்தது. சிவில் உரிமை குழுக்கள் வேண்டிய விசாரணை முறை இதுவல்ல. நான்கு மாதங்கள் கடந்தும் காணாமல் போவோருக்கு காரணமானவர் பற்றி இனங்காணும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அக்டோபர் 1995ல் நடைபெற்ற சட்டமுறையற்ற கொலைகள் காரணமாக, பாதுகாப்புப் படைசார்ந்த சக அங்கத்தவர் கைது செய்யப்பட்டு அவசர கால சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் 23 தமிழ் இளைஞர்களின் சடலங்கள் பொலோகட ஏரியில் காணப்பட்டதைத் தொடர்ந்த சந்தேகத்தில் கைதானவர் 1996ம் ஆண்டின் அரசு திணைக்கள அறிக்கை: ''சந்தேகத்துக்குரியவர் பிணையில் விடப்பட்டு பிப்ரவரியிலிருந்து பொலிஸ் பணிக்கு திரும்பியுள்ளனர்.'' பாதுகாப்பு அமைச்சு இந்த நபர்கள், கொலைகாரர் என சந்தேகப்பட்டவர், பொலிஸ் பணிக்கு திரும்பியுள்ளனரா என்பதை தெளிவாக்க வேண்டும்.

# அவசர கால நிலை பற்றிய - விவாதம்

## ஜுன் 5, 1997.

இந்த அரசு அமைந்த நாளில் இருந்து தேசியம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நடிவடிக்கைக ளுக்கு தமிழர் ஐக்கிய முன்னணியினரின் ஆதரவு அளித்து வருகிறது. ஆனால் அதே நேரத்தில் அவசர நிலை பிரகடனத் தின் போது உறுதியாக விலகி நின்றதுடன் அதை நீடிக்க தீர்மானம் கொண்டு வந்த போது எதிர்த்து வாக்களித்தது. அவசர நிலை அதிகாரத்தின் மூலம் செய்யப்பட்ட தன்னிச்சை யான கைது, சிறையில் அடைத்தல், தவறான முறையில் சோதனை நடத்துதல், படுகொலைகள் ஆகியவை குறித்து பல்லாண்டுகளாக எங்கள் கவலையைத் தெரிவித்து வந்திருக்கி றோம். ராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்ட போதும், தீவிரப்படுத்தப்பட்ட போதும் எங்கள் கவலைகள் மேலும் அதிகரித்தன. இந்த வகையில் வடமாகாணத்தில் நடைபெறும் ஆபரேசன் ஜெயிக்கிறது, அமைதியான தீர்வை விரும்பும் அனைவருக்கும் எச்சரிக்கையையும் கவலையும் கட்டாயம் அளிக்கிறது. 1997, மே 15ம் தேதி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் துணைத்தலைவர் ஆனந்த சங்கரி வெளியிட்ட அறிக்கையில், வன்னிப் பகுதியில் நடைபெற்று வரும் தாக்கு தல் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் குறித்து அதிர்ச்சியை யும் சங்கடத்தையும் வெளிப்படுத்தினார். வவுனியா பகுதியில் திடீரென இடம் பெயர்ந்த மக்கள் நுழைந்ததால் ஏற்கெனவே உள்ள பிரச்சினை அதிகரித்து அப்பகுதியில் உள்ள மனித நெருக்கடியுடன் சேர்ந்து கொண்டது.

இராணுவ நடவடிக்கை, தீவிரமான குண்டு வீச்சு, முப்ப டைகளின் தாக்குதல், இதன் விளைவாக மக்களின் வசிப்பிடங் களுக்கும் வாழ்க்கைக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் எங்கள் கவலையை வெளிப்படுத்தினோம்.

இந்த விஷயத்தில் மன்னாரில் உள்ள ஒருங்கிணைப்பு அதிகாரி, அரசு கட்டுப்பாட்டில் இல்லாத உணவு மற்றும் பிற சாமான்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதை ரத்து செய்தது குறித்தும் எங்கள் தனிப்பட்ட கவலையை தெரிவித் தோம். 1997 மே மாதம் எடுக்கப்பட்ட முடிவின்படி, தங்களு டைய தினசரி ரேஷனை பெறுவதற்கு மதுசாலை சந்திப்புக்கு மக்கள் செல்ல வேண்டும் - 18,949 உறுப்பினர்களைக் கொண்ட 19,195 குடும்பங்கள் இந்த அனுமதி இல்லாத பகுதிகளில் வசிக்கிறார்கள். இவர்களில் பலர், மது சாலையில் இருந்து 46 கி.மீ மற்றும் 52 கி.மீ. தொலைவில் வசிக்கிறார்கள். மதுசாலைக்குச் சென்று ரேஷன் பெற வேண்டும் என்ற முடிவின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடிபற்றி மன்னார் பிஷப் தன்னுடைய அறிக்கையில் விளங்கியுள்ளார். அரசு மற்றும் எம்பிசி ஸ்டோர்கள் காலியாக உள்ளன என்று அவர் தெரிவிக்கி றார். ''தனியார் கடையில் உணவுப் பொருள்கள் இல்லை. 15வது ஆண்டு யுத்த காலத்தில் அப்பாவி மக்கள், குறிப்பாக குழந்தைகள், முதியோர், நோயுற்றோர் பட்ட துன்பங்கள் குறித்து வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது'' பெரு நிலப்பரப் புக்கு மே 28-ம் தேதி சென்று வந்தபிறகு இந்த அறிக்கையை பிஷப் வெளியிட்டார். அன்று முதல் மதுவுக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் பணியை ஜிஏ வவுனியா, ஜிஏ மன்னார் ஆகியவை செய்துள்ளன. கடந்த காலத்தில் 17,000 குடும்பங்கள் உலர் ரேஷன் பெற்று வந்தாலும் 5 ஆயிரம் மக்களுக்கு மட்டுமே ரேஷன் வழங்குவது என்று மறுவாழ்வு அமைச்சகம் முடிவெடுத்துள்ளது. மீதமுள்ள குடும்பங்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்காது. மன்னாரில் உள்ள இடம் மாறும் முகாம்களில் உள்ள நெருக்கடி காரணமாக தங்கும் இடம் மிகப்பெரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது. உணவுக் காக வயதானவர்களுக்கு ரூ.25-ம், குழந்தைகளுக்கு ரூ.15-ம் ஒதுக்கப்படுகிறது. வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒதுக் கீட்டை விட குறைவான இத்தொகை மக்களுக்கு உணவளிக்க போதுமானதாக இல்லை.

1997, மே 22-ம் தேதிப்படி 55,000 உறுப்பினர்களைக் கொண்ட 13,738 குடும்பங்கள் ஓமந்தை புளியங்குளம், நெடுங் கேணிப் பகுதியில் இருந்து புலம் பெயர்ந்துள்ளன. இவற்றில் 5099 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 8139 குடும் பங்கள் அனுமதி இல்லாத வவுனியா மாவட்டங்களிலும் உள்ளன.

போதிய லொரிகளும் பேருந்துகளும் இல்லாமையால், அனுமதி இல்லாத பகுதிகளில் இருந்து வருபவர்களை சோத னைச் சாவடியில் இருந்து முகாம்களுக்கு அழைத்துச் செல்வ தில் அதிகாரிகளுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. வன்னிப் பகுதியில் உள்ளாகவே இடம் பெயர்ந்துள்ள அகதிகள் குறித்த அமெரிக்க அறிக்கையை இங்கே விளக்க வேண்டும். முதலாவ தாக, பொது மக்களுக்குப் பாதகத்தை விளைவிக்கும் இராணுவ நடவடிக்கைகளை இரு தரப்பினரும் விலக்கிக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, வன்னியில் உள்ள இடம் பெயர்ந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவுப் பங்கீட்டை இலங்கை அரசு வழங்க வேண்டும். இவர்களுக்கு உதவ அரசால் முடியவில்லையெனில் சர்வதேச சமுதாயத்தை அப்பணியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும். உணவுவகைத் தவிர, அதிக அளவில் மருந்துகள், புகலிடங்க ளுக்கான பொருள்கள், குடிநீர், சிறந்த சுகாதார வசதிகள், படிப்புக்கான புத்தகங்கள் மற்றும் இதர பொருள்கள் வழங்கப் பட வேண்டும். இந்த நோக்கத்துக்காக சர்வதேச அமைப்புகள் மற்றும் அரசு சார நிறுவனங்களின் உதவியையும் பெற்றாக உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை வழங்க இந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வன்னிக்கு இலகுவாகச் சென்று வர அரசும், இராணுவமும் அனுமதிக்க வேண்டும். மனிதாபி மான பிரச்சினைகள், அதிகரித்து வரும் ராணுவ நடவடிக்கை யில் பொதுமக்கள் மாட்டிக் கொள்ளுதல் ஆகியவற்றுடன் அம்பாரை மாவட்டம் தொடர்புடைய மனித உரிமைப் பிரச்சினைகளையும் நான் எழுப்ப வேண்டியது அவசியம்.

1997, மே 17-ம் தேதி நடைபெற்ற சம்பவத்தில் அவரை நான்கு பொலிசார் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் பதிலுக்கு அவர் வாக்குவாதம் செய்ததாகவும் கூறப்படுகிறது. அன்றிரவு 11 மணிக்கு குற்றவாளிகள் அவரது வீட்டில் நுழைந்திருக்கிறார்கள். 11.30 மணிக்கு அவருடைய அடிவயிற்றில் கைக்குண்டு வீசப்பட்டதால் இறந்தார். இதற்கு ஒரே சாட்சி அவருடைய 4 வயது மகன் சிதைந்து போன அவருடைய சடலம் கல்முனை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டது. கல்முனையில் உள்ள ஒட்டுமொத்த சமூகமும் இதனால் ஆழ்ந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இது குறித்து உடனடியாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆணையம், குற்றம் புரிந்தவர்களை அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இறுதியாக, அகதிகள் பற்றிய அமெரிக்க குழு அறிக்கையை இங்கே மேற்கோள் காட்டுகிறேன். ''பிரச்சினைக்கான அடிப்படை காரணங்களை ஆராய்வதுடன் அரசியல் தீர்வு காண யதார்த்தமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.'' பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் இலங்கையில் அமைதி ஏற்படாது; சகஜநிலை திரும்பாது, மக்கள் இடம்பெயர்வது முடிவுக்கு வராது.

## அவசர கால நிலை பற்றிய - விவாதம்

### ஆகஸ்டு 7, 1997.

மதிப்புக்குரிய எதிர்கட்சித் தலைவர் விவாதத்தின்போது அவசர கால நிலை அதிகாரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு காரணம் காட்டாத கைது பற்றி சில முக்கிய விஷயங்களைக் கூறினார். அவசர கால விதிகளும் ஜனாதிபதியின் நடவடிக்கை களும் மனிதாபிமான பாதுகாப்புகளை வழங்க முக்கிய வழிகாட்டலைத் தந்துதவியது. ஆனால் இப்பாதுகாப்புகள் தொடர்ந்து மீறப்பட்டன. விஜயன் விமலேந்திரனது உச்சநீதி மன்றத் தீர்ப்பில் நீதிபதி அமர சிங்கா 20 டிசம்பர் 1996ல் பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தல், தடுத்து வைத்தல் சார்பாக பல முக்கிய கொள்கைகள் பற்றி நீதி வழங்கினார். இத்தீர்ப்பில் நீதிமன்றம் ஒரு நபரை சில ஆதாரங்கள் பின்னர் கிடைக்கும் என்ற சந்தேகத்தில் தடை நிலையத்தில் கைது செய்வது சட்டத்தை மீறும் நடவடிக்கை என்று கூறினார். அத்தீர்ப்பு தெளிவாகக் கூறுவது யாதெனில் குற்றம் செய்யும் வேளை நபர் கைது செய்யப்பட வேண்டும் அல்லது குறிப்பிட்ட குற்றத்தோடு சம்பந்தப்பட்டவராக நியாய மான காரணங்கள் இருக்க வேண்டும். இரண்டாவதாக, தடுப்பு நடவடிக்கைகள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட தரப்படுத்தப் பட்ட பத்திரத்தில் வழங்கப்படுகிறது; உண்மையோ, பொய்யோ, தகவல் பொருத்தமானதோ அல்லவோ வழக்க மான முறைபோல அங்கு பத்திரத்தில் குறிப்பிடுகிறது. மூன்றாவதாக, பாதுகாப்பு அமைச்சுச் செயலர் தனிப்பட்ட தன் நீதியான தீர்ப்பின்படி தடுப்பு அறிவித்தல் வழங்கப்பட வேண்டும் என்பதில் தீர்க்கமாக இருக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சுச் செயலர் பொலிசாரின் கருத்துகளை அப்படியே 'ரப்பர் ஸ்டாம்ப்' போல ஏற்றுக் கொள்ளக் கூடாது. நாலாவ தாக, விதி17ன் கீழ் கைது செய்யப்படும் நபர் அல்லது 18ன்

கீழாயினும் சரி கைது செய்வதற்கு அல்லது தடுப்பில் வைப்பதற்கோ சம்பந்தமான ஆதாரங்கள் விபரங்கள் பெற உரிமைகள் உள்ளவர்: இவற்றுடன் மனித உரிமைகள் படையி னருக்கு (தற்போது ஆணையாளர்) 24 மணி நேரத்தில் அறிவித்து உரிய உத்தியோகத்தரிட மிருந்து பற்றுச்சீட்டுப் பெற வேண்டும். மேலும் தடுப்பு முகாமிலுள்ள பொறுப்பதிகாரி நீதிபதியிடம் தடுப்பிலுள்ளவர் பட்டியலை வழங்க வேண்டும். சட்டமா அதிபரும் பொலிஸ் அதிபரும் நீதியின் சுருக்கத்தை யும் எல்லாப் பொறுப்புள்ள பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தடுத்து வைக்க நேரும் முறைப்பாடுகளையும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

நடேசன் மையம் அண்மைய அறிக்கையில் சொத்துக ளைப் பறித்தெடுக்கும் அவசர கால விதிகள் பற்றி குறிப்பிட் டுள்ளது. நீதிமன்ற சட்டமின்றி பொலிஸ் மா அதிபர் சொத்துகளை பறித்தெடுப்பதை தீர்மானிக்கலாம் என்பது குழப்பம் தருகிறது. அவசர கால சட்டங்கள் முரண்பாடுகளு டன் உறுதியற்றவை யாகவும் உள்ளன. இவ்விதிகளை அணுகு வது கஷ்டமானது. உத்தியோக பூர்வமாக ஒழுங்காக எண் ணிக்கை இடுவது, பட்டியலிருந்து அல்லது சுட்டு அமைப்ப தில்லை; மதிப்புக்குரிய நாடாளுமன்றத் தலைவர் எதிர்கட்சித் தலைவர் சட்ட பூர்வமாக நாடாளுமன்ற கட்டுப்பாடுகள் பற்றி உறுதிப்படுத்த வேண்டும். தடுக்க முடியாத தொடர்ந்த மனிதத் துயர்கள், ஏற்க முடியாத மரணங்கள், ஆயுதப் போராட்டத்தை மேலும் உயர்த்துவது ஆகியன நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆழ்ந்த கவலையை நடைபெற்ற விவாதங்களில் தெளிவாக அறிய முடிந்தது. இன அமைதி ஏற்படுத்துவதில் அவ நம்பிக்கையும் சந்தேகமும் மன நிலையில் ஏற்பட்டு தேசிய பாதுகாப்பு அரசாக வளர்ச்சியடைவதைக் கண்டு நாம் கவலை யும் அதிர்ச்சியும் அடைகிறோம். போர் முறைகள், அதனால் ஏற்படும் மோசமான நிலைமைகளும் மீளாயப்பட்டு இத்த கைய பொறியிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளல் வேண்டும். போரும் நம்பிக்கையின்மையும் தவிர்த்து நம்பிக்கை ஏற்படுத்து

வதற்கு தென் ஆப்பிரிக்கா, வட அயர்லாந்து போல நாமும் சூழலை ஏற்படுத்தல் வேண்டும். இரு பகுதிகளும் முரண்பாடு கள் நீங்கி தன்நம்பிக்கை கொள்ளல் வேண்டும். இம்மாதம் கொடூரமாக, குரூர துன்பகரமாக எமது குழு சார்ந்த இருவர் கொல்லப்பட்டனர். எமது நிறுவனங்கள், அரசியல் சமூக அமைப்புகள் ஒரு மதிப்பில் ஒழுக்க நெறியாக அமைந்துள்ளன. அதுவே மனித வாழ்க்கையின் புனிதம். எதிர்காலத்தில் நாம் பெருமைப்படக்கூடிய சமூகத்தை மீளமைக்க இந்த மதிப்புக் குக் கௌரவமளிக்க வேண்டும்.

# நாடாளுமன்ற ஆதிக்கமும் சிறப்புரிமைகளும் (திருத்த மசோதா)

## செப்டம்பர் 11, 1997.

ஆங்கிலேய சட்டம் சிறப்புரிமை மீறலுக்கும் அவமதிப்புச் செயல்களுக்குமிடையில் வேறுபாட்டை நடைமுறைப்படுத்தி வந்தது. சிறப்புரிமை மீறல் என்பது மன்றத்தின் குறிப்பிட்ட உரிமைகளை மறுத்தல்; அவமதிப்பு என்பது மன்றத்தில் ஆதிக்கம் அல்லது மதிப்புக்கு எதிராக குற்றமிளைத்தலாகும். கொலின் மன்ரோ குறிப்பிட்டார்: 'சிறப்புரிமையின் அடிப்படைத் தேவை நாடாளுமன்றத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது' ஆச்சயின் மே நாடாளுமன்ற சிறப்புரிமைக்கு வரைவிலக்கணம் கூறும்போது: 'மன்றம் கூட்டாக அனுபவிக்கும் அரசியல் உரிமைகள் நாடாளுமன்ற உயர்நீதி மன்றத்தின் அமைப்பின் பகுதி என்றார். இது இன்றி அவர்கள் பணி ஆற்ற முடியாது. மன்றம் பரந்த சிறப்புரிமைகளை விரிவாக்கும் போது, அவமதிப்புத் தராதரங்கள் மூடப்படவில்லை. ஆகவே நாடாளுமன்ற நடைமுறையில் சிறப்புரிமை மீறலுக்கும் அவமதிப்புக்குமிடையிலுள்ள வேறுபாடு மங்கலாகிவிடுகிறது. இலங்கையின் சட்டத்திலும் வேறுபாடு தெளிவாக பேணப்படவில்லை. பட்டியல் 'B' சாதாரணமாக அவமதிப்புப் பற்றிக் கூறும் போது பட்டியல் 'A' சாதாரணமாக சிறப்புரிமை விஷயங்களைக் கூறும். ஆனால் இரண்டுக்கும் இடையில் மங்கலான கோடே உண்டு. அவமதிப்பு பிரேரணையும் நாடாளுமன்ற அங்கத்தவருக்கு எதிராக இலஞ்ச ஊழலும் வெளியிடப்படும்போது இவை உறுதியான அவமதிப்பாகிறது, இவை சிறப்புரிமை என 'A' பகுதி பந்தி9, 10ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நாடாளுமன்ற ஆதிக்கம் சிறப்புரிமை சட்டம் 1953 ஐ திருத்தும் மசோதா முக்கியமான சட்ட நடவடிக்கையாகும்.

இதன் உடன்பாதிப்பு 1978 திருத்தத்தை மீளப்பெறுவதாகும். இது நாடாளுமன்ற ஆதிக்கத்தில் உச்சநீதிமன்ற உடன்பாட்டுடன் தெண்டமிட்டு தண்டிக்கப்படலாம். இத்திருத்தம் முக்கிய சட்டம் போலல்லாது மக்கள் வேண்டுதலுக்காக அவசரமாக கொண்டு வரப்பட்டது. இச்சட்டம், நாடாளுமன்றம் நீதிமன்ற ஆதிக்கம் கொண்டது எனக் கூறப்பட்டது: 'ஒப்சேவர்' பத்திரிகையில் தவறான தலைப்பு இடப்பட்டது என திரு ஏ.சி.எஸ். கமீட் கூறிய முறைப்பாட்டை ஒட்டி கொண்டு வரப்பட்டது. இச் செயல் அரசியின் கவுன்சிலரான எஸ். நடேசனால் கண்டிக்கப்பட்டது; 'சன்' பத்திரிகையில் 4 பகுதியாக கட்டுரையாக வெளிவந்தது. அவர் மீதே உச்சநீதிமன்றத்தில் சிறப்புரிமை மீறலுக்காக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நாட்டு நாடாளுமன்ற சிறப்புரிமையின் வரலாற்றை திரு. நடேசன் கியூசி அவர்கள் திறமையாக எழுதியுள்ளார். 1953 நாடாளுமன்ற ஆற்றல், சிறப்புரிமைச் சட்டம் அனைத்து கட்சிகளின் அனுமதியுடன் மிக்க கவனமாக ஆக்கப்பட்ட சட்டமாகும். செனட்டின் இணை தேர்வு கமிட்டியும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் உறுதியாக, ஒருமித்து அறிக்கையை நிறைவேற்றினர். இந்த அறிக்கை அமைச்சரவையால் ஏற்கப்பட்டு மசோதா, மன்றத்திலும் செனட் சபையிலும் ஒரே முகமாக நிறைவேற்றப்பட்டது. இது அரசியலிலும் ஒரே முகமான குறிப்பிடத்தக்க உதாரணமாகும். தேசிய இனப் பிரச்சனையின் இன்றைய நிலைப் போராட்டத்தை நாங்கள் ஒரு முகமாகத் தீர்க்க முடியும்.

இலங்கையிலுள்ள சிவில் உரிமைக் குழுக்கள் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் தமது பேச்சு, எழுத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடாது என்பதில் கவனமாக உள்ளனர். ஆர்.கே. டபிள்யு குணசேகரா தலைமை தாங்கும் ஊடக கமிட்டி ''பத்திரிகையாளரும் மற்றவர்களும் நாடாளுமன்றத்திற்கு அடிக்கடி சிறப்புரிமையை மீறியதாக அழைக்கப்படுவதற்கு எதிர்ப்பாக 'நாடாளுமன்றம் தன்போக்கில் நீதிபதியாக மாறிக் கொள்வது முறையல்ல' எனக் குறிப்பிட்டது.

சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் கூறுவது,

> ''...குற்றம் சுமத்துவதை தீர்மானிக்கும் வேளை அல்லது சட்டத்தின் உரிமைகளும் தேவைகளும், ஒவ்வொருவரும் தகுதி வாய்ந்த, சுதந்திரமான சட்டங்களால் நிறுவப்பட்ட நடுநிலையான நீதிமன்றத்திற்கு, நீதியானதுமாக பொதுமக்கள் கேட்கவும் உரிமையுடையவர்.''

நாடாளுமன்றம் சிறப்புரிமை மீறப்பட்டதான முறைப்பாடு பற்றிய விசாரணை. 'சுதந்திரமான நடுநிலையான நீதிமன்றம்' என்பது திருப்தி தராது. ஊடக கமிட்டி சிறப்புரிமையில் பலவிஷயத்தில் திருத்தம் வேண்டும் என கேட்டுள்ளது. முதலாவதாக 1980ன் திருத்தம் புதிய குற்றத்தைக் கூறுகிறது: சபாநாயகர் 'கன்சாட்'டியிருந்து நீக்கும்படி கூறிய வார்த்தை அல்லது அறிக்கையை வேண்டுமென்றே வெளியிடும் குற்றம். நீதிமன்றம் வகுத்த மற்றொரு குற்றம்: நீதிமன்றத் தவறு நடவடிக்கை பற்றி மன்ற தீர்மானத்தில் பதிவது சார்பானது. 1984 திருத்தம் இதை மறுதலித்து தீர்ப்பளித்தது. ஊடக கமிட்டி 'நீதிமன்ற சுதந்திரம் பாதுகாக்கப்படுதல் வேண்டும், நாடாளுமன்ற சிறப்புரிமைக்கு மேலாக' என்றது. நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீளாய்வதாயின் நாம் ஊடகத்தின் சுதந்திரமும் வெளியீட்டு சுதந்திரத்தின் நோக்கமும் நீதிமன்ற அவமதிப்பில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

1987ன் திருத்தம் பற்றி கமிட்டி பரிந்துரைத்தபடி நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டமை கூடிய தண்டனைக்கு இடம் தருகிறது. இந்த மசோதா, இந்த விதியை நீக்க வேண்டும். பட்டியலின் பந்தி 7ம் 8ம் நீக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

# பயங்கரவாத சட்டம் - ஒத்திவைப்பு

## டிசம்பர் 3, 1997.

அவசர நிலை ஒழுங்குமுறைகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து சிறையில் இருப்பது குறித்தும் அவர்களுடைய கஷ்டங்கள் குறித்தும் மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை அவ்வப்போது ஈர்த்துள்ளேன். இப்பிரச்சினை குறித்து தனது அக்கறைத் தெரிவித்த அமைச்சர், சட்டமா அதிபர் அலுவலகத்தில் தனிப் பிரிவை உருவாக்கி வ்வுனியாவில் சுடுதல் உயர்நீதிமன்றத்தை அமைத்தும் சில தீர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் 1997-ம் ஆண்டு அறிக் கைப்படி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லது அவகாலநிலை ஒழுங்குமுறைகளின் கீழ் 1600 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 600 பேர் ஓராண்டுக்கும் மேலாக சிறையில் உள்ளனர். பொலிஸ் புலனாய்வைத் தொடர்ந்து குற்றங்களைப் பதிவு செய்வதிலும், வழக்கு குற்ற விவரங்களை தமிழில் மொழி பெயர்ப்பதிலும் எழுகின்ற பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும், இத்தகையச் சிக்கல்க ளின் விளைவாக வழக்குகள் பைசல் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். துரை ராஜசிங்கமும், செல்வராசாவும் சிறையில் நிலவும் அவலநிலை குறித்து தங்கள் கவலைகளைத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் பல நேரங்களில் தங்கள் உறவினர்களிலிருந்து இருந்து நெடுந்தொலைவில் இருக்க நேரிடுகிறது. இதனால் உறவினர்கள் அவர்களை பார்க்க முடியாமல் போகிறது. எனவே அடிப்படை தேவைகளான, சோப், பற்பசை கூட இல்லாமல் காவலில் உள்ளவர்கள் கஷ்டப்பட நேரிடுகிறது. எனவே அரசாங்கம் இவர்களது நிலையை கருணையோடு பார்த்து அவர்கள் துயர் துடைக்க ஆவன செய்யும்படி என்று வேண்டுகிறேன்.

## நீதி அமைச்சின் வாக்குப்பணம்

### டிசம்பர் 4, 1997

நீதியமைச்சு முக்கிய சட்டங்களை ஆக்கிய சிறப்போடு சட்டத்துறையில் பல ஆதாரமான நடைமுறை மாற்றங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. குறிப்பாகக் கூறுவதானால் அநீதியான ஒப்பந்தமும் பிணையெடுக்கும் சட்டம் சார்ந்த மீளமைப்பையும் கூறலாம். சட்டம் வழங்கலில் ஏற்படும் தாமதம் சார்பாக பல கமிட்டிகளை அமைச்சு நியமித்துள்ளது. கோல்புறூக் கமரோன் சீரமைப்பின் நோக்கங்களை விட்ட போதும், நீதிமன்ற அமைப்பு முறைக்கு புது வழி கூறப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் சட்டச்சீரமைப்புக்கு தீர்மானங்கள் சமர்ப்பிப்பதில் ஆணைக்குழு முக்கிய பங்காற்றுகிறது. அதே வேளை நடைமுறை சட்டத்திற்கும் எழுத்திலுள்ள சட்டத்திற்கும் இடையிலுள்ள இடைவெளியை நிரப்பும் நோக்குடன் சீரமைப்புப் பணியைக் கவனிக்க நிறுவனம் ஏற்படுத்துவது பற்றியும் மதிப்பீடு செய்தல் வேண்டும். சட்ட சீரமைப்பு சார்பாக சட்டமியற்றுவது பற்றி புதிய கண்ணோட்டம் கொள்வதும் அவசியம்; சட்ட ஆணையாளர் மசோதா மூலம் நவீனப்படுத்த வேண்டும்; அத்தோடு சட்டச் சீரமைப்புக்கு நடைமுறை சமூக சட்டத்தின் தேவையை உயர்த்தும் நோக்கமும் இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்து நீதி நிர்வாகம் சார்பாக, யாழ். மாவட்ட, நீதிமன்றங்கள் 1996ல் வழமையான அமர்வுகளை மீளவும் ஆரம்பித்தனர்; மன்னார் நீதி மன்றங்களில் 1997ல் வழமையான அமர்வுகள் தொடங்கின. இந்நீதிமன்றங்களின் வசதிகள் மிகக்குறைவே. சில இடங்களில் சட்டத்தரணிகள் உட்கார நாற்காலிகளே கிடையாது. சட்டத் தொகுப்புகள், சட்ட அறிக்கைகள் தானும் இங்கு பார்வைக்குக் கிடையாது. தொழிலாளர் நீதிமன்

றம் நிறுவ வேண்டியதையும் கவனத்திற்குக் கொண்டு வந்தோம்; தொழிலாளர் பிணக்கு விதிகளின் கீழ் விண்ணப்பங்களைப் பெறுவதற்கு உத்தியோகத்தரை நியமிக்கும் படியும் கேட்டுள்ளோம்.

கைதிகள், தடுப்பு முகாம்களில் உள்ளோர் நிலமைகளும் கவலைக்குரியது. பிணை சீரமைப்பு சட்டம் பிணைக் கைதிகளின் நெரிசலைக் குறைக்கும்; அதற்கு இரு உயர் நீதிமன்றங்களும் பயங்கரவாத சட்ட வழக்குகளை விரைவாக கையாண்டு முடிக்க வேண்டும். ஆயினும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் வழங்கிய புள்ளி விபரங்களின்படி இன்றும் 400 வழக்குகள் வரை தேங்கியுள்ளன. 6 மாதங்களுக்கு மேற்படாது தடுத்து வைப்பவர் மேல் வழக்குத் தொடரப்படுதல் வேண்டும், அல்லது அவர்கள் விடுதலை செய்யப்படுதல் வேண்டும் என நான் வேண்டுகிறேன். சிறை அதிகாரிகள் அவர்களது பாதுகாப்பில் உள்ளவர் மேல் காட்டும் வன்முறை பற்றிய குற்றச்சாட்டுகள் பற்றி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய குற்றச்சாட்டுகள் பற்றிய பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும் என அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். சிறைத் திணைக்களம், சிறை விதிகளின்படி அங்குள்ள நிலமைகளை சீராகக் கவனித்துக் கொள்ள வேண்டும். பிணைக் கைதிகள், தண்டனை பெற்ற கைதிகளின் நிலமைகள் மேம்பட உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். 1997ன் செயலாற்ற அறிக்கையின் படி ஏறக்குறைய 100 ஆண்டுகளாக சிறைகளின் இடவசதி மாற்றமின்றி அப்படியே இருக்கிறது என்று கூறுகிறது. நெருக்கடிப் பிரச்சனை மோசமான நிலை அடைந்துள்ளது. பிணைக் கைதிகளின் நெருக்கடி நிலை மேலும் மோசமாகியுள்ளது. ஆகவே, சிறைச்சாலைச் சீரமைப்பு அமைச்சின் அதி முக்கிய முதன்மை பெற வேண்டும்.

நீதிமன்றங்களைப் பொறுத்தவரை அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் அமைச்சிடமே உள்ளது. 1977ன் அரசியல் யாப்பின்படி நீதிமன்ற மொழியாக தமிழும் ஆக்கப்பட்ட போதும் வழக்காடுபவரும்

சட்டத்தரணிகளும் வழக்காடுவதில் பல பிரச்சனைகளை எதிர் நோக்க நேரிட்டுள்ளது. வடக்கும் கிழக்கும் தவிர்ந்த பிற இடங்களில் சட்ட நடவடிக்கைகள், குற்ற மறுப்பு விண்ணப் பங்களை தமிழில் சமர்ப்பிப்பதிலும் பிரச்சனைகள் உள்ளன. 20 ஆண்டுகளின் பின்னரும் மொழிபெயர்ப்பாளர், தட்டச்சுகள், தமிழில் விளக்குபவர் போதியளவு இல்லை என்று கூறுவது கவலை தருவது மட்டுமல்ல, மிகவும் நெறி கெட்டதாகவும் தோன்றுகிறது. தமிழ் மொழியில் சட்டங்கள் அச்சிடுவதில் ஏற்படும் நீண்ட கால தாமதம் நீதி நிர்வாகத்தில் மிக்க குறைபாடாக உள்ளது. மூன்று மொழிகளிலும் அனைத்து சட்டங்களும் அவற்றின் கீழ்வரும் துணைச் சட்டங்களும் வெளியிடுவதிலுள்ள கஷ்டங்களிலுள்ள குறைபாடுகள் நீக்கப்ப டுதல் வேண்டும். இவ்வாய்ப்புகள் நாடாளுமன்றத்தில் அல்லது சட்ட வாக்கங்கள் வரையும் திணைக்களம் மூலம் நிவர்த்தி செய்யப்படலாம். சட்ட வரைவாளரிடமே சட்டங்களை உடன டியாக திருத்தும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், சட்ட ஆணையாளரும் அரச மொழி ஆணையாளரும் நீதிமன்றங்களில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதிலுள்ள நடைமுறைப் பிரச்சனைகள் பற்றி அமைச்சர் உடனடியாக பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

சட்ட வரைவுத் திணைக்களமும் சட்டத்தரணிகள் திணைக் கள நாயகமும் நீதி நிர்வாகத்தில் முக்கிய பங்கு ஆற்றுபவரா வர். இத்திணைக்கள உத்தியோகத்தருக்கு தனிப்பட்டவராக தொழில் செய்வதில் கிடைக்கும் சம்பளம் கிடைப்பதில்லை என்ற முறைப்பாடும் உள்ளது. இச் சூழலில், எதிர்கட்சியி லுள்ள நாங்கள் இத்திணைக்கள அங்கத்தவரின் தொழில் மதிப்பு உயர எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரிக்கிறோம். இவர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி பெறும் வாய்ப்புகளும் அளிக்கப்படுதல் வேண்டும். நீதிமன்ற உத்தி யோகத்தர் புதிய வணிகச்சட்டம், நீதிமன்ற நிர்வாகம் ஆகிய வற்றில் பயிற்சி அளிப்பின் நீதிமன்ற நிறுவனம் குறிப்பிடத்தக் களவு பலம் பெறும்.

## பாதுகாப்பு அமைச்சு வாக்குப்பணம்

### டிசம்பர் 5, 1997.

வன்னியில் இடம் பெயர்ந்த நபர்களின் நிலைகள் பற்றி இரண்டாவது தடவையாக ஒத்தி வைப்புப் பிரேரணை விவாதம் நடத்துகிறோம். முன்னர் விவாதித்த பின்னர் நான் கூறியபடி 20 நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டனர். அதன் பின்னர் ஜனாதிபதியின் செயலர் தலைமையில் அரசினால் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட மக்களின் நிலைமை கவனிக்கவும் அவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கும் நியமிக்கப்பட்டது. முன்னேற்றம் மெதுவாக நடைபெற்ற போதும் யாழ்ப்பாணம் செல்ல விரும்பியவரை தெரு, புகைவண்டிப் பயணமாக திருகோணமலைக்கு அனுப்பி, பின்னர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்ல வழி செய்யப்பட்டது. பின்னரும் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணத்தில் தடைகள் ஏற்பட்டது; பாதுகாப்புச் சூழல் மோசமடைந்து நூற்றுக்கணக்கானவர் வாரங்கள், மாதக் கணக்காக திருகோணமலையில் மோசமான நிலையில் அந்தரிக்க நேர்ந்தது. மோசமான முரண்பாடுகள் காரணமாக மனிதாபிமான நிவாரணமும் பாதுகாப்பும் மக்களுக்கு வழங்குவதில் அடிப்படை மதிப்புகள் பற்றி விவாதிக்க நேரிடுகிறது. தற்போதைய எதிர்ப்பினால் வன்னியில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம், மருந்து, உணவு அனுப்புவதில் மனிதாபிமான பிரச்சனையை எதிர்நோக்க முடியாது உள்ளது.

யுத்தத்தினாலும் இடம் பெயர்வினாலும் குடும்பங்கள் போதிய பாதுகாப்பின்றி மரங்களின் கீழ் போதிய சத்துணவுமின்றி குழந்தைகளும் வயது முதிர்ந்தோரும் பெண்களும்

துன்பத்துக்குள்ளாவதைப் பற்றி அவ்விடங்களைப் பார்வை யிட்டு வந்த கிறிஸ்தவ மதகுருமார் கூறியது கவலை தருகிறது.

1993ல் வருகை தந்த ஐ.நா.சபை செயலரின் சிறப்புப் பிரதிநிதி இலங்கையின் இடம் பெயர்வின் நிலையைக் குறிப்பிட்டிருந்தார். இரண்டு ஆண்டுகள் கழிந்து மூன்று சமூகத்திலிருந்தும் அகதிகள் பத்து லட்சம் பேர் வரை ஆகியது. முரண்பாடுள்ள கட்சிகள், மனிதாபிமான கொள்கைகளுக்கும் சட்டத்திற்கும் மாறாக மக்களின் சுதந்திர நடமாட்டத்தைக் கூடக் கட்டுப்படுத்தின. தற்காலிக வவுனியா முகாம்களிலுள்ள 5000 பேரில் 3000 பேர் எங்கும் போவதற்கு இடமற்றவர்களா வர். பல இடங்களுக்கு இடம் பெயரும் தொல்லையில் பலர் அகப்பட்டுள்ளனர். நபர்களின் விசாரணைகள் மெதுவாகவும் சிக்கலாகவும் நடைபெறுகிறது. லஞ்ச ஊழல், தவறான நடைமுறைகள் பற்றியும் முறைப்பாடுகள் வருகின்றன. அகதி கள் பற்றி கற்ற மன்னிப்புக்களை அக்டோபர் 97ல் ''முகாம்க ளின் நிலைமை 1997 ஆரம்பத்தில் மோசமாக இருந்தது. இளைஞர்கள் கொடுமைப்படுத்தப் பட்டதாகவும் வதை செய் யப்பட்டதாகவும் முறைப்பாடுகள் பல வந்தன; பாதுகாப்புப் படைகளோடு ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்கள் அரசின் கட்டுப்பாடுள்ள இடங்களுக்கு இளைஞர்கள் சென்ற போதே இவ்வாறான குரூரங்கள் நடைபெற்றது. நடைமுறையிலுள்ள மனித உரிமைகள், மனிதாபிமான தராதரங்களின்படி அப்பகுதி யில் இடம் பெயர நேர்ந்த மக்கள் நடத்தப்படல் வேண்டும்'' என அரசாங்கத்தை மன்னிப்புச் சபை வேண்டியுள்ளது.

# அரச நிர்வாக வாக்குப் பணம்

## டிசம்பர் 15, 1997.

ஆட்சி, அபிவிருத்தி விஷயங்களில் மிகவும் கண்டனத்திற்குரிய அமைச்சு இதுவாகும். பல விஷயங்கள் காரணமாக ஆட்சியில் கிளர்ச்சியை அனுபவிக்கும் கண்டனப் பகுதியில் வாழ்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. இவ்விஷயங்களால் ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் நிறுவனங்கள் பற்றிய பொய்மைகள் வளர்ந்து வருகின்றன. வறுமை, சமூக சமத்துவமின்மையை ஒழித்து அபிவிருத்திப் பாதையில் முன்னேறி மக்களின் அடிப்படை சேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாநிலையில் உள்ளோம். இவ்வீழ்ச்சியை நிமிர்த்தாவிடின் உலகின் பல பாகங்களில் மனித தேவைகள் ஏற்படுத்தும் வெடிப்புகள் எம்மையும் அச்சுறுத்துகின்றது. எம்மைப் பொறுத்தவரையில் எமது கருத்துகள், பகுத்தறிவுப் பாதையில் சமூக அபிவிருத்தி, பொருளாதாரத்தின் பங்கு, அரசின் இயல்பு பற்றி மீளச் சிந்திக்கும் நிலையில் உள்ளன. உலகப் பொருளாதாரம் பெருமாற்ற மடைந்துள்ளது. உலகப் பொருளாதார மாற்றத்திற்கு ஈடாக எமது கொள்கைகள் மாறுதல் பெற வேண்டும். நாம் வாழும் உலகின் அண்மைய தொழில் நுட்ப மாற்றங்கள் உலகை மாற்றி விடுகின்றன. இம்மாற்றங்களை எமது அரசும் ஏற்று வாய்ப்புகளும் ஒழுங்கும் ஏற்படுத்தல் வேண்டும். பொது நிர்வாக அமைச்சு அரசின் வலுவான பிரயோகத் தேவையை அறிந்து நுட்ப நடைமுறைகளை வகுத்துக் கொள்ளல் வேண்டும். 1997-ம் ஆண்டு உலக அபிவிருத்தி அறிக்கை 5 முக்கிய அடிப்படைகளை குறி வைத்துள்ளது. முதலாவதாக சட்டத்தின் அடிப்படை; இரண்டாவது நுண் பொருளாதார ஸ்திரம் உட்பட மாறாத சுற்றாடல் கொள்கையை நிறுவுதல்; மூன்றாவது அடிப்படை சேவைகள் மேல்மட்ட அமைப்புகளை கண்டு பிடித்தல்; நாலாவது, ஆபத்துகளிலிருந்து பாதுகாத்தல்; ஐந்து,

சுற்றாடல் பாதுகாப்பு இவற்றிற்கு எல்லாம் அரச நிறுவனங் களை நிலைப்படுத்தலே கஷ்டமானது. இவற்றிற்கு சிவில் சேவையின் உத்தியோகத்தன்மை, ஒழுக்க நெறி, மேம்பாடு அவசியம். கொள்கைகளை தயாரித்து நடைமுறைப்படுத்தும் சிவில் சமூக நிறுவனங்கள், தொழிலாளர், வணிகம் ஆகியவற் றின் தேவையை உறுதிப்படுத்தல், நாம் செலவு செய்வதன் முக்கியத்துவம், சமூக உதவித் திட்டம், புனருத்தாரண திட்டங் களை நிறுவனப்படுத்தும் முறைகளை சுற்றாடல் தேவையை ஒட்டி முகாமைப்படுத்த வேண்டும். தேசிய அபிவிருத்திக் கவுன்சில் இவ்விவாதங்களுக்கு வசதி நல்கியுள்ளது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், உத்தியோக பூர்வமாக பொது நிர்வாகத்தின் செயல்பாடுகளை உயர்த்த வேண்டும். பொது நிர்வாகத்தைப் பற்றி அனுபவம்மிக்க அரசு உத்தியோகத்தரும் சமூக விஞ்ஞானியும் தேர்ந்தறிந்தவை உள. பொது நிர்வாக செயலர் திரு. டிக்சன் நில வீரவின் அறிக்கைகள் கற்கப்பட வேண்டியவை.

அரசின் நிறுவனங்களில் வகுப்பு வாதத்தை ஒழித்து பல்லின, பன்மை சமூகத்தை நிறுவுதல் எதிர்காலத் தேவையா கும். சமூகத்தின் பரவலை பிரதிபலிப்பதாக பொது சேவை அமைவதோடு திறமையையும் நோக்காகக் கொண்டு அரச சேவைக்கு உத்தியோகத்தரை தெரிதல் வேண்டும். இதற்கு மாறாக கடந்த பல தசாப்தங்களாக பொது சேவைக்கு மோசமான அளவு முறையில் தமிழர் முஸ்லிம்கள் நியமிக்கப் பட்டனர். 1996ல் இனப் பாகுபாடு விஷயத்தில் ஆய்வுக் கமிட்டிக்கு நான் சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கைத் தமிழர் 12.7 சதவிகிதமாக இருக்கும் வேளை அரச சேவையில் 5.9% மட்டுமே வேலைக்கமர்த்தப்பட்டனர். 1985 - 1990 கால கட்டத்தில் 4% வீழ்ச்சி ஏற்பட்டது. மலையகத் தமிழர் 5.5.% மாக இருக்கும் போது 0.1% மே அரச சேவையில் உள்ளனர். முஸ்லிம்கள் 7% மாக இருந்தும் 2% மாகவே அரச சேவையில் உள்ளனர். இது 3.44%ல் இருந்து 2% மாக 1985 - 1995ல் வீழ்ச்சியடைந்தது. 1990ல் அரச, கூட்டுத்தாபன வேலைகளை

1995ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிலைமையின் மோசமான நிலை தெரியும். மன்றத்தில் இந்தப் புள்ளி விவர அறிக்கையை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆலோசனை கமிட்டி பொது நிர்வாக நியமன சுற்றறிக்கை எண் 15/90 ஐ அரசு கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என வேண்டியது. சட்டமா அதிபர் இந்த சுற்றறிக்கையை எவரும் சட்டரீதியாக எதிர்க்காது பார்க்கும்படி வேண்டியது. இந்தச் சிபார்சுகள் கவனிக்கப்படாது இலங்கை நிர்வாக சேவைக்குத் தேர்ந்த 31 உத்தியோகத்தரில் ஒரு தமிழரும் இல்லை. அதே வேளை வட கிழக்கு மாகாணத்தில் 72 வெற்றிடங்கள் இருந்தன. உறுதி கூறப்பட்டதற்கும் நடைமுறைக்கும் உள்ள பேதத்தை இங்கு அறியலாம். நகல் யாப்பு அனைத்து வேறுபாடுகளையும் களைவதாக உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் பணிபுரியும் அரச சேவையாளருக்குத் தர வேண்டிய மேலதிக பண உதவி பற்றியும் உடனடித் தீர்மானம் எடுக்க வேண்டும்.

## அவசர கால நிலை பற்றிய விவாதம்

### ஜனவரி 6, 1998

கடந்த அவசர கால நிலை விவாதத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு, சுகாதார நிலைமைகள் ஆகியவை குறித்தும் பேசினார்கள். தொடர்ந்து அமைச்சர் நடத்திய கூட்டத்தில் சில விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. அடுத்து இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன. ஒன்று, டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவின் முன்முயற்சியால் நடைபெற்றது. அடுத்தது வன்னிப் பகுதியில் பணியாற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் சேர்ந்து பிலன் பெரைரா நடத்தினார். மூன்றாவது கூட்டம் சுகாதாரத்துறை அமைச்சர் நிர்மல் சிறீபாலா டி சில்வாவின் முன்முயற்சியில் நடைபெற்றது. அக் கூட்டங்களில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அவற்றை சிறந்த முறையில் அமுல் செய்வதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று அமைச்சரை நான் வலியுறுத்துகிறேன். இந்த முடிவுகள் குறித்து மற்ற அமைச்சர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டியுள்ளது. ஆகவேதான் இந்த விஷயங்களை விவாதத்தின் போது நான் எழுப்பினேன். ஏனெனில், மோசமான உணவு மற்றும் சுகாதார சீர்கேட்டின் காரணமாகத்தான் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பலர் இறந்து போனதாக வீரகேசரி பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

முதல் முடிவானது, அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு மாதம்தோறும் உணவுப் பொருள்களை அனுப்புவது தொடர்பானது. இப்பகுதிகளில் எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்பது குறித்து சர்ச்சை செய்யாமல் மாதம் தோறும் 6000 மெட்ரிக் டன் உணவு அனுப்பப்படும் என்று அமைச்சரின் தலைமையின் கீழ் முடிவு எடுக்கப்பட்டது. இது ஏற்கெனவே எடுக்கப்பட்ட கொள்கை முடிவு தான்.

போக்குவரத்து, உணவை எடுத்துச் செல்லும் வாகனங்கள் பயணம் செய்ய வேண்டிய தூரம் ஆகியவை குறித்து சில நடைமுறை சிக்கல்கள் இருந்தன. கடைசியாக நடைபெற்ற கூட்டத்தில் இச்சிக்கல்கள் தீர்க்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.

இரண்டாவது விஷயம், நிவாரணம் பெறாத இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் தேவையான அடிப்படைப் பொருள்களை வாங்க பணம் இல்லாதோர் தொடர்புடையது.

அடிப்படைத் தேவைகளை வாங்க முடியாதவர்களுக்கு குறைந்த பட்சம் 3 மாதங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டது. இது தொடர்பாக சமூக நலத்துறை அமைச்சரிடம் பேசுவதாக கூறினார். இதை விரைவாக செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் பல நிர்வாக தொழில் நுட்பக் காரணங்களால் நிவாரணம் பெற முடியாத பல மக்கள் இப்பகுதியில் உள்ளனர்.

ஐயா, நானும் திலன் பெரைராவும் அந்தப் பகுதியில் பணியாற்றும் அரசு சாரா அமைப்புகளும் கலந்து கொண்ட கூட்டத்தில், சுகாதாரம் குறித்து நிர்மல் சிறீபாலா டிசில்வா 2 விஷயங்கள் பற்றிப் பேசினார். அதில் ஒன்று, எவ்வளவு மருந்து தேவை? அவற்றை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எப்படி எடுத்துச் செல்வது என்பதைக் குறித்தது ஆகும்.

அனுப்பப்படும் மருந்தின் அளவை 30 சதவீதம் அதிகரிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த விஷயங்களில் பொதுவாகவே தாமதமாகவே செயல்படும் என்று ராணுவ அமைச்சகத்தில் குற்றச்சாட்டுகள் இருந்தாலும் இந்த முடிவுக்கு ராணுவம் தன்னுடைய ஒப்புதலை அளித்தது. நிர்வாகக் காரணங்களால் சுகாதார அமைச்சகத்தின் மருந்து விநியோகம் செய்யும் பிரிவு டிசம்பர் மாதம் பூராவும் மருந்து அனுப்பவில்லை என்று நினைக்கிறேன். இருப்பைக் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த முறை அவர்கள் மருந்தை அனுப்புவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஐயா, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறிய மருத்துவ யூனிட்டுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக மல்லவி போன்ற பகுதிகளில் உள்ள யூனிட்டில் 200 நோயாளிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இங்கு போதுமான வசதிகளும் படுக்கைகளும் இல்லை. இங்குள்ள வசதியை மேம்படுத்த, சீமெந்து மூட்டைகளையும் 150 படுக்கைகளையும் அனுப்ப அனுமதி தருமாறு ராணுவ அமைச்சகத்தையும் சுகாதார அமைச்சகத்தையும் ஐசிஆர்சியும் எம்எஸ்எஃப்வும் கேட்டுக் கொண்டுள்ளன. இதனால் அதிக மக்களுக்கு உதவி செய்ய முடியும். அறுவைச் சிகிச்சை நடைபெற வேண்டுமானால் அதற்கான நிபுணரையும் மயக்கு மருந்து கொடுப்பவரையும் மெடிக்கல் சான்ஸ் ஃப்ரெண்டியர்ஸ் அனுப்ப வேண்டும். ஆனால் அவசர அறுவை சிகிச்சை செய்வதற்கான பிராணவாயு, மற்றும் இதர உபகரணங்கள் தேவை. இதற்கெல்லாம் ராணுவ அமைச்சகத்தில் இருந்து அனுமதி வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விஷயத்தில் அமைச்சர் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கி றேன்.

துரதிருஷ்டவசமான இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களின் நிலைமைகள் சிறப்பாக மனிதாபிமான நிவாரணப் பணிகளால் மேம்படுத்துவதை நாம் உறுதி செய்ய வேண்டும் என்பதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம். இந்த வசதிகளை மேம்படுத்துவதில் சுகாதார அமைச்சகத்துக்கு ஒத்துழைக்க மெடிக்கல் சானல் ஃப்ராண்டியர்ஸ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை தயாராக இருக்கின்றன.

ஐயா, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு போது மான உணவு மற்றும் மருந்துகளை வழங்குதல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பான முடிவுகள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதை அமைச்சர் உறுதி செய்ய வேண்டும் என்று கூறி முடிக்கிறேன்.

## அவசர கால நிலை பற்றிய - விவாதம்

ஏப்ரல் 7, 1998.

இலங்கையின் பிரச்சினைக்குரிய வரலாற்றில் இந்த மாதம் கொடுமை மிக்க ஒன்றாக இருந்திருக்கிறது.

கொழும்பு நகரில் தமிழர்கள் கூட்டம் கூட்டமாக கைது செய்யப்பட்டது, சிறையில் அடைக்கப்பட்டது, பாரபட்சமான முறையில் அவர்கள் நடத்தப்பட்ட விதம் ஆகியவை பெருங் கோபத்தையும் மன வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில நாட்களில் இங்கு சட்டப்பூர்வமாக வசிக்கும் குடிமக்களில் சுமார் 5000 பேர் காலை நேரங்களில் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்கள். கொழும்பு நகரில் தாங்கள் வசிப்பதற்கென கொண்டுள்ள சட்டபூர்வமான ஆவணங்களை காட்டிய பிறகும் கூட இது நடந்துள்ளது. பெண்கள் உட்பட எல்லா தரப்பினரும் கொடுமையாகவும், ஈவிரக்கமின்றியும் நடத்தப்பட்டது குறித்து ஏராளமான புகார்களைப் பெற்றிருக்கிறோம். தாங்கள் வீட்டில் அணிந்திருந்த ஆடைகளோடு வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட பெண்கள், மணிக்கணக்கில், ஏன் நாள் கணக்கில் காவல் நிலையங்களிலும், சிறையிலும், சில சமயங்களில் பொது இடங்களிலும் தங்க வைக்கப்பட்டனர்.

கப்டன் கார்டன் கோவில் உள்ள ஒரு பூஜாரியின் குடும்பத்தினர் கைது செய்யப்பட்டது கவலை தரும் குறிப்பிடத்தக்க சம்பவமாகும். அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்கு இன்றுவரை சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை. தங்களுக்கு எதிராக வேண்டுமென்றே இந்த துன்புறுத்தல் நடைபெறுகிறது என்று தமிழ் மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளும் முடிவுக்கு வந்துள்ளன.

முதலாவதாக, சரியான திட்டமில்லாமலும், பாதுகாப்பு முறைகளின் ஒருங்கிணைப்பு இல்லாமலும் இந்த ஒட்டு மொத்த நடவடிக்கையும் நடந்தேறியது என்று தோன்றுகிறது. பொலிஸ் சிறைகளும், ரிமாண்ட் சிறைகளும் நிரம்பி வழிவ தால் எதுவும் செய்ய முடியவில்லை என்று சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தங்கள் இயலாமையை வெளிப்படுத்தி னர்.

இரண்டாவதாக, ஆவணங்களை சமர்ப்பிக்கும் விஷயத் தில் தன்னிச்சையாகவும், பாரபட்சமான முறையிலும் தமிழர் கள் நடத்தப்பட்டனர். அடையாள அட்டை, பாஸ்போர்ட் ஆகியவை வைத்திருக்க வேண்டும் என்று சட்டம் சொல்கிறது. வீடு வைத்திருப்பவர்களின் பட்டியல், பொலிஸ் அளித்துள்ள அனுமதி ஆகியவற்றை பாதுகாப்பு அதிகாரிகள் கேட்டனர். ஆனால் இந்த விஷயங்களில் நிலவும் நிச்சயமற்ற தன்மை குழப்பத்தையும் பதட்டத்தையும் ஏற்படுத்தியது.

நகரத்தில் உள்ள விடுதிகளில் தங்குவது குறித்த நடைமு றைகளிலும் இது போன்ற நிச்சயமற்ற தன்மையே உள்ளது.

மூன்றாவதாக, விசாரிக்கப்படும் போது, எவ்வித பரிவும் காட்டப்படவில்லை. பெண்கள், வயதானவர்கள், மதகுருக்கள், மனநிலை, உடல்நிலை பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு எந்தக் கரிசனையும் காட்டப்படவில்லை. நான்காவதாக, அவ சர நிலை ஒழுங்குமுறைகள், குடியரசுத்தலைவரின் உத்தரவுகள் ஆகியவற்றில் காணப்படும் மனிதாபிமான அம்சங்கள் மீறப் பட்டன. பொலிஸ் அதிகாரிகள் இந்த விதிமுறைகள் குறித்து அறியாதவர்களாக இருக்கிறார்கள். கைது செய்யும் அதிகாரி செய்ய வேண்டிய அறிவிப்புகள் குறித்த மனித உரிமை ஆணையச் சட்டத்தின் விதிமுறைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஐந்தாவதாக, கைது செய்து சிறையில் அடைப்பது தொடர்பாக விமலேந்திரன் வழக்கில் நீதிபதி ஏ.ஆர்.பி. அமரசிங்க தெளிவாக எடுத்துரைத்த வழிமுறைகளும் புறக்கணிக்கப்பட்டன. பாதுகாப்பு வீரர்கள் இந்த விதிமுறை

கள் குறித்து தெரிந்திருந்தார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அவசர கால நிலை ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி சமரசம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் சட்டத்தில் காணப்படும் குறைந்த பட்ச பாதுகாப்பு அம்சங்கள் கூட மீறப்பட்டத்தை எண்ணி பதைபதைப்பும், பதற்றமும் ஏற்படுகிறது. கொழும்பு நகரில் உள்ள தமிழர்கள் சட்டத்தின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட வில்லை. அவ்வப்போது மாறும், தன்னிச்சையான மனிதர்க ளின் சட்டத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

# அனுதாபப் பிரேரணை - பீட்டர் கெனமன்

## மே 21, 1998

பீட்டர் கெனமன் 1917-ம் ஆண்டு பிறந்தார். அவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் பணியும் அக்டோபர் புரட்சி உருவாக்கிய மறக்க முடியாத சம்பவங்களோடு பின்னிப்பி ணைந்திருந்தது. அவர் லெனினசத்தால் வளர்க்கப்பட்டவர். அவர், சட்டம் மற்றும் நீதித்துறையில் தனிப்பெருமை பெற்றி ருந்த உயர் வர்க்க டச்சு பரங்கியர் குடும்பத்தைச் சேர்ந்த இளவல். அவருடைய தந்தை உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். தன்னுயை மகனை றோயல் கல்லூரியிலும் கேம்பிரிட்ஜ் பல்பலைக் கழகத்திலும் கல்வி பயிலச் செய்தார். றோயல் கல்லூரியிலும் கெனமன் புரிந்த சாதனைக்கு நிக ரில்லை. பள்ளியில் வெளியான பத்திரிகையின் ஆசிரியர், இலக்கியக் கழகத்தின் தலைவர், ரக்பி அணியின் தலைவர் ஆகிய சிறப்புகளைப் பெற்றிருந்தார். லத்தீன், கிரேக்கம், ஆங்கில இலக்கியங்களுக்கான பெருமைமிக்கப் பரிசுகளையும் பள்ளியின் சிறந்த மாணவனுக்கான சுற்றுவரிசைப் பரிசையும் அவர் வென்றார்.

1930-களின் மத்தியில் இரு யுத்தங்களுக்கு இடைப்பட்ட பிரளயம் மிக்க சம்பவங்களால் கேம்பிரிட்ஜ் பாதிக்கப்பட்டி ருந்த காலத்தில் அவர் அங்கு நுழைந்தார். குமாரி ஜெயவர்த் தனா எடுத்துரைத்தது போல் தத்துவத்துறையில் பெட்ரன்ட் ரசல், விட்கென்ஸ்டெயின், ஜி.எம்.மூர், விஞ்ஞானத்தில் ஹால் டின், பொருளாதாரத்தில் மௌரீஸ் டோ, கெயின்ஸ் ஆகியோர் களை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியிருந்தது. 1930-களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, ஜெர்மனியில் நாஜியிசத்தின் எழுச்சி, ஸ்பானிஸ் உள்நாட்டு யுத்தம், அபிசேனியாவை முசோலினி ஆக்கிரமித்தது ஆகியவை மாணவர்களை அரசியல்

படுத்தியன. ஹெடி சைமன், எரிக் ஹோப்ஸ்வாம், மோகன் குமாரமங்கலம், பி. கந்தையா, என். வைத்தியலிங்கம், வியன்னாவில் இருந்த வந்த யூத அகதிகள் ஆகியோர் அவருடைய சக மாணவர்கள். தீவிரமாகச் செயல்பட்ட மார்க்சிஸ்ட்கள், கேம்பிரிட்ஜில் இருந்த லேபர் மற்றும் சோசலிஸ்ட் சொசைட்டிகளைக் கைப்பற்றினர். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இருந்த தெற்கு ஆசிய மாணவர்களை மாஜிலிஸ் அமைப்பு ஒன்று திரட்டியது. கெனமனும் மோகன் குமாரமங்கலமும் கேம்பிரிட்ஜ் யூனியன் தலைவர்களாக அடுத்தடுத்து குறுகிய இடைவெளியில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இலங்கையில் இருந்து இச்சிறப்பைப் பெற்ற இரண்டாவது மாணவர் கெனமன் ஆவார். 1939-ல் பாரிஸ்டரான அவர் அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ஹெடிசைமனை சுவிட்சர்லாந்தில் மணந்து கொண்டார். இலங்கை திரும்பியதும், ஐக்கிய சோசலிஸ்ட் கட்சியில் அவர் சேர்ந்தார். 1943, ஜூலை 3-ல் அது கலைக்கப்பட்டதும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவன உறுப்பினரானார். சிறிதுகாலம் சிலோன் டெய்லி நியூசில் தலையங்கம் எழுதுபவராகப் பணியாற்றிய அவர், தீவிர அரசியலில் ஈடுபட்டு, கொழும்பில் உள்ள துறைமுக ஊழியர்களை ஒன்று திரட்டுவதிலும் அரசியல்படுத்துவதிலும் ஈடுபட்டார். எந்த மாதிரியான அரசியல் பணியில் கெனமனும் அவரது மனைவியும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அவர் மனைவி பின்வருமாறு விளக்குகிறார். ''எங்கள் பணியில் ஆர்வம் காட்டியவர்களில் பலர் நடுத்தர, ஆங்கிலக் கல்வி பயின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள். ஆகவே அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் நான் ஆங்கிலத்திலேயே பேசினேன். சோவியத் யூனியனின் நண்பர்களின் நூலகத்திலும் படிக்கும் அறையிலும் பணியாற்றிய நான் பிரசுரங்கள், பத்திரிகைகளை வெளியிட உதவினேன். கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்காக கொழும்புக்கு வெளியே உள்ள மற்ற மையங்களுக்கும் பயணம் செய்தேன்''. (குமாரி ஜெயவர்த்தனாவால் கூறப்பட்டது, ஹேடியை நினைவு கூர்தல், வால்யூம் 4, பிராவ்தா, 27)

மத்திய கொழும்பில் உள்ள பல உறுப்பினர் தொகுதியில் இருந்து 1947-ம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட கெனமன் 1997 வரை இடைவெளியின்றி தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். ஆழ்ந்த சிந்தனையுடைய பக்குவமடைந்த பேச்சாளரான அவருடைய பேச்சில் நகைச்சுவை உணர்வு இருக்காது. ஒரு பிரச்சினையை நன்கு ஆராய்ந்து தெளிவாக, எளிமையாக அழுத்தம் திருத்தமாக அவர் பேசுவார். அவரு டைய தேர்ந்தெடுக்கப்பட்ட பேச்சுகளும் எழுத்துக்களும் மக் கள் வெளியீட்டுக் கழகத்தால் (பீப்பிள்ஸ் பப்ளிசிங் ஹவுஸ்) வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய இனப் பிரச்சினை குறித்து லெனினிச கொள்கை யின் அடிப்படையிலான உறுதியான கொள்கையை அவர் கொண்டிருந்தார். தேசிய இனப்பிரச்சினை குறித்து லெனின் தெரிவித்த கருத்துகளில் இருந்து நம்முடைய தேசிய இனப்பிரச் சனைக்கு சரியான தீர்வை உருவாக்க முடியும் என்று அவர் வாதிட்டார். தமிழ் பகுதிகளுக்கு பிராந்திய சுயாட்சி அளித்து ஐக்கிய இலங்கையைப் பாதுகாக்க முடியும் என்பது எங்கள் கருத்து என்று தன்னுடைய கட்டுரையில் தெரிவித்திருந்தார். 1956-ல் ஆட்சி மொழி விவாதத்துக்கு மிகச்சிறந்த பங்களிப் பைச் செய்த அவர், அந்த ஆண்டு நடைபெற்ற வன்முறையில் சிக்கித்தவித்த தமிழர்களின் உரிமையை துணிவுடன் ஆதரித்தார்.

தன்னுடைய இறுதி காலத்தில் தீவிர அரசியலில் அவர் ஈடுபடவில்லை. புத்தகங்கள், இசை, ஓவியம் ஆகியவற்றில் தொடர்ந்து ஆர்வம் காட்டினார். தன்னடக்கம் மிக்க அவர் தன்னுடைய மேல்தட்டு அறிவுஜீவித்தனத்தை ஒது போதும் பெரிதாகக் காட்டிக் கொண்டதில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான 'தி பார்வார்டு'க்கு தொடர்ந்து நல்ல தகவல்கள் அடங்கிய அரசியல் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். 1997-ம் ஆண்டு, ஜனவரி 23-ம் நாள் தன்னுடைய 80-வது வயதில் அவர் காலமானார். சுதந்திர இலங்கையின் அரசியல் பரிணாம வளர்ச்சியில் ஆழமான அறிவுபூர்வமான

தாக்கத்தை ஏற்படுத்திய இடதுசாரி தலைவர்களின் தலைமுறையில் அவர்தான் கடைசியானவராக இருக்க வேண்டும். உண்மையான அறிவு பூர்வமான உறுதிப்பாட்டுடன்தான் அவர் இடதுசாரி இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டாரே தவிர, எதையோ இழந்து விட்ட உணர்வால் அல்ல. தன்னுடைய தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பிதாமகனுமான எஸ்.ஏ. விக்ரமசிங்க குறித்து கெனமன் தெரிவித்த பின்வரும் கருத்துகள் கெனமனுக்கும் பொருந்தும்:

'மென்மையாகப் பேசும் அவர் தன்னடக்கம் மிக்கவர். அவருடைய அடிப்படை நேர்மை உறுதியானது, தான் ஈடுபட்டுள்ள விஷயத்தில் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பு உணர்வு மாற்ற முடியாதது. பலர் செய்தது போல் அவர் ஒரு போதும் தடுமாறியதில்லை, தடம்புரண்டதில்லை, கொள்கையைக் கைவிட்டதில்லை. 1920-ம் ஆண்டு, தான் முதல் முதலாக உயர்த்திப் பிடித்த சிவப்பு அரிவாள் சுத்தியல் சின்னத்தின் கீழ் அவர் தன்னுடைய வயதான காலத்திலும் வாழ்ந்து, உழைத்து மடிந்தார்'.

## சட்டமுறையற்ற மரண தண்டனையும் விசேட அறிவிப்பாளரும்.

## ஜூன் 12, 1998

திரு. பக்கிரி வாலே நிடியே, ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் சிறப்பு அறிவிப்பாளர், சட்டமுறையற்ற மொத்தத் தீர்ப்பும் மரண தண்டனைகளும் சார்பாக இலங்கைக்கு ஆகஸ்டு 24 தொடக்கம் செப்டம்பர் 5, 1997 வரை வந்திருந்தார். மார்ச் 12, 1998ல் தன் அறிக்கையை சமர்ப்பித்தார். அவரது வருகை நாட்டின் வாழ்வு உரிமை நிலையை மதிப்பிடுவதாகும். நீதி விசாரணையற்ற கொலைகளையும் அவற்றின் விசாரணை, வழக்காடலுடன் அத்தகைய கொலைகள் நடக்காது தடுத்தலுமாகும். அவரது வருகையின் போது யாழ்ப்பணம், மட்டக்களப்பு இரத்தினபுரி வரை சென்று பரந்த அளவில் மக்களின் கருத்தைக் கேட்டறிவதோடு பாதுகாப்புப் படையினர், மனித உரிமைகள் பிரதிநிதிகள், அரசு சாரா அமைப்புகளிடை கருத்தும் அறிவதாகும். திரு. பக்கிரி அண்மையில் நியூயோர்க்கில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்து மனித மதிப்புகளிலும் அடிப்படையாக அமைவது மனித உரிமைகளின் புனிதமாகும். இதன் மேலேயே அனைத்து சிவில், அரசியல் உரிமைகள் பதியப்பட்டுள்ளன. இலங்கை தசாப்தங்களாக மனித உரிமைகளை மோசமாக மீறியுள்ளது. அடிப்படை மனித மதிப்புகளை மீறல் இரு தடவை கிளர்ச்சிகளை ஒடுக்க நேரும் வேளை நடைபெற்றது. இம்மன்றத்தில் 1994 தொடக்கம் 8 நாடாளுமன்ற அங்கத்தவர் குரூரமாக கொடுமையாகக் கொல்லப்பட்டனர். முடிவற்ற அரசியல் கொலைகள் எமது பொது வாழ்வில் கரு நிழலாகப் படர்ந்துள்ளது. சரோஜினி யோகேஸ்வரனின் அரசியல் கொலை ஒழுக்க நெறிகளை மீறிய கசப்புணர்வைத்

தருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் ஆயுதப் போராட்டம் போராளிகளிடையேயும் போரில் ஈடுபடாதவரிடையேயும் மோசமான உயிரழிவை ஏற்படுத்துகிறது. அண்மைய எதிர்ப்பில் சில நாட்களில் 400 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு ஆயிரக்கணக்கானவர் காயமடைந்துள்ளனர். நேற்றைய குண்டு வீச்சில் 25 அப்பாவி மக்கள் விமானக் குண்டு வீச்சால் வன்னியில் கொல்லப்பட்டனர். இந்த நிலையிலேயே விசேட ஒருங்கிணைப்பாளரின் அறிக்கையும் சிபார்சுகளும் முக்கியமானவை. இலங்கை அரசும், ஐ.நா.சபையும் சிபார்சு அறிக்கைகள் பற்றி என்ன நடவடிக்கை எடுப்பர் என்று கூற முடியாது. இந்தக்குரூர, கொடிய முரண்பாடு காரணமாக உயிரிழப்புகளுக்கு இம்மன்றம் தன் சீற்றத்தைத் தெரிவிக்கிறது. உயிரின் உரிமையைப் பாதுகாக்க நடைமுறைகள் எடுக்கப்பட வேண்டும். எமது ஆதிக்கத்தின் கீழ் நாம் ஒருபோதும் இந்நிலைக்கு கீழ்ப்படியப் போவதில்லை. விசேட ஒருங்கிணைப்பாளர் தன் அறிக்கையில் இலங்கை அரசு தனக்குக் காட்டிய ஒத்துழைப்பையும் மரியாதையையும் குறிப்பிட்டுள்ளது. அதே வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலரையோ ஜனாதிபதியையோ சந்திக்க முடியவில்லை என்றார். அவரது முடிவு .

''இலங்கையில் சட்டமுறையற்ற கொலைகள் பற்றி சிரத்தை கொள்ள வேண்டும் என்றும் நிலைமைகள் பலமடங்காக எதிரெதிர் விளைவு ஏற்படுத்தும். உள்நாட்டு ஆயுதம் தாங்கியவர் முரண்பாட்டினால் உயிர் வாழ்வதற்கு எதிரான சட்ட அவமதிப்பீடு முக்கிய காரணம்.''

சிறப்புத் தலைவர் தெளிவாகவும் துணிச்சலோடும் அரசு சார்ந்தவர், சாராதவர் சட்ட மீறல்களைச் சுட்டிக்காட்டினார். அவர் ஆயுதப்படைகள், பொலிஸ், விடுதலைப்புலிகள், ஆயுத மேந்திய குழுக்கள், பாதுகாப்புப் படைகளுடன் இணைந்த காவல்படைகள், வீட்டுக்காவலர் ஆகியவரே இத்தகைய சட்ட ரீதியற்ற கொலைகளுக்குக் காரணம் என்றார். மேலும் முடிவுரையாகக் கூறினார்: ''சட்ட மீறல்கள் கணக்கிட முடியாதவை

அடிக்கடி மோசமாகப் பல வருடங்களாக அரசியல் பொறுப் பற்ற சிவிலியன், இராணுவத்தரப்,, படிநிலையாளர் தனிப்பட் டல்ல, நடுத்தர, கீழ்நிலை அரசப் படையினர் பொறுப்பாவர். மேலும் கூறினார்: 'சிவிலியன் மக்களிடை சட்ட ரீதியற்ற கொலைகள் இலங்கையில் நாளாந்தமாகப் பரந்த நிலையிலுள் ளது.' மேலும் அவரது முடிவுகள் வருமாறு:

''முதலாவதாக, சில சட்டங்கள், விதிகள் சட்டம் மீறியவ ருக்கு விடுதலை தந்தன. அது தொடர்கிறது. இரண்டாவதாக, ஆயுத முரண்பாடு நடைபெறும் இடங்களில் அரசு நீதி நிறுவனங்கள் செயலற்றுள்ளன. மூன்றாவதாக, படையினரின் உயர்மட்டத்தில் இருப்பவரிடையேயும் கீழ்மட்டத்தில் மக்க ளிடை பணியாற்றுபவரிடையேயும் எச்சரிக்கை அளவுக்கு வேறுபாட்டு உணர்ச்சிநிலை உள்ளது. நாலாவதாக, முரண்பாடு அமைதியாக தீர்க்கப்படாமல் உயிர் வாழ்வுக்கும் பாதுகாப் பில்லை.''

இந்த முடிவுகள் சார்பாக விசேட தலைவர் பல குறிப் பிட்ட பொது முடிவுகளையும் தெரிவித்துள்ளார். முதலாவதாக, ஆயுத முரண்பாட்டில் உள்ளவர் அதற்கு அமைதியான தீர்வை பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்த வேண்டும். இரண்டாவதாக ஐ.நா.சபை அனைவரது ஒப்புதலுடன் சிறு பான்மையினரின் உரிமைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மூன்றாவதாக, பாதுகாப்புப் படையினர் சீரமைக்கப்பட்டு அனைத்து சமூகங்களும் சமத்துவ நிலை பெற அமைக்க வேண்டும். நாலாவதாக, பொலிசாரில் சட்டம் சாரா கொலைக ளில் ஈடுபட்டவர், கொலை செய்தவர், மனித உரிமைகளை மீறியவர் யாவரும் படையிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஐந்தாவதாக, ஆயுதம் வழங்கப்பட்ட பிற படையினர், சிறப் பாக ஊர்க் காவலரிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட வேண் டும். அவ்வாறே சிவிலியன் கைகளில் உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும். ஆறாவதாக, சட்டம் சாரா கொலை கள், வதைகள் அவற்றிற்கு பொறுப்பானவர் யாவரையும் தண்டிப்பதோடு அரசு பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடு

வழங்க வேண்டும். ஏழாவதாக, அநீதியான ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிட்டக்கூடிய அடிப்படைக் கோட் பாட்டுடன் அரசு செயல்பட வேண்டும். எட்டாவதாக, சிவில் குடிமக்களுக்கு முழு மதிப்பும் தருவதாக 'கிளர்ச்சிக்காரருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சிவிலியன் குடித் தொகைக்கு எதிராக எந்தக் கால கட்டத்திலும் ஆபத்தான, பலமான ஆயுதங்கள் பயன்படுத்தல் கூடாது; இங்கு பல தடவைகள் பயன்படுத்தப்பட்டன. ஒன்பதாவதாக, மரண தண்டனை ஒழிக்கப்பட்டு மனித உரிமை ஆணையாளர் நிலை வலுப்படுத்தப்பட வேண்டும். பத்தாவதாக, இலங்கை அரசு ஜெனிவா உடன்படிக்கையின் இணைப்பாக ஒப்பந்தம் IIல் ஒப்பமிடவேண்டும்.

நாங்கள் அரசையும் ஆயுதம் எடுத்த அனைத்து குழுக்களை யும் இந்தப் பரிந்துரைகளைக் கடைப்பிடித்து குழப்பமடைந்த இந்தத் தீவில் மனித உயிர்களுக்கு மதிப்பும், புனிதமும் மீளக் கொண்டுவர வேண்டும் எனக் கூறுகிறோம்.

மாண்புமிகு லக்ஷ்மன் ஜெயக்கொடி அறிக்கையில் கூறிய பரிந்துரைகளையும் கடைப்பிடிப்பதாக அரசு சார்பில் பதிலளித் தார். காணாமல் போனவர் பற்றி விசாரணை செய்ய விசாரணை ஆணையாளர் நியமிப்பதாகவும் கூறினார். இந்த விஷயங்களை யும் முழுமையாக விசாரணை செய்ய ஆணையாளர் பணிகள் சட்ட ரீதியாக வரையப்படும் எனவும் சொன்னார். மேலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகள் பற்றி அடுத்த நாடாளு மன்ற அமர்வின் போது முதற் சந்தர்ப்பத்தில் முழு அறிக்கை சமர்ப்பிப்பார்.

## அவசர கால நிலை பற்றிய விவாதம்

### ஜூலை 8, 1998.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மிகவும் மோச மாக மனிதாபிமான நிலைகள் தொடர்ந்து ஏற்படுகின்றன. பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை ஐ.நா.சபை கமிட்டி மீளாய்ந்தது. 13.5.1998ன் நாட்டுநிலை அறிக்கை பின்வரும் குறிப்புகளைக் கூறியுள்ளது. ''இடம்பெயர்ந்த 8000 வரையிலான மக்களின் நிலைபற்றி கமிட்டி தன் கடுமையான கவலையைத் தெரிவிக்கிறது. பெரும்பாலோர் இராணுவ முரண்பாட்டால் 15 ஆண்டுகளாக தற்காலிக குடிசைகளில் வசிக்கின்றனர். இவர்களுக்கு தக்க சுகாதார வசதிகள், கல்வி, உணவு, உடை, உடல்நலன் பேணும் வாய்ப்புகள் இல்லை.'' கமிட்டி மேலும் கூறுவது: ''சுதந்திரமான ஆய்வு மதிப்பீட்டின் படி எழுபது (70%) வீதமான பெண்களுக்கும் குழந்தைகளுக் கும் போதிய சத்துணவு கிடைப்பதில்லை; தமிழ் போராளிகள், அகதிகளுக்கு எதிராக அரசு வேண்டுமென்றே உணவு உத வியை தடுப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.''

கமிட்டியின் பரிந்துரை இவ்விஷயத்தில் முக்கியமானது. முதலாவதாக, மனிதாபிமான உதவிகளுள் அரசு நிறுவனங் களை முடுக்கி விட வேண்டும் என கமிட்டி பரிந்துரைத்தது; குறிப்பிட்ட நபர்கள் தக்க உதவியைப் பெறுதல் வேண்டும். இரண்டாவதாக தற்காலிக குடிசைகளில் வாழ்பவர்களுக்கு நிரந்தர வீட்டு வசதி வழங்க அரசு சர்வதேச உதவிகளை நாட வேண்டும் என கமிட்டி வேண்டியது. மூன்றாவதாக, குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாருக்கு தக்க தரமான சத்துணவு கிடைப்பதற்கேற்ப உணவு உதவியை அரசு மீளப்பரிசீலனை செய்து வழங்கல் வேண்டும்.

வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் உள்ள நிலமை மோசமாக உள்ளது என மனிதாபிமான ஏஜென்களின் கூட்டமைப்பு அறிக்கை கூறுகிறது. முல்லைத்தீவைப் பொறுத்தவரை அறிக்கை ஏழைகளுக்கு வழங்கும் உதவி முத்திரைகளையும் வறட்சி நிவாரணத்தையும் இடை நிறுத்தி வைத்திருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது. இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு மாதத்தில் 10 நாட்களுக்கு மட்டுமே காணக் கூடியதான பாதிப் பங்கீடு மட்டும் வழங்கப்படுகிறது. நாய்கடி ஊசி, பாம்புக்கடி மருந்து, குளோரோகுவின், பிரிமாகுவிட் ஆகியன போதியளவு கிடைப்பதில்லை. சம்பளங்கள், பென்ஷன், நெல்லுக் கொள்வனவுக்குப் போதிய பணம் வங்கிகளில் தேவையளவுக்குக் கிடையாது. யாழ்ப்பாணம் பயிற்சி ஆசுபத்திரியில் பல பிரச்சனைகள், கஷ்டங்கள் பற்றியும் எனக்கு குறைபாடுகள் பற்றி முறைப்பாடுகள் வந்தன. ஊசி மருந்துகள், எக்ஸ்ரே பிலிம், மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக கூட்டமைப்பின் அறிக்கையும் தெளிவாகக் கூறுகிறது. இவ்விஷயத்தில் உள்நாட்டு, சர்வதேச உதவி ஏஜென்சிகளின் வேலைகளில் தடைகள் ஏற்படுத்துகிறது; சாதாரண வழக்கமான நடைமுறைகளுக்கு தடைகள் ஏற்படுத்துவதும் விரக்தி தருகிறது. இக்கட்டுப்பாடுகள் ஒழுக்க நெறிமுறைகளல்ல; நாடாளுமன்ற அங்கத்தவரில் இரு பகுதியிலும் மனிதாபிமான பிரச்சனைகளை அரசும் உதவி ஏஜென்சிகளும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றே தக்க கவனம் எடுக்கும்படி கூறிவருகிறது.

யாழ்ப்பாணத்தில் கண்ணி வெடிகளின் நிலைமை பயமூட்டுவதாக உள்ளது. 9.4.98ன் 10வது விசேட அறிக்கையின் படி யாழ்பாணத்தில் 10,000 கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. யாழ்பாணப் பயிற்சி ஆஸ்பத்திரியில் மாதந்தோறும் பத்து கண்ணி வெடி சம்பவங்களுக்கு மருத்துவம் அளிக்கப்படுவதாக கூறுகின்றனர். கொழும்பில் எட்வார்டோ மாரினோ அவர்கள் இப்பிரச்சனை பற்றி ஆழ்ந்து கற்பதற்காக வந்துள்ளார். அவரது பணிக்கு நாம் எல்லாவித

உதவிகளும் செய்வதோடு அவரது முடிவான அறிக்கை, சிபார்சுகள் பற்றியும் நாம் இணைந்து செயலாற்ற வேண்டும்.

தேசிய பிரச்சனையில் அடிப்படையாக எமது கருத்திய லில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுடன் (ஈபிடிபி) நாம் வேறுபடுகிறோம். ஆயினும் கழுத்துறையில் அதன் தலைவர் டக்லஸ் தேவானந்தா தாக்கப்பட்டது போன்ற அரசியல் நோக்கம் கொண்ட வன்முறையை அறிந்து ஆழ்ந்த கவலை யடைந்தோம்.

போட்டியான ஜனநாயக அரசியல் காப்பாற்றப்பட வேண் டும். குரூர அரசியல் வன்முறைக்கு முடிவு கட்ட வேண்டும். கழுத்துறையில் நீண்ட காலமாக நீதி விசாரணையின்றி தடுத்து வைத்திருப்பதை நாம் எதிர்க்கிறோம். இந்தக் கைதிகளின் விரக்தியும் எதிர்ப்புக்கும் காரணங்கள் உண்டு; குடும்பத்தவ ரைப் பார்க்க முடியாமை, அடிப்படைத் தேவைகளும் வழங் கப்படாமையே காரணம். இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க சட்டமா அதிபர் திணைக்களம், விசேட பகுதி அமைத்து பல நடவடிக்கைகள் எடுக்கிறது. ஆயினும் வழக்குப் பதிவதை அல்லது விடுதலை அளிப்பதைத் துரிதப்படுத்த வேண்டும். கழுத்துறை சிறையின் அமைதியின்மையை தவிர்க்க முயற்சி கள் இருமடங்காக்கப்பட்டு நடைமுறைகளும் அதிகாரத்துவ தடைகளும் நீக்கப்பட வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மனிதாபிமான மற்ற நிலைகள் மேலும் நீடிப்பது பெரிய பிரச்சனையாகும். இறுதியாக, எமது சமூகத்தை எதிர்நோக்கும் பல பிரச்சனைக ளுக்கு நாம் விடிவு காண முடியாவிடின் இந்த உயர்ந்த சட்டவாக்க அமைப்பும் விவாதங்களும் அர்த்தமற்றவை என் பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மனிதாபிமான, மனித உரிமைகள் மிக முக்கியமானவை. ஏனெனில் இவையே மனித துன்பங்களையும் மனித மாண்புகளையும் மேலே கொண்டு வருவன. இவையாவும் தேசிய பிரச்சனைகளுடன் பிணைந்துள்ளன. இவற்றைத் தீர்க்காவிடின் அரசியல் முறை யில் நம்பிக்கை இழக்கத் தூண்டிவிடும். எதிர்கட்சி உட்பட

அனைத்து அங்கத்தவர்களையும் ஐக்கிய நாடுகள் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளது ஐ.நா. கமிட்டியின் நோக்கை கவனத்தில் கொண்டு வர விரும்புவேன்: ''இலங்கையிலுள்ள யுத்த முரண்பாட்டால் ஏற்பட்ட ஆயுதம் பண்டங்களின் செலவை கமிட்டி முழுமையாக அறியும். அத்துடன் இலங்கையில் வாழும் ஒவ்வொருவரதும் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் தேய்ந்து செல்லுகின்றன; யுத்தத்திற்கு நீதியான, விரைவான, அமைதியான தீர்வு ஏற்பட வேண்டும். பிரதேச அரசாங்கங்களுக்கு அதிகாரப்பரவு அனைவரதும் ஏற்கக் கூடியதாக பேச்சு வார்த்தை மூலம் பேசித் தீர்க்கப்படுவதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும் என கமிட்டி வேண்டுகிறது.''

# யாழ்ப்பாண செம்மணிப் புதைகுழி - ஒத்திவைப்புப் பிரேரணை

## ஜூலை 22, 1998

செம்மணியில் உள்ளதாகக் கருதப்படும் பரந்துபட்ட புதைகுழி குறித்து புலனாய்வு செய்யவேண்டும் என்று மனித உரிமை ஆணையாளருக்கு எம். சிவசிதம்பரமும் மற்றவர்களும் கோரிக்கை வைத்துள்ளனர். புலனாய்வு செய்வது குறித்து மனித உரிமை ஆணையாளரும் ஆராய்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அடிப்படை உரிமை மீறல்கள் குறித்து புலனாய்வு செய்யும் அதிகாரத்தை சட்டம் (பிரிவு 10b) மனித உரிமை ஆணையாளருக்கு அளிக்கிறது. தன்னிச்சையான, சட்டமுறையற்ற படுகொலைகள் அரசமைப்புச் சட்டத்தின் 13(4)வது பிரிவை மீறுகின்றன. மனித உரிமை ஆணையாளர் தனது வரம்புக்குள் நின்று செயல்பட்டு இந்தப்புகார்கள் குறித்து விசாரணை செய்வர்.

இங்கு எழும் கேள்வி என்னவென்றால், சிக்கலான, முக்கியத்துவம் வாய்ந்த இப்பணியை மேற்கொள்ள போதுமான புலனாய்வு அதிகாரங்கள் ஆணையாளருக்கு இருக்கிறதா என்பதுதான். வாய்மொழியாகவும் எழுத்துமூலமாகவும் உள்ள ஆவணங்களைப் பெறவும், தேவைப்படுபவர்களை விசாரிக்கவும் முடியும் என்று சட்டப்பிரிவு 18 தெளிவாகக் கூறுகிறது. இந்த விஷயத்தில் சோமரத்ன ராஜபக்சேயை கேள்வி கேட்கவும் விசாரிக்கவும் முடியும். சட்டப்பிரிவு 18 (1) (C)யின் படி எந்த நபரிடம் இருந்தும் அவர் கைவசம் ஆவணங்களையோ வேறு பொருள்களையோ ஆணையாளரிடம் சமர்ப்பிக்கச் செய்ய முடியும். மிகவும் விரிவானதாகத் தோன்றும் இந்த அதிகாரங்களை சட்டப் பிரிவு 11(H)உடன் இணைத்துப் பார்க்கும் போது, எந்தப் புலனாய்வையும் நடத்தும் வகையில் பரந்த அதிகாரத்தை ஆணையாளருக்கு அளிக்கிறது.

புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டறிவதும் தொடர்ந்து அவற்றைத் தோண்டுவதும் மிகவும் சிக்கலானது, மற்றும் இவை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், இந்த விஷயத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து உள்நாட்டு, மற்றும் அமைப்புகளும் பரிந்துரைத்துள்ளனர்.

சிவில் உரிமைகள் இயக்கத்தின் செயலர் சூர்யா விக்ரம சிங்க 1998, ஜூலை 2-ம் தேதி வெளியிட்ட அறிக்கையில், தனித்தனியாக புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுப்பதை விட, ஒட்டுமொத்தமாக புதைக்கப்பட்ட உடல்களைத் தோண்டி எடுப்பதில் பல தொழில் நுட்பச் சிக்கல்கள் உள்ளன என்று கூறியுள்ளார்.

''மிகவும் சிறப்பான முறையில் இப்பணியைச் செய்தால், புதைக்கப்பட்டவர்கள் எப்படி இறந்தார்கள்? அவர்கள் யார்? அவர்கள் எப்படி அங்கு கொண்டு வரப்பட்டார்கள்? என்பதை அறியமுடியும். அத்துடன் மிக முக்கியமான ஆதாரங்கள் அழிந்து போவதையும் தடுக்கலாம்'' என்றார்.

இதே கருத்தைத்தான் புதைக்கப்பட்டவர்களைக் தோண்டவும், எலும்புகளை பரிசோதனை செய்யவும் மாதிரி விதிமுறைகளை ஐக்கிய நாடுகள் சபை வகுத்துள்ளது.

''குற்றம் நடந்த இடத்தைத் தேடுவதற்கு எவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அதே அக்கறையுடன் புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுக்கையிலும் செயல்பட வேண்டும். முதன்மைப் புலனாய்வாளருக்கும் ஆலோசனை வழங்கும் மானுடவியலாளர் அல்லது தொல்பொருள் ஆய்வாளருக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்த வேண்டும். தடய அறிவியல் தொடர்பான மானுடவியல் நுட்பங்களில் பயிற்சி இல்லாத ஊழியர்களைத்தான் புதைக்கப்பட்டவர்களைத் தோண்டுவதற்கு அதிகாரிகள் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக மதிப்பிட முடியாத தகவல்களை இழப்பது மட்டுமின்றி பொய்யான தகவல்கள் சில நேரங்களில் உருவாக்கப்படுகின்றன. பயிற்சி இல்லாத நபர்களைக் கொண்டு புதைக்கப்பட்டவர்களைத் தோண்டுவதை தடைசெய்ய வேண்

டும். மானுடவியலாளரின் மேற்பார்வையில்தான் புதைக்கப் பட்டவர்கள் தோண்டப்பட வேண்டும்.

தடய அறிவியல், மானுடவியல் மிகப் பெரிய முன்னேற் றங்களை அடைந்துள்ளன. அர்ஜெண்டினா, எல்சல்வடோர், குவாதமாலா, ஈராக், எத்தியோப்பியா, முன்னாள் யுகோஸ்லா வியா ஆகிய நாடுகளில் கூட்டம் கூட்டமாகப் புதைக்கப்பட்ட வர்களைத் தோண்டி எடுத்த அனுபவம் மூலம் கிடைத்த அறிவும், திறமையும் உள்ளன. தோண்டி எடுப்பதற்கான நடைமுறைக்கு உதவ சிறந்த தடய அறிவியல் மானுடவியலா ளார்கள் உள்ளனர். உள்ளூர் நபர்களுக்கு அவர்கள் பயிற்சி அளிக்க முடியும்.

உடல்களைத் தோண்டி எடுப்பதிலும் புலனாய்வு செய்வதி லும் 3 கட்டங்கள் உள்ளன. புதைக்கப்பட்ட இடத்தை கையகப்படுத்துவது, கிருஷாந்தி குமாரசாமி வழக்கில் தொடர் புடைய குற்றவாளிகளைப் பதிவு செய்வது, சரியான இடத்தை அடையாளம் காண்பதில் அவர்களின் ஒத்துழைப்பைப் பெறு வது ஆகியவற்றுக்காக இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். இத்துடன் ஐ.நா. சபையின் விதிமுறை களும் 3 நிலைகளைக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக, புதைக்கப்பட்ட உடல்களை மருத்துவப் பரிசோதனை செய்வ தற்கு முன்பாக தொகுக்க வேண்டிய புள்ளி விவரங்கள். இறந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், ஆகியோரை விசா ரித்து, கடைசியாக அவர்களைப் பார்த்தது எப்போது? இறப்ப தற்கு முன்பாக அவர்களைப் பார்த்தவர்களின் சாட்சியம் ஆகியவை இதில் முக்கியமாக அடங்கும். இரண்டாவதாக, தொல்லியல் ஆய்வு: புதைக்கப்பட்ட இடங்களை கண்டறிவ தும் தோண்டுவதும் இதில் அடங்கும். புதைக்கப்பட்ட உண் மையான இடங்களை எப்படிக் கண்டறிவது என்பது குறித்தும் ஐ.நா. விதிமுறை கூறுகிறது. மதிப்பிட முடியாத தகவல்களை இழக்க நேரிடும் என்பதால் பயிற்சி இல்லாதவர்களை வைத்து புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி எடுப்பது தடை செய்யப் பட வேண்டும்.

அதே காரணத்துக்காகவே தோண்டும் வேலை நடைபெறும் இடத்தில் ஒவ்வொரு நாளும் வேலை தொடங்கும் முன்பும் முடிந்த பிறகும் அந்தப்பகுதியை புகைப்படம் எடுக்க வேண்டும். அதனால் அந்தப் பகுதியில் தோண்டும் வேலை சம்பந்தப்படாத வேறு காரணங்களுக்காக ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் அதனைக் கண்டறிய உதவும் இட ஆதாரங்களைப் பொறுத்தவரை தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தோண்டும் இடங்களின் வரைபடங்கள் தயார் செய்யப்பட வேண்டும். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி எண் அளிக்கப்பட வேண்டும். ஒரு பகுதி கூட மிச்சம் மீதி வைக்காமல் சம்பந்தப்பட்ட இடங்கள் நன்கு தோண்டப்பட வேண்டும். புகைப்படங்கள் எடுக்கப்பட வேண்டும். குறிப்புகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆய்வுகூடத்தில், தோண்டி எடுக்கப்படும் எலும்புக்கூடுகள் எக்ஸ்ரே எடுக்கப்பட வேண்டும். மேலும் எலும்பு முறிவுகள் அறுவை சிகிச்சை காரணமாக ஏற்படும் விளைவுகள் குறித்தெல்லாம் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறாக சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட எலும்புக்கூட்டின் வயது, பால், இனம், சமூக நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். நோய் காரணமாக ஏற்படும் மாற்றங்கள், அதிர்ச்சி மற்றும் வளர்ச்சி கோளாறுகள் ஆகியவை குறித்த ஆதாரங்களும் அடையாளம் காண உதவும். சில ஆய்வு கூடங்கள் டி.என்.ஏ. பரிசோதனையும் மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணை குறித்தும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. 1997, டிசம்பரில் காணாமல் போனவர்கள் குறித்து விசாரணை செய்ய கமிஷன் அமைக்கப்படும் என்று உறவினர்களுக்கு உறுதி மொழி அளிக்கப்பட்டது. ஆறு மாதங்கள் கடந்தும் இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சகத்தின் விசாரணைக்குழு ஒன்று மிகச்சிலவற்றைப் பற்றி கண்டுபிடித்து விட்டதாக கூறப்படுகிறது. அக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும்.

ஆயினும் அத்தகைய குழுக்கள் போதுமான மாற்று அல்ல. மனோகரி முத்தேட்டுவகமா கமிஷனின் ஆய்வு வரம்புகளை விரிவுபடுத்துவது சரியாக இருக்காது என்று குடியுரிமை இயக்கம் கூடக் கூறியிருக்கிறது.

பலியானவர் யாராக இருந்தாலும் சரி, அதற்கு காரணமான வர் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மீறப்படும் போது அதற்கு காரணமானவர்களைப் பொறுப்பேற்க வைக்கும் முயற்சியில் ஒரு மைல் கல்லாக கிருஷாந்தி குமாரசாமி வழக்குத் திகழ்கி றது. செம்மணி விஷயத்தில் பாரபட்சமற்ற, தேர்ந்த ஆய்வு நடத்துவது இன்றியமையாததாகும். அப்படிப்பட்ட ஒரு விசார ணையை மனித உரிமை ஆணையம் நடத்த அரசாங்கம் எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்து கிறோம்.

# வன்னியில் நிலவும் உணவு நிலைபற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை

## ஆகஸ்டு 20, 1998.

இது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு இடங்களின் உணவுப் பங்கீட்டை நிறுத்தும் தீர்மானம், பாரதூரமான மனிதாபிமான ஆட்சிப் பிரச்சனையை கொண்டு வந்திருப்பது பற்றிய ஒத்தி வைப்புத் தீர்மானமாகும். இத் தீர்மானம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மோசமான தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 39,000 குடும்பங்கள் உலர்ந்த பங்கீடு பெற்று வந்தனர். தற்போதைய பங்கீடு வெட்டும் தீர்மானத்தால் 13,000 குடும்பங்களே நிவாரணம் பெறும். முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசு உத்தியோகத்தர்களால் நிவாரணம் தரக்கூடியவரை தெரியமுடியாத நிலையில் விநியோக முறை யாவும் தடைப்பட்டுவிட்டது. பொது மக்கள் எதிர்ப்பினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசு நிர்வாகம் செயலிழந்துவிட்டது. இம்மாதம் தொடக்கம் அரசுப் பணி எதுவும் நடைபெறவில்லை. உடனடி விநியோகம், முல்லைத்தீவு மாவட்டத்தில், அங்கேயே உள்ள விவசாயிகளிடம் வாங்குவதில் விநியோகம் செய்வதால் தற்போது நெல் கொள்வனவும் இடை நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது. நெல் விற்பனை செய்யும் விவசாயிகள் வேறு இடங்களுக்கு ஏற்றி இறக்க முடியாததால் பிரச்சனைகள் மேலும் இறுக்கமடைந்து விட்டன. இதே நிலை கிளிநொச்சி மாவட்டத்திலும் ஏற்பட்டு உலர் பங்கீடு 50% வெட்டப்பட்டது. பொது மக்கள் எதிர்ப்பு கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத்தையும் ஸ்தம்பிக்கச் செய்து விட்டது. எமக்குக் கிடைத்த அறிவித்தல்படி மன்னார் மாவட்டம் அதிகம் பாதிக்கப்படவில்லை. ஏனெனில் இங்கு ஏறக்குறைய 5000 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளது.

13 மே, 1998ல் பொருளாதார, சமூக, பண்பாட்டுரிமைகள் ஐ.நா.கமிட்டி இலங்கை நிலைமைகளை மீளாய்வு செய்து

சமர்ப்பித்த அறிக்கைப்படி இடம் பெயர்ந்த மக்களின் நிலை பற்றி அதிக கவலையைத் தெரிவித்தது. அவர்கள் தற்காலிக குடிசைகளில் வாழ நேரிட்டுள்ளது. ஆயுதப் படைகளின் முரண்பாட்டால் அடிப்படையான சுகாதாரம், கல்வி, உடல் நலன் கவனிப்பு இல்லை. கமிட்டி தனியார் ஆய்வின் மதிப்பீட்டை குறிப்பிட்டுள்ளது. அதன்படி பெண்கள், குழந் தைகள் தற்காலிக குடிசைகளில் வசிப்பவரின் போஷாக்கின்மை 70 சதவீத உயர்வை எட்டியுள்ளது. இடம் பெயர்ந்தவரின் உணவை குறைத்தது அநியாயமானது எனவும் கூறியது.

உணவு, குறிப்பாக குழந்தைகள், கர்ப்பிணிகள், பால் தரும் தாயாரின் போஷாக்குணவின் தரத்தை உயர்த்த மனிதாபி மான உதவிகளை எளிதாகக் கிடைக்க உதவ வேண்டுமென கமிட்டி அரசாங்கத்தை வேண்டியது.

இம்மன்ற அங்கத்தவர்கள் திரும்பத்திரும்ப வன்னி முல் லைத் தீவுப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களின் நிலைமை கள் பற்றி கவனம் எடுக்கச் செய்து அவர்கட்கு உணவுப் பங்கீடுகள், மருந்து பிற, அடிப்படைத் தேவைகள் கிட்ட வசதி செய்ய வேண்டும் எனக் கூறிவந்தோம்.

இடம்பெயர்ந்த மேற்கூறிய மக்களுக்கு உதவியும் போதிய முழு நிவாரணமும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டு மென்ற ஐ.நா.கமிட்டியின் பரிந்துரைகளை உடனடியாக நடை முறைப்படுத்த வேண்டும். ஏற்கெனவே எடுத்த தீர்மானத்தை மாற்ற வேண்டியது அவசரமானதும் மக்களுக்கு மிக முக்கியமா னதுமாகும்.

## வரவு - செலவுத் - திட்டம் விவாதம்

### நொவம்பர் 16, 1998.

வெஸ்மினிஸ்டர் வகையின்படி நாடாளுமன்றம் நிதியின் மீது கட்டுப்பாட்டை செலுத்துவது அரசியல்மைப்பு சட்டத்தின் ஒரு முக்கியமான கொள்கையாக அடிக்கடி கருதப்படுகிறது. இலங்கையில் செலவு மதிப்பீடுகளை முன் வைப்பது, நிதி பகிர்வுச் சட்டம், புதிய நிதித்திட்டங்களை முன் மொழிவது போன்றவைகளின் மீதான விவாதம் வரவு செலவு திட்ட விவாதத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது. அடிக்கடி ஒரு நாடகம் போன்று இரண்டு தத்துவார்த்தங்களுக்கிடையேயான மோதலாகவும் மாறுபட்ட சமூக பொருளாதார பார்வைகளுக்கிடையேயான போராட்டமாகவும் திகழும் இந்த நாடாளுமன்ற வருடாந்திரச் சட்ட விஷயமானது அடிக்கடி ஒரு முக்கியமான விஷயமாக கருதப்படுகிறது. சாதாரணமாக இந்த நிகழ்ச்சியுடன் நடைபெறும் நாடகம் மற்றும் கிளர்ச்சியும் படிப்படியாக இந்த வரவு - செலவு திட்ட விவாதத்திலிருந்து விலகி விட்டது வருத்தத்திற்குரிய விஷயம். அரசியல் உள்ளடக்கம் குறைந்ததாகவோ அல்லது அரசியலமைப்பு சட்ட முக்கியத்துவம் குறைந்ததாகவோ உள்ள ஒரு நிகழ்ச்சியாக ஒரு பெரிய நிறுவனத்தின் வருடாந்திர கூட்டத்தில் வைக்கப்படும் ஆண்டறிக்கை போன்று சடங்குத்தனமாக இது மாறிவிட்டது. வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகள் நம்பிக்கைகுரியனவாக இல்லை. வருவாய் எதிர்நோக்கங்களும் செலவினங்களும் கணிசமாக மாற்றியமைக்கப்படுகின்றன. (ராணுவ நோக்கங்களுக்காக தொடர்ந்து ஒரு வித வரவு - செலவு திட்ட பற்றாக்குறையை எதிர்நோக்கவும் அந்தப் பற்றாக்குறையை சரிகட்ட உருவாக்கப்படும் நிதிக்கொள்கை நடவடிக்கையாகவும் ஆகிவிட்ட வரவு - செலவு திட்டத்தில்) முன் வைக்கப்படுகின்ற துணை செலவு

திட்ட மதிப்பீடுகள் நம்பகமற்ற தன்மையை மேலும் அதிக ரித்து விட்டது.

இந்த வரவு - செலவு திட்டத்தில் பொருத்தமாக அமைகின்ற ஒரு அம்சம் இது தேச பொருளாதார நிலவரத்தை எதிரொலிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை நமக்குத் தருகிறது. இது தொடர்பாக நான் டாக்டர். சமன்கெலிகமா என்ற பொருளாதார அறிஞரால் வழிநடத்தப்படும் கொள்கை ஆய்வு நிறுவனம் ஆண்டுதோறும் வெளியிடுகின்ற பொருளாதார நிலவரம் பற்றிய அறிக்கையை சுட்டி காட்டியுள்ளேன்.

1998-ற்கான அறிக்கை பின்வருமாறு தொடங்குகிறது. ''1997-கான இலங்கையின் பொருளாதார செயல்பாடு திருப்திக ரமாக அமைந்திருந்தது. கிழக்காசிய பொருளாதாரங்களின் பேரழிவால் எவ்வித பாதிப்பையும் அடையாமல் தப்பித்து விட்டது போன்று தோன்றுகிறது. பதட்டமில்லை, சரி வில்லை; இதுபோன்ற விஷயங்களை தவிர்த்தது மட்டுமல்லா மல் வறட்சி பாதித்த சென்ற ஆண்டின் 3.8% வளர்ச்சியை காட்டிலும் இவ்வருடம் 6.4% அதிகமாக வளர்ந்துள்ளது. நிதிப்பற்றாக்குறை கணிசமாக குறைந்துள்ளது. ஒட்டுமொத்த பொது கடன் (தேச உற்பத்தியில் அதன் அளவு) குறைந்துள் ளது. பணவீக்கமும், வட்டி வீதமும் குறைந்துள்ளன. தேசிய சேமிப்பு அதிகரித்துள்ளது. நடப்பு நிதி முறையும் வெளிநாட்டு கடன் நிலவரங்களும் ..... வெளி நாட்டுச் சேமிப்பும் ஒரு ஆரோக்கியமான அளவில் பாதுகாக்கப்பட்டுள்ளது. கிட்டத் தட்ட இத்தகைய நல்ல பொருளாதார நடவடிக்கை 1998-ன் முதல் கால கட்டம் வரை தொடர்ந்து தக்க வைக்கப்பட்டு உள்ளது.'' பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தனது வரவு - செலவுத் திட்ட உரையில், உயர்ந்த வளர்ச்சி, நிதித்துறை மேம்பாடு, குறைந்த பணவீக்கம், குறைந்த வேலைவாய்ப்பின்மை போன் றவைகளை குறிப்பிடும் போது இதே போன்ற ஒரு நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒரு கணிப்பையே முன் வைத்தார். நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய முதல் கேள்வி - மேலே குறிப்பிட்டுள்ளது போல பொருளாதாரத்தைப் பற்றிய மதிப்பீ

டுகள் சிறப்பானதாக இருந்த போதிலும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள வரவு மற்றும் செலவு திட்ட மதிப்பீடுகள் எந்தளவுக்கு எதார்த்தமானதாக உள்ளன.(BTT)பதிலாக (GST)யை அரசாங்கம் மாற்றியமைத்திருப்பது ஒரு முக்கியமான நிதிக்கொள்கை நடவடிக்கையாகும். மூன்று விதமான BTT-க்கள் 12.5% விகிதாசார ஒரே GST-ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. BTTஅமலாக்கத்தினால் பெறப்பட்ட அதே வருவாயை (GST)ஈட்ட வேண்டுமென்றால் 16% இருக்க வேண்டுமென நிபுணர்கள் கருதுகிறார்கள். எனவே இந்த நிதி நடவடிக்கை குறித்து கொள்கை ஆய்வு நிறுவனம் தெளிவாகக் குறிப்பிட்டது போன்று இதன் தொடர் விளைவாக இழப்பீடுகள் ஏற்படும். கடந்த வரவு - செலவு திட்டத்தின் போது தனியார் மயமாக்கலினால் வரவு - செலவு திட்ட பற்றாக்குறை கணிசமாக குறைக்கப்படும் என நம்பப்படுகிறது. ஆனால் கடந்த 4 வருடங்களாக பொதுத்துறையை தனியார் மயமாக்குவதால் பெறப்பட்ட தொகை எதிர்நோக்கும் தொகையை விட குறைவாகவே இருக்கிறது. ஆயினும் 1997-இல் தனியார் மயமாக்கலின் மூலமாக கிட்டத்தட்ட 160 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு நிகரான உள்நாட்டு கடன்களை சரிக்கட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் முடிந்தது. கொள்கை ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது போன்று, ''தனியார் மயமாக்கல் நடவடிக்கை குறைந்து வருகிறது (இந்த வருடத்தில் இலங்கை டெலிகாம் நிறுவனத்தினுடைய 10% பங்குகளை மட்டுமே தனியார் மயமாக்கப்பட வேண்டியுள்ளதால்) அரசாங்கம் வருவாய்க்கான புதிய ஆதாரங்களை தேட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. ஆயினும், சர்வதேச அளவில் பெட்ரோலியத்தின் விலை குறைவினால் இலங்கை பெட்ரோலிய நிறுவனம் கணிசமாக வருவாயை ஈட்ட வாய்ப்புள்ளது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை ஒரு பீப்பாய் 27 அமெரிக்க டாலரிலிருந்து 12 அமெரிக்க டாலர் குறைந்துள்ளது. இதன் மூலமாக பெட்ரோலிய நிறுவனம் ரூபாய் 8 பில்லியன்களை கூடுதலாக ஈட்டுமென்று மதிப்பிடப்படுகிறது. இதில் 4 பில்லியன் ரூபா நிறுவனத்தினுடைய கடன்களை

சரிக்கட்டுவதில் பயன்படுத்தப்படுமென்றும் நம்பப்படுகிறது. எஞ்சியுள்ள தொகை அரசாங்கத்தின் வருவாய் இழப்பை குறைப்பதற்காக மாற்றப்பட வேண்டியுள்ளது. சர்க்கரை மற்றும் கோதுமையின் விலைகளும் இது போன்று சரியுமென்று எதிர்பார்க்கப்படுவதால் ஓரளவிற்கு செலவினங்களும் குறையும். வருவாய் குறையுமென்பது முதலீடு வெட்டப்பட்டுள்ளதிலிருந்து தெரிகிறது. இத்தகைய மூலதன முதலீடு குறைவதினால் உள்கட்டுமானங்களுக்கான பொது முதலீடும் குறையும்.

வரவு - செலவு திட்டங்களின் மீதான விமர்சனங்களில் ஒன்று புதிய நிதி நடவடிக்கை தொடர்பாக குறிப்பான பிரேரணை தொடர்புடையதாகும். வேலைவாய்ப்பை உருவாக்குவதென்பது ஒரு முக்கியமான விஷயமாகும். கட்டுமான அதிகரிப்பையும் அதன் மூலம் கூடுதல் வேலைவாய்ப்பையும் வழங்கியிருக்கக் கூடிய பல பெரிய உள்கட்டுமான திட்டங்கள், குறிப்பாக தேசிய சாலைகள், துறைமுகங்கள், விமானநிலைய அபிவிருத்தி போன்றவைகள் இன்னும் தொடங்கப்படவில்லை. வேலையில்லா பட்டதாரிகளுடைய விகிதாச்சாரம் ஒரு கடுமையான எல்லையை அடைந்துள்ளது. நாடெங்கும் இது தொடர்பாக ஆர்ப்பாட்டங்களும் வெகு ஜன எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சனைகளை சரி செய்வதற்கான முயற்சி என்பது அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளோடும் அந்த செயல்திறனை சந்தைபடுத்துதல் என்பதோடும் இணைக்கப்பட வேண்டும். சிங்களம் அல்லது தமிழ்வழியாக பட்டம் பெற்றவர்கள் ஆங்கில அறிவு இல்லாமல் அல்லது அதன் தரம் குறைவாக இருக்கிறார்கள். இவர்கள் ஆங்கிலமே வணிக மொழியாக திகழ்கின்ற தனியார் துறைகளில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான எதார்த்தமான வாய்ப்புகள் குறைவாக உள்ளது. செயல் திறன் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்கட்டுமான தொழில் நுட்ப பயிற்சி மையம் ஆகிய குறித்த வரவு - செலவு திட்ட பிரேரணைகள் நமக்கு அதிக நம்பிக்கை அளிப்பனவாக இல்லை. இது குறித்து அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொருளாதார தாராள மயமாக்கத்தின் ஒரு அதிருப்திகர மான விஷயம் நேரடி வெளிநாட்டு முதலீடு என்பது இங்கு குறைவாகவே வந்துள்ளது. இலங்கையை பொறுத்த வரையி லும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலும் பிரதான மூலாதார மாக கிழக்காசிய நாடுகளே இருந்து வருகின்றன. இதில் தென் கொரியா 30% முதலீட்டையும், ஹாங்காங் 12% முதலீட்டை யும், ஜப்பான் 12% முதலீட்டையும் கொண்டுள்ளன. புதிதாக தொழில் மயமாகியுள்ள நாடான மலேசியா போன்றவற்றிலி ருந்து கூடுதல் முதலீடுகள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. அயல் நாட்டு பரிமாற்ற விகிதா சாரத்தில் ஏற்பட்ட கடுமையான தேய்மானம் மற்றும் பங்கு சந்தையில் ஏற்பட் டுள்ள வீழ்ச்சி ஆகியவைகளினால் எழுந்துள்ள கிழக்காசிய நாடுகளின் நெருக்கடி கூடுதலாக இந்த நாடுகளிலிருந்து நேரடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்புகளைக் குறைத்துள்ளன. கிழக்காசிய நாடுகளின் அரசியல் பொருளாதார நீரோட்டங்க ளால் மனமுடைந்து போயிருந்த சில அந்நிய முதலீட்டாளர் களை கவர்ந்திழுப்பதற்கான வாய்ப்புகளை இலங்கை கொண் டிருந்திருக்கலாம். மறுபடியும் இங்கு யுத்தத்தின் தொடர்ச்சி மற்றும் தீவிர தன்மையின் காரணமாக எழுந்துள்ள அரசியல் நிலவரங்களால் இத்தகைய முதலீடுகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே தோன்றுகின்றன. வரலாற்று ரீதியா கவே செயல் திறன் குறைவாக தேவைப்படுகின்ற, உழைப்பு அதிகமாக தேவைப்படுகின்ற பாகங்களை ஒன்றிணைப்பது போன்ற உற்பத்திப் பொருட்களிலேயே அதிகமான அந்நிய முதலீடு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக முன்னே றிய இலகு ரக உற்பத்தி தொழில்களில் இத்தகைய முதலீடு முடக்கப்படும் என்று தோன்றவில்லை. இலங்கையை பொறுத்த வரையிலும் நேரடி முதலீட்டோடு கூடவே ஜப்பானி டமிருந்து நேரடி வெளிநாட்டு உதவியை பிரதானமாக பெறு கின்ற நாடாக இலங்கை உள்ளது. இலங்கை பெறுகின்ற மானியம் மற்றும் சலுகை ரீதியான கடன்களில் ஜப்பான் அளிக்கும் வெளிநாட்டு வளர்ச்சி உதவி சுமார் 30% இருக்கிறது. ஜப்பானில் நிலவுகிற பணவீழ்ச்சியின் காரணமாக இத்தகைய

வெளிநாட்டு உதவி 10% வெட்டப்பட்டுள்ளது. இதனால் இலங்கை பாதிக்கப்படலாம். இதே போன்று பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வருகின்ற தென் கொரியாவிலிருந்து வருங்காலத்தில் முக்கியத்துவமான பரஸ்பர இருதர உதவிகள் அதிகரிக்கும் என்று தோன்றவில்லை.

வறுமை ஒழிப்பைப் பொறுத்த வரையிலும் 1995-ல் வறுமை ஒழிப்பு திட்டமாக இருந்த ஜனவசிய தற்போது சமுர்த்தி திட்டத்தால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது வருவாய் ஆதரவு, மக்கிரோ நிதி செயல் திட்டங்கள், கிராமப்புற வேலைத்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி கிராமப்புற வேலை வாய்ப்பின்மையை அகற்றும் முகமாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏழைகளின் தேவைகளை சமுர்த்தி திட்டத்தினுடைய செயல்திறன் பற்றி உண்மையான தும் தீவிரமானதுமான கவலை நிலவவே செய்கிறது. இந்தத் திட்டத்தினுடைய அடிப்படைச் செயல் நோக்கத்தின் படி இது 18 மாவட்டங்களை நோக்கியதாக இருந்தது. இது வடகிழக்கில் உள்ள பல மாவட்டங்களை விலக்கி வைத்திருந்தது. இந்தத் திட்டம் பாரபட்சமான உள்நோக்கம் கொண்டது; பாரிய விளைவுகளை உருவாக்கக் கூடிய இந்த அம்சம் குறித்து பலமுறை கவனத்தை ஈர்த்துள்ளோம். இந்த 18 மாவட்டங்களி லும் கூட முதலில் இது 1.2 மில்லியன் குடும்பங்களை மட்டுமே இலக்காக கொண்டிருந்தது. ஆனால் உண்மையில் இத்திட்டம் கூடுதலாக 2 மில்லியன் குடும்பங்களை உள்ளடக் கியதாக விரிவு செய்யப்பட்டது. கொள்கை ஆய்வு நிறுவனத் தின் படி இலங்கையில் ஏழைகளாக மதிப்பிடப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இருமடங்கு குடும்பங்களை கொண்டிருந்தது. ''மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 60% நுகர்வு மானியத்தை பெற்று வருகின்றனர். ஆனால் வறுமை யென்பது 30% உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.'' இந்த சமுர்த்தி திட்டத்தின் மொத்த செலவில் கிட்டத்தட்ட 80% இந்த நுகர்வு மானியம் மட்டுமே உள் வாங்கி கொள்கிறது. இன்னொரு வகையில் இந்த மானிய திட்டமானது மக்களுக்கு

உதவி புரிந்தாலும் கூட அவர்களின் மாதாந்திர நுகர்வு செலவினத்தில் சுமார் 10% மட்டுமே இது ஈடு கட்டுவதால் நுகர்வு மட்டத்தில் இதுவொரு மிகக்குறைந்த பாதிப்பையே உருவாக்குவதாக கூறப்படுகிறது. இந்த நலன்களைப் பெறு கின்ற குடும்பத்தினரின் உணவு ஊட்டத் தரத்தை கணிசமாக உயர்த்துவதற்கு இது போதுமானதில்லை என்றும் கருதப்படுகி றது. அத்துடன் விநியோகத்தில் திறமையின்மை, தரக்குறை வான பொருள்களை வழங்குதல் எடை குறைவு போன்ற பிரச்சனைகளும், ஏழை மக்களின் உணவு ஊட்டத் தரத்தை உயர்த்துவது என்ற நோக்கத்தில் ஒரு எதிர்மறையான விளைவு களை ஏற்படுத்தி இருக்கிறதென்று தோன்றுகிறது. இதே போன்று கொள்கை ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டது போன்று ஏழை மக்கள் நோய் மற்றும் இறப்பு தொடர்பானவை போன்ற நெருக்கடியான நேரங்களில் அவர்களின் சுமைகளைக் குறைக் கும் முகமாக உருவாக்கப்பட்ட காப்பீட்டுத்திட்டமும் வெற்றிக ரமானதாக இல்லையென்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ''எந்த அளவிலேனும் இந்தத் திட்டம் வெற்றி பெற்றுள்ளதா என்பதற் கான சான்றுகள் குறைவாக உள்ளது''. என்றும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. எனவே இந்த ஆதார வளங்கள் அனைத்தும் கிராமப்புற மின் மயமாக்கலுக்கும், கிராமப்புற நீர்ப்பாசன திட்டத்திற்காகவும் திருப்பி விடப்பட வேண்டும் என்றும் இந்த அறிக்கை அறிவுறுத்தியுள்ளது. இதே போன்று மது மற்றும் போதை பொருளுக்கு அடிமையானவர்களை மாற்றுவதை நோக்கி உருவாக்கப்பட்ட சமுதாய மேம்பாட்டு திட்டமும் சமுர்த்தி நிர்வாகிகளுக்கு இது தொடர்பாக மிகவும் தளர்வான பயிற்சி அளிக்கப்பட்ட காரணத்தால் செயலற்றுப் போயிருக்கிறது என்ற விமர்சனமும் உள்ளது. எனவே சமுர்த்தி செயல் திட்டமானது சமுதாய நலன் மற்றும் வறுமை ஒழிப்பு திட்டத்தின் கணிசமான பங்கை உள் வாங்கி கொள்வதால் இதனுடைய இலக்கு, நோக்கங்கள் மற்றும் செயல்திறன் பற்றிய அடிப்படையான மறுபரிசீலனையை மேற்கொள்ள வேண்டியது அவசரமாகவும், அத்தியாவசியமானதாகவும் விளங்குகிறது. கொள்கை ஆய்வு நிறுவனத்தின் படி 1996-ல்

மட்டும் சுமார் 10 பில்லியன் அல்லது அரசாங்க வருமானத்தில் கிட்டத்தட்ட 4% இத் திட்டம் உள்வாங்கி கொண்டுள்ளது. இந்த தொகையானது அனைத்து நலத்திட்ட செலவினங்களையும் சுமார் 66%க்கு நிகரானது. 1996-ல் சுகாதார மற்றும் கல்விக்காக முறையே 12 பில்லியன் ரூபாகளும், 20 பில்லியன் ரூபாகளும் செலவிடப்பட்டுள்ளன. இந்தத்திட்டத்தை நிர்வகிப்பதற்கான செலவாக ரூபா 1 பில்லியன் செலவிடப்படுவதும், இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்த முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

மூலதன முதலீட்டை தடைப்படுத்தும் முகமாக அமைந்துள்ள அரசியல் பொருளாதார அடிப்படைகளைச் சரிசெய்வது என்ற நோக்கிலும், வேலைவாய்ப்பின்மை, வறுமை ஒழிப்பு என்பவைகளை சரிசெய்வதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான திட்டங்களை உள்ளடக்கியும் போதுமான கவனம் இந்த வரவு - செலவு திட்ட பிரேரணையில் இல்லை என்பதுதான் எங்களின் அடிப்படையான விமர்சனமாகும். இந்த நாலாம் ஆண்டின் இறுதியில் தேசத்தை பாதிக்கின்ற பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திர தன்மையின் அடிப்படை விஷயங்களை உறுதியாக கைப்பற்றிக் கொள்ளும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இது தெளிவாக வடகிழக்கிலேயே நடைபெற்று வருகின்ற ஆயுத மோதலை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளோடு தொடர்புடையது. மானுட துயரத்தையும், நிர்க்கதியையும் உருவாக்கியுள்ள இதனை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு தன் வசமுள்ள அனைத்து வழிமுறைகளையும் சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தையும் இதற்குப் பயன்படுத்த வேண்டும். வரவு - செலவு திட்ட உரையிலோ அல்லது பிரேரணையிலோ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மற்றும் வடகிழக்கில் உள்ள மற்றப் பகுதிகளில் வாழ்ந்து வரும் புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் சாதாரண வெகு ஜனங்கள் அனுபவித்து வரும் சொல்லொணா துயரங்கள் குறித்தும் எவ்வித விளக்கமும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. நமது சமூகத்திலுள்ள தீவிரமான பாரபட்சத்தை

யும் ஏற்றத்தாழ்வையும் சித்தரிக்கும் முகமாக இரண்டு வித பொருளாதாரங்களை நாம் வைத்திருக்கிறோம் என்பது தான் எதார்த்த மானதாகும். யுத்தத்தின் மறைமுக பாதிப்பு இருந்தா லும் கூட தென் பகுதியின் பொருளாதார மென்பது 1997-லிலே 6.4% அடைந்திருந்தது. இது 1998-லே 5% வளர்ச்சி பெறும் என எதிர்நோக்கப்படுகிறது. அதே சமயத்தில் யுத்தத்தின் நேரடி மற்றும் உடனடி தொடர் விளைவுகளை சந்திப்பதினால் எழுதுள்ள வறுமை மற்றும் பேரழிவு பொருளாதாரமாக வடபகுதியின் பொருளாதாரம் நிலவி வருகிறது. வடக்கின் பொருளாதாரம் அதாவது கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் வசித்து வரும் மக்களில் சுமார் 90% வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளனர். கிட்டத்தட்ட அவர்களனைவருமே நிவாரணங்களை மட்டுமே சார்ந்துள்ளனர். சமீபத்தில் அத்தியாவசிய சேவை நிறுவனத்தின் பொது ஆணையர் உணவு உதவியில் 57% வெட்டியிருப்பது புலம் பெயர்ந்து பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வருகின்ற மக்களின் பரிதாபத்தை மேலும் அதிகப்படுத்துகிறது. பிரிட் டிஷ் புலம் பெயர்ந்தோர் கவுன்சில் ஆகஸ்டில் வெளியிட்ட ஒரு புள்ளி விவரத்தின் படி யாழ்ப்பாணத்தில் மட்டும் 4 லட்சத்து 16 ஆயிரம் பேர் உணவு மட்டும் உதவிகளை பெற்று வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள அரசுசாரா நிறுவன மொன்று யாழ்ப்பாண தீபகற்பத்தில் மட்டும் 60% வேலை வாய்ப்பின்மை உள்ளதாக குறை கூறியுள்ளது. ''அது மேலும் மக்கள் தொகையில் 30%த்தவர் நாளைக்கு ஒருவேளை உணவு மட்டுமே, உண்டு வாழ்ந்து வருகின்றனர்''. என்றும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தினுடைய கல்வித்துறை அனைத்து பள்ளிக் கட்டிடங்களிலும் 90%ம் சரிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்று குறிப்பிட்டுள் ளது. யாழ்ப்பாணத்திலுள்ள 1,04,300 கட்டிடங்கள் (13 ஆயிரம் வர்த்தக நிறுவனங்களையும் உள்ளடக்கியது.) யுத்தத்தால் சேதமடைந்துள்ளன. எனவே நாங்கள், தேச சராசரியைக் காட்டிலும் இரண்டிலிருந்து மூன்று மடங்கு வறுமையையும் பற்றாக்குறையையும் சந்தித்து வருபவர்களின் பரிதாபகரமான

நிலைமை தொடர்வதை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்து உள்ள ஒரு மேம்பாட்டு திட்டத்தையோ கொள்கையையோ ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வசித்து வருகின்ற மக்களின் வாழ்க்கை தரத்திலும், சமூக பொருளாதார சூழலிலும் உள்ள பரிதாபகரமான ஏற்றத் தாழ்வை குறைக்கும் முகமாக எவ்வித முயற்சியும் இந்த வரவு - செலவு திட்டத்தில் காணப்படவில்லை. இந்த அடிப்படைக் காரணம் தான் வரவு - செலவு திட்டத்தை எதிர்க்கும்படி எங்களை வற்புறுத்தி உள்ளது. இந்த நடவடிக்கை மூலமாக இந்த வரவு - செலவு திட்ட பிரேரணையின் தொக்கி நிற்கின்ற அரசியல் பொருளாதார செயல் தந்திரத்தை பற்றிய ஒரு மறுபரிசீலனை செய்யப்படலாம் என நாங்கள் நம்புகிறோம்.

1919-இல் ரஷ்யாவின் மிகச்சிறந்த கவிஞரான அன்னா அக்மோட்டோவா பின்வருமாறு எழுதினார்.

''கடந்த காலத்தை காட்டிலும் இக்காலம் ஏன் கஷ்டமாக இருக்கிறது.

பெரு வருத்தமும், பேரச்சமும் எங்களை புத்தி பேதலிக்கச் செய்து வேதனை தரத்தக்க எங்களின் காயங்களை விரல்களால் தடவிவிட்டு அவர்களை நிவாரணமடையச் செய்யாமலேயே நாங்கள் சென்றுவிட்டோமே''

மறுபடியும் 1916-லே நாங்கள் இப்போது சந்திக்கின்ற அதே இக்கட்டான நிலைமை அவர் சந்திக்கின்ற போது எழுதினார்.

''அனைத்துப் பலமும், அன்பும், அடித்துச் செல்லப்பட்டு விட்டன. அன்பில்லா நகரமொன்றில் எனது உடல் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. எனது மனசாட்சி மட்டுமே நாளுக்கு நாள் கொதித்தெழுந்து அதிகபட்ச வெகுமதியைக் கோருகிறது. இதற்கு விடையாக எனது முகத்தை எனது கரங்களிலே-புதைத்துக் கொண்டு.... ஆனால் எனது கண்ணீரும், சமாதானங் களும் கரைபுரண்டு - ஓடிக்கொண்டிருக்கின்றன.''

கொள்கை ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை பின்வரும் அவதானிப்போடு முடிவுறுகிறது, ''வளர்ச்சி விகிதத்தை கீழ் நோக்கி மாற்றப்பட வேண்டிய சூழலுக்குள்ளாகிய நாடுகளுக்கு ஏற்பட்டது போன்ற நிகழ்வுகளால் இலங்கை அடித்துச் செல்லப்படுவதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளும் உள்ளன. வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும். ஏழைமக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இலங்கை சமூகத்தின் அமைப்பு தற்போதுள்ளதைக் காட்டிலும் மோசமான நிலை அடையலாம்.''

## இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு அமைச்சு வாக்குப்பணம்

### நொவெம்பர் 27, 1998.

இன உறவுகளை முற்றாக, தவறாக கையாளுவதால் பல்லின பன்முக சமூகத்தின் அத்திவாரத்தை அமைப்பதில் தவறு ஏற்படுகிறது. இதற்குச் சில நடைமுறை உதாரணங்களைக் கூறின் அவற்றில் சிறு வேறுபாடுகள் மட்டும் இருக்கலாம். இத்தவறினால் எல்லாச் சமூகங்களும் தொடர்ந்து துன்பியல் தொடரில் அனுபவப் பட நேரிடுகிறது. இதனால் இன வெறி, கூட்டு வன்முறையைத் தொடர்ந்து இனப் பகைமைகள் ஏற்படுகிறது. இந்நிலையிலேயே இன அலுவல்கள் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு அமைதி ஏற்பட கொள்கைகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் இனத் தனித்துவமும் பண்பாடும் வழமைகளும் இன அமைப்பில் தனித்துவம் பெறும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. தேசிய ஒன்றிணைப்பு திட்டப் பிரிவில் பொதுக் கல்வி நிகழ்ச்சிகளுள் அரசின் வகுப்பு வாத அமைப்பை எதிர்க்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம். இன ஐக்கியம் பற்றிய பல முக்கிய ஆய்வுக்கல்விகள் மேற்கொள்ளப்பட்டன. 'இலங்கை, கசப்பான அறுவடை' நூலில் எலிஸாபத் நிசானியின் பரிந்துரைகளை குறிப்பாகப் பாராட்டுவேன்.

அரசுப் பணிகளில் சமத்துவ வாய்ப்புகள் வழங்குவது பற்றி தக்க கவனம் எடுக்காதது துரதிர்ஷ்டமான முக்கிய தவறாகும். அடிப்படை உரிமை உள்ள ஆட்சியில் இனம், மதம், பால் வேறுபாடு, அரசியல் கருத்துகள் அடிப்படையில் எவரும் ஒதுக்கப்பட்டு விடக்கூடாது. ஆனால் சம வாய்ப்பு கொள்கை ஒதுக்குவதை மட்டும் உறுதிப்படுத்தவில்லை.

நடைமுறையில் மோசமான திரிபுகள், நடுநிலைமையற்ற நிலை அரச சேவையில் இனப் பிரதிநிதித்துவம் செய்வதில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்மன்றத்திற்கு அரசு புள்ளி விபர ஆய்வில் தெளிவாக தமிழர், முஸ்லிம்கள் பொது சேவையில் அவர்களது பங்குக்குக் கிடைக்க வேண்டியது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்ததைக் காணலாம். 1990ல் தமிழரும் முஸ்லிம்களும் குடித் தொகையில் 25% ஆகவே இருந்தபோதும் அரசு சேவையில் 7.9% உள்ளனர். உத்தியோக மொழி ஆணையரே இப்புள்ளி விபரங்களைத் தந்தார். 543 அலுவலகங்களை ஆய்வு செய்தபோது 437ல் தமிழ் பேச்கூடிய ஒரு உத்தியோகத்தரும் இல்லை. ஒரு பியன், எழுத்தர், உயர்உத்தியோகத்தர் எவருமில்லை என்பதே அர்த்தம். 488 அரசு அலுவல்கங்களில் இரு மொழி வாய்ப்பில்லை. இத்தகைய மோசமான நிலை முந்திய அரசாங்கங்களின் போதும் இருந்தது. அரசு நிர்வாக சுற்று நிருபங்கள் இன 'கோட்டா' அடிப்படையில் நியமனம் செய்யும்படி அனுப்பப்பட்டதா என்பது உறுதியாகவில்லை. அது நிரந்தர அரசின் கொள்கையாக கருதப்படவில்லை. ஆனால் அரச நியமனங்களில் ஆகக் குறைந்த அளவிலேயே நியமனங்கள் நடைபெற்றன.

அண்மையில் மாற்றாக நியமனங்களில், முன்னைய நிலை போன்று நடைபெறாது என்று உறுதி கூறிய போதும் நிலமை ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது. சமவாய்ப்பு கொள்கையின் அர்த்தம் வேலை வாய்ப்பு இலங்கை எங்கும் பிரதிபலிக்க வேண்டும். ஒவ்வொரு அரச திணைக்களமும் அரச கூட்டுத் தாபளங்களும் அடிக்கடி தொழிலாளர் பற்றி மீளாய்வு செய்து எதிர்பார்க்கும் குறிக்கோளை அடைய வேண்டும். இத்தகைய கொள்கை மொழிக் கொள்கையை அமல்படுத்தும் தேவைக்கு மட்டுமல்ல இன ஒருமைப்பாட்டிற்கும் உறுதியாகும். கோட்பாட்டில் சமத்துவம் பேசுவதல்ல, நடைமுறையில் பொதுக் கொள்கை இவ்வாறு அமைய வேண்டும்.

## வை.பி.டி. சில்வா நினைவாக

### பிப்ரவரி 12, 1999ல்

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான வை.பி.டி. சில்வா, கொல்வின் ஆர்..டி.சில்வா, பி.எச்.வில்லியம் டி சில்வா, டபிள்யூ தகநாயகா, விஜயகுமாரதுங்கா ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். பலப்பிட்டி ரேவத வித்தியாவில் தொடக்கக் கல்வி பயின்ற அவர் 1952-ல் சிடபிள்யூஈயில் (CWE) சேர்ந்தார். 1953-ல் நடைபெற்ற ஹர்த்தாலில் பங்கேற்றதற்காக அங்கிருந்து நீக்கப்பட்டார்; 1956-ல் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். தன்னுடைய வாழ்க்கையில் மேற்கொண்ட மிக முக்கியமான முடிவு டல்சியை மணந்து கொண்டதுதான். கேகாலை பள்ளி ஆசிரியையான அவர், சில்வாவின் வாழ்க்கைத் துணைவராக மட்டுமின்றி அரசியல் போராட்டங்களிலும் அவருக்கு உற்ற துணையாக இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த அவர் கேகாலை மாவட்டச் செயலாளரானார். பின்னர் என்.சண்முகதாசன், பிரேம்லால் குமாரசிரி ஆகியோருடன் இணைந்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையை உருவாக்கினார்.

1971-ம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையான பின்னர் சுற்றுலா சபையில் சேர்ந்தார். அப்பணியில் இருந்து 1980-ல் நீக்கப்பட்டார். மறைந்த விஜய குமாரதுங்காவுடன் சேர்ந்து இலங்கை மகாஜன கட்சியைத் தொடங்கி, பின்னர் அதன் தலைவரானார்.

வை.பி மற்றும் அவரது மனைவி டெல்சியுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றும் நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. புரட்சிகரமான இடதுசாரி அரசியல்வாதியான அவர் சுதந்திரமான விழுமியங்களையும் கொண்டிருந்தார். தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதியான, நியாயமான தீர்வு

காண வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அரசியல் யாப்புச் சீரமைப்புக்கான தேர்வுக் கமிட்டி உறுப்பினர் என்ற முறையில் கமிட்டியின் பணிகளுக்கு மிகுந்த ஆதரவு அளித்தார். அவருக்கென தீவிரமான சில கொள்கைப் பிடிப்பு கள் உண்டு. ஆனால் வெறுப்போ காழ்ப்புணர்ச்சியோ இல்லாத வர். இரக்க சுபாவமும் பரிவும் கொண்ட அவர், அரசியலில் ஈடுபடுவதே மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் என்று கருதினார். சிவில் அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கடந்த ஆட்சியின் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, லிபரல் கட்சி ஆகியவை முயற்சி எடுத்த போது அதற்கு ஆதரவு தந்தார். அவரது மறைவு இலங்கையின் இடதுசாரி அரசியலில் வெற்றிடத்தை ஏற்படுத் தியுள்ளது. அவருடைய அரசியல் லட்சியங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அவர் மனைவி மேற்கொள்ளும் முயற்சி களுக்கு நாம் ஆதரவு அளிப்போம்.

# கொள்கை கற்பிக்கும் நிறுவனம் (திருத்த மசோதா)

## பிப்ரவரி 10, 1999

சபாநாயகர் அவர்களே, கொள்கை கற்கும் நிறுவனம் தொடர்பாக அமைச்சர் அறிமுகம் செய்துள்ள சட்ட முன்வரைவு குறித்து மட்டுமே நான் உரையாற்றுவேன். இச்சட்டமானது 1998-ம் ஆண்டு சட்ட எண் 53 மூலமாக முதல் முறையான நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்தச் சட்டத்தில் இரு திருத்தங்களைக் கொண்டு வரும் சட்ட முன்வரைவை அமைச்சர் இன்று சமர்ப்பித்துள்ளார்.

கொள்கை கற்பிக்கும் நிறுவனம் ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனமாக 1980-களின் மத்தியில் அரசால் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் முக்கிய செயல்பாட்டுக்கான செலவுகளுக்காக இலங்கை அரசும் டச்சு அரசும் பெருந்தன்மையுடன் உதவியிருக்கின்றன.

அரசோடு நெருக்கமான கூட்டு வைத்திருக்கும் அதே நேரத்தில் சுதந்திரமாக தனித்து நின்று கல்வித் தரத்தையும் உயர்ந்த பணி நெறிகளையும் உயர்த்திப்பிடிக்க வேண்டும். ஹார்வேடு, கேம்பிரிட்ஜ், ஸ்வாத்மோர் கல்லூரி போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெற்ற டாக்டர் சமன் கெலிகமா போன்ற புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களையும் இளம் சமூக விஞ்ஞானிகளையும் ஈர்க்கும் அளவிற்கு சிறந்து விளங்கியது தன்னேரில்லா பொருளாதார நிபுணரும் சர்வதேச அளவில் புகழ் பெற்ற சிவில் உத்தியோகத்தர் டாக்டர் காமினி கொரியா இந்நிறுவனத்தின் சபையின் தலைவராகப் பணியாற்றினார்.

இந்நிறுவனம் மிகச்சிறந்த ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரம் குறித்து ஆண்டு

தோறும் இது வெளியிடும் அறிக்கை ஆய்வுக்கான ஆதாரமாகத் திகழ்ந்திருக்கிறது. பட்ஜெட் விவாதத்தின் போது இந்த அறிக்கை குறித்து கவனத்தை ஈர்த்திருக்கிறேன். அரசு நிர்வாகம், சுகாதாரம் பற்றிய பொருளாதாரம், தனியார் மயமாக்க கலை வரைமுறைப்படுத்தும் அம்சங்கள், வறுமை ஒழிப்பு ஆகியவை குறித்து கருத்தரங்கம், பயிலரங்கம், ஆய்வரங்கம் ஆகியவற்றை இந் நிறுவனம் நடத்தியிருக்கிறது.

நன்றாக நிர்வகித்து நடத்தப்படும் இந் நிறுவனத்துக்கு நம்முடைய ஆதரவு தேவை. கொள்கையை வகுப்பதிலும் அதன் தன்மையை மதிப்பீடு செய்வதிலும் இந்த நிறுவனத்தை ஈடுபடுத்த திட்டமிட்ட மனப்பூர்வமான முயற்சிகள் தேவை. இந் நிறுவனத்தின் மேம்பாட்டில் தனியார் நிறுவனங்களும் தங்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அதற்காக இரு திருத்தங்கள் இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று இந் நிறுவனத்தின் நோக்கம் பற்றியது. இரண்டாவது இந் நிறுவனத்தின் கணக்கு தணிக்கைத் தலைவர் தணிக்கை செய்யவும் அதற்கு தகுதி வாய்ந்த தணிக்கையாளர்களின் உதவியை அவர் பெறுவதும் பற்றியது. இப்பணியை பிரிவு *18(4)* இறுதியில் கீழ்கண்ட வாக்கியம் சேர்க்க:

*இலங்கையின் கணக்கு மற்றும் தணிக்கை தரச் சட்டம் 1995ன் எண் 15 கீழ் இன்ஸ்டிடியூட் ஆஃப் சார்ட்டட் அக்கவுன்டன்ட்ஸ் வகுத்துள்ள இலங்கை தணிக்கைச் சட்டங்களின் படி இத் தணிக்கை நடைபெறும்.*

## மதநல்லிணக்கக் குழுவின் சமாதானப் பிரதிநிதிகள் - ஒத்திவைப்பு விவாதம்

### பிப்ரவரி 24, 1999

மதிப்புமிக்க புத்தகுரு வஜிரா, முன்னாள் பௌத்த பாளி பல்கலைக்கழக உபவேந்தர், சமய நல்லிணக்க பிரதிநிதிகள் சமாதானம் நிலவவும், நல்லெண்ணம் வேண்டியும் மடுவுக்கும் மல்லாவிக்கும் பிப்ரவரி 8-ல் இருந்து 10 வரை சென்ற பயணம் முடிவுற்றது. (இந்த சமய நல்லிணக்கக் கூட்டில் புத்த சங்க அங்கத்தவர்கள், பிஷப் கென்னட் பெர்னான்டோ, கொழும்பு பிஷப் மலகம் ரஞ்சித் பிஷப், ரத்தினபுரி பிஷப் ஆகியவர்களுடன் 17 அங்கத்தவர்கள் சென்றனர்)

இங்கே குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் பற்றி கவலை தெரிவித்தனர். வடகிழக்கில் ஏற்பட்ட வன்முறை முரண்பாட்டால் ஏற்பட்ட மரணங்கள் அழிவுகளுக்கு முடிவு கட்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

இப்பிரதிநிதிகள் நேரடியாகவும், நேர்மையாகவும் பிப்ரவரி 10-அன்று எல்.டி.டி.யின் முக்கிய பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் வடக்கு - கிழக்கில் நடைபெற்று கொண்டிருக்கும் யுத்தத்தின் காரணங்கள் தொடர்பான சம்பவங்கள் பற்றி கலந்து பேசினர்.

இந்த சமய நல் இணக்க பிரதிநிதிகள் முக்கிய சமய, சிவில், சமூக தலைவர்களை உள்ளடக்கிய குழு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளிலும் பிற தீவில் வாழும் மக்களிடையேயும் பாலம் அமைக்க பயனுள்ள உன்னிப்புகளை எடுத்தனர்.

இந்தச் சபை மாண்பு மிக்க பரந்த மதிப்புப் பெற்ற புத்த சமய, கிருஸ்தவ மதகுருமார் இப்பணியில் பங்கு பற்றியதைப் பாராட்டுகிறது. அரசாங்கமும், எல்லா அரசியல் கட்சிகளும் இக்குழுக்களுடன் இணைந்து நடைமுறை சாத்திய மான, அர்த்தமுள்ளதுமான உடனடி நடவடிக்கைகள் மூலம் நல்லெண்ணத்துடனும், துணிச்சலுடனும் அமைதி, நீதி ஒற் றுமை உணர்வும் ஏற்படுத்த வேண்டுமென இந்த நாடாளுமன் றம் வேண்டுகிறது.

*1995* ஏப்ரலில் இருந்து வடகிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடந்து வரும் மோதல்கள், அவற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள இடம்பெயர்தல், சாவுகள், காயங்கள், அழிவு ஆகியவற்றால் ஏமாற்றமும் நம்பிக்கையின்மையும் ஏற்பட்டுள் ளது என்பதை இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

இப்பிரச்சினைக்கு அமைதியான நிலையான தீர்வைக் கொண்டு வருவதை விட, எல்லா சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கும் நலன் விளைவிக்கும் செயல் எதுவும் இருக்க முடியாது. வார்த்தை ஜாலங்களை விட்டு விட்டு செயலில் ஈடுபட வேண்டியது அவசியம். இரு தரப்பினருக்கும் இடையே நீண்ட கசப்பான நம்பிக்கையின்மை இருந்து வருகிறது. சமீப ஆண்டுகளாக நடைபெற்றுள்ள சம்பவங்கள் இந்த நம்பிக்கையின்மையை மேலும் அதிகரிக்கப்படுத்தியுள்ள பகைமையைத் தொடர்வது என்று ஒரு தரப்பினர் எடுத்த முடிவும் யுத்தத்தைத் தீவிரப்படுத்த மற்றொரு தரப்பினர் மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கைகளும் பிரச்சினையை மேலும் பெரிதாக்கியுள்ளன. வரலாற்றின் எந்தக் காலகட்டத்தி லும் இது போன்ற கொடூரமான ஆயுத யுத்தம் நடைபெற்ற தில்லை. இப்பிரச்சினையின் தீவிரத்தையும் அளவையும் எதிர் கொள்ள நாம் மேற்கொள்ளும் கூட்டு நடவடிக்கை மீது மேலும் மேலும் அதிகமானவர்கள் தங்கள் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகின்றனர். அரசியல் மீதும் மோசமான சந்தர்ப்ப வாத ஜனநாயகத்தில் சிக்கியுள்ள அரசியல் நடைமுறைகள் மீதும் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இதற்கு நாம் எல்லோருமே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த கட்டத்தில்தான் சமீபத்தில் சிவில் சமூகம் எடுத்துள்ள முன்முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகின்றன. மனித வாழ்வின் புனிதத்தை நிலைநிறுத்தவும் அமைதி மற்றும் சமரசத்துக்காகவும் இந்த சிவில் சமூகக் குழுக்கள் பல்லாண்டுகளாக போராடி வந்திருக்கின்றனர். மனித உரிமை விவகாரங்களில் சில குழுக்கள் கவனம் செலுத்தி வருகின்றன. மோதல்களின் போது எழும் மனிதாபிமான பிரச்சினைகளான நிவாரணம், குடியமர்த்துதல் ஆகியவற்றில் சில குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. உலகளாவிய மனித விழுமியங்களை நிலைநிறுத்த சில நேரங்களில் பொதுக் கருத்துக்கு எதிராக இவை பணியாற்றி, தனித்த நிலைபாடுகளை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த பொதுக் கருத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது வெளிப்படையாக தெரிவதால் இந்த வாய்ப்பை துணிவுடனும் உறுதியுடனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமீபத்திய மூன்று முன் முயற்சிகள் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. முதலாவது, எல்லைப்பகுதியில் உள்ள பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்த வேண்டும். வடகிழக்கு பகுதிக்கு அருகில் இருக்கும் இப்பகுதியில் உள்ள மக்கள் யுத்தத்தின் பின் விளைவுகளை நேரடியாகச் சந்திக்கிறார்கள். இந்த மக்களின் அனுபவங்களைத் தொகுத்த கமிஷன், அமைதிக்கான தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்த ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். இரண்டாவது, பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அரசியல் விஷயங்களில் மக்கள் முன்னணிக்கும் ஐ.தே.க.க்கும் இடையே ஒருமித்த கருத்தை உருவாக்க வர்த்தக சமூகத்தினர் எடுத்த முயற்சி. இந்த முன்முயற்சிகள் தொடக்க நிலையில் உள்ளன. இந்த நடைமுறையில் அரசியல் கட்சிகள் பங்கேற்க நாம் ஊக்குவிக்க வேண்டும். மூன்றாவது, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட பகுதிகளில் அமைதியையும் நல்லெண்ணத்தையும் உருவாக்க அறிஞரும் சன்னியாசியுமான வணக்கத்துக்குரிய வஜிறா தலைமையிலான மத நல்லிணக்கக் கூட்டு எடுத்த முன்முயற்சி. இக்குழுவின் இடம் பெற்ற பிரதிநிதிகளை மடுவில் உள்ள இடம் பெயர்ந்த மக்களும் மன்னார் பிஷப்பும் அன்புடன் வரவேற்றனர். வடகிழக்கு யுத்தத்தின் காரணங்கள், பின்விளைவுகள் ஆகியவை குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளு

டன் நடந்த விவாதம் வெளிப்படையாகவும் மனப்பூர்வமாக வும் இருந்தது என்று இக்குழுப் பிரதிநிதிகள் கூறினர். பிரபலமான எல்லோராலும் மதிக்கப்படும் பௌத்த சங்கம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களை உள்ளடக்கிய இக் குழு மேற்கொண்ட ஆக்கபூர்வமான முயற்சி மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது ஆகும். பெரும்பான்மை சமூகங்களை பிளவுபடுத்தும் அரசியல் பிரச்சினைகள் இல்லாமல், விருப்பு வெறுப்பற்ற சாதகமான சூழலை உருவாக்க இது உதவியது. பிற சம்பவங்களால் பின்னுக்குத் தள்ளப்படும் தனிப்பட்ட விஷயமாக இந்த முன்முயற்சிகள் மாறுவதற்கு நாம் அனுமதி கக்கூடாது என்பது மிகவும் முக்கியமான விஷயம். மத்தியக் கிழக்கு நாடுகள், வடக்கு அயர்லாந்து, தென்னாப்பிரிக்கா, மத்திய ஐரோப்பா ஆகியவற்றில் நடைபெற்றது போல் பின்னடைவுகள் ஏற்படலாம். ஆனால் நம்முடைய முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமெனில் நமது முடிவில் நாம் உறுதியு டன் செயல்பட வேண்டும்.

இந்த விஷயத்தில் அரசும், அக்கறையுள்ள குழுக்களும் உண்மையுடனும் உறுதியுடனும் துரித உணர்வுடனும் ஒத்து ழைக்க வேண்டும். அமைதியான நேர்மையான தேர்தலை நடத்துவதற்காக இந்த வார இறுதியில் அதிபருக்கும் எதிர்க் கட்சி தலைவருக்கும் இடையே நடக்க இருக்கும் கூட்டத்தை நாம் வரவேற்கிறோம். அமைதி, சமரசம், ஜனநாயகம் ஆகி யவை ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாத அளவுக்குப் பின்னிப் பிணைந்தவை. அரசியல் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற் காக இரு முக்கிய அரசியல் கட்சிகளுக்கிடையே பொதுவான அணுகுமுறையை உருவாக்குவதற்கான தேவையை இவ் விவா தத்தில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். சமரச முயற்சிகள், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான உடன்பாடு போன்ற விரிவான அம்சங்களை உள்ளடக்கியதாக இந்தப் பொது அணுகுமுறை இருத்தல் வேண்டும்.

## பயங்கரவாத குண்டு வெடிப்புத் தடுப்புச் சட்ட மசோதா

### மார்ச் 11, 1999

1997-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்ட தீவிரவாத குண்டுவெடிப்பை ஒடுக்குவதற்கான சர்வதேச உடன்பாட்டை பின்பற்றித்தான் இச்சட்டம் அறிமுகம் செய்யப் படுகிறது. குண்டுவெடிப்புகளைத் தடுத்து நிறுத்த முழுமை யான ஒரு சட்ட வடிவத்தை உருவாக்குவதுதான் இந்த உடன்பாட்டின் நோக்கம்.

வன்முறையை எதிர்ப்போர், சேதத்தையும் உயிரிழப்பை யும் ஏற்படுத்தும் குண்டு வெடிப்புச் சம்பவங்களையும் கட்டாயம் எதிர்த்தாக வேண்டும். வெடிமருந்துகள் தொடர் பான நவீன தொழில் நுட்பமும் இலகுவாக கிடைக்கும் வெடிமருந்துகளும் மக்களின் உயிருக்கு ஏற்படும் ஆபத்தை மேலும் அதிகரித்துள்ளன. இருப்பினும் மனித உரிமை நோக்கில் பார்க்கும் போது இந்த உடன்பாடு மற்றும் சட்டமுன்வரைவில் காணப்படும் சில அம்சங்கள் கவலை களை ஏற்படுத்தியுள்ளன. வன்முறைக் குழுக்களைக் கட்டுப்ப டுத்தவே இந்த உடன்பாடு முயல்கிறது என்றாலும் அரசு மற்றும் ராணுவ நடவடிக்கைகளின் காரணமாகவும் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறிப்பிட்டாக வேண்டும். அரசாங்கத் தின் ராணுவப்படைகளும் இந்த சர்வதேச சட்டத்துக்கு கட்டுப் பட்டே செயல்படும் என்று இந்த உடன்பாட்டின் முகவுரை கூறுகிறது. அரசு தரப்பில் உருவாகும் வன்முறையானாலும் சரி வேறு குழுக்களால் வன்முறை ஏற்பட்டாலும் சரி, அவற்றை கட்டுப்படுத்த முயலும் போது இதை மனதில் கொள்ள வேண்டும். அரசு தரப்பில் வன்முறை நடக்கும் போது அதை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டு மற்றவர்கள் செய்யும்

போது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட முடியாது.

இந்த சட்ட முன்வரைவு, வெளிநாட்டில் இருந்து ஒரு வரை விசாரிக்க நம் நாட்டுக்கு கடத்தி ஒப்படைப்பது தொடர்பான விஷயங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. வெளி நாட்டில் இருந்து கடத்தி வருவது தொடர்பான சட்ட விஷயங் கள், ஒரு எல்லைக்குள் வகுக்கப்பட்ட கிரிமினல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு சவால் விடும் வகையில் அமைந்துள்ளன. இருப்பினும் சர்வதேச அளவில் நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள அடிமை வியாபாரம், விமானங்களைக் கடத்துதல், படுகொலைகள், யுத்த காலத்தில் நடைபெறும் குற்றங்கள் ஆகியவை குறித்து வரையறுக்கவும் தண்டனை வழங்கவும் பொது விதிகளை உருவாக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இப்போது விதிகளை விரிவுபடுத்தி தீவிர வாத குண்டு வெடிப்புகளையும் இக்குற்றங்களின் வரிசையில் சேர்ப்பதே சர்வதேச உடன்பாட்டின் நோக்கமாகும். இது போன்ற சட்டத்தை உருவாக்கும் போது சட்ட முன்வரைவு மற்றும் சர்வதேச உடன்படிக்கை ஆகியவற்றின் படி ஒரு குற்றத்தை எப்படி வரையறுப்பது என்ற கடினமான கேள்வி எழுகிறது. சட்டத்துக்கு விரோதமாக பொது இடத்தில் வேண்டு மென்றே குண்டு வெடித்தல் என்று சட்ட முன்வரைவின் 3-வது பிரிவில் இது குறித்து விளக்கப்பட்டுள்ளது. குற்றம் செய்ய முயற்சித்தல், குற்றம் புரிய உதவி செய்தல், சதி செய்தல் ஆகியவையும் சட்டப்பிரிவு 3(2)-ன் கீழ் உள்ளடக்கப்பட்டுள் ளன. இது போன்ற பிரச்சினை இங்கிலாந்தில் ஏற்பட்ட போது இந்த வரையறைகள் பரந்துபட்டதாக இருக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்பு சபை தனது அக்கறையைத் தெரிவித்தது. இலங்கையின் குடிமகனாக இல்லாதவர் ஒரு குற்றத்துக்காக கைது செய்யப்படும் போது அவருக்கு இருக்கும் உரிமை குறித்து சட்ட முன்வரைவின் 5-வது பிரிவு தெரிவிக்கிறது. இந்த விஷயத்தில் குற்றம் செய்தவரைச் சந்தித்துப் பேச, செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அழைப்பு விடுக்க அரசு தரப்புக்கு

இருக்கும் உரிமையை சர்வதேச உடன்படிக்கை அங்கீகரிக்கிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த பாதுகாப்பு அம்சம் குறித்து சட்ட முன்வரைவில் எந்தக் குறிப்பும் இடம் பெறவில்லை.

வெளிநாட்டில் இருந்து கடத்தி ஒருவரை விசாரிக்க அழைத்து வர வகை செய்யும் சட்டத்தின் முக்கிய அம்சம் என்னவெனில் அரசியல் மற்றும் மதம் தொடர்பான குற்றங்களை இச் சட்டத்தின் கீழ் கொண்டு வர முடியாது. 19-ம் நூற்றாண்டில் உருவான இச்சட்டத்தின் அம்சங்கள்தான் அரசியல் அகதிகளுக்கு புகலிடம் அளிக்க வகை செய்கிறது. என்ன குற்றம் என்பதை விட, தப்பிவந்திருப்பவருக்கு அவருடைய அரசியல் கொள்கைகள் காரணமாக தண்டனை அளிக்கப்படலாம் என்ற அடிப்படையில்தான் அரசியல் குற்றம் நடைபெற்றிருக்கிறதா என்று கணிக்கப்படுகிறது. சட்டபூர்வமாக உருவான ஒரு அரசைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒருவர் செயல்பட்டிருக்கிறாரா என்பதல்ல பிரச்சினை. அரசியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதில் இருந்து தப்பிக்க எடுக்கும் முயற்சி அல்லது அரசியல் காரணங்களுக்காகவும் அரசியல் லட்சியங்களுக்காகவும் எடுக்கப்படும் முயற்சிகள் ஆகியவை கூட அரசியல் குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

இருப்பினும் அரசியல் குற்றம் புரிந்தவரை வெளிநாட்டில் இருந்து அழைத்து வந்து விசாரிக்க வகை செய்யும் சட்டப்பிரிவின் கீழ் கொண்டு வருவதன் மூலம், இச்சட்டத்தின் 10-வது பிரிவு இது தொடர்பான விஷயங்களில் அடிப்படையான பாதுகாப்பு அம்சங்களை நீக்கி விடுகிறது. அதாவது, செய்யப்பட்ட குற்றம் அரசியல் தன்மை கொண்டதா, அல்லது அரசியல் உள்நோக்கத்துடன் செய்யப்பட்டதா என்பதை நீதிமன்றம் விசாரிப்பதை தடுக்கிறது. உடன்படிக்கையின் பிரிவு 11-ல் கூட இது போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை இந்த அம்சங்கள் கவலையை ஏற்படுத்துபவையாக இருக்கின்றன. ஏனெனில் வெளிநாட்டில் இருந்து ஒருவரை அழைத்து விசாரிப்பதற்கான சட்ட எண்

8, 1997 சட்டத்தின் மூலம் விசாரிக்கப்படும் குற்றங்களோடு அரசியல் குற்றங்களைச் சேர்க்கவில்லை. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவருக்கு, உள்நாட்டு சட்டப்படியும் சர்வதேச மனித உரிமை சட்டப்படியும், எல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவரை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்றும் பிரிவு 7 கூறுகிறது. ஆனால் இந்தப் பாதுகாப்பு அம்சங்களை நீக்குவதன் மூலமாக, சர்வதேச உடன்படிக்கையின் கடுமையான அம்சங்களை ஏற்றுக் கொண்டுள்ள சட்ட முன்வரைவு, அதனுடைய மனிதாபிமான, மனித உரிமைக்கான பாதுகாப்பு அம்சங்களை கைவிட்டு விட்டது என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது.

கண்ணி வெடிகளுக்கு எதிரான ஒட்டாவ ஒப்பந்தத்தை அமல்படுத்தவும் இதே அளவு அக்கறையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 133 நாடுகள் இதில் கையெழுத்திட்டுள்ளன. 63 நாடுகள் அதை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தியுள்ளன. அதுபோல் படுகொலைகள், மனித குலத்துக்கு எதிரான கொலைகள், யுத்த கொலைகள் புரிந்த தனிநபர்களை விசாரிப்பதற்காக சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்தை அமைக்க 120 நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த நீதிமன்றத்தை அமைப்பதற்கான உடன்பாட்டில் இலங்கை இன்னும் கையெழுத்திடவில்லை. அந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டால் அது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியில் முன்னோக்கிய பயணமாக இருக்கும். ஆயுத யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஜெனிவா உடன்படிக்கையின் கூடுதல் சட்ட விதிகளின் பகுதி 1, பகுதி 2 ஆகியவற்றை பின்பற்றத் தவறியதற்காக அரசாங்கத்தை மனித உரிமைக் குழுக்கள் கண்டித்துள்ளன.

## அவசர கால நிலை பற்றிய விவாதம்

## மே 6, 1999.

பொருட்களையும் மக்களையும் யாழ்ப்பாணத்திலிருந் தும் அங்கு செல்லவும் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பற்றி நாம் கவனம் எடுக்க வேண்டும். இதற்கு அவசரத் தீர்வு நடவடிக்கை யும் எடுத்தல் வேண்டும். தற்போது திருகோணமலையில் 4000 பிரயாணிகள் யாழ்ப்பாணம் செல்ல காத்திருக்கின்றனர். அதே வேளை வவுனியாவில் இடம் பெயர்ந்தவர் 1500 பேர் உள்ளனர். இவர்கள் திருகோணமலைக்குச் சென்று அங்கிருந்து காங்கேசன் துறை செல்ல வேண்டியவர்களாவர். அதே வேளை உள்ளூரில் இடம்பெயர்ந்த 1016 பேர் பிரயாணத்திற்காக மன்னாரில் காத்திருக்கின்றனர். உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களின் துன்பமான கஷ்டங்களுக்கு அவசரமாக உடனடி நிவாரணம் தேடி இம்மக்களுக்கு உதவ வேண்டும். செஞ்சி லுவை சங்கத்தின் சர்வதேச கமிட்டி அவசர மருத்துவ தேவை, நோயாளரை ஏற்றி இறக்குவதில் துணை புரிகிறது. சர்வதேச பாதுகாப்பு தரமும் கடற் பிரயாணத்திற்கு தகுதியானதுமான கப்பல்கள் வழங்கின் செஞ்சிலுவைச் சங்கம் பிரயாண வாய்ப்பு களில் உதவ முடியும் என்று கூறுவதாக அறிகிறேன். யாழ்ப்பா ணத்திற்கும் அங்கிருந்தும் மக்கள் பாதுகாப்பாக பிரயாணம் செய்யும் உரிமையில் உதவும்படி முரண்படும் கட்சிகளையும் நான் வேண்டுகிறேன்.

உள்நாட்டு முரண்பாடுகளின் போது மனிதாபிமான சட்டத் தின் அடிப்படைக் கொள்கை இது. சாதாரண மக்களின் பயணத்துடன் போராளிகளைச் சேர்த்துவிடுவது மனித மதிப்பு டையதல்ல. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஐ.நா.அகதிகள் ஆணையாளரும் இந்நிலையை மேற்பார்வையிட்டு எல்லாக் கட்சிகளிடையேயும் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும். குறிப்

பிட்ட மூன்று மாத காலத்தில் 6500 பேர் அவசரமாகப் பயணம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்விஷயத்தில் துறைமுக புனர்வாழ்வு அமைச்சு அல்லது வேறு சிவிலியன் உரிமையாளர் அல்லது அரசின் ஏஜென்சி பொறுப்பேற்க வேண்டும்.

யாழ்பாணத்திலிருந்தும், அங்கும் பண்டங்களை ஏற்றி இறக்குவது பற்றி தீர்மானம் எடுப்பதில் அதிக கவனம் எடுக்க வேண்டும். கப்பல் சொந்தக்காரரிடை போட்டி இருக்கலாம். ஆனால் அவர்கள் நிலைமையை அதீத சுரண்டலுக்கும் போட்டியற்ற நடைமுறைகளுக்கும் ஆட்படாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று லைசென்சு பெற்ற கப்பல்கள் பொதி ஏற்றி யிறக்க மெற்றிக் டன்னுக்கு 46 தொடக்கம் 65 அமெரிக்க டாலர்கள் வேண்டுகின்றனர். இலங்கையிலிருந்து பம்பாய்க்கு மெற்றிக் டன்னுக்கு அமெரிக்க டாலர் 28-50 வரையே பெறுகின்றனர்.

போட்டி முறையற்ற இத்தகைய விலை ஏற்றங்களால் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏறுகிறது. உதாரணமாக ஒரு பக்கெட் சீலமந்து கொழும்பு விலையிலும் பார்க்க இருமடங்காக ரூபா 650/- க்கு விற்கப்படுகிறது. எம்.வி ஓசன் சக்செஸ், எம்வி காலிட் ஆகிய கப்பல்கள் பாதுகாப்பு அமைச்சு, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோரின் அனுமதிக்காகக் காத்து நிற்கின்றன. அனுமதி வழங்கும் முறையில் விரக்தியும் பேரமும் தாமதமும் ஏற்படுகின்றன. அனுமதி வழங்குவதில் ஒழுங்குமுறையும் தீர்மானத்தில் ஒளிவு மறைவற்ற தன்மையும் வேண்டும்; இவை பற்றிய தீர்மானங்கள் பற்றி நாடாளுமன்றத்திற்கு இடையிடை அறிவித்தல் தரல் வேண்டும்.

லயினேயர் விமானப் பயணத்தில் 43 பயணிகளும் ஓட்டுநர் குழுவும் இறந்த துன்பச் செய்தியை ஒட்டி சிவிலியன் பயணத்திற்கு போதிய வசதிகள் இல்லை என்பது உண்மையே. சிவில் விமான பயண இயக்குநர் விசாரணை நடத்தி இந்த

துயர சம்பவம் பற்றி அறிவிப்பார் என அறிகிறோம். இந்த அறிக்கை, மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு துயர் செயல் நடந்த சூழல் பற்றிய விவாதத்திற்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். தற்போது விமானப்படை கட்டு நாயகாவிலிருந்து பலாலிக்கு நடத்தும் சேவையில் சிவிலியன்களும் சேர்க்கப்படு வதாக அறிகிறோம். இவ்விஷயத்தில் தெளிவான, விபரமான ஏற்றியிறக்கல் கொள்கை கடைப்பிடிக்கப்படல் வேண்டும். மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் சிவிலியன் பாதுகாப்பாகும். இங்கும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங்கள் தனியார் விமானங்கள் சிவிலியன்களை ஏற்றிச் செல்லும் வசதியைப் பற்றிய விசாரணையில் உதவும். சர்வதேச திறமையாளர், தொழிலாளர் பயணம் செய்வதற்கு சர்வதேச உதவி ஏஜென்சிகள் தனியார் விமானம் வேண்டியுள்ளனர். இத்தகைய ஏற்றியிறக்கல் வடக்கில் அபிவிருத்துப் பணிகள், புனருத்தாரணத்திற்கு சர்வ தேச உதவி தேவைப்படுகிறது. உரிய அதிகாரிகள் பிரயாணம் செய்ய எல்லா வித ஒழுங்குக ளும் வசதிகளும் ஏற்பாடு செய்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

Rs 150.00